

குமார் பொன்னம்பலம்

நினைவு மலர்



KUMAR PONNAMBALAM

A TRIBUTE

12th AUGUST 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார்
பொன்னம்பலம்

நினைவு மலர்

KUMAR
PONNAMBALAM


34834

A TRIBUTE
12TH AUGUST 2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

பிரபலமாக குமார் பொன்னம்பலம் என உலகறிந்த திரு.காசிநாதர் காங்கேசர் பொன்னம்பலம் அவர்கள் தன்னுடைய வாழ்வினைத் தமிழர் தம் உரிமைப் போராட்டத்திற்காய் அர்ப்பணித்த மாமனிதன்.

தமிழ்த் தேசியத்திற்கெதிரான சிங்களத்தலைமைகளின் எதிர்ப்புணர்வினையும் பிற்போக்குத் தனத்தையும் இனங்கண்டு கோடிட்டு வெளிக்காட்டும் பணியினையும் தனதாகக்கொண்டார் குமார். **அவர் தம் மறைவே அதற்கு சான்று பகரும் பாலாய் அமைந்து விட்டது.**

அமரர் குமார் அவர்கள் இயற்கையிலேயே ஒரு யதார்த்தவாதி என்பதோடமையாது அதனைச் செயலிற் காட்டியவர். திரைமறைவுச்சங்கதிகளில், ஒளிவு மறைவுச் செயற்பாடுகளில் நம்பிக் கொண்டிராதவர். பதிலாக எந்தப் பிரச்சினையையும் நேருக்கு நேர் முகம் கொடுத்துப் பழகியவர். ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' எனும் வாறாக, கனவிலும் தன் கடமையைத் தட்டிக்கழிக்க எண்ணாத திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள், அவ்வண்ணம் நடப்பவர்களையும் மதிக்க விரும்பாதவர் என்பதையும் எடுத்துக்காட்டி நின்றார் என்றால் மிகையாகாது.

மூத்த தமிழ் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவராக இருந்த போதும் தான் அரசியல் சதுரங்கமாட விரும்பாதவர், மேலும் தனது தலைமையின் கீழ் கட்சியினையும் கூட அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபட அனுமதிக்காதவர்.

தமிழ்த்தேசிய இனம் தனது வாழ்வோ சாவோ என போராடிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் குமார் அவர்கள் நேர்மையையும் வெளிப்படையாக பேசுவதையுமே தனக்குப் பொருத்தமான ஆயுதமாகக் கொண்டார். அந்த வகையில் அவற்றை எதிர்பார்க்க முடியாத வீரியத்துடன் பயன்படுத்தியவர் என்பது அகிலமும் அறிந்ததே.

தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கான தீர்வு ''திம்பு''க்கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அமைய முடியும் என ஸ்திரமாக நம்பியவர் குமார்.

அதுவும் கூட சிங்களத்தேசிய இனமானது ஒரு வகையான அரசமைப்பினை வரைகையில் திப்புக்கோட்பாடுகள் தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படைக்கோரிக்கை என்பதனை அங்கீகரித்தால் தான் நடைமுறைச்சாத்தியமாகும் என நம்பினார். ஏனென்றால் திம்புக்கோட்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மட்டுமல்ல, கொழும்பில் இருக்கும் ஏனைய தமிழ் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதே.

திம்புவை அவர் அங்கீகரித்து வலியுறுத்தியதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று, சிங்களத் தேசியமானது விசுவாசமாக தமிழ்த்தேசிய இனத்தின் நியாயமான அபிலாக்ஷைகளை ஏற்றுக் கொள்ள முடியுமென்றால் மட்டுமே அப்படியான ஒரு தீர்வுத்திட்டத்தை வரையும் செயற்பாடுகளுக்கு முன் தமது விசுவாசமான நம்பிக்கையை வெளிப்படுத்த முடியும். அவ்விதமாக சிங்களத் தேசிய இனமானது முழு உலகிற்கும் தாம் தமிழினத்தின் அபிலாக்ஷைகளைக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதை எடுத்துக் காட்டும் போது தான், சிங்கள தேசிய இனமானது தமது தாம் முழு உலகிற்கு எடுத்துக்காட்டியவாறு தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாக்ஷைகளை செயல் வடிவில் தமது சொற்பிறழாது அமையப் போகும் அரசியலமைப்பில் பிரதிபலிக்கச் செய்ய முடியும் எனக் குமார் பொன்னம்பலம் அவர்கள் நம்பினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக, தமிழ் மக்களின் நியாயமான அபிலாக்ஷைகளை சிங்களத்தேசிய இனமானது என்றும் அங்கீகரிக்கப் போவதில்லை என்று அறிந்திருந்தார். ஆதலினாற்தான் எமது நியாயமான அபிலாக்ஷைகளை வலியுறுத்துவதன் மூலம் சிங்கள தேசியத்தின் பிற்போக்குத்தன்மையை உலகிற்கு வெளிக்காட்டலாம். அந்த வகையில் தீர்வுத்திட்டவரைவு என்று கூறிக்கொள்ளும் அவர்களின் பொய்மையை, பாசாங்குத்தனத்தை கோடிட்டுக்காட்டலாம் என நம்பினார். இன்றும் கூட அரசியலமைப்பு - தீர்வுத்திட்டம் எனும் பாலாக அந்தப் பொய்மையும் பாசாங்குத்தனமும் வெளிப்பாடாய் உள்ளது.

குமார் ஒரு யதார்த்த வாதியாக இருந்ததனாற் தான் அவர் சிங்களத்தலைமைகளின் எதிர்ப்புணர்வுகளையும். அதேவேளை கொழும்பில் இருக்கும் தமிழ் கட்சிகள் குறுகிய அரசியல் லாப நோக்குடையவையாய் இருப்பதையும் அறிந்து தான் தமிழ் மக்களின் நியாயமான அபிலாக்ஷைகளுக்காக அர்ப்பணிப்புடன் போராடும் ஒரே அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளை (த.வி.பு) அடையாளம் கண்டார். இதனை அவர் ஏற்றுக்கொண்டதை இலங்கையின் உள்ளும் வெளியேயும் வெளிப்படையாக அறிவித்திருக்கின்றார்.

உண்மையில் அதனைத்திப்தியாக ஏற்றுக் கொண்டுதான் தனது கட்சி அரசியலைப் பின் தள்ளி தமிழ்த் தேசிய இனத்தின் தனிப் பிரதிநிதிகளாக த.வி.பு. இயக்கத்தை அங்கீகரித்தார்.

இவ்விதமாக அவர்கொண்டிருந்த அரசியல் நம்பிக்கையும், மேலும் மனித உரிமை வாதியாக அவர் ஆற்றிய பங்கும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், மனித உரிமைகள் சார்பாக அரசிற்கு சவாலாக அவர் அமைந்ததுமே, அவர் இப்படியான ஒரு மரணத்தை அடையக் காரணமாயிற்று.

ஒரு மனித உரிமைவாதியாக 1997 மற்றும் 1999 களில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு முன் உரையாற்றினார். பின்னர் 1998 இல் பெல்ஜியம் பிறஸல்ஸில் ஐரோப்பிய பாராளுமன்றத்திலும் உரையாற்றினார். கிருஷாந்தி குமாரசாமி பாலியற் சித்திரவதைக் கொலை வழக்கில் திரு குமார் பொன்னம்பலம் அவர்களது பங்களிப்பு தமிழ்த்தாயகத்தில் சிறிலங்காவின் சிங்கள இராணுவத்தின் மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள், பாலியற் கொலைகளையும், செம்மணி மனிதப்புதை குழிகள் என்பவற்றையெல்லாம் முழு உலகிற்கும் எ்டுத்துக்காட்டிற்று.

ஜீ.ஜீ (குமார்) பொன்னம்பலம் அவர்கள் ஜனவரி 5ம் திகதி 2000 ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். அவர் மறைவாற் துயருறும் ஓர் உலகினை அவர் விட்டுச் சென்றிருக்கின்றார். இங்கே நீங்கள் படிக்கப்போகும் ஒவ்வொரு பக்கங்களும் அவர் இழப்பில் மக்களின் துயரத்தின் வெளிப்பாடுகளே என்பதை நீங்கள் காண்பீர்கள்.

தமிழ்த் தேசிய இனத்திற்கு மகத்தான சேவை செய்த, விசுவாசமான, தன்னுயிரையே தமிழ்த்தேசிய இனத்திற்காய் அர்ப்பணித்த அந்தத்தலைவனுக்கு இம்மலர் சமர்ப்பணமாகின்றது.

அம்மாமனிதனின் ஆத்மா ஷாந்தி அடைவதாக.

- அமரர் குமார் பொன்னம்பலம்
ஞாபகார்த்தக் குழு. -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOREWARD

Gaasinather Gangaser Ponnambalam, better known as "Kumar Ponnambalam", dedicated his life to the Tamil Cause. He stood to expose the hypocrisy and intransigence of the Sinhala leadership vis-a-vis the Tamil Nation. In death he stands vindicated.

Kumar by nature was a realist, and a practical one at that. He did not believe in "behind the scenes" action. Instead, he unflinchingly faced all problems head on, and openly. He never minced his words nor would he dream of shirking his duties. In fact he showed abject contempt for those who did.

Although he was the leader of the All Ceylon Tamil Congress, the oldest Tamil political party, he refused to play politics or allow his party to do so. At a time when the Tamil Nation was fighting for its very survival, Kumar believed that honesty and frankness were the weapons that suited him most, and he used them with unprecedented vigour.

Kumar believed that a solution to the Tamil National Problem could only be worked out along the lines of the Thimpu Principles, and that too, by the Sinhala Nation first recognising "Thimpu" as an essential prerequisite, before embarking on trying to find a system of government that would give vent to the Tamil aspirations. "Thimpu", after all, not only had the consent of the LTTE, but also all the other Tamil parties in Colombo. The reason for his insistence on the recognition of "Thimpu" first, was two-fold. Firstly, he felt that if the Sinhala Nation was genuine in recognising the legitimate aspirations of the Tamil Nation, then, before embarking on the technicalities of such a solution, the Sinhala Nation must first show the whole world that it does in fact recognise the Tamil Nation's aspirations in principle. It is only if this is done, he believed, the Sinhala Nation could be held to its word in putting into practice any system of government that is subsequently formulated.

Secondly, he knew that the legitimate aspirations of the Tamils will never be recognised by the Sinhalese, and by insisting on its recognition, he stood to expose the hypocrisy of the Sinhala Nation in carrying out a farce in drafting so-called "proposals". Today that farce is only too apparent.

Since Kumar the realist knew only too well the intransigence of the Sinhala leadership and realised that all the other Tamil parties in Colombo were only interested in narrow political gains, he became convinced of the LTTE to be the only organisation that was genuinely dedicated towards fighting for the legitimate aspirations of the Tamil Nation. This he acknowledged both within Sri Lanka, and without. In fact, he was so convinced of the LTTE that he was readily willing to put behind party politics and recognised it to be the sole representatives of the Tamil Nation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is because of this political belief, and also because of the role he played as a human rights activist in openly challenging the Sri Lankan Government's policies on human and political rights of Tamils, did he meet with his death. As an activist, he addressed the United Nations Commission on Human Rights in Geneva in 1997 and 1999, and the European Parliament in Brussels in 1998. His involvement in the Krishanthi Kumaraswamy rape and murder case and the presence of mass graves in Chemmani, to mention a few, brought to light the atrocities committed by the Sri Lankan Sinhala Army in the Tamil homelands.

G.G. (Kumar) Ponnambalam was assassinated in Colombo on the 5th of January, 2000. He leaves behind a grieving Nation. The pages that follow are an expression of this grieving process by his people. We publish this book in tribute to commemorate the dedicated and sincere Tamil Leader that he was, and in recognition of the yeoman service he rendered to the Tamil Nation.

May his soul rest in Peace.

- Kumar Ponnambalam
Commemoration Committee -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுக் கொல்லப்பட்டுள்ள அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அனுதாபச் செய்தியொன்றினை வன்னியில் விடுத்துள்ளார்.

அவரது கையொப்பம் இடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அனுதாப அறிக்கையில் தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து அந்த உன்னத இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றி வந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்துவிட்டோம். விடுதலைக்காக எரிந்துவந்த ஒரு இலட்சியச்சுடர் அணைந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப் பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமை அடைகின்றேன். உன்னத இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு என்றும் அழியாத இடமுண்டு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பகைவனின் கோழைத்தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார்.

குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல் வாதி. நேர்மையுடன் நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பி வந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றுள்ளவர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாக வேண்டுமென ஆவல் கொண்டவர். ஆயுதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும் எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல்கொடுத்துவந்தார். நேர்மைத்திறமையுடன் அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

"மாமனிதர் மறைவு" பிரபாகரன் இரங்கல்

சுட்டுக் கொல்லப்பட்டுள்ள அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அனுதாபச் செய்தி யொன்றினை வன்னியில் விடுத்துள்ளார்.

அவரது கையொப்பம் இடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அனுதாப அறிக்கையில் தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து அந்த உன்னத இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றி வந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்து விட்டோம். விடுதலைக்காக எரிந்துவந்த ஒரு இலட்சியச்சுடர் அணைந்து விட்டது எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப் பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெரு மை அடைகின்றேன். உன்னத இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பகைவனின் கோழைத்தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார்.

குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியற் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல் வாதி. நேர்மையுடன் நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பிவந்தவர். சிங்களத்தின் தலைநகரில் தனித்துநின்று சிங்களப்பேரினவாதத்திற்கு சவால்விடுத்து வந்தவர். ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர்.

பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றுள்ளவர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம்கொண்டவர். தமிழர் தேசம் தன் னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாக வேண்டுமென ஆவல்கொண்டவர். ஆயுதப் போராட்டம்வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும் எமது இயக்கத்தின் கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல்கொடுத்துவந்தார். நேர்மைத்திற மையுடன் அபாரமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும்பணி மிகவும் பாராட்டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி

09.01.2000

தமிழரின் உரிமைக்காக அஞ்சா நெஞ்சத்துடன் குரல் கொடுத்தவர் குமார்

இலங்கையில் மட்டுமன்றி பிறநாடுகளிலும் தமிழரின் உரிமைக்காக அஞ்சா நெஞ்சத்துடன் குரல் கொடுத்து வந்த குமாரின் இழப்பு தமிழ் பேசும் உலகிற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். திக்கற்றுத்தவிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்ததொரு தலைமையைத் தரக்கூடிய மாவீரனை சதிசெய்து கொலை செய்து விட்டார்கள்.

அமரர் குமார் பொன்னம்பலத்தின் திட்டமிட்ட படுகொலையால் இலங்கையில் வாழும் தமிழர்கள் மட்டுமன்றி புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கின்ற அனைத்து தமிழர்களும் தங்களுடைய ஒவ்வொருவரினதும் குடும்ப அங்கத்தவரைப் பறிகொடுத்தது போன்ற பெருந்துயரில் மூழ்கியுள்ளனர்.

குமாரின் படுகொலை பேச்சு சுதந்திரத்திற்கு அடிக்கப்பட்ட சாவு மணியாகும்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி மாவட்டங்களில் போட்டியிடுவதற்கு பட்டியல் தயாரித்துக் கொண்டிருந்த நிலையில் குமார் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் தமிழன் குரல் நசுக்கப்பட்டு விட்டது.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி
(அ.இ.த.கா.சிரேஷ்ட நிர்வாக சபை உறுப்பினர்)

வீரகேசரி

09.01.2000

தமிழினம் ஓர் அடங்காத்தமிழனை இழந்து நிற்கிறது

தனிப்பட்ட ரீதியில் என்னோடும் என் குடும்பத்தோடும் நேசத்துடன் பாசத்துடன் பழகிய ஒருவர் அண்ணன் குமார். இவற்றுக்கெல்லாம் மேலாக இருபத்தி ஒரு ஆண்டுகள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் செயற்குழு உறுப்பினராக அவரோடு செயற்பட்ட காலங்கள் மீண்டும் வராது. எத்தனை மாநாடுகள் எத்தனை நேர்தல்கள் எத்தனை சந்திப்புக்கள்; அவரது மறைவிற்கு முன் இருநாட்கள் – அகில இலங்கையிலும் இருக்கும் தமிழ் அமைப்புக்களை ஒன்றுபடுத்தி ஓரணியாய் அடுத்த தேர்தலில் தமிழன் ஒருமைப்பட்டு திகழும் ஒரு பணியைத் தான் செய்யவேண்டும் என்றார். இரு நாட்களின் முன் மனோகணேசன் பெ. சந்திரசேகரன் என்பாரோடு நானும் அண்ணன் குமாரும் பேசினோம். இறுதிவரை அவருடைய அரசியல் தனித்துவமானபோதும் தமிழ்காங்கிரஸின் அரசியலில் ஒரு மத்திய செயற்குழு உறுப்பினரிலும் மேலாக அவர் என்னை காங்கிரஸ் செயற்பாடுகளுடன் இணைத்திருந்தார். எத்தனை இளம் உள்ளங்களுக்கு துணிவு தந்தவர் என்போன்ற பலருக்கும் தனது சட்ட இளவல்களுக்கும் துணிவு தந்தவர் அவர். அன்பு அண்ணனாக அக்காவாக அவர்கள் இணைந்து கொண்ட அந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். என் கண்கள் கண்ணீரால் நிறைந்திடும் இக்கணம்.... என் திருமணம் முதல் இன்றுவரை எங்கெல்லாம் தமிழருக்கின்னலோ அங்கெல்லாம் துணிவோடு ஒலித்த குரல் அமைதி கண்டு விட்டது. உண்மையில் நான் ஓர் குடும்ப நண்பரை அன்பு அண்ணனை இழந்துவிடடேன் என்பதை விட என்னை தம்பி குமரன் ஆக்கிய அண்ணனை இழந்து நிற்கிறேன் என்பதைவிட தமிழினம் ஓர் தன்மானச் சின்னத்தை இழந்து நிற்கிறது என்றே நான்றினைக்கிறேன்.

ந. குமரகுருபரன்
அரசியல் உயர்குழு உறுப்பினர், அ.இ.த.கா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாவி,

2000.01.14

பிரஜைகள் குழு வன்னிப் பிராந்தியம்

பிரஜைகள் குழு வன்னிப் பிராந்தியம்
CITIZEN COMMITTEE OF VANNI REGION



அம்மா,


ஈடு இணையில்லாத தங்கள் கணவரின் இழப்பினை வன்னிப்பிரஜைகள் குழுவினராகிய நாமும் மிகவும் ஆழமாக எம் உள்ளத்தில் உணர்கின்றோம். பெருமையும் துணிவும் மிக்க ஒரு மாபெரும் தலை வரை நாம் இந்த வேளையில் இழந்து நின்றாலும் உண்மைக்காய், தன் இனத்துக்காய் இறுதிவரை குரல் கொடுத்து, எந்தத் தமிழ் அரசியல் வாதியும் இதுவரை செய்யாத தியாகத்தை தங்கள் கணவர் செய்துள்ளார். அவர் பற்றிய வன்னி மக்களின் உணர்வுகளை தங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

ம.சே. கருணாரத்தினம்
தலைவர்

எஸ்.பி.நடராஜன்
செயலர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

11.01.2000



அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் கொடூரமானதும் கோழைத்தன மானதுமான கொலையைக் கண்டிக்கின்ற அதேவேளை இவ்வாறான வன்முறைக் கலாச்சாரத்திற்கு முடிவுகட்ட மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டு கின்றது. மேலும் திரு குமார் பொன்னம்பலம் அவர்களின் குடும்பத்திற்கு சங்கம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

இரா சிவச்சந்திரன்
தலைவர்


க.சிவானந்தமூர்த்தி
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.01.2000

வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணி

அன்பின் அம்மா,



இறை ஆசிகள். ஈடிணையில்லா மாமனிதர் ஒருவரை நீங்கள் எங்களுக்காக இழந்து நிற்கிறீர்கள். ஆயினும் துணிவோடு நீங்கள் இருப்பீர்கள் என்றே நம்புகிறோம். எங்கள் கண்ணீர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக மாறும். மக்களை நேசித்தவர்கள் உயிர்ப்பின் மகிமை பெறுவதார்கள். எம் தேசமும் விடியும். தங்கள் கனவுகளும் நனவாகும். தொடர்ந்து எங்களுக்காக உங்கள் பணியினைச் செய்து வாருங்கள். எமது "விருட்சம்"பத்திரிகையில் எமது அஞ்சலியை வன்னிமக்கள் சார்பில் வெளியிட்டிருக்கிறோம். ஏற்றுக் கொள்ளுங்கள்.

எமக்காய் இன்னுயிர் நீத்த தங்கள் குடும்பத் தலைவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காய் எமது மல்லாவி புனித செபஸ்தியார் ஆலயத்தில் 9ந் திகதி பெருந்திரளான மக்கள் மத்தியில் திருப்பலிபூசை நிறைவேற்றினோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

இவ்வண்ணம்,
அருட் திரு.ம.சே.கருணாரத்தினம்
இயக்குனர்,

ஜனவரி – 2000

"விருட்சம்"

ஈழத்தமிழர் உரிமைகளுக்காகவும், அவர்களின் விடுதலைக்காகவும் அயராது குரல் கொடுத்தவர் அமரர் திரு. குமார் பொன்னம்பலம், துப்பாக்கி ஏந்தாது ஜனநாயக வழிகளில் உழைத்தவர், துப்பாக்கியால் சுடப்பட்டது சிறிலங்காவின் துர்பாக்கியமே.

தமிழினத்தை காட்டிக் கொடுக்காமல், தமிழினத்தின் அரசியல் பேசி குளிர்காய்ந்து சொத்துச் சுகம், பதவி போகம் தேடாமல் உழைத்த ஒரே ஒரு கொழும்பு வாழ் அரசியல் வாதி குமார், தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தின் நியாயத்தை ஆதரித்து தன்னை தியாகப்பலி கொடுத்து ஈழத்தமிழர் வரலாற்றில் தனக்கொரு இடம் பிடித்து விட்டார்.



விருட்சம் ... ஜனவரி - 2000

தமிழர் உரிமைக்காய்
உழைத்த மாமனிதர்

1977களில் திட்டமிடப்பட்டு அன்றைய பாராளுமன்ற எலும்புத் துண்டிற்கு ஆசைப்பட்ட போலி விடுதலை வீரர்களினால் திரு. குமார் அவர்கள் ஒதுக்கப்பட்டாலும், ஒதுங்கிவிடாது தனிப்பெரும் தலைவன் ஜீ.ஜீ.இன் மகன் தான் என்பதை நிரூபித்து விட்டார். 50 இற்கு 50 என்பதன் சரியான விளக்கத்தை தனது வாழ்வால் உணர்த்தி விட்டார்.

போலிப் பாராளுமன்றக் கதிரை விடுதலை வீரர்களை தமிழ் மக்களும் உலகமும் அடையாளங் காண வைத்தமைக்காய் திரு, குமார் வரலாற்றில் போற்றப்படுவார். அவர் இழப்பில் வருத்தம் மிகுதியாயினும் அவர் தியாகம் தமிழினத்தை தலை நிமிர வைத்திருக்கிறது எனப் பெருமைப் படுகிறோம். அன்னாரின் துணைவியார், பிள்ளைகளுக்கும், குடும்பத்தாருக்கும் இத்தலைவனைத் தமிழருக்குத் தந்தமைக்காய் நன்றியஞ்சலிகள் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.2.2000.

இதயபூர்வ அஞ்சலி
அமரர் குமார் பொன்னம்பலம்

அமரர் குமார் பொன்னம்பலமும் திரு. வாசுதேவ நாணயக்காரவும் யானும் கொழும்பு அக்குவைனாஸ் பால்கலைக்கழகக் கல்லூரியில் ஒன்றாகப் பயின்றோம். அமரர் குமாரும் யானும் ஒரே பெறுபேறுகளைப் பெற்றோம்.

இறைவன் செயல். அவர் லண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று தமிழ் மக்களுக்குப் பல வழிகளில் அரும்பணியாற்றினார். யான் 1966இல் இருந்து ஆத்மீக வாழ்வில் ஈடுபட்டு மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகிறேன்.

அமரர் குமார் பொன்னம்பலத்திற்கு எமது இதயபூர்வ அஞ்சலியைச் செலுத்தி, அவரது ஆத்ம சாந்திக்காக அன்னையிடம் மனதாரப் பிரார்த்திக்கின்றோம். இவ்வேளையில் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறைபணியில்
சுவாமி சித்ரூபானந்தா.
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம், பருத்தித்துறை.

மறைந்தும் மறையாத மாமனிதர்

காலம் எனும் கண்ணாடி உலக மக்களிடையே உறவாடி விளையாடி எத்தனை எத்தனையோ வீரர்களையும் தியாகிகளையும் வள்ளல்களையும் வற்றாது வசையாது இத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வாரி வழங்குகின்றது. அந்த வரிசையில் மாமனிதர், தியாகி, வீரர், வள்ளல் இவை யெல்லாம் ஒருங்கே இணைந்தவர்தான் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள். தந்தை ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் வழிநின்று சட்டத்தரணியாக, தமிழ் மக்களின் குரலாகச் செயற்பட்டு உலகெங்கும் வியக்க வைக்கும் வாதங்களைப் புரிந்தவர் தாம் எமது மண்ணின் மைந்தன் அமரர் குமார் பொன்னம்பலம் ஐயா அவர்கள். ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஐயா எமக்குச் செய்த சேவையை மறக்க முடியாது. அதே போல தமிழ் மக்களிற்கு இக்கட்டான காலகட்டத்தில் தனித்து நின்று துணிந்து நியாய அநியாயங்களை எடுத்துரைத்து வாதாடிய மாமனிதன் மறைந்து விட்டான். ஆனால் அவரது நினைவு என்றும் தமிழ் நெஞ்சங்களைவிட்டு நீங்காது. நீங்கவும் முடியாது. அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த ஆனுதாபங்கள்.

வரணிமா சேரி கிராம அபிவருத்திச் சங்கமும்
வரணி வாழ் மக்களும்.

சட்டமே நீயுரைத்து பட்டங்கள் பல பெற்றாய்
பட்டதுயர் போதுமென்று பாரினிலே நாம்....
திட்டங்கள் போட்டு சிறப்பாக நீ நடந்தாய்
தட்டி விட்டார் உம்முயிரை தவிக்கின்றோம் – நாமெல்லாம்

வரணி கிராம அபிவிருத்திச் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000.01.26

யாழ் விழிப்புனற்றோர் சங்கம் . கைதடி

திருமதி. குமார் பொன்னம்பலம் அவர்களுக்கும், மகன் கஜேந்திரகுமார் அவர்களுக்கும்,

அன்புடையீர்,


JAFFNA ASSOCIATION FOR THE VISUALLY HANDICAPPED

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்-கைதடி

JAFFNA 2000.01.26

திருமதி.குமார் பொன்னம்பலம் அவர்களுக்கும், மகன் கஜேந்திரகுமார் அவர்களுக்கும்.

அன்புடையீர்,

கடந்த பல சகாப்தங்களாக தமிழ் மக்களின் விடிவுக்காகவும், உரிமைக்காகவும் குரல் கொடுத்த அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு அளவற்ற அதிர்ச்சிடைந்ததுடன், சொல்லொணா வேதனைப்பட்டு சோகத்தில் ஆழ்ந்தோம். கற்றறிந்த மேதையாய், சட்டத்துறைக் காவலனாய், தமிழினத்தின் விடிவிற்காக தோன்றிய ஒரு தாரகை இன்று தன் ஒளி இழந்து மறைந்து விட்டது. எங்கெல்லாம் அராஜகம் தலை விரித்தாடுகிறதோ, எங்கெல்லாம் அகதிகளின் அவலக்குரல் ஒலித்ததோ அங்கெல்லாம் தன் சிம்மக்குரல் எழுப்பி தமிழர் சிந்தை குளிரவைத்த செம்மல் சூறாவளியாக கனன்று எழுந்து எதிரியை நடுங்க வைத்த அந்தச் சிம்மக்குரலை இனி எப்போ கேட்போம்?

வழிகாட்டியாக, வழிநடத்திச் செல்லக்கூடிய ஒரு தலைவனை இழந்த தமிழினம் இன்று திசை தெரியாப் படகுகளாய் தடுமாறி நிற்கின்றனர். எங்களுடைய நிலையே இவ்வாறாக இருந்தால் குடும்பத்தவராகிய உங்களுடைய நிலை எப்படி இருக்கும். காரிலேறிச் சென்றவர் காலன் கைப்பிடியில் செல்வார் என்று யார்தான் நினைத்திருப்பார்கள்? புகழுடன் தோன்றி புகழுடன் மறைந்த தமிழ்த்திருமகன், தமிழ்மக்கள் இதயங்களில் அழியாத ஓவியமாக என்றும் நிலைத்து நிற்பான்.

குடும்பத்தலைவனை ஒரு நொடிப்பொழுதில் இழந்து தனியாய்த் தவித்திருக்கும் உங்களுக்கு எம் சங்க சார்பிலும், சங்க அங்கத்தவர்கள் சார்பிலும், அனுதாபங்களையும், இதய அஞ்சலிகளையும் செலுத்துகிறோம். அமரர் பொன்னம்பலம் அவர்களின் ஆத்ம சாந்திக்காக, உங்கள் மன இமைதிக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

'சாந்தி'

வி. கனகசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசப்பற்றாளருக்கு எமது இறுதி அஞ்சலி

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தினை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச்சொல்லி வந்தவரும் எமது தாயக விடுதலைப் போரின் காத்திரமான ஒரே ஒரு தலைமை சக்தியான தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் எதிரியின் வாசலில் இருந்து கொண்டே உரத்து ஆதரித்துக் குரலெழுப்பிவந்த நெஞ்சுரம் கொண்டவருமான திரு. குமார் பொனனம்பலம் அவர்களது படுகொலைச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம்.

சிறீலங்கா அரச பயங்கரவாதத்திற்கு குமார் அவர்கள் பலியான நிகழ்வானது "தமிழனாகப் பிறந்த எவருக்கும் பாதுகாப்பு என்பது அவர்களது சுதந்திர தன்னாட்சித் தனியரசின் கீழேதான் கிட்டுமே அன்றி சிறீலங்காவின் எப்பகுதியிலும் அல்ல" என்ற ஒரு தெளிவான செய்தியை எமக்கு வழங்குகிறது.

தமிழின விடுதலைக்காக புறப்பட்டு இன்று சிறீலங்கா அரசின் அடிவருடிகளாகத் தொண்டு ஊழியம் செய்யும் தமிழ்க் குழுக்களும், குழம்பிய குட்டையில் மீன்பிடித்து அரசியல் நடத்தும் கூட்டணியும், தமிழர் மானத்தை விலைகூவி விற்றுவரும் வேளையில் தமிழனாக வாழ்ந்து, தமிழீழத்திலே துன்பமுறும் தனது மக்களுக்காக, தனது தேசத்தின் விடியலுக்காகக் குரல் கொடுத்து வந்த ஒரே ஒரு தமிழ் அரசியல் தலைவர் காலஞ்சென்ற திரு. குமார் பொன்னம்பலம் என்றால் மிகையல்ல.

அதிகார மமதையுடன் தமிழரையும், தமிழர் தலைமையையும், தமிழரின் தனிப்பெரும் தலைவனையும் அவமதித்துக் கூச்சலிட்ட அதிகார அணங்கிற்குப் பகிரங்கமாகப் பதில் சொல்லத் தமிழ்க் குழுக்களுக்கும், தம்பிமாருக்கு அரசியல் கற்றுக் கொடுக்க எத்தனித்துவரும் சட்டம்பி சம்பந்தர் கூட்டணிக்கும் வாயெழாதபோது சினந்தெழுந்து கண்டித்த தனிமனிதன் காலஞ்சென்ற குமார் பொன்னம்பலம் அவர்கள்தான்.

குமார் அவர்களது படுகொலையால் விளைந்த வெற்றிடம் நிரப்ப முடியாதது.

இந்தப் பயங்கரவாதச் செயலை தமிழர்கள் பார்த்து வாளாதிருப்பார்கள் என சந்திரிகா எண்ணுவாராயின் அது அவரது வரலாற்றுத் தவறாக மாறும்படி தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒன்று திரளவேண்டும்.

எமது மதிப்பிற்குரிய குமார் அவர்களே, தாங்கள் நீண்ட பயணம் புறப்பட்டுவிட்டீர்கள்! ஆனால் எம் மனத்தில் நீங்கள் என்றும் நிலைத்திருப்பீர்கள். எமது தேசத்தின் வரலாறு தனது வீரப்புதல்வனாக உங்களைப் பதிவுசெய்து கொள்ளும். காலத்தால் அழியாத ஈகத்தால் நிலைத்து நிற்கும் எமது தேசத்தின் புதல்வர்களோடு நீங்களும் கௌரவிக்கப்படுவீர்கள்.

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுதலை இந்த இடத்திலே சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

காலஞ்சென்ற குமார் பொன்னம்பலம் அவர்கள் எமது தாயகத்திற்கும், தாயக விடுதலைக்கும் ஆற்றிய பங்களிப்புகளைக் கருத்திற்கொண்டு அவருக்குத் தமிழீழத்தின் அதி உயர் விருதான "மாமனிதர்" விருதினை வழங்குவது குறித்து பரிசீலிப்பதற்குத் தலைவர் அவர்களது மேலான கவனத்தை தாழ்மையுடன் கோருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல்

7.1.2000

தியாக உணர்வுடையட தலைவனை இழந்து தவிக்கிறார்கள் தமிழ் மக்கள்

குமார் பொன்னம்பலத்தின் படுகொலை பற்றிய அதிர்ச்சி தரும் செய்தி கொழும்பு வாழ் தமிழ் மக்களின் பணிக்குழுவைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. தமிழ் மக்கள் ஒரு தலைசிறந்த தியாக உணர்ச்சியுள்ள தீவிரமாகவும் மிகுந்த உணர்ச்சியுடனும், தமிழ் இனத்தின் அபிலாஷைகளை ஈட்டித் தரக்கூடிய ஒரு தலைவனை எதிர்பாராத முறையில் இழந்து தவிக்கின்றனர். இந்த நாட்டில் இப்பொழுது தமிழ் இனத்தின் அழிவுக்கு வழிவகுத்துச் செல்வதாகக் காணப்படும், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசாங்கத்தையும், தமிழ் ஈழ விடுதலைப்புலிகளையும் மத்தியஸ்தர்களின் உதவியுடன் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர உதவக்கூடிய ஒரு ஒப்பற்ற தலைவனை இந்த நாடு இழந்துவிட்டது என்று தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செய்லாளர் குமார் பொன்னம்பலத்தின் மறைவு குறித்து கொழும்பு வாழ் தமிழர் பணிக் குழுத் தலைவர் என் விஜயசிங்கம் விடுத்திருக்கும் செய்தியில் தெரிவித்திருக்கிறார். தமிழ் இனத்திற்கு கௌரவத்துடன் கூடிய சமாதானம் வேண்டுமென்றே குமார் அல்லும் பகலும் பாடுபட்டார். உயிர்களின் அழிவின் விளைவான மயான அமைதியையோ,அதிகார வெறிபிடித்த எஜமானுக்கும்,மனிதஉரிமைகள் யாவும் மறுக்கப் பட்ட ஓர் அடிமைக்குமிடையிலான அமைதியையோ குமார் விரும்பவில்லை.

நாட்டின்எப் பகுதியிலுமாயினும் தமிழ் மக்கள் அல்லலுற்று அவதிப்படும் போது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட இவர் எப்போதும் தவறியதில்லை. இவர் ஒரு அரசகுமாரன்போன்று இந்த நாடில் மாத்திரமன்றி வெளிநாட்டிலும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இவர் தன் மக்களுடன்சேர்ந்து வாழ்வதை விரும்பியமையினாலேயே தன் உயிரைத் தியாகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இவருக்கு ஏற்பட்டுவிட்டது.

தன்உயிருக்கு ஆபத்து வரக் கூடிய சந்தர்ப்பங்களும் பயமுறுத்தல்களும் பலமுறை இருந்த போதிலும், இவர் தற்பாதுகாப்பிற்கென ஒரு மெய்ப்பாது காவலரைக்கூட அமர்த்த விரும்பவில்லை.

அரசாங்கத்திற்கு இவைபற்றி அறிவிக்கவுமில்லை."இறைவனே எனக்குத் துணைஅவன் என்னைக் கைவிடமாட்டான்" என்றே நம்பிவந்தார்.

இவ்வேளையில் இந்தக் கோர யுத்தத்தின் விளைவாக உயிர்களை இழந் துவிட்ட பல்லாயிரக்காணக்கான மக்களின் பெயரால் நாம் இந்த அரசாங்கத்திற்குப் பின்வரும் பணிவான வேண்டுகோளை விடுக்கின்றோம்.

ஜனாதிபதி விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்குத் தயாராக இருப்பதாக அண்மையில் தெரிவித்திருந்த கருத்தையும், மத்தியஸ்தர்களின் உதவியுடன் ஓர் இணக்கப்பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக கடந்த வருடம் நவம்பரில் விடுதலைப் புலிகள் தெரிவித்த விருப்பத்தையும் நினைவிலிருத்தி ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களையும் மற்றும் அழிவுகளையும் நிறுத்தி, உடனடியாக இணக்கப் பேச்சு வார்த்தை நடத்த ஒழுங்கு செய்யுமாறு வேண்டுகின்றோம்.

1959இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவுடன் ஆரம்பமான இத்தகைய அரசியல் படுகொலைகளை மேலும் நடைபெறவிடாது தடுப்பதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

கொழும்புவாழ் தமிழர்பணிக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.02.2000

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு வணக்கம்.

கொடியவர்களின் கொலைக் கரங்களுக்கு தங்கள் கணவர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் பலியான செய்தி தமிழ்நாட்டு மக்களை அதிர்ச்சிடைய வைத்துள்ளது.

நண்பர் திரு. குமார் பொன்னம்பலம் நிறைகுடமாகத் திகழ்ந்தவர். அவர் தனது அறிவு, ஆற்றல், உழைப்பு எல்லாவற்றையும் தமிழ் மக்களுக்காக முழுமையாக அர்ப்பணித்த தியாகசீலர். விடுதலைப் புலிகளின் வீரஞ்செறிந்த போராட்டத்தின் மூலம்தான் ஈழத் தமிழ் மக்களுக்கு உண்மையான விடிவு கிடைக்கும் என்பதில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். உலக நாடுகளுக் கெல்லாம் சென்று ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் கொடுமைகள் குறித்தும் துயரங்கள் குறித்தும் பேசினார், எழுதினார், ஆதரவுதிரட்டினார், சிங்கள அரசின் பொய்ப் பிரச்சாரங்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி அவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாக விளங்கினார்.



பழ. நெடுமாறன்
தலைவர்
தமிழர் தேசிய இயக்கம்
ஆலோசகர்
தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு

17/1, தரகிம்புரம்
மயிலாப்பூர், சென்னை -600 004
தொலைபேசி : 044-494-0575
தொலைநகல் : 044-495-3916.

நாள்: 02-02-2000.

திருமதி. வேதகைட்சுமி குமார் பொன்னம்பலம் அவர்கள்
கொழும்பு.

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு

வணக்கம்.

கொடியவர்களின் கொலைக் கரங்களுக்கு தங்கள் கணவர் திரு குமார் பொன்னம்பலம் அவர்கள் பலியான செய்தி தமிழ்நாட்டு மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

நண்பர் திரு குமார் பொன்னம்பலம் நிறைகுடமாகத் திகழ்ந்தவர். அவர் தனது அறிவு, ஆற்றல், உழைப்பு எல்லாவற்றையும் தமிழ் மக்களுக்காக முழுமையாக அர்ப்பணித்த தியாகசீலர். விடுதலைப் புலிகளின் வீரஞ்செறிந்த போராட்டத்தின் மூலம் தான் ஈழத் தமிழ் மக்களுக்கு உண்மையான விடிவு கிடைக்கும் என்பதில் அவர் உறுதியான நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். உலக நாடுகளுக்கெல்லாம் சென்று ஈழத் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் கொடுமைகள் குறித்தும் துயரங்கள் குறித்தும் பேசினார், எழுதினார், ஆதரவு திரட்டினார். சிங்கள அரசின் பொய்ப் பிரச்சாரங்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி அவர்களுக்கு ஒரு சிம்மசொப்பனமாக விளங்கினார்.

சிங்களத் தலைநகரில் தன்னந்தனியாக இருந்துகொண்டு அஞ்சா நெஞ்சத்துடனும், அளவிட முடியாத தீரத்துடனும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியதாகும். அவரின் மறைவு உங்களுடைய குடும்பத்தினருக்கு ஏற்பட்ட சொந்த இழப்பு மட்டுமல்ல, ஈழத் தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்பும் அல்ல. உலகத் தமிழர்கள் அனைவருக்கும் ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பாகும் என்றே நான் கருதுகிறேன்.

மலரப்போகும் தமிழீழத்திற்கு முழுமையாகப் பயன்படவேண்டிய கால கட்டத்தில் சதிகாரர்கள் அவரின் இன்னுயிரைப் பறித்துவிட்டார்கள்.

நல்ல நண்பரை, அற்புதமான பண்பாளரை இழந்துவிட்ட துயரம் எனக்கு நெஞ்சில் கவிழ்ந்துள்ளது. 'கணவனை இழந்தோருக்கு காட்டுவது இல்'என இளங்கோவடிகள் கூறியதற்கும் ஏற்ப என்னால் தங்களுக்கு எந்தவகையிலும் ஆறுதல் கூற இயலாது. தீரமும், துணிவும் மிக்க தமிழ்த்தலைவரை கணவராகப் பெற்றிருந்த உங்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பைத் தாங்கிக்கொள்ளும் மனவலிமையை இறைவன் உங்களுக்கு அளிப்பான் என நம்புகிறேன். தங்களுக்கும் தங்கள் புதல்வர் கஜேந்திரகுமார் மற்றும் புதல்வி மிருளாளினி மற்றும் குடும்பத்தினருக்கும் ஏற்பட்டுள்ள ஆறாத் துயரத்தை உலகத் தமிழர்களுடன் நானும் பகிர்ந்து கொள்கிறேன்.

சென்னையில் நடைபெற்ற இரங்கற் கூட்டம் பற்றிய செய்திகளை இத்துடன் இணைத்துள்ளேன். பிப்ரவரி 8ஆம் தேதியன்று மதுரையிலும் அதைத் தொடர்ந்து மற்ற நகரங்களிலும் இரங்கற் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

அன்புள்ள
பழ. நெடுமாறன்.

அன்புள்ள


(பழ. நெடுமாறன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.இ.கச்சியப்பர் கழகம்

அம்மணீ,

தங்கள் கணவர் காலமாகவில்லை, அவர் உங்களுடனேயே இருக்கிறார். உயிர் அழிவதில்லை. உடல் தான் மறைந்தது. எனது உறவினர் என்ற ரீதியிலும், தமிழ்த்தாயின் சற்புத்திரன் என்ற ரீதியிலும் மிகவும் ஆழ்ந்த கலையுடன் இதைத் தங்களுக்கு எழுதுகின்றேன்.



கச்சியப்பர் கழகம்
கலிகியப்பர் கலகம்
KACHCHIYAPPAR KALAKAM.

K. SIVAKOLUNTHU
President

V. NADARAJAH
Vice president

K. RAJESWARY
Secretary

S. SIVASUBRAMANIYAM
Treasurer

G. THEVAVINAYAGAM
Deputy Secretary

தங்கள் மாமனார் G.G.பொன்னம்பலம் "சிறிமாவை" 1959லும், 1970–71 சதிவழக்குக் காலங்களிலும் பாதுகாத்துத் தப்பவைத்தார். தங்கள் கணவரோ தற் காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப் படும் அநீதிகளை உலகறிய எடுத்துரைத் தார். சைவத் தமிழ் மக்கள் அநாதைகளாகு வதற்குக் காரணம் இளஞ் சந்ததியினர் ஒழுக்கங்குன்றி அநாகரீக வாழ்வு தொடங்கியவையே.

சைவசமய வழிநின்று தவ, விரத, ஒழுக்க மேம்பாட்டுடன் வாழ்பவர்கட்கு என்றும் இன்பமே. தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் என்றும் இன்பமாய் வாழ்வீர்கள். தங்கள் கணவர் செய்த சேவை அவரை இருக்கும்போதும் இறந்தபின்பும் இன்பத்தையே என்றும் நல்கும். தங்கள் கணவரைப்போல் தங்கள் மகனும் தாங்களும் இறைபக்தியோடு வாழ்ந்து சைவத்தமிழ்ப் பணிபூண்டு இறவாத நிலை நல்க என்றும் இறைவன் துணைபுரிவார். தங்கள் கணவர் இறக்கவில்லை. சிவபதம்தான் பெற்றார். என்றும் எவர்க்கும் தீங்கு செய்யாத அவர் சிவத்துடன் கலந்துவிட்டார். இத்துடன் எங்கள் கழகத்தால் வெளியிட்ட ஓரிதழ் சைவ நாட்காட்டியையும் குறிப்புப் புத்தகமும் தாங்களும், பிள்ளைகளும் அவதானித்து விரதங்களையும், தவதானங்களையும் பெறும்பொருட்டு இவற்றை அனுப்புகின்றேன். தங்கள் மகன் கஜேந்திரகுமாரும் தாங்களும் சீர் சிறப்பாய் வாழவும் உயர்வடையவும் என்றும் இன்பம் அனுபவிக்ககவும் தங்கள் கணவனார் சிவத்துடன் இருந்து உதவி புரிவார்.

அவர் காலமாகவில்லை. கடவுளுடன் இணைந்து உங்களதும், உலகத்தமிழர்களதும் உயர்வுக்கு உறுதுணை புரிவார் என ஞாபகப்படுத்தி இம்மடலை வரைகின்றேன். அவரது(தங்கள் கணவரது) தாயார் எங்கள் இரத்த உருத்துடைய எம் பெண்ணடிச் சந்ததியினர் என்ற வகையிலும், காரைநகர் மக்கள் சார்பிலும் இறையளவும் தாங்கமுடியாத எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்புடன்

சைவ பூஷணம் குக சிவகொழுந்து

வைரவப்புளியங்குளம், வவுனியா.

அ.இ.கச்சியப்பர்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் பொன்னம்பலம் புகழ்மிக்க வாழ்க்கை!

புகழ்பெற்ற ஈழத் தமிழர் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் புதல்வராகப் பிறந்து "இவன் தந்தை எந்நோற்றான்கொல்" என்னும் வள்ளுவத்திற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் குமார் பொன்னம்பலம் ஆவார். தந்தையைப்போல இவரும் இலங்கையின் மிகச்சிறந்த வழக்கறிஞராகத் திகழ்ந்தார். மனித உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துவந்தார்.

சிங்கள இராணுவம், சிறப்பு அதிரடிப்படை, சிங்களப் போலிஸ் ஆகியவற்றின் கொடுமைகளுக்கு ஆளாகித் தவித்த ஆயிரக்கணக்கான தமிழர்களுக்காக நீதிமன்றங்களில் தொடர்ந்து பேராடினார். அரசுக்கு எதிரான வழக்குகளில் 98% வழக்குகளை அவர்தான் நடத்தினார் என அரசு வழக்கறிஞர் தெரிவித்துள்ளது இவரது ஒப்பற்ற தொண்டுக்குச் சான்றாகும்.

தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து பல அறிக்கைகளை அவர் அளித்துள்ளார். செம்மணி புதைகுழி போன்ற பல அட்டூழியங்களை அம்பலப்படுத்தினார். சிறைகளில் சித்திரவதை, கேள்விமுறையின்றி கைது செய்யப்படுதல், சட்ட விரோதமான படுகொலைகள், காணாமல் போதல் போன்ற தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு அட்டூழியங்களை ஐ.நா.மனிதஉரிமைக்கமிசன் முன் ஆதாரபூர்வமாக அளித்து சிங்கள அரசின் முகமூடியைக்கிழித்து எறிந்தார். பெல்ஜியத் தலைநகரான பிரசெல்ஸில் இயங்கும் ஐரோப்பிய நாடாளுமன்றம், இலண்டனில் உள்ள ராயல் நிறுவனம் மற்றும் பல்வேறு உலகளாவிய மனித உரிமை அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு நேராகச் சென்று புகார்களை அளித்தார். இதன்விளைவாக சந்திரிகாவின் கடுங்கோபத்திற்கு ஆளானபோதிலும் இறுதிவரை உயிரைப் பற்றிக் கவலைப்படாமலும் யாருக்கும் அஞ்சாமலும் தமிழர்களுக்காகத் தொண்டாற்றினார்.

சென்னை

வீரகேசரி

10.01.2000

தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை "சர்வதேச அரங்கில் ஒலிக்கச் செய்த தனிப்பெரும் தலைவர் குமார்"

-கொழும்புத் தமிழ்ச் சங்கம் அனுதாபம் -

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும் இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் பொதுச் செயலாளரும், பிரபல சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலை தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமல்லாது நாட்டிற்கே ஒரு பேரிழப்பாகும் என கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயலாளர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

ஒடுக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களின் உள்ளக் குமுறல்களைத் துணிந்து உலகிற்கு வெளிப்படுத்திய ஒரு சிறந்த லவராகத் திகழ்ந்த குமார் பொன்னம்பலம் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்ட பாவித் தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக நீதிமன்றங்களில் முன்னின்று வாதாடியவர்.

இலங்கை தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைகளை சர்வதேச அரங்கில் ஒலிக்கச் செய்த ஒரு தனிப்பெரும் தலைவராக அவர் திகழ்ந்தார்.


இவருடைய படுகொலை ஜனநாயகப் பண்பாட்டிற்கும், கருத்துச் சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாக கொழும்புத் தமிழ்ச்சங்கம் கருதுகின்றது. இப்படுகொலைக்கு யார்யார் காரணவாளிகளோ அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவேண்டும்.

குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவு குறித்து கொழும்பு தமிழ்ச் சங்கம் அவர் தம் இழப்பால் நிர்க்கதியாகி நிற்கும் தமிழ் பேசும் இனத்திற்கும் குடும்பத்தினருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
கிளிநொச்சி.
28.02.2000

அன்புடையீர்,அனுதாபச் செய்தி.



2000.02.27ம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தினைத் தங்களுக்குத் தெரியத்தருவதோடு எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தையும் இத்தால் கூறிக்கொள்ள விழைகிறோம். "கடந்த பல பத்தாண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் மேலான அடக்கு முறைகளை கொழும்பு வாழ் தமிழ் மகன் ஒருவர் உரத்துக்குரல் கொடுத்தார் என்றால் அக்குரலானது அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளரான அமரர் மாவீரர் குமார் பொன்னம்பலத்தையே சாரும். தமிழருக்கு எதிராக சொல்லாலும், செயலாலும் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச ஒடுக்கு முறைகளையும், சிங்கள பேரினவாத சக்திகளினது அடக்கு முறைகளையும் அஞ்சா நெஞ்சோடும் ஆத்ம பலத்தோடும் உரத்துக் காப்புக்குரல் கொடுத்த அமரர் குமார் பொன்னம்பலத்தை வன்முறையாக படுபாதகக் கொலை செய்தமையை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொதுச் சபையானது வன்மையாகக் கண்டிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுவதோடு அன்னாரின் இழப்பால் மாறாத்துயருறும் குடும்பத்திற்கும் உறவினர்க்கும், ஆழ்ந்த அனுதாபங்களை பணிவுடன் தெரியவைக்கிறது.

நன்றி.

இவ்வண்ணம்,
தங்கள் சேவையிலுள்ள
சதா தனபாலசிங்கம்,
நிர்வாகச் செயலாளர்.

கண்ணீர் அஞ்சலி

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றக்

கொழும்புக் கிளை உப தலைவர்
திருமதி யோகலட்சுமி
அவர்களின் துணைவர்

அமரர் குமார் பொன்னம்பலம்

கொழும்புக்கிளைச் செயலாளர்
திரு.சு.பாலச்சந்திரன்
அவர்களின் துணைவியார்
அமரர் கமலாம்பிகை

ஆகியோரின் இழப்பினால் துயருறும் அவர் தம் குடுபத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றமும்,
கல்லூரிச் சமூகமும்.
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் **09.01.2000**

குமாரின் மறைவு
தமிழ் சமூகத்திற்கு இழப்பு

-அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் -

அரசியல்வாதியாகவும், சட்ட வல்லுநராகவும் திகழ்ந்த அமரர், குமார் பொன்னம்பலம், மனத்தைரியமும், செயலாற்றும் திறனும் கொண்ட திறமைமிக்க தமிழ் சமூகத்தின் தலைவராக மிளிர்ந்தார்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், கால்நடை அபிவிருத்தி, தோட்டக் கட்டமைப்பு அமைச்சருமான, ஆறுமுகம் தொண்டமான் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

குமார் பொன்னம்பலம் சர்வதேச ரீதியில் தனது திறமையை அறிமுகப்படுத்தி, புகழ்படைத்து வாழ்ந்தவராவார். தனக்கு சரியெனப்பட்டதை துணிவோடு சொல்லும் மன உறுதிபடைத்தவர்.

தமிழ் சமூகத்தின் விடிவுக்கு தன்னாலான பங்களிப்பை மனசுத்தியோடு வழங்கி வந்ததோடு, வடகிழக்கு மக்களின் மீட்சிக்கு குரல் கொடுத்து வந்த இவர் பல்வேறு மட்டத்திலும் தமிழ் மக்களுக்கு இன்னல்கள் விளைந்த காலகட்டங்களில், ஜனநாயக முறையில் தனது எதிர்ப்புகளைத் தெரிவித்து, வன்முறைகளைக் கண்டித்துள்ளார், இவரது இழப்பு தமிழ் சமூகத்துக்கு மட்டும் இழப்பாக மாட்டாது.

திறமைமிக்க சட்டவல்லுநரை நாடு இழந்துள்ளது. ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்த ஒரு தலைவனை தமிழ் சமூகம் இழந்துள்ளது. பல ஆண்டுகாலம் தொடர்ந்தாலும்கூட அவரது இழப்பு ஈடுசெய்முடியாதது. அன்னாரைப் பிரிந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கு, இந்திய வம்சாவளி மக்களினதும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸினதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கிறேன் என ஆறுமுகம் தொண்டமான் தனது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தினக்குரல் **07.01.2000**

குமாரின் கொலை கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக தீர்க்கப்பட்ட வேட்டு

புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட செயல் ஜனநாயகம், கருத்து–எழுத்துச் சுதந்திரம் என்பனவற்றுக்குத் தீர்க்கப்பட்ட வேட்டுக்களாகவே கொள்ளல் வேண்டும். இந்த அதிர்ச்சிக்குரிய கொலைச் சம்பவம் பேரினவாதிகளுக்கும், யுத்த வாதிகளுக்கும் மனநிறைவைக் கொடுத்திருக்கும். ஆனால், ஜனநாயக சக்திகளுக்கும், ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நிற்கும் தேசிய இனங்களுக்கும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக ஒரு வலிமை மிக்க குரலாக இருந்து வந்த குமார் பொன்னம்பலத்தின் படுகொலையை எமது புதிய ஜனநாயக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் குமார் பொன்னம்பலம் கடைப்பிடித்து வந்த வர்க்க–இன அரசியல் நிலைப்பாட்டில் எமக்கு எவ்வித உடன்பாடும் கிடையாது. ஆனால், தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான நிலையிலும், தமிழ் மக்களின் ஜனநாயக மனித உரிமைகளை வற்புறுத்தி அதற்காகத் துணிவுடன் குரல் கொடுத்து வந்ததிலும் அவர் முன்னணியில் இருந்து வந்துள்ளார் என்பதை மறுக்க முடியாது. குமார் பொன்னம்பலத்தின் கொலைச் சம்பவம் ஜனநாயகத்திற்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள அபாய எச்சரிக்கையாகவே காணப்படுகிறது. எனவே தேசிய இன ஒடுக்கு முறையை எதிர்த்து நிற்கும் நேர்மையான தமிழ்ச் சக்திகள் அனைத்தும் சுயநிர்ணய உரிமையை ஏற்று நிற்கும் சிங்கள இடதுசாரி முற்போக்குச் சக்திகளுடன் ஒன்றிணைந்து தோன்றியுள்ள அபாயச் சூழலுக்கு எதிராக அணி திரளவேண்டிய தேவை அவசியமாகியுள்ளது. இதனையே குமார் பொன்னம்பலத்தின் கொலைச் சம்பவம் உணர்த்தி நிற்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல்

07.01.2000

அய்யாத்துரை அனுதாபம்

ஜனநாயகத்தின் மீது உறுதியான நம்பிக்கையுடன் உறுதியாக தமிழ் மக்களின் உரிமைக்கும், அடக்கு முறைக்கும், இனநெருக்கடிக்கும் எதிராகக் குரல் கொடுத்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அஞ்சா நெஞ்சம் கொண்ட வீரத் தமிழன் குமார் பொன்னம்பலம் அவர்கள் கொலைஞர்களால் கொலைசெய்யப்பட்ட செய்தியைக் கேட்டு நாமும் மலையக தமிழ் மக்களும் பேரதிர்ச்சியும், சொல்லொணாத் துன்பமும் அடைந்துள்ளோம். இந்தக் கொலையானது ஜனநாயகத்தின் மீது கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையையும் தகர்த்து விட்டது. இந்தக் கொலைச் செயலையும், இதற்கு பின்னால் செயல்பட்ட கும்பலின் செயலையும் தொழிலாளர் தேசிய சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் டி.அய்யாத்துரை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

குமார் பொன்னம்பலம் அவர்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இந்த நாட்டின் இனவாதிகள் கண்டனக்குரல் எழுப்பும் போதெல்லாம் தன்னுடைய உறுதியான குரலால் எதிர்க்குரல் கொடுத்து வந்தவர். தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக நீதிமன்றங்களில் துணிவோடு ஆஜராகி அஞ்சாது நீதிக்காகப் போராடி வருபவர். இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டங்கள் இந்த நாட்டு அரசுகள் சமர்ப்பித்த போதெல்லாம் அதிலுள்ள குறைபாடுகளை அம்பலப்படுத்தி தமிழ் மக்களின் உரிமைக்கு குரல் கொடுத்தவர்.

தமிழ் மக்களின் உரிமைக்கும், நியாயத்திற்கும் போராடும் தீரமிக்க வீரராகத் திகழ்ந்தவர் தலைவர் குமார் பொன்னம்பலம். அவர்களின் மறைவு இலங்கைத் தமிழர்களுக்கு மாத்திரமல்ல முழு உலகிலும் வாழும் தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும், இத்தகைய துணிச்சலான தலைவரை இழந்து துயருற்றிருக்கும் தமிழ் மக்களுக்கும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும், அன்னாரை இழந்து துயரில் தவிக்கும் குடும்பத்தாருக்கும் மலையகத் தமிழ் மக்களின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என்று அய்யாத்துரை அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வீரகேசரி

10.01.2000

உலக தமிழர்கள் மனதில் குமாருக்கு அழியாத இடமுண்டு

பாரதி தமிழோசை கழகம்

தமிழ் மக்களின் குரலோன் என்று பெயர் சொல்லும் பிள்ளை அமரர் குமார் பொன்னம்பலத்தின் திடீர் மரணம் உலகத்தமிழ் மக்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினை தொடர்பாக தீவிர அக்கறை செலுத்தி வந்ததுடன், அவர் அடிக்கடி குரல் கொடுத்தும் வந்தவர். தமிழ் மக்களை ஒரு கொடியின் கீழ் அணிதிரள வேண்டுமென விரும்பிய தலைவர்களில் ஒருவராவார். இவ்வாறு பாரதி தமிழோசைக் கழகத்தின் தலைவர் வர்ண. இளஞ்செழியன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :–

குமார் பொன்னம்பலம் திடீரென அமரத்துவமான செய்தியானது என்னையும் கழக உறுப்பினர்களையும் பேரதிர்ச்சியில் உலுக்கியது. தமிழ் மக்களின் அரசியல் சமூக உயிர்நாடிகளை நிர்ணயித்து வந்த தனிப்பெரும் மறத் தமிழன் குமார் ஆவார். தமிழினத்தின் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இதைவிட பேரதிர்ச்சி இருக்க முடியாது.

தம் மனதுக்கு சரியானதெனப்பட்ட எந்தக் கருத்தையும் துணிந்து வெளிப்படுத்தும் தன்னிகரற்ற ஒரு தலைவராக வாழ்ந்து காட்டியிருக்கிறார். முடங்கிக்கிடந்த தமிழ் மக்களின் குரலை சர்வதேச அரங்கிலே ஒலிக்கச் செய்தவர் இம்மாமனிதர்.

வீரத்தமிழ் மகன் குமாரின் படுகொலை ஒரு மனிதாபிமானம் அற்ற வன்மை மிகு கொடும் செயலாகும். இவருக்கு உலகத் தமிழ்மக்கள் மனதில் என்றும் அழியாத ஒரு இடம் நிரந்தரமாக இருக்கும். இவரின் மறைவினால் நிலை குலைந்த உள்ளங்களின் ஆதங்கத்தில் பாரதி தமிழோசைக் கழகமும் இணைந்து கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல்

07.01.2000

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தொழில்சார்ந்த தேர்ச்சியை தாராளமாக அர்ப்பணித்தவர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குமாருக்கு புகழஞ்லி

அடக்கியொடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தனது தொழில்சார்ந்த தேர்ச்சியைத் தாராளமாக அர்ப்பணித்தவர் குமார் பொன்னம்பலம்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலத்தின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரவூப் ஹக்கீம் விடுத்திருக்கும் இரங்கல் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அச்செய்தியில் ஹக்கீம் தெரிவித்திருப்பதாகவது :

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் அவர்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிப்பதுடன் எமது கட்சியுடனும் அதன் தலைமைத்துவத்துடனும் நெருங்கிச் செயற்பட்ட ஒரு அரசியல் நண்பரை நாம் இழந்துவிட்டமைக்காக வருந்துகிறோம்.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் ஒரு நீண்ட அரசியல் பாரம்பரியத்தில் வளர்ந்தவர். தமது சமூகத்தின் எதிர்பார்ப்புகளை கடந்த காலங்களில் மிதவாத அணுகுமுறையுடன் பிரதிபலித்த அவர் அண்மைக்காலமாக தீவிரவாத ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்திப் பேச தலைப்பட்டமையால் தென்னிலங்கையில் மிகுந்த விமர்சனத்திற்குள்ளாகிய ஒருவராகத் திகழ்ந்தார்.

அவருடைய கொள்கைப்போக்கில் எவ்வித மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும் இந்நாட்டு தமிழ் மக்களின் சகோதர இனமாகிய முஸ்லிம்கள் குறித்து அவர் கொண்டிருந்த நிலைப்பாடு சமகால தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் பலவற்றினது நிலைப்பாடுகளை விடவும் முன்னேற்றகரமாக இருந்ததென்பதை முஸ்லிம் காங்கிரஸ் நன்றியுணர்வுடன் நினைவுகூருகிறது. குறிப்பாக 1988ஆம் ஆண்டிலேயே வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கு நிலத்தொடர்பற்ற ஒரு அரசியல் அலகை அங்கீகரிக்கும் அளவுக்கு விசாலமான அரசியல் பார்வையை அவர் கொண்டிருந்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணி(*D.P.A.*)என்ற பேரில் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக பிரதான எதிர்க்கட்சிகள் உட்பட பல கட்சிகள் கூட்டுச் சேர்ந்து ஒரு முயற்சியை 1988ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்கூட்டியே தொடங்கியபொழுது அவ்வமைப்பில் முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்க் காங்கிரஸும் கூட்டாகச் செயற்பட்டன. இந்நாட்டின் இனப்பிரச்சினை குறித்து தெளிவானதும் தூரநோக்குடையதுமான சில ஆலோசனைகளை அப்போதைய பிரதான எதிர்க்கட்சியாகவிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட மிதவாத இடது சாரிக் கட்சிகளும் மக்கள் விடுதலை முன்னணி(*J.V.P.*)போன்ற தீவிரவாத இடதுசாரிக் கட்சியும் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு ஒரு இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் நண்பர் குமார் பொன்னம்பலம் ஒரு தீர்க்கமான பங்களிப்பைச் செய்தார் என்பதை நாம் மறக்கவியலாது.

அதிலும் விசேடமாக அவவாலோசனைகளில் வடகிழக்கில் முஸ்லிம்களுக்கு நிலத்தொடர்பற்ற ஒரு அதிகார அலகு அமையவேண்டும் என்ற கருத்தை உட்புகுத்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்துக்கு சகோதரர் குமார் பொன்னம்பலம் பக்கபலமாக இருந்தார் என்பது நினைவு கூரப்பாலது.

புகழ்பூத்த சட்டவாதியாகவிருந்த அவரது தகப்பனாரின் வாரிசு என்ற அடிப்படையில் குற்றவியல் சட்டத்துறையில் அவர் சிறந்துவிளங்கினார். அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தமது தொழில்சார்ந்த தேர்ச்சியை தாராளமாக அவர் அர்ப்பணித்தார். அன்னாரின் மறைவினால் துயருறும் மனைவி, மகன், மகள் உட்ப குடும்பத்தினர் அனைவருக்கும் தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவலிங்கம்

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான மு. சிவலிங்கம் விடுத்திருக்கும் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது :

தமிழ்த் தலைவர்களில் ஒருவரான குமார் பொன்னம்பலம் அவர்களின் திடீர் மரணம் பேரதிர்ச்சியைத் தருகிறது. இந்த மாமனிதரின் இழப்பு ஈடு செய்யப்பட முடியாததாகும்.

இவர் தனி மனிதராக நின்று ஒரு சமூகத்திற்காகக் குரல் கொடுத்தவர்.

சாத்வீகம், ஜனநாயக வழிகளில் நம்பிக்கை கொண்டிருந்த இவரின் துணிவான செயற்பாடுகள் வியப்பைத் தருபவையாக இருந்தன.

இவரது மறைவை பேரிழப்பாகக் கருதும் அனைவருக்கும் எமது அனுதாபங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி

10.01.2000

புத்தாயிரமாம் ஆண்டிலேனும் சமாதானத்தை எதிர்பார்த்தோருக்கு பேரிடியானது குமார் மறைவு

இனப்பிரச்சினை காரணமாக இந்த நாடு பல்வேறு வகையான நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றபோதிலும் 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சமாதானம் மலர வேண்டும் என்னும் மக்களின் எதிர்பார்ப்பில் இடி விழுவது போன்று நடந்த குண்டுத்தாக்குதலும், தமிழர் உரிமைக்காக குரல் கொடுத்துவந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் மாண்புமிகு குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டமையும் கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும் என இலங்கை திராவிடர் கழகம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :–

மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதாகக் கூறி ஏந்திய குண்டுகளும், துப்பாக்கிகளும் இன்று மாறிமாறி ஒரே நாட்டுக்குள் இன அழிவை ஏற்படுத்துவதை எத்தரப்பினரும் நியாயப்படுத்த முடியாது.

தினகுரல – 8.1.2000

'தமிழர்கள் கண்ணீர் வடிக்கிறார்கள்'

தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்த தமிழ் மகன் குமார் பொன்னம்பலத்தின் மரண அதிர்ச்சி இலங்கை வாழ் தமிழ் மக்களை மாத்திரமன்று உலகத்தில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனையும் கண்ணீர் வடிக்க வைத்துள்ளது என்று கொழும்பு மாவட்ட ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களுக்காக உரத்த குரலில் தன்மானத்தோடு எந்தவித தயக்கமும் இன்றி தனது கருத்தை வெளியிட்ட தமிழ் சிங்கம் நம்மைவிட்டு பிரிந்துள்ளது என்பது நம்பமுடியாமல் உள்ளது.

இவரைப்போன்ற பல குரல்கள் தமிழ் மக்களின் விடிவுக்காகவும், மறுதலிக்கப்பட்ட உரிமைக்காகவும் குரல் கொடுக்க முன்வரவேண்டும். இந்த நாட்டில் தமிழ் மக்கள் இழந்துள்ள உரிமைகளைப் பெற இன்னும் பல பொன்னம்பலங்கள் தோன்ற வேண்டும் என்று அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதா பேரவை

தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம்பலத்தின் படுகொலை அப்பாவித் தமிழ் மக்களை நசுக்கும் செயலாகுமெனவும், இப்படுகொலைகளைப் புரிந்தவர்கள் தமிழ் மக்களின் அவலநிலையை மென்மேலும் பாதிக்கும் விதத்தில் காரியமாற்றி வருகின்றார்கள் என்றும் அனைத்திலங்கை புரட்சித் தலைவி ஜெயலலிதா நற்பணிப் பேரவை விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனப்பிரச்சினை தீர்வு முயற்சியை தொடர்ந்து தாமதப்படுத்தினால் முற்றும் முழுதாக தமிழ் இனம் நம்பிக்கை இழக்கும்!"

- குமார் -

"வீரகேசரி" நிருபர் நிக்ஸனுக்கு, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் அளித்த கடைசிப் பேட்டி: (ஏதோ காரணத்துக்காக பிரசுரிக்கப்படவே இல்லை)!!

"பாராளுமன்றத்தை தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான ஒரு மேடையாக பயன்படுத்த வேண்டுமே தவிர வெறும் சலுகைகளை மட்டும் பெறுவதற்கான மன்றமாக மாற்றியமைக்கக் கூடாது. அவ்வாறு சலுகைகளை மட்டும் பெறுவதாயின் நாம் அடிமை வாழ்வு வாழ்கிறோம் என அர்த்தமாகிவிடும்" என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் வைத்து "கேசரி"க்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்றை ஆரம்பிப்பதற்கு நீங்கள் முயற்சிக்கலாமே?

பதில்: அரசு – புலிகள் என்ற இரு தரப்பினரிடையேயான பேச்சுவார்த்தைக்கு திட்டவட்டமான அணுகுமுறையொன்று தேவை. குறிப்பாக திம்புக்கோட்பாட்டின் அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டக் கோவை எழுதப்படவேண்டும்.

அத்துடன் இராணுவத்தினர் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற வேண்டும். இந்த இரு விடயங்களையும் அரசு நிறைவேற்றுமானால் புலிகள் யாருடைய உதவியுமின்றி பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கேள்வி: திம்புக் கோட்பாட்டிற்கு ஈடான வகையில் அரசின் தீர்வுத்திட்டம் அமைந்துள்ளதாக ஒரு சில தமிழ்க் கட்சிகள் கூறிகின்றனவே?

பதில்: இந்த அரசாங்கம் 1995, 1996, 1997 ஆகிய ஆண்டுகளில் மூன்று தடவை தீர்வுத் திட்டங்களை ஏற்படுத்தியது. அத்திட்டங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஒன்றுக்கொன்று நலிவுற்றவையாகவே ஏற்படுத்தப்பட்டன. தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் ஆனந்தசங்கரி 96ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரதசின் தீர்வுத்திட்டத்தில் வகுப்புவாத சக்திகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளதாக பேட்டியொன்றில் கூறியிருந்தார்.

அவ்வாறானதொரு பேட்டியில் ஈ.பி.டி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவும் தீர்வுத் திட்டம் "தமிழ் மக்களுக்குரிய கௌரவமானதொன்றல்ல" என்று கூறியுள்ளார். ஆகவே அரச சார்பு கட்சிகள் இவ்வாறு கூறும்போது தீர்வுத்திட்டம் திம்புக் கோட்பாட்டிற்கு ஈடானதென யார் கூறினார்கள்? அப்படியானால் அவர்கள் இரட்டை நாக்கு அரசியல் வாதிகள்.

பரிசீலனைக்கு எடுக்கப்படாத சீர்திருத்தங்கள்

கேள்வி: தீர்வுத் திட்டத்திலுள்ள குறைபாட்டை கூறிய தமிழ்க் கட்சிகள் அது பற்றிய சீர்திருத்தங்களை பாராளுமன்ற தெரிவுக்குழுவில் முன்வைத்துள்ளனரே?

பதில்: அவ்வாறு முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றி அரசு இதுவரை பரிசீலனை செய்ததாக நான் அறியவில்லை. அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தைவிட்டுக் கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் இவர்களின் சீர்திருத்தங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுமென நாம் எதிர்பார்க்கமுடியாது. அது பற்றி பேசுவதே மடமை. உண்மையில் கடந்த 15 ஆண்டுகளாக பாராளுமன்றத்தில் தமிழ் மக்கள் சார்பான குரல் உரக்க ஒலிக்கவில்லை. தற்போதுள்ள சில தமிழ் அங்கத்துவங்கள் அரசாங்கத்தால் விலைபேசப்பட்டவையாகும்.

அத்துடன் சில தமிழ் அமைப்புகள் வெறுமனே சலுகைகளுக்காக மட்டும் பாராளுமன்றத்தை பயன்படுத்துகின்றன. சுருக்கமாக சொல்வதானால் சில தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் கோழைத்தனமான அடிமை வாழ்வு வாழ்கின்றனர்.

கேள்வி: அமைச்சர் பதவியை ஏற்பதைவிட எம்.பி.பதவியோடு மட்டும் முன் நிபந்தனையுடன் அரசுக்கு ஆதரவு வழங்குவதால் மக்களுக்கு சேவை செய்யலாம் எனவும் அவ்வப்போது அரசாங்கத்தை எதிர்த்துப் பேசலாம் எனவும் சில தமிழ் கட்சிகள் தெரிவிக்கின்றனவே?

பதில்: அவ்வாறு முன்–நிபந்தனையுடன் பாராளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவு வழங்கி அவர்கள் இதுவரையும் சாதித்ததென்ன? கட்சி நலனுக்கான ஆதாயங்களை பெற்றார்களே தவிர மக்களுக்காற்றிய சேவைதான் என்ன?

சாதாரணமான அடிப்படை வசதிகளைக்கூட தமிழ் மக்கள் இழந்து தவிக்கின்றனர். இரவுபகலாக தமிழ் மக்கள் காரணமின்றிக் கைதுசெய்யப்படுகிறார்கள். அரசின் தமிழர் மீதான அடிப்படை மனித உரிமை மீறல்களை உச்சநீதிமன்ற தீர்ப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு தமிழ் மக்களுக்கு பல்வகைப்பட்ட பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. எனவே முன் நிபந்தனையுடன் அவர்கள் அரசுக்கு ஆதரவு வழங்கியும் இவை தொடர்பான விடயங்களை தீர்க்க முடியவில்லையே? அத்துடன் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தற்போதைய இடையூறுகள் அனைத்தும் அரசினாலேயே எற்படுத்தப்பட்டவை ஆகும்.

புலிகள் நிராகரித்த விடயம்

கேள்வி: இனப்பிரச்சினைக்கு தீர்வாக மாகாண சபையை ஏற்கலாமா? அதனடிப்படையில்தான் இடைக்கால நிர்வாக சபையொன்று வடக்குக் கிழக்கில் அமையவுள்ளதே?

பதில்: அது ஏற்புடையதல்ல. புலிகளால் நிராகரிக்கப்பட்ட விடயம். அத்துடன் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் மேல்மாகாணத்தில் போட்டியிட்ட சந்திரிகா குமாரதுங்க(இன்றைய ஜனாதிபதி)மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லைெனவும் இனப்பிரச்சினைக்கு தீர்வாக புலிகள் இதை ஏற்காது நிராகரித்தமை நியாயமானதெனவும் கூறியிருந்தார்.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது மாகாண சபை இயங்கவில்லை. இந்நிலையில் இதை அடிப்படையாகக் கொண்ட இடைக்கால நிர்வாக சபை என்பது மறந்துபோன விடயத்தை நினைப்பூட்டி மீண்டும் அரசியல் லாபம் தேடும் முயற்சியாகும்.

கேள்வி: தமிழீழ கோரிக்கையை விட்டுக் கொடுக்காத நிலையில் புலிகளுடன் எவ்வாறு பேச்சுவார்த்தை நடத்துவது என அரசு தரப்பில் கூறப்படுகிறதே?

பதில்: எத்தகைய கோரிக்கைகளையும் புலிகள் காரணமில்லாமல் முன்வைப்பதில்லை. 1995ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது 43 கடிதங்கள் அரசு – புலிகளிடையே பரிமாறப்பட்டன. அவற்றில் புலிகள் தங்கள் நிலைப்பாட்டைக் கூறிய போதும் அரசு தனது நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவரவில்லை. அத்துடன் மாறுபட்ட கருத்து வெளிப்பாடுகளை அரசு ஏற்படுத்தியது.

எனவே, பேச்சுவார்த்தைக்கு முன்னரோ அல்லது பேச்சுவார்த்தையின்போதோ எத்தகைய விட்டுக் கொடுப்புக்கும் புலிகள் சம்மதிக்கப்போவதில்லை.

எவ்வாறாயினும் தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றீடாக வலுவேறாக்கற் கோட்பாட்டை மையப்படுத்திய பூரண சமஷ்டி ரசை ஏற்பதற்கு புலிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர். இது ஏற்கனவே அவர்களால் தெளிவுபடுத்தப்பட்ட விடயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் தீர்வு முயற்சி மேலும் மேலும் தாமதிக்குமானால் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கோரிக்கைகளும் மேலும் அதிகரிக்கும் என்பதை சம்பந்தப்பட்ட அரசியல் தலைமைப்பீடம் உணரவேண்டும். அவ்வாறு உணரப்படவில்லையாயின், ஈற்றில் தமிழினம் அவர்களை முற்று முழுதாக நம்பப் போவதில்லை. எனினும் அந்த முடிவுக்கு நான் ஏற்கனவே வந்துவிட்டேன்.

வெளிநாட்டு மத்தியஸ்தம்

கேள்வி: நீங்கள் கூறியவாறு புலிகளின் விட்டுக்கொடுக்கும் அரசியல் நிலைப்பாட்டைப் புரிந்து கொண்டு அரசு பேச்சுவார்த்தையொன்றை நடத்துமானால் வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையில்லையென கருதுகிறீர்களா?

பதில்: ஐம்பது ஆண்டுகளாக பிரச்சினை தீர்க்கப்படாது தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் 1987 ஆம் ஆண்டு தீர்வுக்காக உருவாக்கப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம்கூட வெளிநாட்டு மத்தியஸ்தம்தான்.

எமது வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நடவடிக்கைகளும் அதைத்தான் உணர்த்துகின்றன. குறிப்பாக இனப்பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினையெனக் கூறுகின்றார். ஆனால் புலிகள் ஏதேனும் கூடுதலான தாக்குதல்களை மேற்கொண்டால் "புலிகள் பயங்கரவாதிகள், அவர்களைத் தடைசெய்யுங்கள்" என வெளிநாடுகளிடம் கோருகின்றார்.

ஆகவே கதிர்காமரின் புலிகள் பற்றிய வெளிநாட்டுப் பிரசாரமே வெளிநாட்டு மத்தயஸ்தக்கிற்கான கோரிக்கைதான். அத்துடன் அவரின் விபரம் தெரியாத அரசியலையும் அது சித்தரிக்கின்றது.

கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய அதிகாரப் பரவலாக்கலை புலிகள் விரும்புவில்லையே?

பதில்: அதிகாரப் பரவலாக்கல் என்பது மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசு மீளப்பெறக்கூடியது. மாகாண சபையும் அத்கைய இயல்புள்ளதொரு திட்டமாகும். அதனாலேதான் புலிகள் அதிகாரப் பரவலாக்கலை ஒரு பொருட்டாக கருதுவதில்லை. வலுவேறாக்கல் அதிகாரப் பிரிவினை கோட்பாட்டை மையப்படுத்திய சுயநிர்ணய அரசியல் நெறிப்படுத்தலே இனநெருக்கடிக்கு தீர்வாக அமையும்.

வாக்காளர் பதிவு நடத்தப்படாத நிலை

கேள்வி: ஜனாதிபதித் தேர்தலில் தமிழரொருவரை வேட்பாளராக நிறுத்தும் முயற்சியிலிருந்து நீங்கள் விலகியதன் நோக்கம் என்ன?

பதில்: நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தீர்மானிக்கவில்லை. அத்துடன் எனது கட்சியும் அதை விரும்பவில்லை.

எனினும் தமிழரொருவரை பொது வேட்பாளராக நிறுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டுமென்பதில் ஆரம்பத்தில் நான் உடன்பட்டேன். ஆனால் அதற்கான சூழ்நிலைகள் தமிழ்ப்பகுதிகளில் இல்லை. அத்துடன் நான் கொடுத்த நான்கு அம்சக் கோரிக்கைகளையும் யாரும் ஏற்பதாகத் தெரியவில்லை. அத்துடன் 1983ஆம் ஆண்டிலிருந்து வாக்காளர் பதிவுகள் ஏதும் தமிழ்பகுதிகளில் நடைபெறவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் என்பது எமக்குரியதல்ல, அது சிங்கள இனத்திற்குரியது.

கேள்வி: தமிழ்க் கட்சிகளை(முன்னாள் இயக்கங்களை)தங்களுடன் இணையுமாறு அல்லது பொதுவாழ்வில் சேருமாறு புலிகள் வெளியிட்ட அறிக்கை பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: சில தமிழ்க்கட்சிகளின் நடத்தையினால் அத்தகைய அறிவிப்பு வெளிவந்தது. இன விரோத செயல்களில் அவர்கள் ஈடுபடாதிருந்தால் புலிகள் அவ்வாறு அறிக்கை வெளியிட்டிருக்க மாட்டார்கள்.

கேட்டி கண்டவர் – அ. நிக்ஸன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் தூப்பாக்கி ஏந்த முடியுமானால் நானும் யுத்தத்திற்கு செல்வேன்

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால் கொழும்பில் இருந்து வெளிவரும் 'ராவய' எனும் சிங்களப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் சில முக்கிய பகுதிகள் இவை. இதுவே இவரது இறுதிப் பேட்டியாகவும் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கேள்வி :– இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளதால் தமிழ் மக்கள் இன்னும் சில காலத்திற்கு கஷ்டம் அனுபவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் என கூறியுள்ளீர்கள். அப்படியாயின், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தால் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார் என்பதுதான் அர்த்தமா?

பதில் :– தமிழ்ச் சமுதாயம் அவர்களது வரலாற்றிலேயே கடந்த ஐந்து வருடங்களில் அனுபவித்தது போன்ற ஒரு கஷ்டத்தை அனுபவிக்கவில்லை. அதனால் இந்த 'நோனா' மீண்டும் ஜனாதிபதியாக வருவதை நாங்கள் யாருமே விரும்பவில்லை. அதனால் இவரை அகற்ற வேண்டுமானால் இவரை தோற்கடிக்கக்கூடிய ஒருவரை நாம் வெற்றிபெறச் செய்யவேண்டும்.

கேள்வி :– ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பிரபாகரனுக்கும் இடையே இரகசிய தொடர்புகள் இருந்தபடியால் அவரை பதவியில் இருத்தி அவர் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள தமிழ் வட்டாரங்கள் நடவடிக்கையை மேற்கொண்டார்கள் என பேச்சு அடிபடுகின்றது. சந்திரிகா பதவிக்கு வந்ததன் பின் விடுதலைப் புலிகளுக்கு அவசியமானவை கிடைக்காதபடியால் அவருடைய வெற்றியில் தமிழ் வட்டாரங்களுக்கு பிரச்சினைகள் தோன்றியுள்ளதாகவும் சொல்லப்படுகிறதே?

பதில் :– எந்த வேளையிலும் ரணில் விக்கிரமசிங்காவுடன் விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைகளை நடாத்தவில்லை. அவர்களுக்கு இடையே எந்தவொரு இரகசிய உடன்பாடும் இருந்தது கிடையாது. இரகசிய உடன்பாடு வைத்துக் கொள்ளும் ஆட்கள் விடுதலைப் புலிகள் அல்ல. அதை நீங்கள் நன்றாக தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களும் தமிழ் சமூகத்திற்கு பதில் சொல்ல வேண்டியவர்கள். அவர்கள் மிகவும் தூய்மையானவர்கள். மிகப் பெரியவர்கள். அதையிதை சொல்லி இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என நான் நினைக்கவில்லை. தமிழ் சமுதாயம் அவர்களை இப்போது ஏற்றுக்கொண்டுள்ள முறையில் பின்னரும் ஏற்றுக் கொள்வார்கள். அதனால் அப்படியான இரகசியமான பேச்சுவார்த்தைகள் எதனையும் அவர்களிடையே இருக்கவில்லை எனக் கூறுகிறேன்.

கேள்வி :– 1994ம் ஆண்டு முதல் இன்றுவரையான காலத்தில் இந்தஅரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்த பலமுறை முயற்சித்தது. பேச்சுவார்த்தையை மேற்கொண்டது. ஆனால் இப் பேச்சுக்கள் முறிவடைந்தது விடுதலைப் புலிகளின் பிழைகளால்தான் என அரசு கூறுகிறதே?

பதில் :– அன்று பேச்சு வார்த்தைக்கு போனார்கள். இந்த 'நோனா' தனது தேர்தல் வாக்குறுதிகளில் விளக்கமாக கூறியிருந்தார்: எனக்கு வாக்களியுங்கள். நான் பதவிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் அமைதிப்பேச்சில் கலந்து கொண்டு சமாதானத்தை ஏற்படுத்துவேன் என. இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு போனார்கள். இரகசியமாக அல்ல. அப் பேச்சுவார்த்தை நான்கு மாதங்களின் பின் முறிவடைந்தது. இந்த நான்கு மாதக் காலங்களுக்குள் கடிதங்கள் பரிமாறப்பட்டன. குமாரதுங்காவிற்கும் பிரபாகரனுக்கும் இடையே 43 கடிதங்கள் பரிமாறப்பட்டன. விடுதலைப் புலிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் அவர்களது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறியிருந்தார். இவை கடைசிக் கடிதங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திகதிக்கு இடையே சில முடிவுகள் மேற்கொள்ளப்படாவிட்டால் நாம் மீண்டும் யுத்தத்தை மேற்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவோம் என அவர் விபரமாகக் கூறியிருந்தார். இந்த 'நோனா'வால் கடிதங்களை வெளிப்படுத்த முடியும் அல்லவா? ஏன் மூடிக் கொண்டிருக்கின்றார்?

கேள்வி :– நீங்கள் நினைக்கிறீர்களா விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் அரசாங்கத்துடன் பேச்ச வார்த்தைக்கு வருவார்கள் என்று?

பதில் :– நான் கூறுகிறேன் சிங்கள அரசியல் தலைவர்களுடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடத்த இன்றும் விருப்புடன் உள்ளார்கள் என. இதைத்தான் பிரபாகரனின் நவம்பர் 27ம் திகதி பேச்சின்போதும் கூறப்பட்டு உள்ளது.

கேள்வி :– நீங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை ஏற்றுக்கொள்கிறீர்கள். ஆனால், அவர்கள் உங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என சந்தேகங்கள் இருக்கின்றனவே?

பதில் :– எனக்கு தெரியாது. அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என எதிர்பார்த்து எதிர்பார்த்து நான் எனது அரசியல் வாழ்க்கையை நகர்த்திச் செல்லவில்லை. நான் எனது மனச்சாட்சிக்கும் கடவுளுக்கும் தான் பதில் சொல்ல வேண்டியவன். இந்த 'நோனா' மீண்டும் பதவிக்கு வந்ததன் பின்னர் நான் எனது அரசியலைத் தீவிரமாக்கியுள்ளேன்.

கேள்வி :– நீங்கள் நினைக்கிறீர்களா விடுதலைப் புலிகள் அமைப்பினால் நீங்கள் குறிப்பிடும் சாதாரண தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்க்க முடியும் என?

பதில் :– ஆம். நான் மிக உறுதியாக நம்புகிறேன்.

கேள்வி :–விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் சிறுவர்களை யுத்தத்தில் பயன்படுத்துகிறார்கள். அப்படியானால் அவர்கள் தமிழ் சமுதாயத்தின் எதிர்காலத்தை நாசமாக்குகிறார்கள் என நினைக்கவில்லையா?

பதில் :– நான் அப்படி நினைக்கவில்லை. யாரும் பலாத்காரமாக கூட்டிச்சென்று யாரிடமும் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது. அவர்களை பலாத்காரமாக வைத்துக்கொண்டு எதனையும் செய்யவும் முடியாது.

கேள்வி :–விடுதலைப் புலிகள் வசதியற்ற ஏழ்மையான தாழ்த்தப்பட்ட சமூக இளைஞர்களையே யுத்தத்தில் பயன்படுத்துகின்றார்கள். உயர்ந்த சமூகத்தினர், பணமுள்ளவர்கள் போன்றவர்கள் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதில்லை. இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

பதில் :– அவர்களுக்கு உதவ மக்கள் இருக்கிறார்கள். விடுதலைப்புலிகள் யாரையும் பலவந்தப் படுத்துவதில்லை. என்னால் இயலுமானால் நானும் போய் யுத்தம்செய்வேன். என்னால் இப்போது துவக்குதூக்க முடியவில்லை. எனக்கு துவக்கு தூக்க முடியுமானால் நான் போயிருப்பேன். முடியாத நிலையில்தான் இப்படியான முறையில் விடுதலைப் புலிகளுக்கு நான் உதவிக்கொண்டிருக்கிறேன். அடுத்த தாக நான், விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்கிறேன்.

கேள்வி :–விடுதலைப் புலிகள் யுத்தத்தில் குடியேற்றக் கிராமங்கள் மீது தாக்குதல் நடாத்துகிறார்கள். சிங்களவர்களைக் குடும்பத்துடன் கொல்கிறார்கள். தெற்கே முக்கியமான இடங்களில் குண்டுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிக்க வைக்கிறார்கள். சாதாரண மக்களை அழிக்கிறார்கள். அப்படியான ஒரு அமைப்பிற்கு என்ன அரசியல் நிலைப்பாடு இருக்கமுடியும்?

பதில் :– ஆங்கிலத்தில் சொல்வார்கள், All is fare in love and war என. இங்கு சரி, பிழை, முடியுமா, முடியாதா என்பதை எல்லாம் பார்க்கும் காலம் அல்ல. இது யுத்த காலம்.

56ல் நாங்கள் 'கோல்பேசில்' போயிருந்து வெறுமனே எதிர்ப்பினை காட்டியபோது எங்களை அடிக்கவில்லையா? எங்கள் சாரத்தை எல்லாம் பறித்து எறிந்துவிட்டு நிர்வாணமாக ஓடவிடவில்லையா? 58ல் என்ன நடந்தது? 83ல் கொழும்பிலே என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்தானே? புரிந்ததா, அதனால்தான் இன்று இது சரி, இது பிழை எனக் கூறிக்கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை.

கேள்வி :– இன்று தெற்கிலே தமிழ்ச் சமுதாயம் வசதியாக இருக்கிறது. முக்கியமாக வெள்ளவத்தை கொட்டாஞ்சேனை பகுதிகளில். நீங்களும் இருப்பது கொழும்பில்தானே. ஆனால், சிங்களவர்களுக்கு யாழ்ப்பாணம் செல்ல முடியவில்லையே?

பதில் :– சிங்கள சமுதாயம் கூறுகிறது அவர்களுக்கு யாழ்ப்பாணம் செல்ல முடியவில்லை என அவர்கள்தான் கூறுகிறார்கள் எனக்கும் வடக்கிற்கு செல்ல முடியாது என. இதற்கு நான் என்ன சொல்லமுடியும்? சரி, எங்கள்சந்ததியின் பின் அடுத்த சந்ததியும் சிங்கள மக்கள் தமிழ் மக்களை எதிரிகளாக பார்ப்பார்கள். தமிழ் மக்களும் சிங்களவர்களை எதிரிகளாகப் பார்ப்பார்கள். இப்போதே இந்த தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வினைக் காணவேண்டும். அது முடியாது போயின் எதுவுமே சரிவராது.

கேள்வி :– நீங்கள் கொழும்பில் இருந்துகொண்டு பேசுகிறீர்கள். வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு உங்களால் போகமுடியாது. அப்படியானால் எப்படி அந்த சமுதாயத்தின் பிரச்சினைகளில் தலையிட முடியும்? அப்படி இருந்துகொண்டு செயற்படும் மற்றைய அமைப்புக்களின் மேல் உங்களுக்கு ஏன் கோபம்?

பதில் :– ஐயோ.....! ஈ.பி.டி.பி., புளாட், வரதராஜப் பெருமாள் யாரிந்த வரதராஜப் பெருமாள்? இந்தியாவில் இருந்து இவரை கொண்டு வந்தார்கள். இப்போது அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டார்கள். பின்னர் அவருக்கு உதவி செய்யும்படி அணுகினார்கள். அவரால் நடக்க முடியுமா? என்னிடம் சிங்களவர்கள் கேட்கிறார்கள் வடக்கு கிழக்கிற்கு நீர் எப்போ போனீர் என. இந்தப்பெருமாள் எந்தக் காலத்தில் அங்கு போனார்?

கேள்வி :– அப்படியானால் உங்களால் அங்கு போகமுடியாது என்பதுதானே அர்த்தம்?

பதில் :– ரத்வத்தையிடம் அனுமதி பெற்றுக்கொண்டுதான் நான் எனது வீட்டிற்கு செல்லவேண்டுமாம்! நான் அதற்கு தயார் இல்லை. எனது உயிர் போனாலும் அதற்கு மட்டும் நான் தயாராக முடியாது.

கேள்வி :– இதன்படி நீங்கள்கூறுவது பிரதிப்பாதுகாப்பு அமைச்சரைப் பற்றி. அப்படியானால் இந்த நாட்டின் சிங்களப் பிரிவினர் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பற்றி இதேபோல் பேசினால்?

பதில் :– கதர கம... 'லக்கி கதரகம' இப்படித்தான் நான் அவரை அழைப்பேன். அவர் ஒரு தமிழர் என நான் நினைக்கவில்லை. அதே போல் நான்நினைக்கவில்லை எந்த தமிழர்களுமே அவரை தமிழராக ஏற்றுக் கொள்வார்கள் என. சரி, இதை அவரது குடும்பத்தவர்களிடமே போய் கேட்டுப்பாருங்களேன்.

– தமிழில் மாந்தன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாருக்கு பிந்திய தமிழர் அரசியல்

வி.ரி.தமிழ்மாறன்
தலைவர், சட்டத் துறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளராகவும், இலங்கையில் தமிழ்த் தேசிய இனத்துக்கு எதிரான அடக்கு முறைக்கு எதிராகப் பலமாகவும் வெளிப்படையாகவும் குரல் கொடுத்து வந்தவருமான குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டு ஏழு மாதங்கள் கடந்தோடி விட்டன. அன்னாரின் குடும்பத்தவர்க்கு மட்டுமன்றி தமிழர்கள் எவராலுமே நம்புவதற்குக் கடினமாக அமைந்த செயலாகவே இது நிகழ்ந்து விட்டது. இது வெறுமனே ஓர் அரசியல் கொலையாகவோ அல்லது இலங்கைச் சமூகத்தில் விரவி நிற்கும் வன்முறையின் புதியதொரு பரிமாணமாகவோ மட்டும் கருதப்பட்டு அலட்சியப்படுத்தப்படக்கூடிய நிகழ்வாக அமைந்து விடவில்லை. இலங்கையில் தமிழ்த் தேசியத்தின் அரசியலில் இது புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விட்டது என்பதில் எள்ளவும் ஐயத்துக்கு இடமில்லை.

குமாரின் அரசியல் பின்னணி, குடும்பப் பெருமை, பொருளாதார நிலை என்பன பற்றி அறியாதவர்கள் எவருமில்லை. அவை பற்றிப் புதிதாகக் கூறுவதற்கும் எதுவுமில்லை. ஆனால் மேற்சொன்ன காரணங்களைக் காட்டி அவர் அரசியலில் ஓர் இடத்தைப் பெற முயன்றார் என்று அவர் மீது ஒரு குற்றச் சாட்டு கூறப்பட்டு வந்தது. தந்தையாரின் மறைவின் பின் காங்கிரஸைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து அதன் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் செல்ல விரும்பினார் என்பது என்னவோ உண்மைதான்.

1977 தேர்தலில் த.வி.கூட்டணியின் ஓர் அங்கமாகக் காங்கிரஸை ஏற்றுக் கொண்டு, அவருக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டது. ஆனால் வட்டுக்கோட்டை தொகுதிக்குப் பதிலாக, தந்தையார் பிரதிநிதித்துவம் செய்த யாழ். தொகுதியைக் குமார் கோரி நின்றதால் கூட்டணியிலிருந்து அவர் வெளியேற வேண்டியதாயிற்று. ஆனாலும் காங்கிரஸைத் தன்னுடனேயே வைத்துக் கொண்டார். உண்மையில் அவ்வேளையில் அனுதாபம் குமார் பக்கமாகவே இருந்த போதிலும் கூட்டணியை எதிர்த்து யாழில் போட்டியிட்டுத் தோற்றதன் மூலம் அந்த அனுதாபத்தை அவர் தக்கவைக்கத் தவறி விட்டார். அத்தேர்தலில் குமார் தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணம் கூட்டணி அலையே என்பது உண்மையேயாயினும் கொழும்பிலிருந்து வந்து குதிக்கும் 'பரசூட்' வேட்பாளர்களை மக்கள் விரும்பவில்லை என்ற பக்கக் காரணத்தையும் இலகுவில் புறக்கணித்திருக்க முடியாது. இந்தத் தேர்தல் முடிவு அரசியல் ரீதியில் நல்ல பாடமாக அமைந்ததோடு அவரைப் புடம் போட்டும் விட்டது என்றுதான் கூற வேண்டும்.

வசதிவாய்ப்புக்களும், குடும்பப் பெருமையும் அவரிடம் இருந்தது உண்மையாயினும் அவற்றைப் பாவித்து அவர் பாராளுமன்றம் செல்ல முயன்றார் என்ற குற்றச்சாட்டு மிக அபத்தமானது என்றே கூறலாம். ஏனெனில் குமாரை விட இந்த வகைகளில் குறைவான நிலையிலிருந்தோர் பலர் கூட சில இலட்சங்களைச் செலவிட்டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் பெற்றுள்ளனர். குமாருக்கு இருந்த பொதுமக்கள் தொடர்பில் நூறிலொரு பங்கு கூட இல்லாதவர்கள் தமிழ்மக்கள் பிரதிநிதிகளாக வருவதற்கு அவர்களிடமிருந்த பணமும், பாரம்பரியச் செல்வாக்கும், மேலிடத்து நட்பும் உதவியுள்ளன. ஆனால் இத்தனையுமிருந்தும் இவற்றைப் பாவித்து குமார் தமிழ்மக்களின் பிரதிநிதியாக வருவதற்கு ஒருபோதும் விரும்பியதில்லை.

சென்றமுறை பொதுத்தேர்தலுக்குக் கூட குமார் போதியளவு பணஞ் செலவளிக்கவில்லை என்று தமிழ்வாக்காளர்கள் அவர் மீது குற்றஞ்சுமத்தியிருந்தார்கள். ஆக, எதுவுமே செய்யாமல் செலவழிக்காமல் எம்.பி. யாகப் பார்க்கிறார் என்று விமர்சித்தவர்கள் ஒருபுறம். பணம், பாரம்பரியம் என்பவற்றால் எம்பியாகப் பார்க்கிறார் என்று விமர்சிப்பவர்கள் இன்னொரு புறம். இரண்டுமே ஒன்றுக்கொன்று முரணான குற்றச்சாட்டுக்கள். இவை யாவற்றையும் விடுத்துத் தான் கூறும் கொள்கை வழி ஏற்றுத் தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்று 1994வரை குமார் நம்பியிருந்தார் என்பதே உண்மை. ஆனால் 1977இலிருந்த குமாரும், 1994இலிருந்த குமாரும் முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதை தமிழ்மக்கள் நன்கறிந்தே இருந்தனர்.

1983வரை தமிழர் விடுதலைக் கூட்டணி தானே தமிழ்மக்களின் ஏக பிரதிநிதி என்று சாதித்து வந்தது. இது ஒரு புறத்தில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரவாதம் தலையெடுப்பதை ஊக்குவிப்பதாக இருந்தது என்பதையும் மறுக்க முடியாது. அங்ஙனம் வளர்ந்த தீவிரவாதத்தின் விளைவாக 11 இராணுவ வீரர்கள் யாழ்ப்பாணத்தில் பலியான போது தென்னிலங்கை காட்டிய எதிர்விளைவின் பயனாக தமிழர் அரசியல் மற்றொரு திருப்பத்திற்கு உள்ளாகியது. தீவிரவாதத்தை ஆதரித்துப் பேசிவந்த மிதவாத அரசியல்வாதிகளையே பாராளுமன்றம் வராதபடி செய்யும் ஆறாந் திருத்தம் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்டது. 1977க்குப் பின்னர் 1983இல்தான் இந்த அரசியல் திருப்பம் ஏற்பட்டது.

1983இல் ஏற்பட்ட இரத்தக்களரி தீவிரவாதிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கில் அரங்கேற்றப்பட்ட வன்முறை நாடகமாகும். இது முன்கூட்டியே திட்டமிடப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் போதியளவு இருந்தன என்பதைத் தென்னிலங்கை அரசியல் கட்சிகளே அம்பலமாக்கியிருந்தனர். இந்த நாடகத்தை அரங்கேற்றியவர்களின் நோக்கம் வன்முறையைக் கைவிடும்படி தமிழ் இளைஞர்களை நிர்ப்பந்திக்கும் விதத்தில் பாடம் புகட்டுதலாகும். ஆனால் இப்பாடம் வடக்கு கிழக்குக்கு வெளியில் வசிக்கும் தமிழர்களைத் தண்டிப்பதன் மூலமே புகட்டப்பட வேண்டியதாக அரசாங்கத்தினால் கருதப்பட்டிருக்க வேண்டும். அதற்கும் மேலாக, அரசியலில் குறிப்பிட்ட ஓரளவிற்கு மேல் உரிமைக்குரல் கொடுத்தால் இதுதான் நடக்கும் என்று தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிகையாகவும் இது இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவுகள் எப்படியிருந்தன? உலகளாவிய ரீதியில் இலங்கைக்குக் கிடைத்த அபகீர்த்தி இன்னும் தீர்ந்தபாடாக இல்லை என்பதைத் தென்னிலங்கை அரசியல்வாதிகளே ஒப்புக் கொள்கின்றனர். இதைவிட முக்கியமாக, உள்நாட்டில் தமிழர் அரசியல் புதிய பாதையில் செல்லத் தொடங்கியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்லமுடியாமல் போய்விட்டதால் தமிழ் மக்களின் பிரச்சனைகளைப் பற்றிப் பேசுவதற்கு வேறு அரங்குகளும் மார்க்கங்களும் தேவைப்பட்டன. தென்னிலங்கை மக்களிடமிருந்து தமிழ் மக்கள் அரசியல் ரீதியில் பூரணமாக அந்நியமாதல் ஆரம்பமாயிற்று. தேசியக் கட்சிகளில் தமிழர்கள் இடம்பெறுதல் துரோகத்தனம் என்பது நிலைநாட்டப்பட்டது. ஆயுதப் போராட்டத்தை நியாயப்படுத்தும் நிர்ப்பந்தத்துக்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டனர். இது அரசாங்கம் அந்நேரத்தில் ஆறாவது திருத்தத்தின் மூலம் ஏற்படுத்திய சாதனை என்று தான் சொல்ல வேண்டும்.

சமூக ரீதியில் பார்த்தால் தமிழ்மக்களது அன்றாட வாழ்வும் வளமும் தென்னிலங்கையில் நிரந்தரமற்றது என்பதைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது. அவர்களது முதலீடுகள் ஏதோவொரு விதத்தில் வேறு நாடுகளில் இடம்பிடிக்கத் தொடங்கின. அகதிகள் படையெடுப்பு ஆரம்பமாயிற்று. இதன் மறுபக்க அம்சமாக தீவிரவாத இயக்கங்களுக்கு நிரந்தரமான நிதியளிப்பு வசதியும் ஏற்பட்டு விட்டது. தேன்கூட்டில் கல்லெறிந்த நிலையாக கலையத் தொடங்கிய தமிழ்ச் சமூகம் கண்ணில் பட்டதெல்லாம் தொற்றிக் கொள்ளவும் கொழுகொம்பு தேடிக் கொள்ளவும் தொடங்கியது.

பயங்கரவாதத் தடைச்சட்டமும், அவசரகாலச் சட்டமும் தமிழ்மக்களை வேட்டையாடத் தொடங்கிய போது ஆரம்பத்தில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வந்த மூத்த தலைமுறை சட்டத்தரணிகள் 1983இன் பின் ஒதுங்கிக் கொண்டார்கள். சிலர் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறி விட்டார்கள்.

ஒரு காலத்தில் கூட்டணிச் சட்டத்தரணிகளின் மொத்தக் குத்தகையாக இருந்த இந்த வேலையைக் கவனிக்க 1983இன் பின் பெரும் தட்டுப்பாடே ஏற்பட்டது. அதுவும் அரசியல் பற்றுறுதியுடனும் பொருளாதார எதிர்பார்ப்புகளின்றியும், தியாக உணர்வுடனும் செயற்படவல்ல சட்டத்தரணிகளை இக்காலப் பகுதியில் விரல்விட்டு எண்ணிவிட முடிந்தது. இதில் பெரும் இடைவெளி ஒரு புறத்தில் ஏற்பட மறுபுறத்தில் தென்னிலங்கைச் சிறைகளும் தடுப்பு முகாம்களும் தமிழ் இளைஞர்கள், யுவதிகளின் நிரந்தர இருப்பிடமாயிற்று. இத்தகையதொரு சூழ்நிலையில் தான் குமாரின் புனர்ஜென்மம் நிகழ்ந்தது என்றால் மிகையில்லை. தமிழ்த் தேசியத்தின் ஆத்மாவின் அங்கலாய்ப்பின் வெளிப்பாடாக இந்தப் புனர்ஜென்மம் அமைந்திருந்தது.

கொள்கை பற்றி நின்ற குமார்

பெரும்பான்மைக் கட்சியுடன் சங்கமமாதல், அவற்றிடம் நல்ல பிள்ளைப் பெயர் கேட்பதற்காக ஓட்டி உறவாடல் தமிழர் அரசியலைப் பொறுத்தளவில் தரகு வேலையில் ஈடுபடல் என்பவற்றிற்காகத் தனது பணம், செல்வாக்கு, சட்டஅறிவு என்பவற்றைப் பயன்படுத்த மறுத்த குமார் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் தெளிவான ஒரு கொள்கைவழி நின்று தன்னால் தமிழர் அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியுமென்று நம்பினார். அத்துடன் மேலே குறிப்பிட்ட வெற்றிடமும் அவரை அறியாமலே அவரை தமிழ் இளைஞர்களது வழக்குகளில் ஆஜராகும் நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தி விட்டது. இவ்விரண்டிலுமிருந்தும் அவரால் இறுதிவரை மீளவே முடியவில்லை. இக்கால கட்டத்தில் தான் 1988 ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை ஆதரித்து ஜனநாயக மக்கள் கூட்டணி (DPA) என்பதை உருவாக்கினார். அம்மையாரின் 'களுபுத்தா' தானேயென்று இலங்கை முழுவதும் சென்று பேசினார். இந்திய அமைதிப்படையின் பாதுகாப்பை நிராகரித்து விட்டு ஸ்ரீலங்காப் பொலிஸிப் பாதுகாப்புடன் அம்மையாரை யாழ். அழைத்துப் போய் தேர்தல் பிரசாரஞ் செய்ததுடன் வன்னியில் புலிகளைச் சந்திக்க அநுராவுடன் போய் வந்தார்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் குமாரின் தனிப்பட்ட தாக்குதலுக்கு ஐ.தே.கட்சியும், குறிப்பாக பிரேமதாசாவும் உட்பட்ட போதிலும் குமார் சகித்துக் கொள்ளப்பட்டமை தான். மனதில் பட்டதை அப்பட்டமாகப் பேசிவரும் குமாரின் துடிப்பான போக்கினை அப்போதைய ஐ.தே.க. தலைமைப் பீடம் நன்கறிந்திருந்ததால் குமார் தொடர்ந்தும் துடிப்பாகச் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலின் எதிரொலியாக குமாரின் மனைவிக்கு இடமாற்றம் கிடைத்தது மட்டுமே உடனடிப் பிரதிபலிப்பு எனலாம்.

எப்படி 1977 தவிகூட்டணி ஏமாற்றி விட்டதாகக் குமார் ஆத்திரப் பட்டாரோ அதே விதத்தில் அவர் முக்கிய பங்கெடுத்து உருவாக்கிய (DPA) யும் 1989 பாராளுமன்றத் தேர்தலில் தன்னை வஞ்சித்து விட்டதாகக் கொதித்துப் போனார். இதன் பின்னர் பெரும்பான்மைக் கட்சிகளின் பக்கம் திரும்பியும் பார்ப்பதில்லை என்ற உறுதியுடன் காங்கிரஸ் சார்பில் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டார். உண்மையில் DPA காலத்தில் புலிகளுடன் ஏற்பட்ட நெருக்கந்தான் அவரைப் புலிகளின் நம்பிக்கைக்குரிய கொள்கைக்காரராக தமிழ்ச்சமூகம் எடைபோட வழிவகுத்தது.

தொடர்ச்சியான ஏமாற்றங்களினாலும், விரக்திகளினாலும் உந்தப்பட்ட நிலைமிலும் பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகளின் போது தனது கட்சிக்காரர்கள் மீது எப்படியெல்லாம் அரச ஆதிக்கம் அபாண்டமான குற்றச்சாட்டுகளை குற்றவொப்புதல் வடிவத்தில் சோடிக்கின்றது என்பதைக் கண்கூடாகக் கண்ட நிலையிலும் சமரசப் போக்கு அவரிடமிருந்து விடைபெறத் தொடங்கி விட்டது. 1994 தேர்தலில் அவர் கொழும்பில் போட்டியிட்ட போது இந்தப் போர்க்குணத்தை அவர் வெளிப்படுத்தியிருந்தாலும் தமிழ்மக்கள் அதனைச் சரியாக அடையாளங் காணத் தவறி விட்டனர் என்றே கூற வேண்டும். இது மேலும் அவருக்கு விரக்தியையே ஏற்படுத்தியது. தமது செயலுக்காகக் கொழும்பு வாழ் தமிழர்கள் என்றோ ஒருநாள் நிச்சயம் வருந்தவே செய்வர் என்று குமார் அப்போது சொன்னார். உண்மையில் அவர் கூறியது ஒரு வருடத்துக்குள்ளாகவே நிதர்சனமாயிற்று. பொல்கொட வாவியில் மிதந்த பிணங்களும் வெள்ளை வான் கைதுகளும் அவர் பொதுத் தேர்தலில் எடுத்த நிலைப்பாட்டினைச் சரியென எண்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் மலர்ந்த முகத்துடனும், திறந்த மனத்துடனும் காணப்பட்டு வந்த குமார் இந்தத் தேர்தல் தோல்விக்குப் பின்பு சற்றுக் கோபக்காரராகவும் ரோசக்காரனாகவும் தன்னை வெளிப்படுத்தி நின்றார். சிங்கள மக்கள் முன்பு சித்தரிக்கப்பட்ட குமார் வேண்டுமென்றே புலிகளைப் புகழும் வெறிபிடித்த தமிழன் ஒருவனாகத் தெரிந்தார். இது சிங்களப் பேரின வாதத்திற்கு சவால் விடுவதாக அமைந்துள்ளது என்று அப்போது ஆக்கங்கள் வெளியாகின.

எந்த நோக்கத்திற்காக 1983 ஜூலை கலவரம் நடத்தப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாது என்று சவால் விடுப்பது போல அவரது கொள்கை வழிச் செயற்பாடுகள் அமைந்திருந்தன. "ஆமாம்" என்று தலையாட்டும் "அறிவுக் களஞ்சியங்கள்" கடைந்தெடுக்கப்பட்ட குப்பைகள்- தூர வீசப்பட வேண்டியவர்கள் என்று பகிரங்கமாகவே பேசத் தொடங்கினார். தனது பால்ய சினேகிதர்கள், கல்லூரி நண்பர்கள், தொழிற்றுறைச் சகாக்கள் என்று அவர் கொண்டிருந்த செல்வாக்கு மிக்க பெரும்பான்மையினச் சுற்றுவட்டம் இந்தக் காலப்பகுதியில் அவரை விட்டுத் துரிதமாகத் தூரப் போயிற்று. அதையிட்டு அவர் கிஞ்சித்தும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தான் கொழும்பில் பாதுகாப்பாக வாழ்வதற்குக் காரணம் அரசாங்கமோ, பெரும்பான்மையினத்தின் சகிப்புத்தன்மையோ காரணமல்ல-இன்னொரு 83 ஐச் சந்திக்க அரசு திராணியற்றிருப்பது தான் உண்மைக் காரணமென குமார் வெளிப்படையாகப் பேசியும் எழுதியும் வந்தது தென்னிலங்கை மக்களுக்கு விடுவிக்கப்படும் ஒரு சவாலாகக் கருதப்பட்டிருக்கலாம் என்பதையும் மறுக்கமுடியாது.

பொதுஜன ஊடகங்கள் மூலமாகத் தெரிவிக்கப்படும் பேரினவாதக்கருத்துக்களைத் தனது சட்டவாதத்திறமையைப் பயன்படுத்தி உடனுக்குடன் மறுப்பதில் குமார் முழுமையாக ஈடுபட்டார். தமிழர்கள் மத்தியில் புத்திஜீவிகள் பலர் இதுபற்றி வாளாவிருப்பதைமிட்டு அவர் கொதிப்படைந்திருந்தார்.

கொலைக்கான காரணங்கள்

வெறுமனே அரசியல்வாதியாகக் குரல் கொடுத்து வந்த குமார் ஒருபடி மேலே போய் சட்டவாதியாகக் குரல்கொடுத்து அதற்கும் அப்பால் போய் சர்வதேச அரங்குகளில் இலங்கையில் நடக்கும் மனித உரிமைகள் மீறல்களைப் பட்டியல் போட்டுக் காட்டும் மனிதஉரிமைகள் வாதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக பாடுபடும் "குமார்" என்ற குற்றச்சாட்டும் கறையும் அறவே அழிக்கப்பட்ட நிலையில் தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதிகள் ஏற்படுத்திய பாரிய வெற்றிடத்தை நிரப்பும் ஓரேயொரு தமிழ்க்குரலாக எல்லாமட்டங்களிலும் குமாரின் வலிமையான குரல் ஒலித்தது. புலிகளின் அரசியல் நிலைப்பாட்டைத் தான் ஆதரிப்பதாக அவர் கூறியது - இன்றைக்கிருக்கும் யாதார்த்த அரசியலில் நேரடிப்பிரதிபலிப்பே என்று அவரைப் போலவே ஏனைய தமிழர்களும் நம்பியிருந்த போதிலும் அவர் மட்டும் அதனை வெளிப்படையாகச் சொல்லி வந்தவராகவும் இருந்தார்.

வேறுமனே "பயங்கரவாதப்" பிரச்சினையாகச் சித்திரிக்கப்படும் விடயத்தில் - அரசியல் சட்டப்புலமாக – உள்நாட்டுக்காகச் செயற்படும் சக்தியாக அவரும் அவரைச் சுற்றியுள்ள சிலரும் வேகமாக வளர்ந்து வந்தமை அரசாங்கத்திற்குப் பாரிய தலைமிடியாக இருந்தது. குறிப்பாக வெளிநாட்டுத் தூதரகங்கள் பல தமக்கு வேண்டியதான பின்னணிச் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் பலவற்றைக் குமாரின் எழுத்துக்களிலிருந்து திரட்ட முடிந்தது. பொல்கொட முதல் செம்மணி வரையாக இந்த விபரக் கோவைகள் வெளிச்சத்திற்கு வந்தமை அதிகாரத்திலுள்ளவர்களுக்கு இருக்கை மீதிருக்கும் முள்ளாக உறுத்தத் தொடங்கியதும் உண்மையே எனலாம்.

இந்தப் பின்னணியில்தான் குமாரைக் கொலை செய்ய நாள் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். தனக்கென மெய்ப்பாதுகாப்பாளர்களை அமர்த்தவோ அல்லது வெவ்வேறு விதத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவுமே மேற்கொள்ளாமல் குமார் தனியாகவே கொழும்பு வீதிகளில் வலம்வந்தார். கூட்டங்களில் கலந்து கொண்டார். "இந்த நாட்டில் ஜனாதிபதி கூடக் கொல்லபட்டிருக்கிறார். அதைவிடக் கூடுதலாக எத்தகைய பாதுகாப்பு ஒரு தனி மனிதனுக்கு வழங்க முடியும்" என்று அவர் பலமுறை அவர் பாதுகாப்பு பற்றிக் கேட்வர்களுக்கு பதிலளித்திருக்கிறார். விதி வலியது அதன்படி நடக்கவிருப்பதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று "திருப்பதி" யான் மீது பழியைப் போட்டு விட்டு வெளியே சென்ற குமார் அன்று மட்டும் ஏனோ பிணமாக வீடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் இக்கொலையின் பரிமாணங்களும் அதனால் ஏற்படும் விளைவு வழித்திருப்பங்களும் தமிழர் அரசியலில் புதியதோர் அத்தியாயத்தை ஏற்படுத்தி விட்டன எனலாம்.

புதிய பரிமாணங்கள் எவை?

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தேசிய முன்னணி பெயர் தமிழ் மக்களுக்கு புதியதாக எதனையும் அறிமுகப்படுத்துவதாக இல்லை. 1983இல் எவ்விதமான வன்முறை அரங்கேற்றம் நடத்தப்பட்டு தமிழ்மக்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கப்பட்டதோ அதே பாணியில் 2000 ஆண்டுத் தொடக்கத்திலும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் கொலை நிகழ்த்தப்பட்ட விதமும் விளைவுகளும் பல்வேறு வினாக்களை எழுப்புகின்றன?

அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை ஒருவர் கொண்டிருக்க முடியாதா? அப்படியான கருத்துக்களைக் கொண்டிருப்பது ஜனநாயகத்தின் அடிப்படைத் தேவையாகாதா? அப்படியான எதிர்க்கருத்துக்களைக் கொண்டிருப்பவர் தமிழராக இருந்து விட்டால் அவர் கட்டாயமாகப் புலிப் பிரதிநிதியாகத்தான் இருக்க வேண்டுமா? தமிழர் பிரச்சனைக்காகக் குரல் கொடுப்போர் எல்லோருமே புலிகளின் ஆதரவாளர்கள் தானா? இவர்கள் யாவருக்கும் இரத்தக் கையெழுத்தில் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட வேண்டி ஏற்படுமா?

அப்படியாயின் அரசாங்கம் தீர்த்து வைக்கக் கருதும் தமிழர் பிரச்சனைகள் தான் என்ன? எதற்காகத் தீர்வுப் பொதி ? எதற்காக அரசியல் பேச்சு வார்த்தை? அதுவும் புலிகளுடன் ஏன் பேச வேண்டும் ?

வட அயர்லாந்தில் ஐரிஸ் குடியரசை உருவாக்கப் போராடி வரும் ஐ.ஆர்.ஏ.(IRA) இயக்கத்தைப் பழிவாங்கவும் அல்ஸ்ரார் நகரில் வாழும் மக்களைப் பயமுறுத்தவும் அங்குள்ள கத்தோலிக்க மத மக்களை அச்சத்தில் வாழ வைக்கவும் தீவிரவாத அமைப்புக்கள் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கத்தோலிக்க மக்களை முக்கியமாக அவர்களது வசிப்பிடங்களிலிருந்து அகற்றுவதற்காக அப்பகுதிகளில் குண்டு வெடிப்புக்களை நடத்தும் இயக்கம் அல்ஸ்ரார் தன்னார்வப் படை என்பது இதன் பெயர் (UDA) அல்ஸ்ரார் தன்னார்வப் படை என்பது (UVF) என்பது இன்னொரு அமைப்பு கடவுளுக்காகவும் அல்ஸ்ரார் நகருக்காகவும் என்ற கோஷத்திற்காகவும் ஐரிஸ் இயக்கப் போராளிகளைக் கொன்றழிக்கவும் கிளம்பிய அமைப்பு இது. ஆனால் இன்று என்ன நடந்துள்ளது? பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் காண்பதில் ஐரிஸ் போராளிகளை விட இந்தப் பாதுகாப்பு அமைப்புகளே அரசுக்கு முற்றுகையிட்டதாகச் செய்திகள் வெளிவந்தன.

ஆயின் ஐரிஸ் பாடத்தின் ஆரம்பந்தான் இங்கு புதிய பரிமாணமாக அமைந்துள்ளதா? கொழும்பில் வாழும் தமிழர்கள் வாய் திறக்காமலும் அரசாங்க நடவடிக்கைகளை எக்காரணம் கொண்டும் எதிர்க்காமலும் இருப்பதற்காகவும் எப்போதும் அச்சத்துடனேயே வாழ்வதற்குமெனக் குமார் பலியுண்டாரா?

1983 இல் எதைச் சாதித்துவிட்டதாக அப்போதைய அரசாங்கம் எண்ணிக்கொண்டதோ அதையே இன்னொரு விதத்தில் இந்த ஒற்றைப் படுகொலை மூலம் இப்போது சாதித்துவிட்டதாகக் கொள்வதிலிருந்து தமிழ்மக்களைத் தடுக்க முடியாது. வீடுகள் கட்டிடங்கள் அடியோடு தகர்க்கப்படவும் கண்மூடித்தனமான கைதுகள் நடைபெறவும் வாழ்நாள் பூராவும் இளைஞர்களும் யுவதிகளும் விடுதலைக்காகத் தவங்கிடக்கவும் இன்னும் எத்தனையோ வழிகளில் சொல்லாமல் சொல்லி ஒரு பழைய 83 ஐப் புதியமுறைமில் படைத்தளிக்க குமார் பாவிக்கப்பட்டாரா? ஆனால் 83 இன் விளைவுகள் பற்றிய பாடத்தை தேசிய மட்டத்தில் நன்குணர்ந்தவர்களும் அத்தகைய முயற்சியில் மீண்டுமொருமுறை ஈடுபட முயற்சிப்பது தற்கொலைக் கொப்பானது என்பதை அரசியலில் அறிவும் நாட்டில் அக்கறையும் உள்ளவர்கள் உணராமல் இருப்பார்கள் என்று கூறமுடியாது. ஆனால் அத்தகைய ஒரு விளைவையே குமாரின் கொலையும் ஏற்படுத்தப் போகின்றமை காலத்தால் தவிர்க்க முடியாததாகலாம்.

குமார் சொல்லி வந்ததைப்போலவே அவரது குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்காமல் இருக்கின்றதே என்று தமிழ் மக்கள் விசனப்படத் தொடங்கிய நேரத்தில் தான் இந்தக் கொலையும் இடம்பெற்றுள்ளது. உண்மையில் தமிழ்மக்கள் எங்கோ தாம் தவறிழைத்துவிட்டதாக ஏங்கத் தொடங்கியமை அரசியலில் புதுத்திருப்பமாக அமைந்துவிட்டதையும் அலட்சியப்படுத்திவிட முடியாது.

நீரோட்டத்துக்கு ஒரு புறத்தில் தடைபோட்டால் அது இன்னொருபுறத்தில் உடைப்பெடுக்காமல் இருக்கப் போவதில்லை. இது இயற்கையின் நியதி. இங்ஙனமே குமார் என்ற தனிநபரின் குரலுக்குத் தடைவிதிக்கப் பட்டிருப்பினும் அவரது உணர்வுகள் இன்னும் எத்தனையோ குரல்களினூடாக ஆனால் முற்றிலும் வேறுபட்ட பரிமாணங்கள் கொண்டவையாக வெளிப்படுவதை துப்பாக்கி ரவைகளால் தடுத்து நிறுத்திவிட முடியாது. இக்கொலையைச் செய்தவர்களது எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறுபட்ட வடிவங்களையும் வல்லமையையும் அப்பரிமாணங்கள் கொண்டவையாக அமையலாம்.

ஜனநாயக நாடென்று சொல்லிக் கொள்ளும் ஒன்றில் மாற்று அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டவர்களை தனிநபர்களாகக் கருதிக் கொன்றழிக்கும் நிலையொன்றை அல்லது போக்கொன்றை அனுமதித்தல் என்பது அரசின் இருப்பையே கேள்விக்குட்படுத்துவதாக இருக்கும். தனக்கெதிரானவர்களைக் கொன்றழிக்கும் செயற்பாடு அரசல்லாத குழுவிலிருந்து வெளிப்படுதல் என்பதற்கும் அரசின் சார்பாக வெளிப்படுதல் என்பதற்கும் இடையில் நிறையவே வேறுபாடுள்ளது. இரண்டாவது சந்தர்ப்பத்தில் அரசின் நெறிமுறைத்தன்மை (legitimacy) கேள்விக்குள்ளாவதுடன் ஏனைய குழுக்களின் வன்முறையையும் நியாயப்படுத்துவதாகவும் அது அமைந்துவிடும். ஆக, இது ஒரு தனிமனித கொலையல்ல. இந்நாட்டின் நாகரீக அரசியலுக்கு விடப்பட்ட சாவாலாகவே நான் கருதுகின்றேன். ஆரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம் பாராளுமன்றத்தில் தமிழ்மக்களின் நெறிமுறையான குரல் ஒலிப்பதைத் தடுத்தது என்றால் இந்தக்கொலை அத்தகைய குரல் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் ஒலிக்கக் கூடாது எனத் தடுப்பதாக உள்ளது. இதன் விளைவென்ன? யாருக்கு இதைப்பற்றிய அக்கறை இருக்க வேண்டும்?

தமிழ் மக்களின் அரசியல் என்பது போகப்போக மௌனமாகிவிடலாம். ஆனால் அதன் பின்னால் புகைந்து கொண்டிருப்பது என்ன? என்றைக்குமே ஒட்ட முடியாத அளவுக்குப் பிளவுகளைத் தூவும் நெருப்பு விதைகளைத்தான் விதைக்கின்றோமா? இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு யார் யாரைத் தள்ளிவிடுகின்றார்கள்?

ஆக. என்னுடைய பார்வையில் 1983 போலவே குமாரின் கொலையும் இந்நாட்டில் கறைபடிந்த ஓர் அத்தியாயத்தின் தொடக்கமாகவே கொள்ளப்பட வேண்டும். இக்கொலையைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நிச்சயமாக இந்த நெருப்பு வட்டத்துக்குள் இருந்து தம்மையோ அல்லது இந்நாட்டையோ வெளியில் மீட்டெடுக்க முடியாத விதத்தில் சிக்கியுள்ளார்கள். இது தான் தமிழர்களின் எதிர்கால அரசியலின் ஏற்புடை வடிவமாக இருக்கப்போகின்றது. அமைதியாக காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகமிருந்த தமிழ்த் தலைவர்களைக் கல்லாலடித்ததன் மூலம் இந்நாட்டில் வன்முறை அரசியல் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. அவ்வேளை பிரபாகரன் பிறந்துவிட்டாரோ தெரியவில்லை.

Anaxandrides என்ற கிரேக்க எழுத்தாளன் ***Fragment*** என்ற தனது நூலில் பின்வருமாறு கூறியுள்ளான்: "அவனுக்கு இறப்பு உரியதே என்று மற்றவர்களை நினைக்கத் தூண்டும் விதத்தில் ஏதேனும் செயலை ஒருவன் செய்துவிட முன்னரே அவன் இறந்துபோய்விடுதல் எவ்வளவோ சிறந்ததாகும்". (It is good to die before one has done anything deserving death). அத்துணைச் சிறப்புடை இறப்பே அண்ணன் குமாரின் பிரிவும் என்பதை அவருடைய அரசியல் எதிரிகளும் நிச்சயம் ஒத்துக்கொள்ளவே செய்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட தமிழ் மாநிலத்தின் ஒரு விடிவெள்ளி

ஆற்றொணாத் துயர்க் கடலில் அலை மோதி நிற்கின்ற எனது அன்பு நெஞ்சங்களே,

அமரர் குமார் பொன்னம்பலத்தின் அகால மரணத்தை அங்கீகரிக்க முடியாது அடைமழைபோல் கண்ணீர் சொரியும் தங்கங்களே,

இதுகாலவரை நாம் இழந்துள்ளவற்றின் எண்ணிக்கை எத்தனை என்ற கணக்கு நம்மிடம்இல்லை.
நமது தாய்மாரை இழந்திருக்கின்றோம், தந்தைமாரை இழந்திருக்கின்றோம், சகோதரிகளை இழந்திருக்கின்றோம், சகோதரர்களை இழந்திருக்கின்றோம். உற்றார், உறாதார், பெற்றார், பெறாதார் என்று நாம் எத்தனையோ பாச உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம். இந்த இழப்புகளால் கண்ணீர்வற்றி, நெஞ்சம் வரண்டு பரிதாபத்தின் சின்னங்களாக நாம் மாற்றப்பட்டிருக்கிறோம்.

அந்தச் சோகம் துண்டாடிய நாட்களையும், மாதங்களையும், வருடங்களையும் தோளில் சுமந்து நமது லட்சியத்தின் வாசலைத் திறக்கும் வேட்கையுடன் நாம் நடைதளராது ஒரு வெறியுடன் நடந்து வந்திருக்கிறோம்.

நம்மில் கண்யிழந்தோர், கையிழந்தோர், காலிழந்தோர், மெய்யெல்லாம் குண்டடிபட்டு அங்கயீனப்பட்டோர், மனம் பேதலித்தோர், வாழ்வில் நம்பிக்கையிழந்தோர் என்று நமது மக்கள் குற்றுயிராக்கப்பட்ட போதெல்லாம் நாம் நமதுகுறிக்கோளைக் கைவிடவில்லை, லட்சியத்தை தூக்கியெறியவில்லை.

நாம் நமது வீடுகளுக்குள் கௌரமான அகதிகளாக்கப்பட்டோம். அப்போதும் நாம் சலித்துவிடவில்லை.

நாம் நமது வீடுகளை இழந்து நாதியற்ற அகதிகளாக்கப்பட்டோம். அப்போதும் நாம் கலங்கிவிடவில்லை.

நமது வியாபார ஸ்தலங்களை நாம் இழந்தோம். நமது விவசாய நிலங்களை நாம் இழந்தோம். நாம் தவழ்ந்து விளையாடிய மண்ணைவிட்டும் வெளியேறவேண்டிய சூழ்நிலைகளைச் சந்தித்தோம். அப்போதுகளிலெல்லாம் நமது நெஞ்சத்தின் ஆதியாழத்தில் வேர்பிடித்து நமது நினைவுகளில் ஆலவிருட்ஷமாய் வளர்ந்திருந்த நமது லட்சியம் நிலை குலைந்துவிடாது நாம் அறுகம்புல் போல் ஆடியாடி தலை வளைந்து நிமிர்ந்தோம்.

நாம் நம்பிக்கை வைத்து ஆட்சியில் அமர்த்திய அரசியல் வாதிகள் நமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து நம்மைக் கிள்ளுக்கீரையாய் நடாத்த முற்பட்டனர். அந்த ஏமாற்றம் பெரிது. அந்த ஏமாற்றம் நமக்கிழைத்த அவமானம் அதனிலும் பெரிது. அந்த அவமானத்தால் நாமடைந்த மனஉளைச்சல் எல்லாவற்றிலும் பெரிது.

சகோதர மனிதர்களில் நம்பிக்கை வைத்ததற்காக நாம் தண்டிக்கப்பட்டோம். எவ்வாறான தண்டனைகள் அவை, எவ்வளவு குரூரமான கொடுமையான வேதனைகள் அவை.

சல்லரித்துத் தேடப்படாத ஒரு தமிழனின் வீடும் இலங்கையில் கிடையாது.

சந்தேகத்தின் பேரில் கொடுமையான விசாரணைக்கு ஆட்படுத்தப்படாத ஒரு தமிழ் இளைஞனும் கிடையாது. ஈவிரக்கமற்ற சிறைகளில் இரவுகளைக் கழிக்காத தமிழன் வாழும் வீடே இலங்கையில் கிடையாது.

சுற்றிவளைக்கப்படாத தமிழ் மக்களின் வதிவிடப் பிரதேசங்களே கிடையாது.

மந்தைகளை மறித்து வைப்பதைப்போல மானமுள்ள தமிழர்களை மணிக்கணக்காக, நாட்கணக்காக மறித்து வைக்கப்பட்ட சம்பவங்களை எழுத முடிந்தால் அவை மகாவம்சத்திலும் பெரிய புராணங்களாகிவிடும்.

ஒவ்வொரு தமிழனின் வீடும் ஒவ்வொரு பெரும் துயரக் காவியத்தை எழுதக் காத்திருக்கிறது.

ஒவ்வொரு தமிழ் வீட்டிலும் இருந்து எழும்புகின்ற துயரப் பெருமூச்சுக்கள் இலங்கையைச் சுற்றி இருள் வலயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சோகம் கருவறுத்த துயர வாழ்வில் தமிழ் மக்களை, தமிழ் பேசும் சமுகங்களை விடுவிப்பதற்காக தமிழ்த் தலைவர்கள் ஆற்றிய பங்களிப்புகள் இன்று பரிசுத்தமற்று இருந்தன.

மனிதாபிமானமற்ற செயல்களை, ஜனநாயக விழுமியங்களை ஏறிமிதித்த அடக்கு முறைகளை, சுதந்திரமாக நடமாடும், வாழும் உரிமைகள் மறுக்கப்பட்ட எதேச்சாதிகாரங்களைக் கண்டிப்பதற்கும், உலகறியச் செய்வதற்கும் ஒரு தலைவர் தேவைப்பட்டான்.

தமிழ் பேசும் மக்களின் இந்தத் தணியாத தாகத்தை நிவர்த்தி செய்யும் முகமாக தமிழன்னை தவமிருந்து பிரசவித்த ஒரு அரும் பெருஞ் செல்வமாகவே அமரர் குமார் பொன்னம்பலம் பிறந்தார்.

மிகுந்த கௌரவமும், உயர்ந்த வரலாறும் நிறைந்த செல்வமும், தகுந்த கல்வியும் கொண்ட ஒரு பெருங்குடியில் அமரர் குமார் பொன்னம்பலம் பிறந்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டிருந்த போதே தனது திறமைகளை வெளிக்கொணர்ந்து விளையும் பயிரைமுளையிலேயே தெரியும் என உதாரணம் காட்டினார்.

சட்டத்துறையில் பாரிஸ்டராகவும், இந்திய சிங்கப்பூர் வழக்காடு மன்றங்களில் வாதிடும் அட்வோகேற்றாகவும் தொழில்புரியும் தகைமைகளைப் பெற்றார்.

அமரர் குமார் பொன்னம்பலத்திற்கு இருந்த அறிவுக்கும் செல்வத்துக்கும் அவர் ஒரு செல்வச் சீமானாக வீட்டிலேயே இருந்து காலை நீட்டிக் கொண்டு பொழுதைக் கழித்திருக்க முடியும்.

அரசியலில் ஆரம்பக்கால நாட்களில் அவர் எதையும் அஹிம்சை முறையில் சாத்வீக போராட்டங்களில் சாதிக்க முடியும் என்றே நம்பிக்கை வைத்திருந்தார்.

எல்லாரையும் இலகுவாக நண்பர்களாக்கிக் கொள்ளும் தமது இனிய சுபாவத்தினாலும், மனந்திறந்த வெளிப்படையான பேச்சினாலும், கஷ்டத்திலுள்ளவர்களுக்கு உதவி செய்யும் பரோபகார சிந்தனையினாலும் அவருக்கு சாதிமத பேதமற்று நண்பர்கள் இருந்தனர்.

தன்னோடு ஐக்கியப்பட்டிருந்த பேரினச் சமுகச் சகோதரர்களிலுள்ள அரசியல் முக்கியஸ்தவர்களோடும், புத்திஜீவிகளோடும் அமரர் குமார் பொன்னம்பலம் தமிழ்ச் சமுகத்தின் அரசியல் பிரச்சினைகள் பற்றி நல்ல அபிப்பிராயங்களை வளர்க்கத் தொடங்கினார்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவராக இருந்து தமிழ்ச் சமுகத்தின் உரிமைப் போராட்டங்களை அங்கீகரிக்கவும், ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கவும் கோரி வானொலியிலும், தொலைக்காட்சியிலும், கருத்தரங்குகளிலும்/சர்வதேச ரீதியாகவும் அவர் ஆற்றிய ஆரம்ப சொற்பொழிவுகளில் அவர் அகிம்சை வழியிலும், சாத்வீகமான போராட்டங்களிலும், பேச்சுவார்த்தைகளிலும், சுமுகமான அரசியல் தீர்விலும் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் என்பது வெள்ளிடை மலையாகும்.

கடந்த ஐந்து வருடங்களாக இந்த நாட்டுத் தமிழ் மக்கள் அனுபவித்து வந்தழுத்தில் வடிக்க முடியாத துன்பம் ஒருபுறம், சமாதானத் தூது என்று பறைசாற்றிக் கொண்டு வந்த அரசாங்கம் சண்டைச் சமர்களை உக்கிரப்படுத்தியது மறுபுறமாக நின்று அமரர் குமார் பொன்னம்பலத்தின் அரசியல் அணுகு முறைக்கு சவால்களாய் அமைந்தன.

இந்த நிகழ்ச்சிகளே அமரர் குமார் பொன்னம்பலம் என்கிற கட்டித் தங்கத்தை படம் போட்டு ஒரு போராளி வடிவத்தில் நிறுத்தின.

அன்றிலிருந்து அமரர் குமார் பொன்னம்பலம் தனி மனிதப் பெரும் படையாளரானார்.

தனது சொத்து, சுகங்களைத் துறந்தார்,
தனது தூக்கம், ஓய்வுகளைக் களைந்தார்,
தனது சமுகத்துக்கான பணிகளுக்காய் தன்னை முறையாய் அர்ப்பணித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது உயிருக்கு ஏற்படுத்தப்பட்டு வந்த அச்சுறுத்தல்களைத் துச்சமாக மதிக்கத் தொடங்கினார்.

ஆண்டவன் அளந்தபடி அனைவருக்குந்தான் காலம் முடிந்தால் காலன் வருவான். அதைத் தடுக்க யாராலும் முடியாது என்ற அசையாத இறை நம்பிக்கையோடு தமிழர்களின் உரிமைகளுக்காக, தமிழ்பேசும் சமூகங்களின் உரிமைக்காக, இந்த நாட்டு மக்கள் அனைவரின் உரிமைக்காகவுமான ஒரு கருத்துப் போருக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவராகவே அமரர் குமார் பொன்னம்பலத்தின் இறுதி ஐந்து வருடங்களும் பிரகாசித்தன.

மனித உரிமையை மதிக்காதஒரு அரசாங்கத்தை பேச்சு வார்த்தைகளால் நம்பச் செய்யவைக்க முடியாது என்று அமரர் குமார் பொன்னம்பலம் தனது முடிவாக கொண்டதை யாரும் தவறென்று கூறவில்லை.

பேச்சு வார்த்தைக்கு இணங்காத அரசாங்கத்தை உணர வைக்க வேறு மார்க்கங்களைத் தேடும் முயற்சி யாருக்கும் இயல்பானதாகும்.

இந்த அடிப்படையிலேயே தமிழர்களின் பிரதிநிதியாக அவரால் விடுதலைப்புலிகளை அங்கீகரிக்க முடிந்தது.

ஷணித்துப் போகும் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் மூலமே வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மொத்த இலங்கையருக்கும் பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்த முடியும். அதில் சிங்களர் என்றும், தமிழர் என்றும், முஸ்லிம்கள் என்றும் பேதம் கிடையாது என்று சிந்தித்த அளவில் அமரர் குமார் பொன்னம்பலம் ஒரு சிறந்த மனித நேயனாக மிளிர்ந்தார்.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு இந்த அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்தி அதற்காக செலவிடப்படும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாக்களை அபிவிருத்தி துறைகளில் செலவிடுவதனாலேயே முடியும்.

அதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி இடைக்கால நிர்வாகத்தை வடகிழக்கில் ஏற்படுத்தி படிப்படியாக பொருத்தமான தீர்வுக்கு வருவதையே நான் சார்ந்துள்ள ஐ.தே.கட்சியின் தலைவர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களும் கூறியுள்ளார்.

இவ்வாறு நடைபெறாவிட்டால் யுத்தம் தவிர்க்க முடியாது, அழிவுகள் அதிகரிப்பதைத் தடுக்க முடியாது, என்பது அமரர் குமார் பொன்னம்பலத்தின் முடிவாகும்.

அதனால், அவர் குரல் எழுப்பத் தொடங்கினார். தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் கேட்கும் வகை செய்ய வேண்டும் என்று பாரதி பாடினான்.

ஆனால் அமரர் குமாரின் தமிழ் இடியேறுபோல் ஒலிக்கத் தொடங்கியது.

அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உரிமைக் குரலாக அமரர் குமார் பொன்னம்பலத்தின் குரல் இடையுறாது ஒலித்துக் கொண்டிருந்தது.

நாடி நரம்பு தளர்ந்து விட்ட நிலையில் மனமுடைந்திருந்த தமிழர்களின் நரம்புகளில் அமரர் குமாரின்பேச்சு புத்துயிர் அளித்து புது இரத்தத்தை ஓடச் செய்தது.

பல்லாண்டுக்குப் பின்னர் மறத்தமிழர் குலத்தின் பெயர், பெருமைகளைக் கட்டிக் காக்கும் ஒரு மாவீரனாக, ஒரு மாமனிதனாக அமரர் குமார் பொன்னம்பலம் உயர்ந்தார்.

பேரினவாதச் சகதியில் மூழ்கி தமிழினக்குரோதத்தின் அழுக்கைச் சீரணித்துக் கொண்டிருந்த அக்கிரமக்காரர்களின்அடக்கு முறைகளையும்,அச்சுறுத்தல்களையும் அசட்டை செய்து தான் சரியெனக்கண்ட வழியில் உயிரைச் துச்சமென மதித்து உலகம் வியக்கும் வகையில் குரலெழுப்பியவர் அமரார் குமார் பொன்னம்பலம்.

இதுகாலவரைத் தமிழினம் அடைந்துவந்த எல்லா இழப்புகளையும் மறந்து இந்த உலகில் ஒரு சொட்டு நம்பிக்கை வைத்து தமிழர்களை வாழச் செய்த பெருமை அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட தமிழ் மாநிலத்தின் ஒரு விடிவெள்ளியாக விளங்கி, தமிழ் மொழிச் சமுகங்களின் தனிச் சிறப்புக்கும் கௌரவத்திற்கும் உரியவராகிய ஒரேயொரு தமிழ்த் தொண்டனும் தமிழ்த் தலவனும் அமரர் குமார் பொன்னம்பலந்தான்.

அந்த வகையில் அமரர் குமார் பொன்னம்பலத்துக்காக எல்லா தமிழ்த் தலைகளும் பணிந்து கௌரவிக்கும்.

அமரர் குமார் பொன்னம்பலத்தை தமிழ் உலகம் இழந்து விட்டது. இந்த இழப்போ எந்த வகையிலும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

குமார் பொன்னம்பலத்தின் உயிரைத் துளைத்த குண்டுகள் தமிழினத்தின்உரிமைக் குரலைத் துளைத்த குண்டுகளாகவே கருதப்பட்டன.

குமார் பொன்னம்பலம் இறந்தசெய்தி இந்த உலகின் ஒவ்வொரு தமிழனின் உயிரையும் மூச்சையும் ஒரு கணம் ஸ்தம்பிக்கச் செய்த செய்தியாகும்.

எல்லாவற்றையும் இழந்து இறுதியாக தமிழ்க் குலம் தம் உயிரோடு இறுகப் பிணைந்திருந்த குமார் பொன்னம்பலத்தையும் இழந்து விட்டுள்ளது தெரிகிறது.

மனிதர்களின் சமத்துவத்துக்காகவும், சமஅந்தஸ்துக்காகவும், சகோதரத்துவத்துக்காகவும் போராடிய ஒரு மாமனிதன் மூச்சு நின்றுவிட்டது. தமிழன்னை தான் தவமிருந்து பெற்ற ஒரு மைந்தனை இழந்து இன்று தலைவிரி கோலமாகிவிட்டாள்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக தனித்து நின்று போராடிய ஒரு தமிழ் மறத் தலைவனை இழந்து தவியாய் தவிக்கின்றனர்.

அமரர் பொன்னம்பலத்தின் மறைவு வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களைப் பேரதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

அரசியல் பதவிகளுக்காக மார்க்கத்தை விற்று வயிறு வளர்க்கும் கீழ்த்தரமான முஸ்லிம் தலைவர்களில் சலிப்புற்றிருக்கும் வடகிழக்கை தாயகமாகக் கொண்டுள்ள முஸ்லிம்களின் மனங்கவர்ந்த தமிழ்த் தலைவரான அமரர் குமார் பொன்னம்பலத்துக்காக அவர்கள் தமது இதயம் கனத்த ஆழ்ந்த அனுதாபங்களை என்னூடாகத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக', என்று வள்ளுவப் பெருந்தகையின் தெள்ளுதமிழ் முது மொழிக்கேற்ப மறையாத புகழொடு தோன்றி அணையாத வழிகாட்டியாய் அமைந்து விட்ட அண்ணன் அமரர் குமார் பொன்னம்பலத்துக்காக என் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறேன்.

என் அன்புத் தமிழ் நெஞ்சங்களே
ஆற்றொணாத் துயரில் வாடும் தங்கங்களே
அழ வேண்டாம் - அழுதது போதும் -
அழுகையை நிறுத்துங்கள்.

நம் முன்னே இருக்கும் பாரிய பணியை நினைத்துப் பாருங்கள். நமது தமிழ் பேசும் மக்களின் தலை நிமிரும் நாளை எண்ணிப் பாருங்கள் – இறைவனுதவியால் நமது உரிமைகளுக்கான போராட்டங்கள் வெல்லப்படுகின்ற நாளில் தான் நாம் நிம்மதியடையமுடியும். அது வரை எந்த இழப்பையும் தாங்கிக் கொள்ள நாம் நமது சக்தியையும் தத்துவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் நொடித்துப் போய்விடக்கூடாது.

அண்ணன் அமரர் குமார் பொன்னம்பலத்தின் வீரமரணத்தை நாம் அர்த்தமுள்ளதாக்க வேண்டும். நமக்கு மத்தியில் ஆயிரம் ஆயிரம் குமார் பொன்னம்பலத்தை உருவாக்க வேண்டும்.

நமது மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒரு லட்சம் குமார் பொன்னம்பலங்களை நாம் உருவாக்க வேண்டும். அப்போதுதான் அமரர் குமார் பொன்னம்பலத்தின் வீரமரணத் தியாகத்தை நாம் அர்த்தமுள்ளதாக்க முடியும். குமார் பொன்னம்பலம் தனியொருவராகப் போராடி லட்சக் கணக்கான குமார் பொன்னம்பலங்களை உருவாக்கிய மாமனிதர் என்ற அழியாப் புகழை நாம் அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் குமார் பொன்னம்பலத்தின் வரலாறு இலங்கைத் தமிழ் மாநில வரலாற்றில் என்றென்றும் நினைவுகூரக் கூடிய வரலாறாய் அமைவதற்கு நாம் அனைவரும் அவர் தொடங்கிய பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும். இதுவே அவரது ஆத்மா சாந்தியடைய நாம் செய்யும் அஞ்சலியாகும்.

இந்த சோகம் கல்விய நாளில் அமரர் குமார் பொன்னம்பலத்தின் அருமை பிராட்டியாருக்கும், அன்புச் செல்வங்களுக்கும் முஸ்லிம் மக்கள் சார்பாகவும், எனது மாவட்ட தமிழ், முஸ்லிம்கள் சார்பாகவும் எனது குடும்பம் சார்பாகவும், எனது சொந்த சார்பாகவும் மாசில்லா எனது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்தியம் வெல்லும் -
நிச்சயமாக
அசத்தியம் அழியும்
அந்தச் சத்தியத்தை வெல்லவைக்கும் பாதையில்
தம் அரிய உயிர்களைத் தியாகித்த அனைவரும்
நம்மைப்பொறுத்த வரை
இறந்தவர்களல்ல.
அவர்கள் என்றென்றும்
நம்மோடு
உயிரோடு இருக்கிறார்கள்.

நன்றி

கௌரவ அலிஸாகீர் மௌலானா
ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர்

கொள்கைக் கோமகன் குமார்

தமிழினத்தின் உரிமைகளுக்காக தன்னலன் பாராது தனித்து நின்று தனித்துவமான முறையில் தலைநகரில் இருந்தே ஆணித்தரமான முறையில் அர்த்த புஷ்டியான அரசியல் வாழ்வை நடாத்தி வந்த அஞ்சா நெஞ்சன், ஷகொள்கைக் கோமகன் குமார் பொன்னம்பலம் அவர்கள் வஞ்சகக் கோழைகளினால் கொலை செய்யப்பட்ட தினம் தமிழினத்தின் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத தினமாகப் பதியப்பட்டு விட்டது. தமிழினத்தின் அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் நாதியற்ற, நசுக்கப்பட்ட, நலிவுற்ற நம்மின மக்களின் விடிவுக்காக ஓங்கிக் குரல் கொடுத்த கர்மவீரன் குமார் பொன்னம்பலத்தின் குரல் அடக்கப்பட்டு விட்டது. சர்வதேச அரங்குகளில், சர்வதேச மனித உரிமை நிறுவனங்களில், சர்வதேசத் தொண்டர் ஸ்தாபனங்களில் தனது அறிவுசால் பாண்டித்தியத்தினால், நம்மினத்தின் அரசியல், அடிப்படைஅன்றாடபிரச்சினைகளை வெளிக் கொணர்ந்த அரசியல் சட்டமேதை குமார் பொன்னம்பலத்தின் குரல் அடக்கப்பட்டு விட்டது. இன்னல்கள் ஈழத் தமிழர்களுக்கு நேரும் போதேல்லாம் வீரத்துடன் தட்டிக் கேட்ட அடங்காத் தமிழன் குமார் பொன்னம்பலத்தின் குரல் அடக்கப்பட்டுவிட்டது. அடக்கப்பட்டதாகக் கோழைகள் கருதுவது தன்னிகரில்லாத் தலைவன் குமார் பொன்னம்பலத்தின் குரலேயொழிய, அன்னாரது கொள்கைகள், இலட்சியங்கள் அல்ல. தலைவர் குமார் பொன்னம்பலத்தின் கொள்கைகள், இலட்சியங்கள் தமிழ் மண்ணிலே, தமிழர் மனங்களிலே விதைக்கப்பட்டுள்ளன. அவை வித்துக்கள் – விருட்சங்களாக ஓங்கி வளரத்தான் போகின்றன. அதற்குச் சான்று பகர்வதுபோலத் தலைவரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டுக் கலங்கிய வடக்கு , கிழக்கு, மலையக,கொழும்பு வாழ் தமிழ் மக்களின் உணர்ச்சிப்பிரதிபலிப்பும், கடல் கடந்து வாழும் தமிழ் மக்களின் உள்ளத்து ஏக்கமும் அமைந்திருந்தன. உருவத்தால் மறைந்து, தமிழ் மக்களது உள்ளத்துள் நிறைந்துள்ள தலைவர் குமார் பொன்னம்பலமவர்களின் கொள்கைகள், இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வது தமிழ் மக்கள் அனைவரதும் தலையாய கடமையாகும். தமிழ் இனத்தின் அஞ்சுதலை நீக்கி, ஆறுதலை அளிக்கும் ஆறுதலை முருகப் பெருமானிடம் எம்மினத்தின் எதிர்காலம் சமர்ப்பணம்.

மூளாயூர்
வே. இராஜ்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பற்ற அனவரதன்

சுமார் பத்து ஆண்டுகளிற்கு முன்னர் இலங்கையிலே நடைபெற்ற ஒரு பொதுத் தேர்தலிற்கு முன்னோடியாக ஒரு ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டது. இதில் இன்றைய பிரதமர் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடக்கம், தீவிர சிங்கள தேசியவாத கட்சிகளான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவை முதற்கொண்டு இலங்கை முஸ்லிம்களை பிரதிநிதித்துவப் படுத்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்திய ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் இடம்பெற்றன. இந்த கூட்டு முன்னணியில் ஈழத்தமிழர்கள் சார்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் இடம் பெற்றது. அந்த ஐக்கிய முன்னணிக்குள்ளே சிங்கள பெரும்பான்மை வாதத்திற்கு எதிராக பெரும்பாலும் தனி மனிதராக எழுந்து நின்று ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை முற்கொண்டு சென்றவர் திரு. குமார் பொன்னம்பலம். இந்த ஐக்கிய முன்னணியின் தேர்தல் அறிக்கையில் வடகிழக்கு தேசிய இனப்பிரச்சினைக்கு சில திட்வட்டமான ஆலோசனைகளுடன் வடகிழக்குத் தாயக கோட்பாட்டின் அடிப்படையும் முன்வைக்கச் செய்ததுடன் இன்றைய ஜனாதிபதியின் சகோதரரை அழைத்துச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையும் நடத்தியிருந்தார். இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி, அரசியல் தீர்வுத் திட்டம், தாயக கோட்பாட்டின் ஏற்புடைமை, விடுதலைப்புலிகளுடன் பேச்சு என்று தற்போது பரவலாக பேசப்படும் நிலைப்பாடுகளிற்கு தீர்க்கதரிசனமாக அன்றே வித்திட்டவர் குமார் அவர்களே என எதிர்காலத்திலே வரலாறு நிதர்சனமாக எழுதப்படும்போது இந்நாடு நன்றியுடன் நினைவுகூரும்.

இந்த உண்மைகள் அவர் ஐக்கிய இலங்கைக்குள்ளே நீதியானதும், சமத்துவமானதும் ஆன ஒரு தீர்விற்காக நேர்மையான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார் என்பதையும், இன்று வரலாறாகிவிட்ட அவரது இறுதி பத்தாண்டு கால அரசியல் நிலைப்பாடுகள் ஒருதலைப்பட்சமாக ஏற்பட்டிருக்கலிலை என்பதையும், மறுபக்கத்திலே வாய்ப்பேச்சு ஐக்கியமும், போலி சமத்துவமும் அவரை எத்துணை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கிவிட்டிருந்தன என்பதையும் தெளிவாக படம்பிடித்து காட்டுகின்றன.

தமிழின பற்று என்பது எவ்வளவு தூரம் உணர்வுபூர்வமான விடயமாக இருந்த போதிலும் குமார் அவர்கள் இதை எத்துணை அறிவுப்பூர்வமாக அணுகினார் என்பதை நான் நேரிடையாக அறிவேன். ஈழத்தமிழ்களின் இன்னல்களிற்கு எதிராகவும், அபிலாஷைகளிற்கு ஆதரவாகவும் நான் எனது தார்மீக ஆதரவுக் குரலை எழுப்பும்போதெல்லாம் அதை பாசத்துடன் ஏற்றுக்கொண்ட அவர் மலையகத் தமிழர்களின் கலாச்சார தனித்துவத்தையும், இனரீதியான வளர்ச்சியையும் தெளிவாக அங்கீகரித்திருந்தார். நான்கு மாதங்களிற்கு முன்னர் கொழும்பிலே நாம் நடாத்திய மலையகத் தமிழர் பற்றிய கருத்தரங்கத்திலே தனது நிலைப்பாடுகளை நண்பர் குமரகுருபரன் வாயிலாக அவர் முன்வைத்திருந்திருந்தார்.

சுமார் பத்து ஆண்டுகளிற்கு முன்னர் ஐக்கிய முன்னணி அமைப்பு சம்பந்தமாக எனது தந்தையாரை சந்திக்க எமது இல்லத்திற்கு வருகை தரும் அந்த பசுமையான நாட்கள் முதல், இறுதியாக 03.01.2000 அன்று மாலை அவரது இராணி வீதி இல்லத்தில் அமர்ந்து அரசியல் அளவளாவி கொண்டிருந்தவரையில் குமார் பொன்னம்பலம் அவர்களை நான் படிப்படியாக அறிந்திருந்தேன்; உணர்ந்திருந்தேன்; பலமுறை வியந்திருந்தேன்.

இறுதியாக சுப்பிரமணிய பாரதி பகவத் கீதையில் மொழிபெயர்த்துவிட்ட வாசகங்களை சொல்லி முடிப்பது அஞ்சலியாக அல்ல, அமரத்துவம் அடைந்து விட்டவரிற்கான செய்தியாகவும் அல்ல, இந்த கணத்தில் என் மனதில் தோன்றும் நினைவலைகளின் பிரதிபலிப்புக்கள் இவை.


"இவன்பிறப்பதுமில்லை எக்காலத்திலும் இறப்பதுமில்லை. இவன் ஒரு முறையிலிருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றான். அனவரதன், பழையோன், உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படான்."

(மனோ கணேசன் – பொதுச் செயலாளர் – ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்பினிலே வாழ்ந்த மாமனிதன் நீர்

நம்மினத்தின் துயர் தெரிந்த தூயவன் நீர்



இருபதாம் நூற்றாண்டில் தமிழினத்திற்குத் தலைமை தாங்கிய பெருந்தலைவர், சட்டமேதை, அரசியல் வித்தகன் குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவு தமிழின வரலாற்றில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

மானிடச்சிந்தனையும், மனித நேயமும் மிக்க மகத்தான தலைவனை ஈழத் தமிழினம் இழந்து விட்டது. அநாதரவாகச் சிறைச்சாலைகளில் அகப்பட்ட எம்மினத்து மக்களுக்காய், உதவியற்று நின்ற மக்களுக்காய், எவ்வித சன்மானமும் எதிர்பாராது, எந்த வேளையிலும், எந்த நிலையிலும் குரல் கொடுத்த மறத்தமிழன் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

தமிழனுக்கு இழைக்கப்பட்ட அனர்த்தங்களைத் தமிழினத்தின் விடுதலையை உலகெங்கும் சென்று ஒங்கி ஒலித்திட்ட தன்மானத் தமிழன்.

தனியொருவனாய், தனியனாய் நின்று எம்மினத்தின் சுதந்திரத்தைப் பாங்காகப் பாரினினுக்கு எடுத்துரைத்திட்ட சிம்மக் குரலோன்.

தமிழனுக்கு எங்கு அநீதி இழைக்கப்பட்டாலும் தட்டிக் கேட்கும் துணிச்சல் மிக்க தலைவராக விளங்கியவர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

எந்தவொரு கட்சியோ, தமிழர் பிரதிநிதிகளோ செய்யாத பெரும் பணியைத் தனியொருவனாக நின்று நடாத்திய அந்தப் பெரும் தலைவன் குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவு என்பது ஈழத் தமிழர் வரலாற்றில் தாக்கம் நிறைந்த பேரிழப்பாகவே பதியப்படப்போகின்றது.

அவர் எழுதிய எழுத்துக்கள், அவர் பேசிய பேச்சுக்கள், அவர் செயல்கள் யாவும் தமிழினம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

தமிழ், தமிழினம், தமிழர் என்று ஓயாது உழைத்திட்ட புரட்சித் தலைவன் குமார் பொனனம்பலம் அவர்கள் கொடியவர்களால் ஓய்வெடுக்கப்பட்டு விட்டார். ஆனால் தமிழர் தாயகம் புலரும்போது தம் மீளாத்துயில் நீங்கி மீண்டும் இம் மண் வருவார்.

அன்புடன்

செல்லத்துரை கணேஸபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் உரிமைக் குரலாக நானறிந்த குமார்

திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் இலங்கையின் பிரபல சட்டத்தரணியும் புகழ்பெற்ற அரசியல்வாதியுமான திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களின் ஒரே புதல்வராவார். இவர் இலங்கையில் றோயல் கல்லூரியிலும், லண்டன் பல்கலைகழத்திலும், இங்கிலாந்தில் புகழ்பெற்ற கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் கல்விகற்று, அதன்பின் இங்கிலாந்தில் பரீஸ்டர் பட்டம் பெற்றவர். இலங்கைக்குத் திரும்பிய பின்னர், இவரது தந்தையார் ஸ்தாபித்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரசில் தந்தையாரின் மறைவின்பின் பொதுச் செயலாளராகப் பதவி வகித்து வந்தார்.

முன்னைய ஜனாதிபதி ஜே.ஆர்,ஜயவர்தன அவர்களால் 1982ஆம் வருடத்தில் முன்வைக்கப்பட்ட தேசிய ரீதியிலான சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக இவர் செயற்பட்டமை யாவரும் அறிந்ததே. 1988ஆம் ஆண்டில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களின் ஜனநாயக மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயார்செய்வதில் முக்கிய பங்கு வகித்த இவர், அந்த விஞ்ஞாபனத்தில், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதற்கு உகந்த தீர்வுகளுக்கு அதி முக்கியத்துவம் கொடுத்திருந்தார். பின்னர் 1980களிலும் 1990 களிலும் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை சர்வதேச சமுதாயத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு அவர் மேற்கொண்ட பணிகள் யாவரும் அறிந்ததே. தமிழ் மக்கள் சார்பாக அஞ்சாநெஞ்சனாக விடாப்பிடியாகக் குரல் கொடுத்ததன் மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் அழியாத இடத்தைப் பெற்று விளங்கினார்.

1990களின்நடுப் பகுதியிலிருந்து தமிழ் மக்களுக்கெதிரான இனப் படுகொலைகளும், மனித உரிமை மீறல்களும் கொடூரமடையவே, அதற்கெதிரான குமாரின் குரலும் வீராப்படையத் தொடங்கியது. இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று மிகவும் துணிவுடன் வீரமுழக்கம் செய்துவந்தார். கொழும்பில் சிங்களவர்கள் மத்தியில் வாழ்ந்துவந்த போதிலும், தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பாகவும், அவர்கள் அனுபவிக்கும் அவலங்களையும் துயரங்களையும் தனது பேச்சுக்கள் மூலமும் கட்டுரைகள் மூலமும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இவர் துணிவுடன் முன்வைத்த கருத்துகள், தமிழ் மக்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டது மாத்திரமல்லாது அவரது அஞ்சா நெஞ்சினையும் வெளிப்படுத்தியது. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் கூட இவர்மீது நம்பிக்கை வைக்கத் தொடங்கியதாகக் கருதமுடிகின்றது.

25 வருடங்களுக்கு மேலாக வெளிநாடுகளில் வாழ்ந்தமையால் திரு. குமார் அவர்களுடன் அதிக தொடர்புகளை வைத்திருக்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டவில்லை. இலங்கைக்குத் திரும்பிய பின்னர் வைத்திய கலாநிதி அமரர் வேலாயுதபிள்ளை அவர்களே எம்மை இவருக்கு அறிமுகஞ் செய்துவைத்தார். அன்றிலிருந்து அவரது துயர நிகழ்வுவரையில் இவருடன் நாம் சதா நெருங்கிய தொடர்பினை வைத்திருந்தோம். அடக்கப்பட்டதொரு சமூகத்திற்காக, அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களையும் ,துயரங்களையும், மிகவும் துணிவுடன் உலக சமுதாயத்துக்கு எடுத்து விளக்கிய ஒரே அரசியல்வாதி இவரே என்பதை ஆணித்தரமாகக் கூறுவிரும்புகின்றோம்.

காரணமின்றிக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின், யுவதிகளின் விடுதலைக்கு மாத்திரமல்லாது அவ்வகையிற் கைதுசெய்யப்பட்ட சிங்கள மக்களுக்காகவும்கூடக் கட்டணம் எதுவும் அறவிடாது நீதிமன்றங்களில் வாதாடிய பெருமை இவரொருவருக்கே உண்டு. இரவு பகல் பார்க்காது, களையையும் பொருட்படுத்தாது எச்சூழ்நிலையிலும் மனந்தளராது பாதிக்கப்பட்டவர்களுக்காக அவர் செயற்பட்டது யாவரும் அறிந்ததே. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை, கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட செம்மணி விவகாரம் மற்றும் மட்டக்களப்பில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் விவகாரம் தொடர்பாக நீதிவேண்டி இலவசமாக வாதாடி இவர் செய்த தியாகங்களும் தொண்டுகளும் எழுத்திலடங்காதவை.

1997 மார்ச் மாதம் 25ஆந் திகதி ஐ.நா.சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடரில் இவர், ஜெனீவா கோட்பாடுகளுக்கு முரணான வகையில், இலங்கையில் தமிழ் இன ஒழிப்பை அரச படைகள் மேற்கொள்ளும் முறை தொடர்பாகவும், இலங்கையில் நடைபெறும் நியாயமற்ற கைதுகள், காலவரையின்றித் தடுத்து வைத்தல், சித்திரவதை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமினறி ஆடகள காணாமறபோதல, நீதிககு அபபாறபடட கொலைகள தொடாபாகவும, தமிழ மககளுகக எதிராகச செயறபடுத்துதறகாக ஆக்கப்பட்ட சட்டங்கள் தொடர்பாகவும், அச் சட்டங்கள் எவ்விதத்தில் தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றது எனவும் எடுத்துரைத்தது மாத்திரமல்லாது, கோஷ்டியினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டகிருஷாந்தி குமாரசாமி மற்றும் ரஞ்சனி வேலாயுதபிள்ளை தொடர்பாகவும், அவர்கள் கொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும், வடக்குக் கிழக்கில் மாத்திரமல்லாது கொழும்பிலும் கூடத் தமிழ் மக்கள் திடீரெனக்காணாமற் போன சம்பவங்களையும், திருமலை மாவட்டத்திலுள்ள குமரபுரத்தில் 26 அப்பாவித் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதனையும், திருமலைச் சிறைச்சாலையில் 5 தமிழர்கள் கொலை செய்யப்பட்டதனையும், பொல்கொட வாவியில் மிதந்த 21 தமிழ் மக்களின் சடலங்கள் தொடர்பாகவும், புள்ளிவிபர ரீதியில் மிகவும் விளக்கமாக விபரித்ததோடு, மேற்குறிப்பிட்ட கொடூரமான மனித உரிமை மீறல்களுக்குக் காரணமாகவிருந்த இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான கவலையையும் தெரிவித்திருந்தார். அத்தோடு அரச படையினர் ஓர் ஆக்கிரமிப்புப் படைபோற் செயற்படுவதாகவும் கண்டனமும் தெரிவித்திருந்தார். இவ்வாறு ஐ.நா. சபையின் மனித உரிமைக் கூட்டத்தொடரில் இவர் ஆற்றிய உரை, இலங்கையில் நடைபெறும் அரச பயங்கரவாதம் தொடர்பாக அதிகம் அறிந்து வைத்திருக்காத ஏனைய நாடுகளின் பிரதிநிதிகளை வியப்பில் ஆழ்த்தியதோடு, உலகெலாம் பரந்து வாழும் தமிழ்ச் சமுதாயத்தின் இதயங்களும் குமாரின் அஞ்சாநெஞ்சத்தினையும் ஆணித்தரமான கூற்றுக்களையும் பாராட்டியதோடு, மாத்திரமல்லாது இலங்கை அரசுக்குச் சிம்ப சொர்ப்பனமாக விளங்கிய குமாரை தமது நாயகனாகக்கருதத் தலைப்பட்டன.

இவரின் செயற்பாடுகளை நோக்கும்போது, சமய குரவர்களில் ஒருவராகிய திருநாவுக்கரசு நாயனார் பாடிய "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற அடிகளும் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே, உச்சிமீது வானிடிந்து வீழ்ந்துவிட்ட போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"என்ற பாரதியாரின் கூற்றுமே எம் மனக் கண்முன் தோற்றுகின்றன.

சந்திரிகா அம்மையாருக்கு பல சந்தர்ப்பங்களில் பல பகிரங்கக் கடிதங்கள் இவரால் எழுதப்பட்டிருந்ததை யாவரும் அறிவர். இலங்கையில் தமிழர்கள் வந்தேறு குடிகள் என்ற தொனிப்பில் எமது ஜனாதிபதி அவர்கள் தென்னாபிரிக்காவில் வைத்துக் குறிப்பிட்டது தொடர்பாக தகுந்த ஆதாரங்களுடன் தகுந்த பதிலைக் குமார் கொடுத்திருந்தார். குமாரின் துயர நிகழ்வுக்கு ஒரு சில தினங்களுக்கு முன் ஜனாதிபதி அவர்கள் தமிழ் மக்களுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்தபோது, குமார் அவர்கள் ஒரு நீண்ட கடினமான பதிலை வழங்கியிருந்ததன் மூலம் சகல மக்களினதும் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டுவிட்டார். இன்றைய சூழ்நிலையில் சில தமிழ் அரசியற் கட்சிகள் அரசுக்கு ஆலவட்டம் பிடித்தாலும் குமார் ஒருவரே இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக விளங்கினார் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இவ்வாறு தமிழ் மக்களின் அபிலாசைகளையும், உணர்வுகளையும், அவர்களது அவலங்களையும், துயரங்களையும், அவர்களுக்கெதிரான இனப் படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும் எவ்வித தளர்வுமின்றித் துணிச்சலோடு பல வருடங்களாக சர்வதேச சமுகத்துக்கும் சர்வதேச தமிழ்ச் சமுகத்துக்கும் எடுத்துரைத்ததன் காரணமாக, அவரது மறைவு குறித்து இரங்கல் செய்தியொன்று அனுப்பி வைத்த விடுதலைப் புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் இவருக்கு "மாமனிதர்" என்ற ஓர் உயர்ந்த விருதையும் வழங்கிப்பாராட்டியிருந்ததாக பத்திரிகைகள் மூலம் அறியக்கிடைத்தது.

எனவே, நாமறிந்த குமார் தமிழ்க் குரலாகவே நிலைத்துவிட்டார். அவரைக் கொலை செய்தாலும் அவரின் குரல் என்றும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஒலித்துக்கொண்டே இருக்கும். அவரின் உயிரைப் பறித்தாலும் அவரின் குரலை எந்தச் சக்தியாலும் அழித்துவிட முடியாது. இந்த உலகில் இலங்கைத் தமிழர்கள் இருக்கும்வரை குமாரின்குரல் ஒலித்த வண்ணமே இருக்கப்போகின்றது. எனவே தன்னைத் தமிழர் விடுதலைக்காக அர்ப்பணித்த குமாருக்குக் கைமாறாக, அம் மாமனிதருக்கு, தமிழ் இளைஞர்களும், யுவதிகளும், புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து அவரது நினைவாக சின்னமொன்று அமைப்பது மாத்திரமல்லாது, மனித உரிமை மீறல்களுக்கெதிராகக் குரலெழுப்பும் அமைப்பொன்றினையும் யாழ்ப்பாணத்தில் நிறுவுதல் வேண்டும்.

இ.நடராஜா
முன்னாள் ஐ.நா. சர்வதேச ஆலோசகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருஷேத்திரத்தில் அபிமன்யு!
ஈழஷேத்திரத்தில் குமார்!

அபிமன்யு சதிக்களத்தில் சாய்ந்துவிட்டான். ஈழவனுக்காக ஒலித்த குரல் ஓய்ந்ததம்மா!

கொழும்பிலே குமார் பொன்னம்பலம் அவர்களின் கொலைக்கு ஈடாக குருஷேத்திரத்தில் அபிமன்யுவின் மரணத்தை ஒப்பிடுவது பல விதங்களிலும் பொருத்தமானதே.

குருஷேத்திரத்தில் அபிமன்யுவின் பங்களிப்பு எவ்வளவு கணிசமானதோ, அவ்வளவு கணிசமானது குமாரின் பங்களிப்பு. அபிமன்யுவின் இழப்பு எவ்வளவு பாரதூரமானதோ, அவ்வளவு பாரதூரமானது குமாரின் இழப்பு.

கௌரவர்களின் சூதாட்டத்தினால், பாண்டவர்கள் தங்கள் மண்ணை இழந்தனர். சிங்களத் தலைவர்களின் அரசியல் சூதாட்டத்தினால் ஈழத்தவர்கள், தங்கள் மண்ணை இழந்தனர்.

திருதராஷ்டிரனின் ஓரவஞ்சனைக்கு பாண்டவர்கள் இரையாகினர். டி.எஸ்.சேனநாயக்காவின் ஓரவஞ்சனைக்கு ஈழவர்கள் இரையாகினர்.

துரியோதனன் ஈறான கௌரவர்கள் பாண்டவர்களை சொல்லொணாத் துயருக்கு ஆளாக்கினர். அதன் விளைவாக பாண்டவர்கள் பல்வேறு சபதங்களை எடுத்தனர். சந்திரிகா ஈறான சிங்களத் தலைமை இழைத்த கொடுமையினால், ஈழவர்கள் பல்வேறு சபதங்களை எடுத்தனர். அங்கே சகுனி, இங்கே அனுருத்த.

போரைத் தவிர்க்க ஐந்து வீடுகளாவது தரும்படி கேட்டனர் பாண்டவர்கள். போரைத் தவிர்க்க, மகா வட்ட சபைகளையாவது தரும்படி கேட்டனர் தமிழர்கள். வீடுகளும் தரப்படவில்லை. மகா வட்டமும் தரப்படவில்லை.

துரோணர், பீஷ்மர், விதுரர் போன்றோர் நல்லது எது கெட்டது எது என்று பகுத்தறியும் ஞானம் இருந்தும் அது விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. மார்க்ஸிஸ்டுகளும் அவ்வாறே விழலுக்கு இறைத்த நீராகினர்.

அபிமன்யுவுக்கு வியூகத்தை உடைக்கும் அறிவும் ஆற்றலும் இருந்தது. வெளியே வரும் அறிவு இருக்கவில்லை. குமாருக்கு பொய்யையும் வஞ்சனையையும் அநியாயத்தையும் ஊடறுக்கும் கூரிய அறிவு, நாவன்மை, பேனாவன்மை, வீரம் இருந்தது. தனது தற்பாதுகாப்பைப் பேணிக் கொள்வதும் போராட்டத்தைத் தொடர்வதற்கு அவசியம் என்ற எண்ணம் இருக்கவில்லை.

அபிமன்யு அங்கே சாய்ந்தான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். வரலாற்றில் அழியாத இடம் பெற்றான். குமார் இங்கே சாய்ந்தான். உலகெங்கும் ஈழவர்கள் கண்ணீர் மாரி பொழிந்தனர். ஈழவலாற்றின் இணையற்ற மாமனிதன் ஆனான்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல்.

(வான்புகழ் வள்ளுவரின் குறள் 70)

"ஒரு மகன் தனது தந்தைக்கு ஆற்றக்கூடிய பெருமை என்னவென்றால், இவனைப் பெற்றெடுப்பதற்கு இவனது தந்தை என்ன தவம் செய்தானோ என்று உலகம் வியந்து போற்றுவதுதான்" என்றார் வள்ளுவர். விண்ணுலகில் உள்ள குமாரின் தந்தை ஜீ.ஜீ. பொன்னம்பலம் தன்னை மிஞ்சிய தனயனை நினைத்து இறும்பூது எய்தியிருப்பார்.

புகழ்பெற்ற ஒரு தந்தையின் மகனாகப் பிறப்பதற்கு குமாரும், பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்!

அவர் இலங்கையின் வரலாற்றில் ஒப்பாரும் மிக்காரும் அற்ற வழக்குரைஞர், தனது வழக்காடும் திறமையை தென்கிழக்கு ஆசியா எங்கணும் பதிததவர்; மதியூகி; தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டு முதல் முழக்கம் செய்தவர்; சுதந்திர இலங்கையின் புகழ் பத்த முதலாவது தமிழ்த் தலைவர்; இலங்கையின் தொழில்துறை அமைச்சராக இருந்து தமிழர் தாயகத்தில் பல தொழிற்சாலைகளைக் கட்டித் தந்தவர். தனது ஆங்கில நாவன்மையால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தையே கலக்கியவர்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் ஜீ.ஜீ. உரையாற்றியதைச் செவிமடுத்த அமெரிக்காவின் ஐ.நா. தூதுவர் திருமதி பிரான்ஸிஸ் வில்லிஸ் எழுந்தோடி வந்து ஜீ.ஜீ. யின் கரங்களைக் குலுக்கி, "அபிவிருத்தி குன்றிய நாட்டின் குரல்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவென்றால், நாமும் (அமெரிக்காவும்) ஒரு அபிவிருத்தி குன்றிய நாடாக இருக்கக் கூடாதா என்று ஆசைப்படுகிறேன்." என்று பகிரங்கமாகப் பாராட்டி, ஆனந்தக் கண்ணீர்விட்டது, இன்று உலக வரலாற்றில் ஈழத் தமிழனின் புகழ் சாற்றும் ஒரு பரணி ஆகிவிட்டது. இத்தகைய புகழ்படைத்த தந்தை, ஏனைய புகழ்பெற்ற இலங்கைத் தலைவர்களைப் போல தனது வாரிசுகளை அரசியலில் பலவந்தமாகத் திணிக்கவில்லை. 1960களில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி குமாரை உடுவில் நாடாளுமன்றத் தேர்தல் தொகுதி வேட்பாளராகத் தேர்ந்தெடுத்த போதிலும், அந்த முடிவை ஜீ.ஜீ. நிராகரித்து திரு. சிவநேசனை உடுவில் வேட்பாளராக நியமித்தார். அது தான் ஜீ.ஜீ. யின் பெருமை!

ஆனால் அது குமாரின் மனதில், இறுதி வரை, நெஞ்சில் ஒரு முள்ளாகவே இருந்து வந்தது. நாடாளுமன்றம் சென்று, இலங்கைத் தமிழ் மக்களுக்குத் தான் ஆற்றக்கூடிய கடமையை ஆற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் இருந்து வந்தது.

தந்தையின் மரணத்தின் பின் குமார் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரானார். அது கட்சியின் தேர்வு -- தந்தையின் ஆசை அல்ல. காலப் போக்கில் தந்தையின் அரசியல் கொள்கைகளை மறுபரிசீலனை செய்தார். சிங்கள அரசியல் தலைவர்கள் உண்மையில் தேசியவாதிகள், இனவாதிகள் அல்ல என்ற அடிப்படையில் தனது தந்தை அவர்கள் மீது வைத்த அளவுக்கு மீறிய நம்பிக்கை தவறானது என்ற முடிவுக்கு வந்தார். தனது கொள்கைகளையும், தனது கட்சியின் கொள்கைகளையும் மாற்றிக் கொண்டார். அதைப் பகிரங்கமாகவும் ஒப்புக் கொண்டார். தான் வரித்துக் கொண்ட புதிய அரசியல் நிலைப்பாட்டிற்காக தனது உடல், பொருள், உழைப்பு, ஆவி அனைத்தையும் அந்தரங்க சுத்தியோடு, அயராத ஊக்கத்துடன் தந்தார்.

அதுதான் குமாரின் பெருமை! குமார் புகழ் பெற்ற தன் தந்தையைப் போல் தென் கிழக்கு ஆசியா எங்கணும் வழக்குரைஞராகத் தனது முத்திரையைப் பதிக்கவில்லை. குமார் ஐ.நா. சபைக்கு அரசாங்கப் பிரதிநிதியாகப் போகவில்லை -- அங்கே அமெரிக்க பிரதிநிதிகளை மலைப்பில் ஆழ்த்தவில்லை. குமார் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவே இருக்கவில்லை. குமார் ஒரு நகர சபை உறுப்பினராகவோ, பட்டின சபை உறுப்பினராகவோ, ஒரு கிராம சபை உறுப்பினராகவோ கூட இருக்கவில்லை.

நாடாளுமன்றம் செல்லவில்லையே என்று குமார் ஆதங்கப்பட்டிருக்கத் தேவையிலலை. கடந்த இரு தசாப்தங்களாக நாடாளுமன்ற நாற்காலிகளுக்குச் சூடேற்றிக் கொண்டிருந்தவர்கள், தமது தொகுதி மக்களுக்காகச் சாதித்தது எதுவுமில்லை. சில வேளைகளில் மக்கள் நலனுக்கு விரோதமாகவே செயற்பட்டனர் என்று சொல்வதில் தவறில்லை.

நாடாளுமன்றம் போகாமலேயே, தன்னந்தனி மனிதனாக வெளியிலிருந்து கொண்டு ஒரு ஆற்றல் வாய்ந்த எதிர்க்கட்சியாகத் திகழ்ந்தார் குமார். பத்திரிகை அறிக்கைகள் வாயிலாக அரசுடன் அவர் நிகழ்த்தி வந்த தர்மயுத்தம், ஒரு கமாண்டோப் பிரிவின் அதிரடித் தாக்குதல் போல சிங்களப் பேரினவாதத்தை வதைத்திருக்க வேண்டும்.

அதனால் தான் நீதியின் குரலை நிசப்தமாக்கினர் கொடியோர். நீதியின் குரலை நிசப்தமாக்கினால், நீதியை அழித்து விட முடியாது. குரலுக்குப் பதிலாக, குண்டோசை வழியாக நீதி வெளிவரும் பல. முறை அழுத்தம் திருத்தமாகச் சொல்லப்பட்ட இந்தப் பாடம் சிங்களப் பேரினவாதத்தின் மனதில் பதிவதாகத் தெரியவில்லை.

"கடவுள் யாரை அழிக்க விரும்புகிறாரோ அவர்களை முதலில் பைத்தியம் பிடித்து அலையச் செய்கிறார்." என்றார் ஷேக்ஸ்பியர். சிங்களப் பேரினவாதம் அந்தக் கட்டத்தை அடைந்து விட்டது என்பதை உணர்த்தி நிற்கிறது குமாரின் படுகொலை.

ஒரு அபிமன்யுவைக் கொன்றதால் குருஷேத்திரப் போர் நின்றுவிட்டதாக வரலாறு இல்லை.

ஒரு குமாரைக் கொன்றதால் ஈழத்துப் போர் நின்றுவிடப் போவதில்லை.

அன்று அபிமன்யுவின் மரணத்தின் பின், போரில் உக்கிரம் அதிகரித்தது. இன்று குமாரின் மரணத்தின் பின், போரின் உக்கிரம் அதிகரிக்கும்.

"நதிகள் பின்னோக்கிப் பாய்வதில்லை" என்று அன்றொரு நாள் சொன்னார், இன்றைய ஸ்ரீ லங்கா ஜனாதிபதியின் தந்தை. அது ஒரு சத்தியவாக்கு. அகிலமே அதை ஏற்றுக் கொள்ளும்.

அது போலவே -- 'அலைகளும் ஓய்வதில்லை, அவைகள் பின்னோக்கி மோதுவதும் இல்லை' என்பதும் ஒரு சத்திய வாக்கு என்பதை சிங்களப் பேரினவாதம் உணரும் நாள் தொலைவில் இல்லை. அதை மொனிக்கா லோலர்களும் ஏற்றுக் கொள்ளும் நாளும் தொலைவில் இல்லை.

டாக்டர். க. இந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதர் குமாரின் கொலையும் பின்னணிகளும்....

அந்நிய சக்திதான் காரணமா? – குமாரைப் பின்தொடர்ந்த அரவங்கள் எவை?

குமார் பொன்னம்பலத்தின் படுகொலையுடன் மீண்டும் ஒருமுறை சந்திரிகாவின் ஜனநாயகத் தேவதை 'வேசம்' போலி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது முதல்முறையல்ல! ஆனால் ஜனநாயக விழுமியங்களை மட்டுமே நேசித்த ஒருவருக்கு அதிலும் இலங்கை வாழ் தமிழ்மக்களிடம் மட்டுமல்ல, உலகெங்கிலும் பரந்துவாழும் தமிழர்களிடமும் ஆதரவுபெற்ற ஒருவருக்கே இக்கொடுமை நடந்திருக்கின்றது.

குமார் பொன்னம்பலம் சாதாரணமான ஒரு மனிதன். ஒரு சட்டத்தரணி அவ்வளவே. பாதிக்கப்பட்டவர்கள், படுகொலைக்குள்ளானவர்கள், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்று மனிதாபிமான ரீதியில் சகல உதவிகளையும் கட்சி வேறுபாடுகடந்து செய்து வந்ததவர். இதற்காக இறுதிவரை தனிமனிதனாக நின்று போராடியவர்.

இவரது மனித உரிமைப் போராட்டத்திற்கு அமெரிக்க அரசின் ஆசியும் இல்லை. ஜெனிவா நிதி உதவியுமில்லை. அவர் கற்ற 'சட்ட அறிவு' மட்டுமே அவருக்கு உதவியது. இத்துடன் அவருக்கிருந்த தன் னம் சார்பான தார்மீகக்கடப்பாடும் அக்கறையும் அவரைத் தமிழர்பால் ஈர்த்தது.

மேலும், குமார் பொன்னம்பலம் 'புலி' என்றும் 'புலி ஆதரவாளர்' என்றும் குற்றம் சாட்டப்பட்டவர். காரணம் தமிழர்கட்கும், அவர்களைக் கைது செய்தவர்கட்கும், கொலை செய்தவர்கட்கும், அத்தகைய ஈனச்செயல்கட்கு ஆதரவாக இருந்தவர்கட்கும் "சட்டரீதியாகப்" போராடியபடியால்தான்.

ஆகவே 'புலி' என்றால் பாதிக்கப்பட்டவர்கட்காகப் போராடும் ஒருவர் அல்லது 'ஒரு அமைப்பு' என்பது குமார் கொன்னம்பலம் 'ஒரு புலி' என்பதன் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, குமார் பொன்னம்பலத்தின் படுகொலையுடன் புலிகட்கு உதவுவோர், அவர்கள் சார்பில் குரல்கொடுப்போர் தண்டிக்கப்படுவார்கள் என்ற ஜனாதிபதி சந்திரிக்காவின் சத்தியப்பிரமாண உரை சந்தேகத்திற்கிடமின்றி சாதிக்கப்பட்டிருக்கின்றது.

இங்கே அறியப்படுவது யாதெனில் புலிகள் ஆயுதம் ஏந்தித்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற கட்டாயத்திற்குட்படுத்தப்பட்டதின் விளைவு மேலும் வலுப்பெறுகின்றது.

மேலும் காலம்சென்ற அமைச்சர் தொண்டமானும், குமார் பொன்னம்பலம் மாதிரியே 'புலி' என்று கொழும்புப் பத்திரிகைகளாலும், இதர பிரச்சாரங்களினாலும் அரச தொடர்பு ஊடகங்களினாலும் அடையாளப்படுத்தப்பட்டவர். ஆகவே குமார் பொன்னம்பலம், தொண்டமான் போன்ற முற்றுமுழுதான ஜனநாயகவாதிகள் ஏன் இவ்வாறு தொடர்ந்து துன்புறுத்தப்பட்டனர்? இதற்கு என்ன காரணம் என்பதைத் தொடர்ந்து வந்த இனவாத அரசுகள் கூறமுடியுமா?

முடியாது.

காரணம், 'இனவாதமே' இதன் அடிப்படை. ஏனெனில் தங்கள் மக்கள் சார்பாக இவர்கள் பேசுகிறார்கள் என்பதே. ஆகவே இச்செயல்களே இந்த ஜனநாயக அரசியல் கட்சிசார்ந்த தலைவர்களைத் தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து பிரிந்து, அடிக்கடி புலிகள் பற்றியும், அதன் தலைவர் பற்றியும் பேச வைத்தன. அப்படி இவர்கள் பேசியபோது, அரசுக்கு பயமும்பிடித்தது. அத்துடன் தாங்கள் இவர்கள் மீது கொண்டிருந்த சந்தேகமும் உண்மையானது என்று எண்ணின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டமானுக்கு அவரது அமைச்சுப்பதவி, பாராளுமன்ற சிறப்புரிமைகள், தனிப்பட்ட அரச பாதுகாப்புகள், அதையும்விட அவரது அசைக்கமுடியாத 'வாக்கு வங்கி' அவரைக் காப்பாற்றியது. ஆனால் இவை எதுவுமே இல்லாத தனிப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் உயிர் வஞ்சகத்தால் பறிக்கப்பட்டது.

ஆகவே வன்முறைக்கு வித்திட்டதே இந்த ஜனநாயக முகம் கொண்ட பஞ்சசீல பௌத்த குடியரசே என்பதில் சந்தேகமே கிடையாது.

குமார் அவர்கள் தனிமனித சுதந்திரம் என்பதன் 'பேச்சுச் சுதந்திரம்' என்பதை எவ்வித பயமுமின்றி அனுபவித்தவர். பங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகாலப் பிரகடனம் போன்றவற்றால் ஒரு இனம் மீதான வன்முறை கட்டவிழ்த்துவிடப்படும் போது மனிதாபிமானமுள்ள ஒருவர் எவ்வாறு நடந்து கொள்வாரோ, அவ்வாறே குமார் நடந்து கொண்டார். எனவே அவர் வன்முறை, பயங்கரவாதத்திற்கு எதிரானவர் என்று அல்லது 'எதிரி சுதந்திரமாக நடமாடுகிறார்' என்று கூறி அரசு படுகொலை செய்வது ஜனநாயகப் படுகொலையேயன்றி தனிமனிதப் படுகொலையல்ல.

சூரியகதிர் இராணுவ நடவடிக்கைமூலம் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து யாழ் மக்கள் விடுவிக்கப்பட்டனர் என்றே கூறப்பட்டது. ஆனால் அங்கு என்ன நடந்தது என்பது சர்வதேசத்துக்கும் செம்மணி நிகழ்வு மூலம் குமார் அம்பலப்படுத்தியிருந்தார். இங்கு தோண்டி எடுக்கப்பட்டது மனித எலும்புக்கூடுகள் மாத்திரமல்ல, சுந்திரிக்கா ஆட்சியின் அராஜகமும்தான்.

இதன்மூலம் இப்பேரினவாத அரசுக்கு முண்டுகொடுத்துக் கொண்டிருக்கும் கொள்கை வறுமைகொண்ட துரோகக் குழுக்கள் நன்கு அடையாளம்காணப்பட்டனர். இதுவும் குமார் பொன்னம்பலத்திற்கு ஆபத்தானதாகவே உணரப்பட்டது.

1994இல் நடந்த பொதுத் தேர்தலில் வடக்கில் தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது புலிகளால் அவர்களது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டதனால்தான் தமிழ்காங்கிரஸ் கொழும்பில் போட்டியிட்டது. அத்தேர்தலில் நீலன் திருச்செல்வம் சார்ந்த கூட்டணி குமார் பொன்னம்பலத்துக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு, பின்னர் ஆதரவை விலத்துவதாக நீலன் திருச்செல்வம் அறிவித்தபோது, தனது குள்ளநரித் தந்திரத்தைக் காட்டியவேளை திருமதி யோகி குமாரிடம் வாங்கிய சொல்லம்புகள் கொழும்புப் பத்திரிகைகளில் அன்றைய அரசியல் பக்கத்தை நிறைத்தன. ஆகவே நீலன் திருச்செல்வம் எப்படிப்பட்ட சந்தர்ப்பவாதி மட்டுமல்ல, ஒரு இனவிடுதலை அமைப்புக்கு எதிரான தன்னலமுள்ள சந்தர்ப்பவாதி என்பதனை முதன்முதலில் அடையாளம் கண்டு கொண்டவர் திருமதி குமார் பொன்னம்பலமே. படிப்படியாக இவரது வேஷம் திரு. குமார் பொன்னம்பலத்தால் வெளிக்கொண்டு வரப்பட்டபோது தமிழினமே அதிர்ந்தது.

பயங்கரவாதத் தடை வழக்கில் ஆஜரானவரைக் கொன்ற பயங்கரவாதி யார்?

அமெரிக்க ஆதரவு, இந்திய South Block கொள்கை வகுப்பு பார்ப்பனர்களின் ஆசிர்வாதம் (இந்து ராம் நீலனின் நண்பர் என்பதும், அவர் கொழும்பில் நீலனின் இல்லத்திலேயே தங்குவதும் குறிப்பிடத்தக்கது)என்பனவும், மனித உரிமைகளைப் பேணும் அல்லது அதற்காகப்பாடுபடும்பெருமகன் என்ற அங்கீகரிப்புடன் நீலன் திருச்செல்வத்திற்கு கிடைத்த ''தமிழர்சார்பான'' அத்தனை உதவிகளும் எவ்வளவுக்குத்தான் சார்ந்திருந்த இனவாத அரசுக்கு உதவின என்பது. அவரின் கொலைக்குப் பின் அரசால் 'அனுதாபம்' என்ற மொழிமூலம் வெளிப்படுத்தப்பட்டபோது சகல தமிழ் மக்களாலும் உணரப்பட்டது. ஆனால் அதே அனுதாபம் அமெரிக்க அரசாலோ, மனித உரிமை உலக அமைப்பினாலோ குமார் படுகொலை செய்யப்பட்டபோது வெளிவராதது 'எய்தவன் எவன்' என்பதைக் காட்டிவிட்டது.

மேலும் இந்திய மத்திய புலனாய்வுத் துறையினருடன் நீலன் திருச்செல்வம் கொண்டிருந்த 'அத்தகைய உதவிகள்' நன்றிக்கடனே. அவரின் கொலைக்குக் காரணம் எனச் சந்தேகிக்கப்பட்ட எரிக் சவுந்தரநாயகம் விலைக்கு வாங்கப்பட்ட தமிழக அதிகாரிகளால் இலங்கைக்கு நாடுகடத்திய நிகழ்வு வெளியே வந்ததும் குமார் பொன்னம்பலம் மூலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே குமார் பொன்னம்பலம் தியாகி திலீபன், தளபதி கிட்டு போன்றோரைப் பழிவாங்கிய அதே இந்திய அரசின் புலனாய்வுத் துறைக்கும் எதிரியாகக் கணிக்கப்பட்டார். எனவே குமார் இரண்டு நாடுகளின் பொது எதிரியானார். இதுவும் உற்றுநோக்கப்படவேண்டியது.

செம்மணியில் அப்பாவித் தமிழர்களின் உயிர் பறிக்கப்பட்டு புதைக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒவ்வோர் கரிய இரவும் (நன்றி ஜனாதிபதி சந்திரிகா)கொழும்பு ஐந்து நட்சத்திர விடுதிகளில் நீலன் திருச்செல்வம் என்ற மனித உரிமைவாதி, மேற்குலக நாடுகளின் இராஜதந்திரிகள், ஆயுத முகவர்களுடன் விருந்துண்டு இலங்கை அரசின் மனித உரிமைப் பேணல் பற்றி நடத்திய பிரச்சாரங்கள் அனைத்தும் கிருசாந்தியின் உடல் கொழும்பு வரும்வரையில் வெற்றிகரமாக நடந்துகொண்டிருந்தன. ஆனால் கிருஷாந்தியின் பின் இந்த முகமூடியும் கிழிக்கப்பட்டது குமார் பொன்னம்பலம் மூலமே.

ஆகவே நஷ்டமடைந்தது மேற்குலக ஆயுத வியாபாரிகளும், சர்வதேச ஸ்தாபனம் என்ற அமைப்பில் வளர்முகநாட்டைச் சுரண்டும் நாடுகளும். இதற்கும் குமார் பொன்னம்பலமே பலவழிகளில் காரணமாயிருந்தார்.

மேலும் யாழ்.மண் அந்நிய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டபோது நந்திக்கொடியை இராமநாதன் மூலம் பறக்கவிட்ட நரிமூளையின் தந்திரம் அம்பலத்துக்கு வந்ததும் உள்ளூராட்சிச் சபை, மாநகரசபை யாவும் சுமூகமாக இயங்குகின்றன என்ற மாயைத் தோற்றத்தைக் காட்டி மேற்குலக நிதியுதவியை ஆக்கிரமிப்பு, இனவொழிப்பு அரசுக்குப் பெற்றுக்கொடுக்க, அடுத்தடுத்து அப்பாவிகளை மேயராக்கி அரசுக்கு சாமரை வீசியதும் நீலன் திருச்செல்வம் என்பதனை 'சத்திராதிகள்' என்று தனது பாணியில் கூறி எச்சரித்தவர் குமார்.

இதனால் அரசும், அதாவது அடிவருடிகளும் உலக நிதிநிறுவனங்களை ஏமாற்றும் மோசடி வேலைகள் தானாகவே நிறுத்தப்பட்டன. அதனால் யாழ். புனரமைப்பு என்றுவரும் சர்வதேச நிதியுதவி தடைப்பட இனவாத அரசும் ஏவல் கூட்டத்தின் கோபமும் குமார் பக்கம் திரும்பியது.

மேலும், 1994இல் பொழும்பில் குமார் தேர்தலில் குதித்தபோது 'வெற்றி உறுதி' என்ற பரவலான அபிப்பிராயம் அப்போது சகலரிடமும் இருந்தது. கணிப்புக்களும் அப்படியே கூறின. ஆனால் இரண்டு பேரினவாதக் கட்சிகளும் பயப்பட்டதை அவையிரண்டும் எவ்வாறு திரு. குமார் அவர்கட்கு எதிராக வாக்காளரை நிறுத்தின என்பதன் மூலம் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

ஆனால், திரு. குமார் அவர்கள் கொழும்பில், ஏன், எதற்காகப் போட்டியிடுகின்றேன் என்று விளங்கப்படுத்தி தமிழ் மக்களின் ஆதரவை அணுகியபோது, அவர்கள் அளித்த 'வாக்குறுதிகளை' மறந்து சிங்களக் கட்சிகளுக்கே வாக்களித்தார்கள். வழமையாகவே போரினவாதக் கட்சிகட்கே 'வாக்களிக்கும்' கொழும்புவாழ் தமிழ் மக்களின் மனோநிலை – கொழும்பில் குமார் வெற்றிபெற்றால் தமது "கொழும்பு இருப்புகளுக்கு" ஆபத்து வந்துவிடுமோ எனப் பயந்ததின் விளைவே திரு. குமார் அவர்களின் தோல்வி எனலாம்.

இந்தத் தேர்தல் தோல்வி அவரைச் சிறிது பாதித்தபோதும், அன்று தன்னை ஏமாற்றிய அதே தனது மக்களுக்கு, அவர்கள் ஆதரித்த அதே இனவாத அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட காடைத்தனங்களால் பாதிக்கப்பட்டபோது, அத்தகைய துன்பம் யாவும் குமார் ஒருவரினாலேயே தனிமனிதனாக நின்று துடைத்தெறியப்பட்டது.

ஆகவே தமிழ் மக்கள் குமார் பொன்னம்பலத்தை ஏமாற்றியபோதும் குமார் ஒருபோதுமே தமிழ் மக்களை ஏமாற்றாத தனிப்பெரும் தலைவராக அம்மக்களிடையே இருந்து எழுச்சிபெற்றார். இதுவும் பேரினவாத அரசுகட்கும், பாராளுமன்ற பின் ஆசனங்களை நிரப்பிய கூலிக் குழுக்களுக்கும் பயத்தை ஏற்படுத்தியது. இதுவும் அவருக்கும் அவரது ஆதரவாளருக்கும் பயமாகவே இருந்தன.

ஜனநாயக வழிவந்த தமிழ்த் தலைவர்களில் தந்தை செல்வா, காவலூர் நவரத்தினம், ஏன், இவர்களைவிடத் தான் வாழ்ந்த காலப்பகுதியின் பயங்கரவாதப் பின்னணி மூலம் குமார் பொன்னம்பலத்தின் இனரீதியான தன்மான அர்ப்பணிப்பு–வாழ்வு எங்கோ ஓர் எல்லையில்லா உயரத்துக்கு உயர்த்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையாவும ஊரடங்கு உததரவையும மறறு உலகஅனைததது தமழ இதயஙகளையும குமார மறைவு தொட்டதும், அவரது இறுதி ஊர்வலமும் ஆயிரமாயிரம் மக்கள் அதில் கலந்து கொண்டமையும் சான்றாக நிற்கின்றது.

தமிழ்ப் போராட்டம் இனிமேல் ஜனநாயக வழியிலே வெல்லப்படமுடியாத ஒன்று. அப்போராட்டம் தேசியத் தலைவரின் கைகளிலேயே முற்றுமுழுதாக விடப்படவேண்டும். அப்போதுதான் ஒரு கட்சிநிலை தோன்றும் என்றும், புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கொழும்பிலிருந்தே குரல்கொடுத்த அரசியல் தூயவர் குமார் பொன்னம்பலம் ஆவார்.

தமிழ் மக்களைக் கடந்த 20 வருடங்களாகக் கூட்டணியும் 15 வருடங்களாக ஈ.பீ.ஆர்.எல்.எப்பும் ஏமாற்றிய அளவுக்கு உலகிலே எந்தவொரு அமைப்பும் தனது சொந்த இன அழிப்பிற்கு இந்தளவுக்குத் துணைபோனதாகச் சரித்திரம் இல்லை. இந்த அரசு சார்பான கூலிக்குழுக்களின் 'தலைநகர்' காட்டிக் கொடுப்புகளைத் தனக்கிருந்த தொடர்புகள் மூலம் உடனுக்குடன் அம்பலப்படுத்தியவர் குமார் பொன்னம்பலமே.

மேலும், பயங்கரவாதச் தடைச்சட்ட வழக்குகளிலே தோன்றி வாதிட்டது மட்டுமல்ல அவ்வழக்குகளினூடேயே நீதிமன்றில் தமிழ் ஈழம் பற்றியும். புலிகளின் தலைவர் பற்றியும், புலிகளின் கொள்கைப் பிடிப்புப் பற்றியும் தனக்கேயுரிய நகைச்சுவையுடன் துணிந்து பேசிவந்தவர். ஒருமுறை இக்கொடிய சட்டத்தின் கீழ் கைதாகிய தமிழ் இளைஞர் ஒருவரின் வழக்கின் விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது நீதிபதி குமார் பொன்னம்பலத்திடம் கேட்டார், 'எல்லோர்சார்பிலும் வழக்காடும்போதும் புலிகள் அல்ல, அப்பாவிகள் என்கிறீரே இது எந்தளவுக்கு உண்மை' என்று நீதிபதி கேட்டார். உடனே குமார் பொன்னம்பலம் 'ஆம் பிரபுவே, நீங்கள் கூறியது முற்றிலும் உண்மை. காரணம், புலிகளை ஒருபோதும் அரச படைகள் கைதுசெய்யமுடியாது. அத்துடன் அவர்கள் கைது செய்ததும் இல்லை. ஏனெனில், அவர்கள் அவ்வாறு கைது செய்யப்படும்போது சைனட் அருந்தித் தம்மை மாய்த்து விடுவார்கள். இது அவர்களது கட்டாய மரபு' என்றார். நீதிமன்றம் அதிர்ந்து போனது. இது போன்று ஏராளமான சம்பவங்கள், இந்த இனவாத அரசின் நீதிமன்றத் தூண்களுக்கு மட்டும் வாயிருந்தால் இன்னும் பேசும்.

கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்தின் மீது நடாத்தப்பட்ட தற்கொலைக்குண்டுத்தாக்குதல் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு சொல்லொண்ணாத் துன்பங்கட்கும், சித்திரவதைகட்கும் ஆளான ஒரு தமிழ் யுவதி மீதான வழக்கிலே அந்தத் தமிழ் மகளுக்கு நடந்த கொடுமைகளைக் கேட்ட குமார் பொன்னம்பலம் அக்கொடுமைகட்குக் காரணமான 'நிலாப்தீன்' என்ற தமிழ்பேசும் பொலிஸ் அதிகாரியை மருத்துவ அறிக்கையை ஆதாரமாகவைத்து நீதிமன்றில் கேட்ட கேள்விகளும், வாதப் பிரதிவாதமும் நூறு மதுரையை எரித்துவிடப் போதுமானவை.

'இதன்பின்னர் நிலாப்தீன் சம்பந்தப்பட்ட வழக்குகள் யாவற்றிலும் திரு. குமார் அவர்கள் தாமாக வாதிட்டு அந்த அயோக்கிய அதிகாரியை மட்டுமல்ல அவனுக்கிருந்த 'பெரிய தொடர்பு'களைப் பகைத்தது மூலமும் குமார் ஆபத்தினைத் தேடிக்கொண்டார்.

திரு. குமார் பொன்னம்பலம் யார் யாரை 'தமிழ் விரோதி' என்று குறிப்பறிந்து தாக்குகின்றாரோ, அவர்கள் பின்னர் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட, அல்லது அழிக்க எத்தனிக்கப்பட்ட சம்பவங்கள் மூலம் குமார் பொன்னம்பலம் 'புலி ஆதரவாளர்' என்ற முத்திரை மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. சிறந்த உதாரணம் முறையே நீலன் திருச்செல்வம், நிலாப்தீன்.

மேலும் குமரப்பா, புலேந்திரன் உட்பட கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டு அவர்களைக் கட்டாயமாக கொழும்பு கொண்டுசெல்ல இருந்தவேளையில் சைனட் அருந்து மரணமானவர்களிலும், ஒருவர் மட்டும் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு அவரின் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் தொடரப்பட்ட வழக்கிலே தோன்றிய குமார் பொன்னம்பலம், குற்றம் சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று வாதிட்டு வழக்கினை வெற்றிகொண்டதுடன் 'புலி' ஒருவருக்கு உயிர்கொடுத்த வரலாறு அன்றைய சட்டச் சரித்திரம். இதன்மூலம் குமார் அவர்கள் இனவாத அரசின் புலனாய்வுத் துறையின் தீவிர கண்காணிப்புக்குள்ளானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தினமுரசு' கொழும்பிலிருந்து வெளிவந்த பத்திரிகை. அதன் ஆரம்பம் அது அச்சிட்டு வெளிவந்த இடம் எவ்வாறெனினும் அப்பத்திரிகை சுயாதீனமாக புலிகளை ஆதரித்தும், கொழும்புக் குழுக்களின் குத்துவெட்டுக்களையும், கும்பிடுகளையும் வெளிக்கொண்டுவந்தது. அதன் பால் ஈர்க்கப்பட்ட வாசகர்கள் ஏராளம். இப்பத்திரிகை ஆசிரியர் கொலைசெய்யப்பட்டது தொடர்பாகக் கண்டனம் எழுப்பியது மட்டுமல்ல, படுகொலைக்கான சந்தேகத்தையும் பகிரங்கமாகக் கூறியிருந்தார். இப்பத்திரிகை ஆசிரியர் போலவே குமார் பொன்னம்பலமும் படுகொலைசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் தன்மானத் தமிழன், மறத்தமிழன் என்று தமிழர் பகுதியில் வாக்குவேட்டைக்காக நாடகம் போட்டுவிட்டு, கொழும்பில் கூனிக்குறுகிக் கும்பிடு போடும் முன்னாள் போராட்ட, இந்நாள் கூலிக்குழுக்களும், கூட்டணியும் சந்தர்ப்பவாதிகளே என்று சாட்டையடி வாங்கியது குமார் பொன்னம்பலத்திடமே.

புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனும், இல்லாவிடில் எத்தனை கறுப்புயூலை இந்நாட்டில் வந்திருக்கும், முப்படைகளும், இனவாத அரசும் பயப்படுவது சல்வதேசத்துக்கல்ல, பிரபாகரனுக்கே என்று பத்திரிகைப்பேட்டி ஒன்றிலே கூறியதுடன், முடியுமென்றால் இன்னொரு கறுப்பு யூலையை நடாத்த இந்த அரசுக்கு சக்தியிருக்கா? என்று சவால் விட்ட சரித்திர புருசர் குமார் பொன்னம்பலம்.

புலிகளின் கொள்கைப் பிடிப்பும், தேசியத்தலைவர் மீதும் அசையாத நம்பிக்கை வைத்தவர். இந்திய இராணுவம் தமிழர் பூமியை ஆக்கிரமித்தபோது வன்னிக்குள் சென்ற புலிகள் சேனையை 'நுளம்பு' தொல்லைப்படுத்தியது. அந்த இரவு "ஒவ்வொருவருக்கும் முடிந்தவரை நுளம்புகளை அடியுங்கள், நுளம்பு மீண்டும் வராது" என்று தனது போராளிகளுக்கு தலைவர் பிரபாகரன் சொன்னதாக ஒரு செய்தியை 89, 90 களின் மத்தியில் சக சட்டத்தரணி மூலம் அறிந்த குமார் பொன்னம்பலம் "என்ன தன்னம்பிக்கை", "என்ன உறுதி" இப்படி இக்கதையைத் தனது சக சிங்களச் சட்டத்தரணிகட்கும் கூறி சிலிர்த்துக் கொள்வார். இவ்வாறு அந்தத் தலைமை மீதும், அந்த மாபெரும் இயக்கம் மீதும் மட்டற்ற மரியாதை வைத்திருந்த ஒருவர். இதுவே சந்திரிகாவின் ஜனாதிபதி சத்தியப் பிரமாண உரைக்கு எழுதிய கடிதத்தின் உண்மைநிலை.

ஆகவே குமார் பொன்னம்பலத்தின் படுகொலை மூலம் ஜனநாயக வழிமூலமான அனைத்துக் கதவுகளும் இறுக்கி மூடப்பட்டுவிட்டன. அப்போ கொழும்பு வாழ் கூலிக் குழுக்கள் எதைத்தான் சாதித்திடப்போகிறார்கள்? ஒன்றுமேயில்லை. 100 சாரதாம்பாக்கள் தமிழ் பூமியெங்கம் புதைபடப்போகும் அவலத்துக்குத் துணைபோகும் துரியோதனர்களாகவே இருப்பார்கள்.

அதுசரி, பி.பி.சிக்கு ஜனாதிபதி சந்திரிக்கா அளித்த பேட்டியில் "புலிகளின் தலைவர் தனக்குத் தெரிந்த பயங்கரவாதம் என்ற ஆயுதத்தை வைத்துவிட்டு ஜனநாயகவழி மூலமான பேச்சுவார்த்தைக்கு வந்தால் தான்பேசத் தயார்" என்று கூறியிருக்கின்றார். அப்படியென்றால் மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் இரண்டு கேள்விகள்:

1. அன்று திரு. வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஆயுதபாணியாகவா பண்டாரநாயக்காவுடன் பேச்சு நடாத்தி ஒப்பந்தம் செய்தார்? அவர் பயங்கரவாதி என்பதாலா அவ்வொப்பந்தம் கிழித்தெறியப்பட்டது?

2. இன்று திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனை தலைவராக ஏற்று இருக்கும் தமிழ் மக்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு இருக்கா, அல்லது அவரை ஆதரித்தனரா? அத்துடன் ஜனநாயக வழி மூலமான ஒரு தேர்தல் மூலமாக ஜனாதிபதி பதவிக்கு வந்தவரா?

இவ்வாறு கேள்விகேட்கும் அந்த மறத்தமிழன் மாமனிதன் எம்மிடையே இல்லையே!

பி.பற்குணராஜன்,
சட்டத்தரணி, கனடா.
(குமாரின் ஜூனியராகப்
பணிபுரிந்தவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதர் குமார் பொன்னம்பலம்

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்னாது நிற்பதொன்று இல்."

உலகத்தில் என்றும் நிலைத்திருக்கக் கூடிய நற்புகழை, நாலுபேர் நலம் பெறும் வழியில் சேர்ந்து வைத்தால் அதுவே காலங்களை வென்று நிலைத்திருக்கக்கூடிய செல்வமாகும் என்பது வள்ளுவர் கருத்து.

கடந்த ஐந்து தசாப்தங்களாக அல்லலுறும் தமிழினத்திற்குத் தந்தையின் வழியில் தன்கடன் செய்து, ஒப்பரிய தியாகமாய்த் தன் உயிரையும் ஈத்து உலகெங்கணும் வாழும் தமிழர்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளார்.

பூசாவிலும், மற்றும் வதை முகாம்களிலும் பாதகர்கள் கூசாமல் செய்த பாதகங்களை உலகநாடுகள் முன்னிலையில் வெளிச்சம் போட்டுக் காட்டினார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமையம் வரை அவரது குரல் ஒங்கி ஒலித்தது. இப்படியான சேவைகளைத் தமிழ் மக்களுக்காக வெளியில் கொண்டுவரத் துணிவுடன் செயற்படக்கூடிய ஒரே ஒரு அரசியல் தலைவராக திரு. குமார் பொன்னம்பலம் அவர்களே இருந்தார் என்பதை எவரும் மறுத்து விட முடியாது. அவரது அகாலமான முடிவு, அவரது இடம் இனி வரும் காலங்களில் நிரப்பி விட முடியாதது என்பதைக் காட்டுகிறது.

இந்த வதைமுகாம்களில் சிக்குண்ட எத்தனையோ இளைஞர்களை அவர் வக்கீல் கட்டணம் அறவிடாது விடுவிக்க உதவினார். அவர்களில் பலர் கனடாவில் வாழ்கிறார்கள். அன்னார் கனடா வருகை தந்த போது பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைச் சந்தித்தார்கள். இந்த மனித உரிமை விடயங்களை தமிழ் மக்கள் என்ற அளவில் நின்று விடாது அகில இலங்கை ரீதியில் சிங்கள, முஸ்லீம் மக்களும் பயன்படும் வகையில் எல்லா மக்களுக்கும் உரிமை கோரிக் குரல் கொடுத்தார்.

அன்னாருடைய சேவையையும், பெருமைகளையும் தமிழினம் எப்படிப் பேணுகிறது என்பதை அன்னார் உயிருடன் இருந்தபோது ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்து தமிழினம் அவருக்கு காட்டிடவில்லை என்பது எனது கவலையாகும். ஆனாலும், அவர் இல்லாத நேரத்தில் அவரை மாமனிதராக எல்லோரும் போற்றும் அளவிற்கு அவரது பெருமை இருந்திருந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஒரு நிறைவு ஏற்படுகிறது!

செ.செந்தி முதல்வர். தமிழன் வழிகாட்டி
Scarborough, Ontario,
Canada,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதன்
தமிழ் ஈழக் குமார்

10–07–2000

கோரக் கொலைக்காளான தம்பி குமார் தமிழீழத்தின் முன்னிலையிலோ, தமிழ் ஈழ வரலாற்றின் முன்னிலையிலோ மட்டுமல்ல உலக உயர் நீதி மன்றத்தின் முன் நிலையிலும் நிற்கின்றார். ஈழத்தின் இதயத்தில் உறைந்தும் விட்டார்.

அவரின் மரண ஓலமும், மர்ம விவாதங்களும், சந்தடி, சலசலப்புகளும், மௌனத்தில் கலந்து கரைந்து மறைந்து போகலாம்.

இன்றைய குழப்பங்களும் குடிப்பெயர்வுகளும், கிளர்ச்சிகளும், ஓய்ந்து அடங்கி ஒடுங்கலாம். ஆயினும், வெகுகாலத்திற்குப் பின்னும் அவரின் உள்ளக்குமுறலால், தேசிய சமூக பக்தியால், தேசிய வீரராக, ஓர் ஒப்பற்ற தீர்க்க தரிசியாகப் பாராட்டப்படுவார். தமிழ் ஈழத்தையும் மக்களையும் நேசித்த மாபெரும் தலைவனாக, மாமனிதனாகவே வணங்கப்படுவார். அவர் இறந்து மறைந்து வெகு காலமாகினாலும் கூட அவருடைய வீரதீர பாரக்கிரம செயல்களும், சொற்களும் இலங்கையில் மட்டுமல்ல கடலுக்கு அப்பால் உள்ள நாடுகளிலும் எதிரொலிக்கும். பேரொலியாய் முழங்கும் பேரலையாய் வீசும்.

அவர் தந்தை G.G.பொன்னம்பலம் தரணி புகழ் சட்டமா மேதை தமிழினத்தின் தன்மானத் தலைவன். கற்பனை கடந்த அற்புத சொற்பெருக்காளன். ஐக்கிய நாடுகளின் புகழ் பெற்ற அதிசய பேருரையாளன். இலங்கை அரசின் அதிஉயர் பதவியாளர். 32 பேர்களின் ஊசலாடிய உயிரையே காப்பாற்றி வெற்றி கண்டு வீறு நடை போட்டவர். அவரால் மட்டுமல்ல, நம் ஈழத்தலைவர்கள் பலரால் கூட சாதிக்க முடியாத மாபெரும் சாதனையை உலகை வலம் வந்தே சாதித்து விட்டார். மன்னிக்காது, மறக்காது, பேசும்.

இன்று வரலாற்றுப் புகழ் பெற்ற G.G. குமார் பொன்னம்பலத்தின் கொடிய கொடூர கோரக் கொலையையிட்டு எதிர்காலமும், உலக நாடுகளும்கூட மன்னிக்காது, மறவாது பேசும். இளமையில் அரசியலில் ஈடுபடாது, அனுபவம் பெறாது, அரசியல் தந்தையின் தடையால் (படிப்பை முடித்து அரசியலில் ஈடுபடு)கூட அறிவு பெறாது தலைவரோ, வழிகாட்டியோ, துணைவரோ இல்லாது துணிவே துணை என்ற தாரக மந்திரம் என தன் தாயகத்துக்காக, சமுதாயத்துக்காக தன் தாய் மொழிக்காக தன்னையே அர்ப்பணித்து விட்டார். இதுவே "தானாடா விட்டாலும் தன் தசை ஆடும்" என்ற சரித்திரம்.

ஏராளமான சொத்துக்கு அதிபதியாகவும், தந்தை தேடிய செல்வம், செல்வாக்குடன் பல்லாயிரம் சிநேகிதர் மத்தியில் இருந்து,வாழ்ந்து, சிங்கத்தை அதன் குகைக்குள் சந்தித்தவன் போன்ற வீரத்தை தனியொருவனாய் நிலைநாட்டி ஒரு சில நாய், நரி,பேய்,கழுகு, நாசகாரிக்கும்பலுக்கு இரையாகி விட்டார்.

கொழும்பு கறுவாக் காட்டில் பிறந்து, வளர்ந்து, லண்டனில் படித்து லண்டன் கேம்பிறிச் கலாசாலையில் படித்து எம். ஏ. பாரிஸ்டர் பட்டம்பெற்றும், மேல்நாட்டு மோகமோ, பகட்டோ, பாடாடோபமோ, டாம்பீகமோ அணுவளவும் இல்லாது சாதாரண ஈழத்தமிழ் மகன் போல் தமிழ் கலாசாரத்தை வெளிக்காட்டவும், அதை நிலை நாட்டவும், சென்ற இடமெல்லாம் தேசிய உடையோடு உலாவி, தேசிய மொழியில் உரையாடி, ஆங்கிலேயரே அதிசயப்பட்டு உற்று நோக்கக் கூடிய விதத்தில் ஆங்கிலத்தில் உரையாடினார். பகிரங்க மேடைகளிலும் உரைகளும் ஆற்றினார்.

ஈழமக்களின் இணையில்லாத வாழ்வு நாதத்தையும், இன்றைய அலங்கோல அவலங்களையும் இலங்கை அரசின் அசிங்க ஞானத்தையும் தெற்றனக் காட்டித் தெரிவித்தார். உலக மக்களின் உள்ளங்களையே கொள்ளை கொண்டார்.

தம்பி குமாரின் வரலாற்றுப் புகழ்பெற்ற மரணத்தினால் உலகப் புகழ் பெற்று உலக உச்ச நீதி மன்றத்தின் முன் நிலையிலையே நிற்கின்றார். நீதி தேவதையே அரவணைக்கின்றாள். ஈழத்தமிழரின் இறுதித் தலைவன் குமாரின் கோர மரணம் அவருடைய அருமை மனைவி Dr.(யோகி)யோகலட்சுமிக்கும், பாசமிகு மகள் Dr.மிருணாளினி, மகன்பாரிஸ்டர் கஜேந்திரகுமாருக்கும் ஒரே சகோதரி விஜயலட்சுமிக்கும், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், யாவர்க்கும் கவலையானாலும் கூட அவர் கோபுர சோப தீபமாகிவிட்டார்.

உலக வரலாற்றில் ஈழத்தவர் இதுவரை மனத்தால் கூட நினைத்திருக்க முடியாத அரிய பெரிய சாதனையை அவர் மரணத்தின் மூலமாகவே நிலைநாட்டி, எமக்கும் எமது ஈழத்திற்கும் குன்றாத பெருமையையும்,. மங்காத, மறையாத புகழையும் நிலைநாட்டி இறைவனடி சேர்ந்து இழைப்பாறுகின்றார்.

நாளைய ஈழம் நன்றே மலர, அருந்தவ அன்னை அழகம்மாவின் அருமை மைந்தன் குமாரின் ஆவியே அருந்துணையாக இறைவன் கருணையை வேண்டுகின்றேன்.

ச. சதாசிவம்சேவியர், (தீவகன்)
Scarborough, Ontario, Canada,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணன் குமார்" யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு குரல் .....

ஈழத்தமிழரின் இதயமாக விளங்கிய அண்ணன், ஈடு இணையற்ற மாபெரும் தலைவன், இளைய தலைமுறையின் தளபதி, எதற்கும் அஞ்சா மறத்தமிழன். நாம் தான் என்று உலகிற்கு எடுத்தியம்பிய இணையற்ற மாமனிதன் மனிதமிருகங்களினால் வேட்டையாடப்பட்டு விட்டான். நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட செய்கையை நினைக்கையிலே.....?

என்ன செய்வோம், உன் இலட்சியப் பாதையில் உன் வழி நாங்களும் எங்கள் பயணத்தை ஆரம்பித்து விட்டோம். நீ கண்ட கனவுகள் நனவாகும் உன் இளையவர் உன் பணியில், உன்வழிகாட்டலில், உன் ஆணையில் தடம் பதித்து செல்கின்றார்கள், வெற்றி நிச்சயம்.

ஈழத்தில் மட்டுமன்றி அயல்நாடுகளிலும் தன்மானத் தமிழரின் உரிமைக்காக அஞ்சா நெஞ்சத்துடன் குரல்கொடுத்து வந்த எங்கள் அண்ணன் குமார் அவர்களின் இழப்பு தமிழ் பேசும் உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அகதிகளாக, அநாதைகளாக, முகவரிகளை தொலைத்து தவிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு சிறந்ததொரு தலைமையை தரக்கூடிய மாபெரும் தலைவன், வழிகாட்டும் மாவீரன் இன்று எங்கள் மத்தியில் இல்லாமல் போனது எமக்கெல்லாம் வேதனை தருகின்றது.

செம்மணியில் புதையுண்டு காணாமல் போனவர்களின் கண்ணீர்கதைகளுக்கு முடிவு சொல்ல, தீர்ப்பளிக்க காணாமற்போனவர்கள் பாதுகாவலர் சங்கத்தின் பக்க பலமாக நின்று பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டுமென கூறியோரை சட்டமன்றுக்கு அழைத்த தீரன் அண்ணன் குமார் அவர்கள்.

தனக்கு நியாயம் என்று தெரிந்ததை யாருக்கும் அஞ்சாமல் வெளிப்படையாக எடுத்துக் கூறுவதற்கு தயங்காத, கம்பீரமான துணிச்சல் மிக்க எங்கள் தலைவனை நாங்கள் இழந்துவிட்டோம்.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்றார் இவரது தந்தை ஜீ.ஜீ.பொன்னம்பலம். ஆனால் அதற்கும் மேலாக இலங்கைத்தீவில் தமிழன் எவருக்கும் அடிமைப்பட்டவன் இல்லை. சமவுரிமையுடன் வாழ வேண்டியவன் என்பதை மிகவும் ஆணித்தரமாக துணிந்து உரத்துக் கூறியவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் என்றால் அது மிகையாகாது.

சர்வதேசமெங்கும் தமிழ் உரிமைக்காக குரல் கொடுத்தவர். உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் மனதில் நீங்காத இடம் பெற்றவர். தமிழ் மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றில் குமார் பொன்னம்பலம் வகித்த பாத்திரம் மகத்தானது. பங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தமிழ் பேசும் இளைஞர்கள், முதியவர்கள் உட்பட பல வழக்குகளில் பல ஆண்டுகளாக அவர்கள் சார்பில் வாதிட்டு அப்பாவி இளைஞர்களை விடுதலை செய்தார்.

அதுமட்டுமல்ல, பயங்கரவாத தடைச் சட்ட வழக்குகளை வெல்லக்கூடியதாக சட்ட அறிவு மட்டுமல்ல, சிங்களத்தில் சாட்சி அளிக்கும் சிங்களக்கட்சிகளை சிங்களத்திலேயே குறுக்கு விசாரணை செய்யும் ஆற்றல் அவரிடம் நிரம்பி வழிந்தது.

இன்று தமிழினம் ஓர் அடங்காத் தமிழனை இழந்து நிற்கிறது. அடக்கு முறைக்குட்பட்ட தமிழர்களுக்கு குரல் கொடுத்த எழுச்சி மிகு தமிழனை இழந்து தவிக்கின்றது. மரணத்திற்காய் மானத்தை விற்காத மறத் தமிழனாக பொங்கு தமிழுக்கு இன்னல் நேர்ந்தது கண்டு பொங்கி எழுந்து சம்காரம் புரிந்த சாதனையாளனாக வாழ்ந்த அண்ணன் குமார் பொன்னம்பலத்தின் மறைவு தமிழர் வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவடைந்து விட்டதன் அறிகுறி. அவரை மாய்த்து விழுத்துவதன் மூலமாக இனிமேல் ஒருபோதும் ஜனநாயகத் தளத்தில் தமிழர் அரசியல் கையாள அனுமதிக்கப்படமாட்டாது என்ற பெரும் எச்சரிக்கை தமிழினத்துக்கு விடுக்கப்பட்டுள்ளது. இப் படுகொலை மூலம் தமிழர் சரித்திரத்தை தன்மானச் சுதந்திரத்தை பறித்துவிடவோ அழித்து விடவோ முடியாது. வெட்டவெட்ட தளைக்கும் வீர பரமபரை நாங்கள் எனவே என் அண்ணனின் பிரிவு தாங்காது அவரோடு நெருங்கிப்பழகிய காலங்களில் அவரால் அரவணைக்கப்பட்ட தன்மைகள் அவரின் தன்னலமில்லா கொள்கைகள் என்பவற்றால் வசீகரிக்கப்பட்டவன் என்ற ரீதியில் இவ் ஆத்ம சமர்ப்பண குரலை அவர்களின் குடும்பத்தாருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் வெளிப்படுத்துகின்றேன்.

"வாழ்க அவரது திருநாமம்
வளர்க அவரது தமிழ்ப் பணிகள்"

என்றும் குமாரின் நினைவில் வாழும் அன்பன்
திரு.ச.ஆ.சோமசுந்தரம்,
பாலாவோடை, களபூமி, காரைநகர், யாழ்ப்பாணம்.
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி மூச்சுவரை தமிழர் உரிமைக்கு குரல் கொடுத்த மாமனிதர் குமார்

நேற்று அவரது 31 ஆவது நினைவு நாள்.

உலகம் போற்றும் சட்ட மேதை, தமிழர்தம் தனிப்பெரும் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இறந்ததும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின்நிலை என்ன என்று பலரும் எண்ணிக் கொண்டிருந்த வேளையில் தன் தந்தையின் பணியை தொடர்ந்து செய்வதற்காக அண்ணார் குமார் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைப் பொறுப்பேற்று அரசியலில் ஈடுபட்டார். அச்சந்தர்ப்பத்தில் கட்சி ரீதியாக தேர்தலில் நிற்பதற்கு சில இடையூறுகள் ஏற்பட்ட பொழுதும், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டார்.

கடந்த 23 வருட காலத்தில் அண்ணார் குமார் எவற்றைச் சாதித்தார் என்பதை சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக "மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்ற வள்ளுவரின் குறளுக்கு அமைய, தனது தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட முதுபெரும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியை இல்லா தொழிக்க முயன்ற பொழுது நீதிமன்றத்தில் (யாழ் மாவட்ட நீதிமன்றத்தில்)வாதாடி அக்கட்சியை அரசியல் கட்சியாக தொடர்ந்தும் செயல்படச் செய்தார்.

1977ஆம் ஆண்டிற்குப்பின் இனவாத அரசாங்கங்களால் தமிழ் பேசும் இனம் ஒதுக்கப்பட்டு நசுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் – 1982ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வியடைவேன் என்று தெரிந்து கொண்டும் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் வெளிப்படையாக இனவாத அரசியலுக்கு எதிராகப் பிரசாரம் செய்தார்.

1983ஆம் ஆண்டு இனக் கலவரம் நடைபெற்றபின் தமிழ்பேசும் இனத்தின் உரிமைக்காக ஏறக்குறைய 4 வருடங்களாக எல்லா தமிழ், சிங்களக் கட்சிகளுடனும் சமரசம்பேசி சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரி கட்சிகள், தமிழ்க்கட்சிகள், அமைப்புக்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்து – 1989ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட ஆர். பிரேமதாஸவை எதிர்த்து இலங்கை முழுவதும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசாரம் செய்தார்.

1989ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும், சிங்களக் கட்சிகள் குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவற்றைக் கைவிட்டது. அதன் பின் ஆர், பிரேமதாஸ ஜனாதிபதியான பின்பு பல மாதக் கணக்காக பிரேமதாஸாவுடனும் மற்றைய அனைத்துக் கட்சிகளின் சமூகத்தில் இனப்பிரச்சியைத் தீர்ப்பதற்கு எழுத்து மூலம் தனது திட்டத்தை சமர்ப்பித்தார். ஆனால் இம்முயற்சிகள் ஆக்கபூர்வமான பலனைத் தராததால் குமார் தனது அரசியல் வழியை மாற்ற வேண்டி ஏற்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செயயப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தமிழ் பேசும் இளைஞர்கள், முதியவர்கள் உட்படபலரின்வழக்குகளில் கடந்தபத்து வருடங்களுக்க மேலாக இலவசமாக ஆஜாராகி பல அப்பாவி இளைஞர்களை விடுதலை செய்வித்தார். பல பயங்கரவாதத்தடைச் சட்ட வழக்குகளை வெல்லக்கூடியதாக சட்ட அறிவு மட்டுமல்ல, சிங்களத்தில் சாட்சி அளிக்கும் சிங்களச் சாட்சிகளை சிங்களத்திலேயே குறுக்கு விசாரணை செய்யும் ஆற்றலும் அவருக்கு இருந்தது.

இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு எதிரான வழக்கில் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் ஆஜாரான பொழுது அண்ணார் குமாரும் கூடச் சென்று உதவி செய்தவர். அண்ணார் குமார் இந்தியாவிலும் சட்டத்தரணியாக ஆஜாராவதற்குரிய அனுமதியைப் பெற்றுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இந்திய அமைதிப்படை இருந்தபோது –அப்பாவி மக்கள்தடுத்து வைக்கப்பட்டபொழுது – இந்திய அமைதிப் படைக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தவர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தால் கட்டளை அனுப்பப்பட்டு நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜராகத் தவறியபொழுது நீதிமன்றத்தில் வாதாடி அமைதி காக்கும் படைப் பொறுப்பதிகாரிக்கு எதிராக நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கச் செய்தவர் குமார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்பின்புதான் அண்ணார் குமார் அனுரா பண்டாரநாயக்காவை தன்னுடன் அழைத்துக்கொண்டு இந்தியப்பாதுகாப்பு படை சூழ்ந்து கொண்டிருந்த வன்னிக் காட்டுக்குள் சென்று தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணர் குமார் தனது உயிரை துச்சமென மதித்து கடந்த 23 வருடங்களாக துப்பாக்கிகளுக்கு எதிராக – கடவுளால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அளப்பரிய துணிவை தனது ஆயுதமாக பாவித்து – தனக்கு அப்பாற்பட்ட சக்தியின் துணையுடன் – ஜனநாயக ரீதியில் – தமிழ்பேசும் இனத்திற்காக அரசியலை நடத்தியவர். அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் கூறிய கூற்றுக்கமைய "தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்ற முறையில் யாருக்கும் அடிபணியாது தமிழன் என்று தலை நிமிர்ந்து, சிங்கத்தின் குகைக்குள்நின்று வாழ்ந்து வந்தார் குமார் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அண்ணர் குமார் தமிழ் இனத்தின் நிலை என்ன என்பதை சிங்கள மக்களும் அறிய ரி.என்.எல்.ஒளிபரப்புச் சேவையில் சிங்களத்தில் பேட்டி கொடுத்தார், அது மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் தமிழரின் பிரச்சினையை மூடிமறைத்து அரசாங்கங்கள் செய்த பிரசாரங்களுக்கு எதிராக எதிர்ப்பைத் தெரிவித்து தமிழரின் நிலையைவெளிநாடுகளுக்கு ஓரளவுக்கு எடுத்துக் காட்டியவர். இதனால்தான் இன்று அண்ணர் குமாரின் மறைவை ஒட்டி கனடா, பிரான்ஸ், இலண்டன் மற்றும் சில வெளிநாடுகளில் சோகமயம் வானொலி மூலமும் மற்றும் சில வழிகளிலும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

அண்ணர் குமார் கடந்த 25 வருட காலமாக அரசியலில் முழு ஈடுபாடுடையவராக இருந்து வந்தார், ஆனால் அவரது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பொது மக்கள் எவரிடமிருந்தும் நிதி பெறாமலேயே செயற்பட்டு வருகின்றது.

காலஞ்சென்ற டாக்டர் வேலாயுதபிள்ளை அண்ணர் குமாருடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்த சமயம் அவர் கூறியதையும் இங்கு ஞாபகப்படுத்துவது பொருத்தம். "குமார் பொன்னம்பலம் தனது மனதில் எதுசரி என்று படுகின்றதோ அதை எதற்கும் அஞ்சாமல் வெளிப்படையாகக் கூறுபவர். அது மட்டுமல்ல உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் கபடம் அவரிடம் அடியோடு இல்லை" – என்றார். இந்த அரிய குணத்தை இன்று அவருக்கு எதிராக உள்ள அரசியல் வாதிகளோ அல்லது எதிர்க்கட்சியினரோ கூட ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

அண்ணர் குமார் தமிழ் பேசும் இனம் ஐக்கியப்பட்டு ஒரே குரலில் ஒலிக்க வேண்டும் என்பதற்காக பல வழிகளிலும் முயற்சிகளைச் செய்து வந்தார். இந்த வழிகளில் அவருடைய முக்கியமான பெரிய குணம் என்னவெனில் மாற்றுக் கட்சிகளின் அலுவலகங்களுக்கோ அல்லது தலைவர்களின் இல்லங்களுக்கோ பின்னடிக்காமல் தானாகச் சென்று ஒற்றுமை ஏற்படுத்த பல சந்தர்ப்பங்களில் முயற்சித்ததாகும்.

இதற்கு உதாரணமாக 1982ஆம் ஆண்டு மாவட்டசபைத் தேர்தல் நடைபெற்ற காலத்தில் யாழ்ப்பாணம் நூலகம், யாழ். எம்.பி.யோகேஸ்வரனின் இல்லம் மற்றும்பல இடங்கள் எரிக்கப்பட்ட சமயம், தானாக திரு. யோகேஸ்வரன் இருந்த இடத்திற்குச் சென்று அதன் பின் தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்திற்குத் தனியாக முதல் சென்று திரு. சிவசிதம்பரம் அவர்களுடன் பேசியதைக் கூறலாம். பின் உடனடியாக தனது தமிழ்க் காங்கிரஸ் கட்சியின்நிர்வாகக் குழுவைக் கூட்டி, முடிவு எடுத்து, தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்திற்குச் சென்று மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாகப்பேசி ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்தார். அதுமட்டுமல்ல, 1994ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் எல்லோரையும் சேர்த்து ஒற்றுமையாகப் போட்டியிட முயற்சித்தபோது முழுவதாகக் கைகூடாவிட்டாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மற்றும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட முக்கிய பிரமுகர்களைச் சேர்த்து சுயேச்சைக் குழுவைக் களத்தில் இறக்கினார்.

இறுதியாக இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன், தனதுஇல்லத்தில், இனவாத அரசாங்கங்களை எதிர்க்கும் மலைநாட்டு அரசியல் பிரமுகர்களைச் சேர்த்து, தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்த முயற்சி செய்தார்.

அண்ணர் குமார் ஆற்றல் மிகுந்த நியாயவாதி; நீதி, நேர்மை, துணிவு, தியாகம் ஆகியவை கொண்ட ஓர் அரசியல்வாதி. ஈழத்தமிழரின் உரிமைகளுக்காகக் கடைசி மூச்சுவரை குரல் எழுப்பிய அஞ்சாத அண்ணர் குமார் பொன்னம்பலத்தின் இழப்பினால் தமிழ்ப்பேசும் இனம் – அவருடைய இடத்தை நிரப்பக் கூடியவர் ஒருவரும் இல்லையே என்று எண்ணி – ஏங்கித் துயரம் அடைந்து கொண்டிருக்கின்றது.

இவரின் இழப்பு தமிழர்களை பொறுத்தவரையில் எதிர்பாராத நேரத்தில் வந்த பேரிடி. அதன் தாக்கம் தமிழரின் விடுதலைக்கான பாதையை மேலும் கரடுமுரடாக்கியுள்ளது.

கடந்த 23 வருடகாலமாக கட்சி ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் அவருடன் நெருங்கி நம்பிக்கையுடனும் அன்புடனும் என்றும் பழகியவன் என்ற ரீதியில் என் உள்ளத்திலிருந்து என்றும் நீங்காத அண்ணர் குமாரின் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசியத்தின் வீரமகன்!

நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கட்டும், குமார் ஒரு இந்துவாக இருக்கட்டும்; ஆனால் ஆண்டவரே நீரே வாழ்வின் தனித்துவமான மூலத்தோற்றுவாயாகவும், உச்சநிலையாகவும் இருக்கின்றீர். உண்மையும் நீதியுமாய் இருக்கின்றீர். நாம் இருவருமே உம்மை வணங்கினோம், இன்றும் வணங்குகிறோம், நாளையும் வணங்குவோம். மேலும் நாம் எல்லோருமே நித்தியமாக உம்மில் இளைப்பாற வருவோம்!

குமாருக்கு வாழ்வதற்கென நீர் வழங்கிய அறுபது ஆண்டுகளுக்காகவும் நான் உமக்கு நன்றி செலுத்துகின்றேன். நீளத்தில் அது ஆக அறுபது ஆண்டுகளாக இருக்கின்ற போதிலும் குமாரது வாழ்வு உலகளாவ அகன்று அமைய நீர் அவரை ஆசீர்வதித்திருக்கிறீர். அவர் தனது அன்பை அனைத்துத் தமிழர்களாகிய எமக்காகவும் இடையறாது பரவச் செய்தார், உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஈழத்தில் வாழ்வோர், வெளியே வாழ்வோர் இன்று ஈழத்தில் வாழ்வோர், இனிமேல் வாழப் போவோர் என எல்லோருக்குமே குமார் தனது அன்பைப் பிரவாகித்து ஓடச் செய்தார். ஆண்டவரே, குமாரின் வாழ்வு துணிகரமான ஓர் சேவையாகும். அது ஏழைகளின் மீதும் துன்பப்படுவோர் மீதும் நீர் கொண்ட அன்புக்கு ஒரு சான்றாக அமைந்தது. அது உமது உண்மை, நீதி என்பவற்றைக் காப்பாற்றுவதாக அமைந்தது. கொலை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை என்பவற்றுக்குப் பலியாகும் ஆயிரக்கணக்கானோரைப் பாதுகாப்பதற்கான வாழ்வாக அது அமைந்தது.

ஆண்டவரே ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில், குமார் எதனை நம்பினாரோ அதாவது "மக்கள் சேவையே மகேசன்சேவை" என்பதை – அதையே நானும் நம்புகின்றேன். ஆனாலும் ஆண்டவரே உண்மைக்கும் நீதிக்குமாகப் போராடும் துணிவு தமிழர்களாகிய எம்மத்தியில் மிகவும் அரிதான ஒரு அம்சமாகவே உள்ளது. வேறெதற்காகவுமன்றி, நீதிக்கும் சமாதானத்துக்குமான தாகத்துடன் ஏங்கிக் கொண்டிருக்கும் உமது மக்களுக்குச் சேவை செய்வதற்காக துணிவுமிக்க அர்ப்பணிப்பு உணர்வை எனக்கும் என் சக தமிழ் மக்களுக்கும் தந்தருளும்!

குமாரின் வாழ்வின் நீளமும், அகலமும் ஆண்டவரே உம்முள் அவரது வாழ்வின் ஆழத்தைப் பிரதிபலிப்பன அல்லவோ! உண்மைக்கும் நீதிக்குமாகச் சேவையாற்ற எத்துணை ஆழமான பற்றுறுதியை அவர் கொண்டிருந்தார்! அநீதிக்குப் பலியாகுபவர்களின் பாதுகாப்புக்காக குமார் தனது கல்விச் செல்வத்தையும் ஆளுமையையும், துணிவாகவும் புத்திசாதுரியமாகவும் பயன்படுத்தியதை வைத்து நான் நிச்சயமாகச் சொல்கிறேன், ஆண்டவரே நீர் குமாருடன் இருந்திருக்கின்றீர்! குமார் உம்முடன் இருந்திருக்கின்றார்! குமாரின் பற்றுறுதி, அவரது வாழ்வின் உறுதிக்கான ஒவ்வொரு நார்களிலும் ஊடறுத்து வியாபித்து நின்றது. அவரது சொற்கள், உண்மைக்கும் நீதிக்குமான இமாலய உணர்ச்சிகளுக்குப் பிறப்புக் கொடுத்தன. ஆண்டவரே, நீர் அளித்த அந்தப் பற்றுறுதியுடனும், உணர்ச்சியுடனும்தான் குமார் தனது எதிரிகளுக்கு முகங்கொடுத்தார்! அதிகார பலத்துடனும், வல்லமையுடனும் இருந்தவர்களுக்குச் சவால் விடுத்தார்! தமிழர்களாகிய எமக்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்ற குமாரின் வேணவாவும் உணர்ச்சியுமன்றோ உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுடைய இதயங்களைத் தொட்டுச் சென்றது! ஆண்டவரே! அந்த உணர்ச்சியையும், பற்றுறுதியையும், துணிவையும் நாம் எதனைச் சரியென்று நம்புகின்றோமோ அதற்காக எழுந்து நின்று குரல் கொடுப்பதன் பொருட்டு எமக்கும் அருள்வீராக!

ஆண்டவரே, குமார் ஒரு நம்பிக்கையுள்ள மனிதர்! அவர் எப்போதும் உம்மீது தான் தங்கியிருப்பதை வெளிப்படுத்துவார்! ஒவ்வொரு காலைப் பொழுதுகளிலும், கறுவாத்தோட்டத்து உயர் குழாத்தினரும், பெருந்தகைகளும், உயர் தொழில் வல்லுநர்களும் தமது உயர்வான அலுவலகங்களை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும்போது, குமார் உமக்கு முன்னால் தலை தாழ்த்தி வளைந்து உமக்கு வணக்கஞ் செலுத்திக் கொண்டிருப்பார்!

அது தவிர ஒரு நாளின்வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் குமார் முன்னோக்கியோ, பின்னோக்கியோ வளைந்ததே கிடையாது ஆண்டவரே! இங்கேதான் தனது உணர்வுகளுக்காக முதுகெலும்புடன் வாழ்ந்த ஒரு தமிழனை நாம் காண்கின்றோம்! இவ்வாறான முதுகெலும்புள்ள ஒரு நம்பிக்கையாளனை அளித்ததற்காக நான் உமக்கு நன்றி கூறுகின்றேன் ஆண்டவரே! உம்மில் தங்கியுள்ள எமக்கு பொய்மையுடனும் அநீதியுடனும் சமரசம்செய்யவோ விட்டுக்கொடுப்புகளைச் செய்யவே வேண்டாம் என்று அவர் என்றும் ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பார்!

இயேசுபிரான் யூதாசினால் துரோகத்திற்காளானார். நன்றியற்ற அந்தச் சீடன் முப்பது வெள்ளித் துண்டுகளினால் கவரப்பட்டு விட்டான். ஹிற்லர் தனக்கெனத் தூக்கிலிடுபவர்களையும், ஏன் தமது மௌனத்தால் மறைமுகமாக அவனுக்கு ஆதரவளித்த சமயத் தலைவர்களையும் கூடத் துணையாக வைத்திருந்தான். ஆனால் ஆண்டவரே! ஒரு போதும் துரோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழைக்காதிருக்கவும் அநீதியுடன் சமரசம் செய்யாதிருக்கவும் வேண்டிய துணிவை எமக்கு அளித்து, எமது உள்ளங்களை ஒளிர்வூட்டுவீராக! நாம் தெரிந்தோ தெரியாமலோ எமது மௌனத்தினால் உண்மையினதும், நீதியினதும், சமாதானத்தினதும் பாதைக்குத் துரோகம் இழைக்கக்கூடும். எனவே ஆண்டவரே, நாம் எழுந்து நிற்கவும் இடித்துரைக்கவும் கூடியதாக எமது உதடுகளிலிருந்து பேச்சை வரவழையும்! எமது முதுகெலும்புகளுக்குச் சக்தியைக் கொடும்!

விமர்சகர்களுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என்ற பயத்தினால், நீதியான ஒரு கிளர்ச்சியுடன் இணைந்து கொண்டு விடுவோம் என்பதனால், சாதாரணமானவர்களுடனும் இளையவர்களுடனும் சேர்த்து அவர்களில் ஒருவராக நாமும் கணக்கிடப்பட்டு விடுவோம் என்ற பயத்தினால் எம்மில் பலர் இன்னும் மௌனச் சுவரின் பின்னால் மறைந்து கொண்டிருக்கிறார்கள். ஆண்டவரே! எம்மைத் தட்டி எழுப்பும்! எழுந்து நிற்பதற்கும் பேசுவதற்கும் வேண்டிய துணிவை எமக்குத் தந்தருளும்!

குமார் சென்று விட்டார்! ஆண்டவரே, நான் உம்மிடம் இதனைக் கேட்கத் தூண்டப்படுகிறேன்! "நீதிக்கும் உண்மைக்கும் விரும்பித் துரோகம் செய்யும் பல கோழைகளைத் தமிழினம் கொண்டிருப்பதற்குக் காரணம் உம்முடைய சாபமா ஆண்டவரே!"

இல்லையென்றுதான் நான் நம்புகிறேன். ஏனெனில், நீரே எமக்கு ஒரு குமாரைத் தந்தீர்! நீரே எமக்கு ஒரு அச்சமற்ற தலைவரைத் தந்தீர்! தனது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் துணிந்து நின்ற உண்மையின் புதல்வனை நீரே எமக்குத் தந்தீர்! நிச்சயமாக, நீர் எம்மை நட்டாற்றில் அநாதைகளாக விடப்போவதில்லை! ஆண்டவரே! குமாரை நிரந்தரமாக மௌனத்திற்குள் தள்ளிய எதிரிகளையும், கோழைகளையும் நீர் மன்னித்தருளும்! நாம் வழக்கமாக, இந்த எதிரிகளும், கோழைகளும் ஏதோ ஒரு கோட்டுக்கு அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் என்றுதான் நினைக்கத் தூண்டப்படுகின்றோம். ஆண்டவரே! குமார் பலியாகக் காரணமாய் இருந்த இவர்களது கோழைத்தனத்தை அகற்ற நீர் எமக்கு உதவுவீராக! ஒருவருடன் ஒருவர் நெருக்கமாகி, நிமிர்ந்து நின்று, எழுந்து நின்று உண்மை, நீதி சமாதானத்துக்கான தாகத்துடன் தவிக்கும் உமது மக்களுக்குச் சேவையாற்ற எமக்கு உதவுவீராக!

உயர்ந்து எழுகின்ற ஒரு தீச்சுவாலை குமாரது உடலத்தை ஆட்கொள்கின்றது! ஆண்டவரே, அச்சுவாலையின் தகிப்பும் ஒளியும் முழுத் தமிழ் தேசத்தின்மேலாகவும் பரவட்டும். ஆண்டவரே, எமது மக்களையும், எமது தாயகத்தையும் நேசிப்பதற்காக ஒரு இதயத்தை எமக்குத் தாரும்! கல்வியினாலும், செல்வத்தினாலும் வரும் பட்டங்களுக்கு மேலாக, தமிழர்களுடைய குறிக்கோள்களைத் தழுவிப் பின்பற்றக்கூடிய தெளிந்த மெய்யறிவினை வழங்கும் ஒளியைக் காண்பிப்பீராக! உண்மைக்கும், நீதிக்குமாக குரல் கொடுக்கவும் நாம் நம்புகின்ற ஏதுக்களுக்காக எழுந்து நிற்கவும் கூடியவகையில் அதனால் ஏற்படக்கூடிய செலவுகளையும், இழப்புக்களையும் கருத்தில் எடுக்காத வகையில் நாம் செயற்படுவதற்காக ஆண்டவரே, குமாருக்கு நீர் வழங்கிய அந்த உன்னதமான துணிச்சலில் ஒரு துளியையாவது எமக்குத் தந்தருளும்!

பொதுவாக எல்லோரும் சொல்வார்கள், மரணச் சடங்கு என்பது வாழ்பவர்களுக்காகவே அன்றி, இறந்தவருக்காக அல்ல என்று! (Funerals are not for the dead, but for the living)ஆம் ஆண்டவரே, குமார் தனது கடமையைச் செய்துள்ளார். ஒருவேளை, தனது கடமைக்கும் மேலாகக் கூடச் செய்துள்ளார் எனலாம். உம்முடனான அவரது மோட்ச வாழ்வின் போதும் ஆண்டவரே, குமார் எம்மிலும் வாழ்ந்து கொண்டிருக்கட்டும்.

எமது நினைவுகளில் மட்டுமன்றி, எமது வரலாற்றில் மட்டுமன்றி, ஈழத்தின் ஆத்மாவிலும் ஒவ்வொரு தமிழனது இதயத்திலும், எண்ணத்திலும் குமார் வாழ்ந்து கொண்டு இருப்பாராக!

அருட் தந்தை கலாநிதி,
எஸ்.ஜே.இம்மானுவேல்.
(தமிழில் – சுவர்ணராஜா)

தமிழினத்தின் உணர்வுக் குரலாகக் கொழும்பிலிருந்து செயலாற்றிய அமரர் குமார் பொன்னம்பலம்அவர்களின் மறைவைக் குறித்து அவருடன்நெருங்கிப் பழகியவரும் தற்போது ஜோர்மனியில் வசித்து வருபவருமான அருட்தந்தை கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல்அவர்கள் எழுதிய அஞ்சலிக் குறிப்பைத் 'தினக்குரலுக்காக' மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்திருந்தார். குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவின் முதலாவது மாதத் திதி நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதை உள்ளவாறு கூறுவது

குமாரிடமுள்ள உறுதியான சிறப்பம்சம்

"குமார்" கொழும்பு றோயல் கல்லூரியில் எனது சமகாலத்தில் படித்தவர். அக்கல்லூரிகளையும் முதலாய் நாம் இருவரும் பலதடவை பல இடங்களில் சந்தித்திருக்கின்றோம். ஆனால் குமார் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் என் முன்நிலையிலான வழக்குகளில் ஆஜாராகி வழக்குரைத்தபோதுதான், நான் அவரை நெருக்கமாகக் கவனித்து உன்னிப்பாக மதிப்பீடு செய்ய முடிந்தது.

குமாரிடமிருந்த உறுதியான சிறப்பம்சம் உள்ளதை உள்ளவாறே வெளிப்படையாகக் கூறும் தன்மையாகும். (His forte was calling a spade a spade)அவர் இதனை எதுவித பயமோ தயக்கமோ இன்றி சரியெனத் தான் உணர்ந்ததை வெளிப்படுத்தும் இயல்பு கொண்டவர்.

குமார் ஒரு பொழுதும் சுயநலனுக்காகத் தனது சிந்தனையின் வெளிப்பாட்டினை வார்த்தை ஜாலங்களால் மூடி மறைத்தவர் அல்ல.

அவர் தனது வழக்கின் பலம் என்ன என்பதை மட்டுமல்ல பலவீனத்தையும் எடுத்து விளக்கி நிற்பார். அது மட்டுமல்ல சிங்களவரோ, முஸ்லிமோ, தமிழரோ அல்லது எந்த சமூகத்தவர் என்றில்லாமல் தனது கட்சிக்காரருக்காக ஒவ்வொரு அங்குலமும் விட்டுக்கொடாது வாதிடும் வல்லமை பொருந்தியவர் குமார்.

பலர் மனித உரிமை பற்றி பேச்சோடு மட்டும் காலம் போக்குகையில் பாதிக்கப்பட்டவர்களின் பாதிப்பை, இழப்பை, துயரத்தை தன் செயலால் எடுத்துக்காட்டி அவர்களுக்கான நிவாரணத்தின் தேவையை வலியுறுத்தி நிற்பது இவருடைய தனிப்பண்பு.

சுற்றிவளைத்துப் பேசாத உண்மையான மனிதாபிமானம் படைத்த ஒருவரை, அவரது குரலை நிரந்தரமாய் நிஸப்தமாக்கும் நோக்கத்துடன் பட்டப்பகலில் சுட்டுக் கொன்றமை மிக மிக துரதிஷ்ட வசமானதே.

உண்மையான மனத்தாங்கலை, உரிமை நாடிய துயரத்தை கொலைகளாலும் சித்திரவதைகளாலும் அடக்க, நசுக்க முயலுதல் ஒரு பொழுதும், பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினையையோ அல்லது மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் பிரச்சினையையோ தீர்க்கமாட்டாது. ஒரு ரப்பர் பந்தினை நீர்வாளியில் அடிவரை அமுக்கினால் அது அங்கே நிற்காது மேற்தளத்திற்கு உந்திக்கொண்டுவரும்.

குமாரைத் தனிப்பட்ட ரீதியில் அறிந்த அனைவரும் அவரது அநாவசியமான அகால மறைவினால் உள்ளத்தால் துயருறுவர் என்பதில் ஏதும் சந்தேகமிருக்கமுடியாது.

அமரர் குமார் பொன்னம்பலத்தின்மூன்றாவது மாத நினைவு தினம்இன்றாகும். இதையொட்டி மேல் நீதிமன்ற நீதிபரசர் சி.வி.விக்னேஸ்வரன் எழுதிய ஆக்கம் பிரசுரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை செயல் வீரர் எங்கள் குமார் மாமா

உலகில் தோன்றி மறைபவர் எண்ணிறந்தோராவார். அவர்களுள் மக்களால் நீண்ட காலம் எண்ணத்தக்கவராயுள்ளோர் சிலரேயாவர். அத்தகு புகழ் எய்திய பெரியார் மாமனிதர் குமார் பொன்னம்பலம். இவர் சொல்வீரர் அல்லார், உண்மை செயல் வீரர் ஆவார். இவர் "குமார் மாமா" என எங்கள் குடும்பத்தினரால் அன்பாக அழைக்கப்படுபவர். எனது தந்தை முன்னை நாள் சட்டவரைஞர் திரு. கா.ஆ.தவத்துரை அவர்களுக்கும் குமார் மாமாவின் தந்தை திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பு மிகவும் நெருங்கிய உறவாக இன்றுவரை தொடர்கிறது. எங்களது தந்தையின் மறைவுக்கு பின் குமார் மாமா எங்களது சுக துக்கங்களில் பங்குபற்றி எங்களை வழிநடத்தினார்.

குமார் மாமா ஒரு தூய தமிழனாக தெய்வப்பற்று நிரம்பியவராக எல்லாவற்றிற்கும் மேலாக, மனித நேயம் உள்ளவராக வாழ்ந்து வந்தார். ஈழத்தின் சிறந்த தரும வீரர்களுள்ஒருவர். "என் கடன் தமிழனுக்கு பணி செய்து கிடப்பதே"என்ற குறிக்கோளை முன்வைத்து வாழ்ந்தார். அவரின் தந்தை அடிக்கடி சொல்லுவார் "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று. அதற்கு இலக்கணமாக இவரும் வாழ்ந்து காட்டிவிட்டார். ஆங்கில மொழியில் நிறைபுலமை பெற்றிருந்த இவர் அரசியல் முதிர்ச்சியுடனும், நிறைந்த தமிழ் உணர்வுடனும் இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் தமிழருடைய போராட்டத்திற்காக தன்னாலான சேவைகளை ஆற்றிவந்தார்.

கொழும்பு மாநகரிலே தமிழர்களின் உரிமைப்போராட்டத்திற்காக குரல் கொடுத்த ஒரே தமிழன் குமார்மாமா, சொல், சிந்தனை, செயல் எல்லாவற்றிலும் துணிகரமாக இயங்கியவர்.

அவர் பாதுகாப்பில்லாமல் தனியே துணிவுடன் சென்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்திய சதிகாரர்களால், எங்கள் மாமனிதரின்உயிர் பறிக்கப்பட்டது. தமிழனுக்காக, தமிழனின்விடிவுக்காக ஓயாமல் ஒங்கி ஒலித்துக்கொண்டிருந்த குரல் ஓய்ந்து விட்டது.

உலக தமிழ் சமுதாயமே பேரதிர்ச்சியடைந்தது. அந்த அதிர்ச்சியினின்றும் மீழுவது இலகுவான கருமம் அல்ல. இருந்தாலும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும், தகைமை பெற்றோரின் பிரிவைக் குறித்து நாம் வருந்தினால் அது தன்நலத்தின் பொருட்டேயாகும். அன்னாருக்கு நாம் செய்யக்கூடிய ஒரு கைம்மாறு அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்பதேயாகும்.

திடீரென இவ்வுலகை நீத்து அமரத்துவம் எய்தியதனால் தாங்கொணாத் துயரம் எய்தியுள்ள அவரது குடும்பத்தினருக்கு ஒரு போதும் ஒரு தீங்கும் வராது. அவர்களை இறைவன் காப்பாற்றுவான். தவறாது காப்பாற்றுவான். எங்கள் குடும்பத்தை பொறுத்தவரை, வழிகாட்டியாக இருந்த குமார்மாமா மறைந்துவிட்டார். தமிழினத்தை பொறுத்தவரை ஒரு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

தமிழீழ வானில் இன்று ஒளிவிடும் நட்சத்திரமாகி விட்டார். அவர் தமிழர்களின் சரித்திரத்தில் நிரந்தரமாக இடம்பெற்றுவிட்டார்.

இத்தகைய துயரங்கள், ஆறுதல் வார்த்தைகளால் மட்டும் தீர்ந்து விடாது. எனினும், துயருறும் குடும்பத்தினரது கவலையில் நானும் எனது குடும்பமும் பங்கு கொள்கிறோம்.

தவத்துரை செல்வரஞ்சன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன்
10.01.2000

தமிழீத்தின் சொத்து ஒன்று வித்தானது

5.1.2000 புதன்கிழமை காலை என் தலையில் இடி விழுந்தது போன்றதோர் பேரதிர்ச்சி.

ஒரு BAD NEWS -
"குமார் பொன்னம்பலம் SHOT DEAD" – என்ற செய்தியை IBC TAMIL RADIO மூலம்கேட்டதாகத் திரு. ஞானசேகரம் (இவர் EASTHAM, LONDON E6 இல் வசிக்கின்ற வயது முதிர்ந்த தமிழீழத் தேச பக்தர்) என்னிடம் கூறியபோது – ஒருகணம் நம்பமுடியாவிட்டாலும் – கொலை வெறித்தனம் தாண்டவமாடும் சந்திரிகாவின் ஆட்சியில் அல்லலுறும் கொழும்பில், குமார் அண்ணனுக்கு இப்படியொரு மகா கொடூரம் நடக்கக்கூடிய சாத்தியம் உண்டு என்ற யதார்த்தம் மனத்தைப் பாறாங்கல் போன்று கனக்க வைத்தது. கண்கள் நனைந்தன. ஊமையாய் அழுதேன். தொடர்ந்து திரு. செல்வரத்தினம், திரு. தர்மலிங்கம் ஆகியோரும் தொலைபேசி மூலம் இந்தத் துயரச் செய்தியை எனக்குச் சொன்னார்கள். உடலும் உள்ளமும் துவண்டு போயின.

கொழும்பிலே "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்ற தந்தை G.G.யின் தாரக மந்திரத்துக்கு ஒருருவமாய்த் திகழ்ந்து தமிழினத்தை எழுச்சி கொள்ள வைத்துக் கொண்டிருந்த குமார் அண்ணன் அவர்கள் இறந்து விட்டார் என்ற நினைப்பு ஏற்படுத்திய வெறுமை பூதாகாரமாய்ப் பயங்காட்டியது.

கண்களில் வழிந்து கொண்டிருந்த கண்ணீரை துடைத்தபோது உள்ளிருந்து ஓர் உறுதிபிறப்பதை உணர்ந்தேன்.

குமார் அண்ணன் இறக்கவில்லை. நமக்குள் ஒரு மாபெரும் சக்தியாகப் பிறந்திருக்கின்றார் என்ற எண்ணமே மேலோங்கியது. இந்த உணர்வு எனக்கு மட்டுமல்ல, மேலும் பல தமிழர்களுக்கும் ஏற்பட்டிருப்பதை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆம். நான் சந்தித்த ஒவ்வொரு தமிழரும் குமார் அண்ணனின் இறப்பைத் தங்களது குடும்பத்தில் நிகழ்ந்த விடயம் போன்றதான சோகத்தில் உறைந்து போயிருந்தனர். அதையும் மீறி, குமார் அண்ணனின் வீரமும், தியாகமும் வானளாவ உயர்ந்து கொண்டே போவதைத்தான் கலந்துரையாடல்கள் ஒவ்வொன்றும் விளைவாக்கின.

IBC TAMIL RADIO, SUNRISE TAMIL RADIO, தலைவர் வழங்கிய "மாமனிதர்" என்னும்அதியுயர் விருது, 09.01.2000இல் CROYDONஇல் நடைபெற்ற இரங்கல் கூட்டம், 09.01.2000இல் BRITISH PRIME MINISTER'S OFFICIAL RESIDENCE(NO. 10 DOWNING STREET)இல் நடைபெற்ற VIGIL (கடந்த பத்து ஆண்டுகளில் தமிழர்களால் நடத்தப்பட்ட VIGIL களில் குமார் அண்ணனுக்காக நடத்தப்பட்ட VIGIL இற்குத்தான் ஆகக்கூடுதலான தமிழர்கள் பங்கு பற்றியுள்ளார்கள்–அதுவும் கடுங்குளிரான ஒரு நாளில் –

மற்றும் பத்திரிகைகள்(தமிழர்கள் வெளியிடுபவன) என்பதாகக் கடந்த ஐந்து நாட்களிலும் நடைபெற்றுள்ள நிகழ்வுகள் குமார் அண்ணன் அவர்கள் குறித்த பெருமிதஉணர்வையும் அவர் போன்ற தைரியத்துடன் நாமும் தமிழீழ விடுதலைக்கு மேலும் மேலும் ஈடுபடவேண்டும் என்ற ஓர்மத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

மனைவி, மக்கள், உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் என்கின்ற நிலையில் குமார் அண்ணனின் சடுதியான இறப்பினால் துடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இக்கடிதமும் ஆறுதல் அளிக்கவேண்டும் என்பதே யான் அன்றாடம் வணங்கும் சற்குரு சிவயோக சுவாமிகளின் திருவடிகளிலும், பகவான் சிரீ சத்திய சாயி பாபா அவர்களின் திருவடிகளிலும் எனது ஆத்மார்த்த வேண்டுதல்களாகும். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குமார் அண்ணன் அவர்களின் உலகப்பிரகாரமான வாழ்க்கை இவ்வளவுதான் என்பது இறைவன் நியதிபோலும். ஆனால் அவரது வாழ்க்கையின் நிறைவுப் பகுதி குறித்து அவரது அன்பர்கள் காலத்தால் மனநிறைவு பெறுவார்கள் என்பது திண்ணம்.

ஏனெனில் அவரது வாழ்வு மட்டுமல்ல, அவரது மரணமும் தமிழினம் நாடி நிற்கும் தமிழீழ விடுதலையை விரைவு படுத்தியுள்ளது. இது நாள்வரை தனது அறிவு, ஆற்றல், உழைப்பு எல்லாவற்றிற்கும் மேலாக அவர் கொண்டிருந்த தைரியம் என்பவற்றால் தமிழீழத்தின் சொத்தாகத் திகழ்ந்தார். இன்று தன்வழியில் பலரை ஆற்றுப்படுத்தும் வித்தாகத் தன் இன்னுயிரையே அர்ப்பணித்து விட்டார் என்பது எனது உறுதியான நம்பிக்கை

அன்புடன் இ. முருகானந்தன்
10.01.2000 – 3.51 நிமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலர்ந்தபுதிய நூற்றாண்டு தமிழீழத்தில் புது வாழ்வினைக் கொண்டுவரும் என்று நம்பியிருந்த புலம் பெயர்ந்த தமிழர்களின் தலையில் பேரிடியாய் வீழ்ந்தது "ஜனவரி ஐந்தில் சிங்களத்தின் தலைநகரில் அனைத்துத் தமிழரின் நம்பிக்கை நட்சத்திரம் அண்ணா குமார் பொன்னம்பலம் அமரராக்கப்பட்டார்" என்ற அவலச் செய்தி. இச்செய்தி உருவாக்கிய கண்ணீரலைகள் ஓயவில்லை. நாட்கள் ஓடுகின்றன, கடமைகள் காத்திருக்கின்றன. அதனால் அன்னாருடன் நெருங்கிப் பழகிய சிலரில் நானும் ஒருவன் என்பதனால், என் நினைவலைகள், பழைய ஞாபகங்களை மீட்டு, அன்னாருக்கு அஞ்சலி செலுத்த முற்படுகின்றேன்.

முப்பத்தைந்தாண்டு காலப் பழக்கத்தில், பத்தாண்டுகள் நெருங்கி, ஓட்டி உறவாடிய எத்தனையோ சம்பவங்கள், உரையாடல்கள் நிழற்படமாய் என்மனத்தில் விரிந்தாலும் அவற்றில் சிலவற்றை, அன்னாரிடம் கண்ட வியத்தகு மனித நேயப்பண்புகளை, திறமைகளை, சம்பவங்களை மட்டும் விரிவஞ்சி முன்வைக்கிறேன். அன்னார் சிறந்த வாதத் திறமையுடையவர். சிறந்த கொள்கைப்பிடிப்பாளர். எல்லாவற்றிலும் மேலாக மக்கள் மீதும் அவர்தம் உரிமைகள்மீதும் பற்றுடையவர். எல்லோரையும் சமமாக நோக்கித் தேவையறிந்து உதவும் மாமனிதர்.

அன்னாரின் வாதத்திறமையை அவருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்த அன்றே கண்டுகொண்டேன். 1966ல் தமிழ் காங்கிரஸ் மகாநாடு நடைபெற்ற பொழுது, வாலிபமுன்னணி உறுப்பினரான நான், பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்ற முடியாது என நிர்வாகச் செயலாளர் திரு. சங்கரப்பிள்ளை தடுத்தார், அப்பொழுது அங்கு வந்த, அப்பொழுது சட்ட மாணவனாகவிருந்த அண்ணா குமார் "வாலிப முன்னணி உறுப்பினர் பொதுச் சபைக்கூட்டத்தில் பார்வையாளனாகப் பங்கு பற்றலாம். ஆனால் பொதுச்சபைத் தேர்தலில்தான் பங்குபற்ற முடியாது" என வாதிட்டு எனக்கு அனுமதி வாங்கித் தந்தார். அன்று நான் கண்ட சட்டவாதத்தை, மாத்தறையில் மூதாட்டி ஒருவரின் கொலை வழக்கில் அண்ணார் எதிரிகளுக்கான சட்டத்தரணியாகி வாதாடி வெற்றி கண்டபோது இலங்கை நீதித்துறை கண்டுகொண்டது. எதிரிகள் அனைவரும் தூக்கு மேடைக்கு அனுப்பப் படுவார்கள் என்ற நிலைமையிலிருந்து எதிரிகளுக்கு விடுதலை வாங்கித்தந்தபோது "டெயிலி நியூஸ்" பத்திரிகை "எதிரி தரப்புச் சட்டத்தரணி தன் வாதத் திறமையால் யூரர்களைத் தூங்கச் செய்துவிட்டார்" எனக் குறிப்பிட்டது. எல்லாவற்றிலும் மேலாக முன்னாள் நீதியரசர் மாணிக்கவாசகர் தலைமையில் இயங்கிய தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த தமிழக் காங்கிரசின் பிரதம பேச்சாளராக அண்ணாகுமார் செயற்பட்டார். "பல அங்கத்துவத் தொகுதி முறை" தமிழ் மக்களுக்கு எதிர்பார்த்த பலனைத் தரவில்லை எனப் பல ஆதாரங்களைப் புள்ளி விபரங்களுடன் சமர்ப்பித்து அவர் வாதிட்டார். அவரின் வாதத்தால் கவரப்பட்ட ஆணைக்குழுத் தலைவர் மாணிக்கவாசகர் "உம்முடைய தந்தையாரின் வாதங்களைப்பல முறை கேட்டுள்ளேன். ஆனால் உமது வாதத் திறனைக் கேட்கும் சந்தர்ப்பம் இன்றுதான் எனக்குக் கிடைத்துள்ளது. நீர் புகழ் பூத்த தந்தைக்கேற்ற தனையன்தான்" என ஆங்கிலத்தில் குறிப்பிட்டார். இதனை மறுநாள் பத்திரிகைகளெல்லாம் பிரசுரம் செய்தபோது, அப்போதைய அரசியல் எதிரிகள் எள்ளி நகையாடினாலும் அன்னார் இளைஞர்களுக்காக, தமிழர்களுக்காக நீதிமன்றங்களில், உலக அரங்குகளில் வாதிட்ட போது "மகன் தந்தைக்காற்றும் உதவி" எனும் வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணம் வகுத்த மகனாகக் காணப்பட்டார்.

அண்ணா குமார் பொன்னம்பலம் சிறந்த கொள்கைப்பிடிப்பாளர் என்பதனை அவரின் இறுதிக் கால நடவடிக்கைகள் மூலம் கண்ட அகிலம் வியந்து மூக்கின்மேல் விரலை வைக்கின்றது. அகிலம் வாழ் தமிழினமே அவர் அமரரானார் எனக் கேட்டு அலறி அழுகிறது. 1977ல் அன்னார் "தனி" மரமாக நின்று அரசியல் வாழ்வை ஆரம்பித்தபோது "அம்மரம் கற்பக விருட்சமாகித் தமிழினத்தைக் காப்பாற்றும்" என அதற்கு நீரூற்றி வளர்த்த சிலரில் நானும் ஒருவன் என்பதால் அவரது நடவடிக்கைகளை அருகிருந்து அவதானிக்க முடிந்தது. 1978ல் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் "அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி" என்ற அந்தஸ்த்தை இழந்தபோது கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் என்ற ரீதியில் தேர்தல் ஆணையாளருடன் வாதிட்டு அந்த அந்தஸ்த்தை மீண்டும் பெற்றார். அதனைப் புனரமைக்கையில் அரசியல் எதிரிகளை நீதி மன்றில் சந்தித்து வென்றார். ஆனால் மக்கள் முன் அதனை எடுத்துச் செல்வதில் பல சிக்கல்களைக் கட்சியின் உள்ளும் புறமும் எதிர்நோக்கினார். கட்சி மக்கள் மயப்படுத்தப் படவேண்டும். அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தேவைகளுக்கேற்ற கொள்கையில் சீர்திருத்தம் வேண்டும் என்பதில் மிகவும் விடாப்பிடியாக நின்றார். 1980ல் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் – கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் "தமிழீழக் கொள்கையைக் கட்சியின் கொள்கையாக ஏற்கவேண்டி அதற்கு முன்னுரையாக ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கையைச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தேன். அதனைச் சீரணிக்க முடியாத கிளைத் தலைவர் வெளியேறப் போவதாகப் பயமுறுத்தினார். ஆனால் அண்ணாவோ என்னை மேலே போகும்படி பணித்தார். தலைவர் வெளியேறினார். அண்ணாவோ கொள்கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதனைக் கட்சியின் கொள்கையுமாக்கிப் பிரசாரம் செய்தார். அதனை முன்னெடுக்கும் முகமாக முதலாவது மாவட்ட சபைத் தேர்தலில் தமிழ்க்காங்கிரஸைக் கொழும்பில் போட்டியிடச் செய்தார். தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். எல்லாவற்றிலும் மேலாக சிங்களவர்கள் மத்தியில் தமிழீழக் கொள்கையை முன்வைத்துப் பிரசாரம் செய்தார். அன்னார் அண்மைக் காலத்தில்தான் தமிழீழக் கொள்கையை முன்வைத்தார் எனப் பலர் நம்புகின்றனர். ஆனால் 1981லேயே அவர் காலி – மாத்தறை "றோட்டறிக் கழக"க்கூட்டத்தில் தமிழீழக் கொள்கையை முன்வைத்து உரையாற்றினார். அதனை அப்போது ஹபரதுவ நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார். அன்னாரின் கிரகோரிஸ் இல்லம் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டபோதிலும் அவர் அஞ்சவில்லை. மேன்மேலும் சிங்களவர் மத்தியில் வானொலியிலும் தொலைக் காட்சியிலும், ஏன் உலக அரங்குகளிலும் தமிழீழக் கொள்கையை விரிவாக விளக்கினார். தன் இறுதிக் கடிதத்தில் தமிழீழவனாகச் சனாதிபதியின் பயமுறுத்தலுக்குச் சவுக்கடி கொடுத்தார். அதனால் அமரராக்கப்பட்டார் என்பதனைக் கேட்டு அகில உலகமுமே அலறி நிற்கிறது.

அன்னார் சிறந்த மனித நேயப் பண்பாளர் என்பதனை அவரது அரசியல் எதிரிகளே ஏற்றுக்கொள்வர். யாழ் நூலகம் எரியூட்டப்பட்டபோது அங்கு சென்ற அண்ணா குமாரின் காரில் தமிழர் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது காரில் பறந்து கொண்டிருந்த காங்கிரஸ் கொடியைச் சுருட்டிக் கம்பத்துடன் கட்டும்படி எமக்குப்பணித்தார், சிவசிதம்பரம் பல முறை தடுத்தும் அண்ணா தம் கடமையில் உறுதியாக இருந்தார். இதனால் பின்பு கூட்டணியினர் இச்சம்பவத்தைத் துண்டுப்பிரசுரமாக்கி "காங்கிரஸ் மாவட்டசபைத் தேர்தல் போட்டியினின்றும் விலகிவிட்டது" எனப் பிரசாரம்செய்து கட்சியைத் தேர்தலிலிருந்து பின் தள்ளினர். ஆனால் அண்ணா தொடர்ந்தும் தான் செய்தது சரி எனவே வாதிட்டு வந்தார். போர்காலச் சூழலில் மக்கள் தொழிலிழந்து, வருவாயின்றி, இடம்பெயர்ந்து இன்னலுறுகையில், ஆக்கிரமிப்பு அரசு தமிழர்களைக் கைது செய்து தமிழர்களின் கொள்கைப் பற்றை முறியடிக்க முயன்றபோது, கைதானவர்களை இயக்க வேறுபாடின்றி வெளியே கொண்டுவரத் தன்னாலானமட்டும் நீதிமன்றில் முயன்றார். நிர்க்கதியான அவர்களின் பெற்றோரின் வழிச்செலவுக்குத் தன் பணத்தைக் கொடுத்து உதவினார் எனப் பத்திரிகைகளில் படிக்கையில் அன்னார் இமயத்தின் உச்சியில் நிற்க, நாம் அண்ணாந்துதானும் பார்க்கமுடியாத நிலையிலிருக்கிறோம் என்பதனை உணரமுடிகிறது.

இன்று தமிழினம் தலைசிறந்த ஒரு நியாயவாதியை, நீதியை நாட்டப் பாதிக்கப்பட்டோரை நாடி ஓடிய நியாய துரந்தரரை, சாவு கண்முன்னே நின்று சிரித்த போதும் சாவிற்கே சவால் விட்ட வீர மனிதரை இழந்து நிற்கிறது. தான் தமிழனாம் தமிழீழவனாக வாழ்ந்து, தமிழீழத்தையும் அதன் மக்களையும் சிங்களப்பேரினவாத ஆக்கிரமிப்பு அரசிடமிருந்தும் அதன் ஆக்கிரமிப்புப் படையிடமிருந்தும் மீட்டெடுக்க முயன்ற தானைத் தளபதியை இழந்து நிற்கிறது. தமிழீழவன் எங்கு வாழ்ந்தாலும் தமிழீழவனாக வாழவேண்டும் என்பதில் முன்னுதாரணம் காட்டிய மேதையைப் பறிகொடுத்து நிற்கின்றது. அண்ணாவின் உடல்தான் எம்முன்னே இல்லை. ஆனால் அவர் உருவம் எல்லோர் இதயத்திலும் சிம்மாசனமிட்டு அமர்ந்துள்ளது. அவர் விட்டுச் சென்ற இறுதி ஆசைகள் சந்திரிகாவிற்கு எழுதிய இறுதிமடலாக எம்முன்னேயுள்ளது. அவர் காட்டிய வழியில் நாம் நின்று அவ் ஆசைகளை வென்றெடுத்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவோமாக!

கே.ரி.எம்.விஜயகுமார்,
முன்னாள் பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் – கொழும்புக் கிளை.

34834

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணித்தமிழனின் தனிப்பெரும் திலகம் அமரர்குமார் பொன்னம்பலம்

– சாமி அப்பாத்துரை – (கனடா)

மறத்தமிழன், மாமனிதன், குமார்பொன்னம்பலத்தின் திண்மையான திரண்ட உடலில் பாய்ந்த குண்டு அனைத்து தமிழர்தம் இதயத்தில் பாய்ந்த குண்டாகிவிட்டது. குமாருக்கு விழுந்த சூடு எமக்கு விழுந்த சூடு.

எமக்காக, எம் இனவிடுதலைக்காக குமுறிக் குரல் கொடுத்துக்கொண்டதால் குமார் சுடப்பட்டார். குமார் என்ற தனிமனிதனை எறும்புகூட அணுகி ஆதரவு அளிக்குமே தவிர கடித்துவிடாது. அத்தகைய மனிதன் எமக்காக உழைத்து உயிர் நீர்த்தார்.

அவருக்கு விழுந்தசூடு எமக்கு இலக்கு வைக்கப்பட்ட சூடு. அன்று ஆதிசிவன் புட்டிற்கு மண் சுமந்த வேளை பாண்டியமன்னவனால் போட்ட அடி அனைத்து மக்கள் முதுகில் விழுந்ததுபோல் குமாருக்கு விழுந்த சூடு எம்மேல் விழுந்த சூடு. அது தந்த வடு என்றம் மாறாது.

அண்ணன், அருந்தமிழ்க் காவலன், அஞ்சா நெஞ்சம் கொண்ட மறத்தமிழன், மக்கள் நாயகன், தர்மத்தின் காவலன், தவிக்கும் தமிழனின் தனையன், எங்கள் குமார் பொன்னம்பலம் என்றும் எம் இதயக்கமலத்தில் வைத்து பூசிக்கப்படும் இறைவன். கடைசித் தமிழனின் கடைசி மூச்சு இருக்கும் வரை கனவிலும் நினைவிலும் நீங்காத இடம்பெற்று இதயக்கமலத்தில் வீற்றிருக்கும் வானுறையும் தெய்வம். வையத்து வதைக்கப்பட்ட வண்டமிழருக்காக வாழ்ந்து வானுறையும் தெய்வமாகியவர், குமார் பொன்னம்பலம்.

புத்தாயிரமாண்டு ஜனவரித்திங்கள் ஐந்தாம் நாள் அன்று இதயத்துறை குமரன் எனும் புதிய தெய்வ அவதாரம் கண்டோம். கலங்கிய இனத்தின் கலங்கரை விளக்கு, இதயத்தே ஒளிக்கும் பேரொளியாகிவிட்டது. அது எம் ஆத்மாக்களுடன் இணைந்த சிரஞ்சீவியொளியானது. குமாரை கனடாவில் கடைசியாகக் கண்டேன். எனது "தரணியெங்கும் தமிழ் வளர்ப்போம்" நூல்வெளியீட்டு விழாவிற்கு வந்த குமார் இன்றும் எம் கண்களில் நிற்கிறார்.

"தரணியாண்ட தமிழன் மீண்டும் தரணியாளுவான். தரணியில் தலைகுனிந்திருக்கும் தமிழன் மீண்டும் தரணியில் தலைநிமிர்ந்து நிற்பான்" எனும் கருக்கொண்ட எனது நூல்வெளியீட்டு விழாவில் கண்குளிர கடைசியாகக் கண்டோம்.

பல்லாயிரம் மக்கள் புடைசூழ, கனடிய அமைச்சர் பிரமுகர்கள் இருமருங்கும் இணைந்துவர மாமன்னவனாய் வந்திட்டாய் – உனக்கு பொன்னாடைகள் போர்த்தோம்; பூமாலைகள் சூட்டினோம்; பாராட்டு சுவடுகள் தந்தோம்; வாயாராப் புகழ்ந்தோம்; வீபரகாவியம் படைத்திடும் மறத்தமிழனை கண்குளிரக் கண்டோம்; கனிமொழியை தேன்பாய செவிமடுத்தோம்.

வானவூர்தி நிலையத்தில் வந்தோம். வழியனுப்ப தயங்கினோம். பிரிவும் பெருமிதமும் கலந்த அவ்வேளை என்மகள் உங்கள் மாமியாரிடம் மூலையில் முணுமுணுத்தது இன்று உண்மையாகிவிட்டது. அவள் இதயத்தின் ஓர் மூலையில் ஓர் உண்மை ஊடுருவியது. அதுதான் அவர் உயிருக்கு சிறிலங்காவில் அவத்து விளைந்திடுமே என்ற ஏக்கம். அவரை மீண்டும் வெளிவந்து வாழவேண்டினாள். அன்று 1999 மே மாதம் கூறியவை இன்று உண்மையாகிவிட்டது. அதுவே உங்கள் வெளிநாட்டு இறுதிப் பயணமாகிவிட்டது.

மேலைத்தேச பிரமுகர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உங்களை அரசியற் கொலை செய்திட்டதை கேட்டு பேரதிர்ச்சி யடைந்தனர். ஒரு கணம் செயலிழந்து எம்முடன் பேசமறுத்தனர்.

உங்கள் அழகு, ஆழமான ஆங்கில உரையில் அரசியல்ஞானம், தீர்க்கதரிசனம் கண்டு பாராட்டியவர்கள் "நல்லதொரு தலைனை உங்கள் இனம் இழந்துவிட்டது" என்றார்கள். அவர்கள் கூற்று வெந்தபுண்ணில் பாய்ச்சப்பட்ட ஈட்டியை இழுத்தது போல இருந்தது. உலகே போற்றும் உத்தமனை நாம் இழந்து விட்டோமே.

வசதிகள் பலகொண்டு, வளமாய் வாழ்ந்திட வாய்ப்புகள் பல கண்டு சமுதாயத்தின் கோபுரத்தில் கொடிகட்டிப் பறக்கும் நிலையில் இருந்தும் அவற்றை ஏற்கமறுத்தது ஏனோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையிழந்து, சொந்தமண்ணில் அகதிகளாய் வாடிவதங்கிக் கிடக்கும் தன் இனம், தன் மண்ணில் உரிமைகளோடு வாழவேண்டும் என தன்வாழ்வு அந்த இனத்தின் வாழ்வில் ஓர் அங்கமானது என சொல்லாமல் வாழ்ந்து காட்டிவிட்டாய்.

அந்தப் பெரும்பணியில் தாயகமண்ணில் வில்லோர் உழவர் போராடுகிறார்கள். புலம் பெயர்ந்த தமிழர்கள் பிற்பலமாய் திகழ்கிறார்கள். ஆனால் சிங்கத்தின் கொடிய குகையில் இருந்து குரல் கொடுக்க கொழும்புவாழ் அரசியலாளர் துணிவிழந்து தூங்கிக் கிடந்தனர். மிஞ்சிய இனத்தரசை கெஞ்சி கேட்பதலால் யாதொன்றும் இல்லையென இரந்து வாழத்தலைப்பட்ட கொழும்பு வாழ் தமிழர் பலர் மத்தியில் வீரக்குரல் கொடுத்த மறத்தமிழன் குமார் பொன்னம்பலம் ஒருவரே! முன்பு அந்த அரியாசனமேற யாருக்கும் துணிவு வரவில்லை. அவருக்கு அரக்கன் தந்த பரிசைப்பார்த்து வரவும் துணிபவர் இல்லை. இந்நிலையில் குமார் தனக்கென தக்கவைத்த தனியிடம் என்றும் காலியாக இருக்கப்போகிறதா என்ற ஏக்கம் என் உள்ளத்தை உறுத்துகிறது.

குமாரின் இலக்கு ஒன்று. அதுதான் தமிழ் மக்களும் அவர்கள் மண்ணும் விடுதலை பெறவேண்டும். அதனை திம்புகோட்பாட்டினூடாகக் கண்டு கொண்டார். தமிழ் மக்கள் தம் மண்ணில் சுயமரியாதையுடன் வாழவேண்டும். தம்மைத்தாமே ஆள உரிமை பெறவேண்டும். மனித உரிமைகள் பெற்று எல்லைக்காப்புடன் கண்ணியமாக வாழவேண்டும் என கொள்கைத் தெளிவு கண்டார்.

குமாரின் தனிப்பண்புகளில் ஒன்று சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்து மேல்மட்டம் வரை அனைவருடனும் சரிநிகர் சமமாகப் பழகி உழைத்தமையாகும்.

மண்காக்கும் மண்ணின் மைந்தனாகத் திகழ்ந்தவர். மக்கள், மகளிர் மானம் காத்திட விளைந்திட்டவர். சொந்த மண்ணிற்குச் செல்லத்தயங்கி, அதிகாரிகள் முன் கைகட்டி, வாய்பொத்தி, மண்டியிட்டு, மன்றாடி கூனிக்குனிந்துசெல்லும் நிலையைக் கண்டு கலங்கினார்.

தன் மண்ணிற்குச் செல்ல தமக்கு எதற்கு அனுமதியெனக் கேட்டார். மண்ணின் மைந்தர் மரியாதையோடு வாழ உரிமையுண்டு என நிலைநிறுத்திய செம்மல் குமார். சட்டத்தரணியாதலால் சட்டநுணுக்கம் கண்டு புதியபாதையை திறந்திட்ட வீரத் தமிழனானார்.

ஆயிரமாயிரம் தமிழர்கள் நீதிகேட்டு நெடுபயணம் சென்றிட, நீதியின்றி தவித்தனர். தன் பொற்கரங்களை நீட்டி அரவணைத்து, அன்புகொட்டி, ஆதரவு நல்கி நீதிபெற உதவிட்ட மனுநீதிகண்ட சோழன் வழிவந்த சட்டத்தரணியல்லவா?

சொந்த மண்ணில் கொட்டும் கண்ணீர் கண்டு விரைந்திட்டாய். வீரமுளக்கமிட்டாய். தன்மானம் தன்னை மட்டுமல்ல, பெண்மைக்கு களங்கம் விளைத்திட்டு, துடிக்க துடிக்க, பதைக்க, பதைக்க தெருவோரத்தில் அரக்கன் குலாம் மானபங்கப்படுத்தி மாய்த்தவளுக்கு நீதி கேட்டு நெடும்பயணம் செய்திட்ட வண்டமிழனாய் திகழ்ந்தாய்.

சொல்லோர் உழவாய் நின்று வில்லோர் உழவா கரங்களை வசப்படுத்தினார். தன் அடிப்படை உரிமைகளை மறுக்கப்பட்ட இனம், அடக்கும் சக்திக்கெதிராக பேசுவது நியாயமானது மட்டுமல்ல அவர்கள் உரிமையும்கூட என்ற ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தினைச் சுட்டிக்காட்டி புனிதமான போராட்டத்தைக் கொச்சைப்படுத்த பயங்கரவாதப் போர் என்பதினைச் சாடி உலகறிய உணர்த்திய உத்தமன்.

வீரவேங்கைகள் தம் அரசியற் கோட்பாட்டை அரவணைக்கும் துணிவும் பக்குவமும் கொண்டவர். அதனை அனைத்துலகெங்கும் உரக்கக்கேட்கக் கூறிட்டவர். அஞ்சா நெஞ்சம் கொண்டு ஆணித்தரமாய் உரைத்திட்ட உன் இறுதி உரைகள் உன் உதடுகள் மூட முன், உலகு உரக்கக்கேட்டு பெருமைப்பட்டது.

குமார் பொன்னம்பலத்தின் வழியே தனிவழி. அன்னாரின் துணிவு உருக்குபோல் உறுதியானது. தன்னலமற்ற சேவை பெருங்கடல் போன்றது. புத்தி கூர்மை வீரவேல் போல் கூர்மையானது, அகலமானது, ஆழமானது; கொள்கை விசுவாசம் பத்தரைமாத்துத் தங்கம் போன்றது.

குமாரால் தனக்கென, தன்பாணியில் ஆற்றிய பணிகளை தொட்டவர் யாரும் இல்லை. தொடத் துணிவு கொண்டவர் தோன்றிட பிரமன்தான் புதியபடைப் பொன்றைத் தரவேண்டும். தமிழர் தம்வரலாற்றின் தனக்கென தனியிடத்தை தக்க வைத்திருக்கும் குமாரை என்றென்றும் நினைவு கூறும் லட்சக் கணக்கான தமிழரின் நாடித் துடிப்பே இம்மடலாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிது, அரிது, மானிடராதல் அரிது, என்னும் முதுமொழிக்கிணங்க, சட்டமாமேதையும், மதிப்புக்கும் அன்பிற்கும்உரிய ஜீ.ஜீ.ஐயாவுக்கும், அழகம்மாவுக்கும் ஆண்வாரிசாக மாத்திரமல்லாது, ஆண்மையே வடிவம் கொண்டவராக, (12th of August, 1938)பூமியில் உதித்த குமார் Junior G.G. அவர்கள் தனது கல்வியை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும், கொழும்பில் Royal கல்லூரியிலும் பயின்ற காலத்தில் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, மாத்திரமல்லாது தனக்கென ஓர் நேரிய பாதையை சிறு பராயத்திலேயே ஆரம்பித்த அவர் தனது தந்தையாரின் திறமையை மனதில் கொண்டு தானும் அத்துறையில் வர எண்ணி 1965ம் ஆண்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்து பரிஸ்டர் பட்டம் பெற்று தந்தையின் பெயருக்கு வாரிசு என்ற கருத்தோடு நில்லாது G.G.ஐயா அவர்களின் தொழிலுக்கு தானே வாரிசு என்ற எண்ணத்தோடு, தொழில் ஆரம்பித்த இவர் தொழிலில் பணவருவாயைப் பற்றி சிந்தியாது இருந்தார். ஏனெனில் அவரது குடும்பமானது அதாவது ஜி.ஜி. ஐயா போன்று குமார் அவர்களது தாயாரும் ஒரு செல்வாக்குமிக்க குடும்பத்தவர்கள். அம்மையார் CLOUGH குடும்பத்தை சேர்ந்தவர்கள். இவர்களுக்கு எமது நாட்டிலிருக்கும் சொத்துக்களை விட மலேசியாவில் பாரிய றப்பர் தோட்டம் உள்ளது. இப்படியான குடும்பத்தில் தோன்றிய "அண்ணல்" தனது குறிக்கோளை ஒரு நேர் பாதையாக எடுத்து, அதில் தனது காலடியை பதித்துள்ளார் எனக் கூறுவது தகும். பெருந்தகை எண்ணம் கொண்ட இவர் தனது வாழ்க்கை துணைவியாக, எல்லோராலும் அன்போடு "முருகேசு ஐயா" என அழைக்கப்பட்ட A.G.A அவர்களின் மகளை தனது வாழ்க்கை துணைவியாக கைப்பிடித்து "இல்லறமே நல்லறம்" எனும் வார்த்தைக் கிணங்க இல்வாழ்க்கை நடத்தி, ஆசைக்கு ஒரு ஆணும், அன்புக்கு ஒரு புதல்வியும் பெற்று, வாழ்க்கையை இன்பமாக நடத்தியதோடு, சுற்றத்தார் மாத்திரமல்லாது, தன்னினமும் (தமிழினம்)சந்தோஷமாகவும், தன்மானத்துடனும் வாழவேண்டும் எனும் நோக்குடைய குமார் ஐயா அவர்கள் தனது வாழ்க்கையில் அதிக நேரத்தை தன்னினத்துக்காகவே ஒதுக்கி, தக்க நேரங்களில் சரியான கருத்துக்களை எல்லோருக்கும் பத்திரிகை வாயிலாக, மிகத்துணிச்சலுடன் அறிய தந்ததோடு மாத்திரமல்லாது, நாட்டின் அதி உயர் பதவிக்கும், தமிழன் ஒருவன் என்ற நிலையில் போட்டிபோட்டு தனது இன ஆர்வத்தை, உலகிற்கே வெளிக்காட்டிய ஒருவராவார். அதே நேரத்தில் தனது தொழில் ஆகிய சட்டத்துறையில் தனது தந்தைபோல் அதாவது ஜீ.ஜீ..ஐயா அவர்கள் காலத்தில் ஐயா அவர்கள் அமிர்தலிங்கத்துக்கு ஆதரவாகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும், கட்சி வித்தியாசம் பாராது தானே முன்னின்று வழக்கை நடத்தி, அதில் வெற்றிவாகைசூடிய ஜீ.ஜீ. ஐயாவுக்குரிய, வாரிசு ஆகிய பெருமகன் குமார் அவர்கள் எத்தனையோ, வழக்குகளை எமதினத்துக்காக, ஆதாயத்தை எதிர்பாராது வழக்காடியதோடு நில்லாது, சமீபத்தில் பெண்ணினத்தின் கிருஷாந்தியின் வழக்கில் அவரது வாதத்திறமை தமிழ் மக்கள் அறிந்ததே.

இப்படிப்பட்ட அண்ணல் தனது இனத்தோடு, தனது மதத்தையும் மிகவும் மதித்தவர் என்பதற்கு சான்றாக உள்ளது. இராணிவீதியில் (Queens Rd.)No.15ல் அதாவது அவரது வீட்டில் முற்பக்க தெருப்புறத்தில் அவரது மதிலில் ஒரு மாடம் அமைத்து அதில் விநாயகப் பெருமானின் திருவுருவச்சிலையைஅமர்த்தி வழிபட்டமை ஓர் சான்றாகும். இப்படிப்பட்ட மகான் எம்மிடத்தில் இருந்து மறைந்தாலும் அவரது நினைவுகள் என்றும் நீங்காது இருக்கும் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உள்ளன.

G.G. ஐயா மறைந்தும் அவரது கர்ச்சிக்கும் தன்மையும், வீரமும், உறுதியும், நேர்மையும் மிக்க குமார் அவர்கள் மறையவில்லை என்பது திண்ணம். அவரது வாரிசு (குமாரின்மைந்தன்)அவரைப்போன்று வருவார் என்பது சர்வநிச்சயம். இதற்காக எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருள் அவருக்கு கிடைக்க வேண்டும் என வேண்டிக் கொள்வதோடு குமார் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைபிரார்த்திப்பதோடு அவர்களது குடுமபத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு மறைந்த அமரர் குமாரின் பெருமையை அவரது மைந்தன் கஜேந்திரகுமார் முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்,
சு.நீதிநேசன்
வட்டுக்கோட்டை அகில இலங்கை
தமிழ்க் காங்கிரஸ் கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் பொன்னம்பலம் என்கின்ற மாமனிதன்

திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பிலே பிறந்தார்; வளர்ந்தார்; கல்வி கற்றார்; ஆனால் யாழ்ப்பாணக் குடா நாட்டிலேயே பெண் எடுத்தார்; இருப்பினும் கொழும்பிலேயே வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். இவர் தமிழரது மரபுவழித் தாயகத் தமிழருக்கு தமிழரது அரசியலில் ஒரு காலம் தனக்கு நிகரற்றுத் திகழ்ந்தஅவர்தம் தந்தையார் திரு. ஜீ.ஜீ.பொன்னம்பலமவர்களின் மகனாகவே அறியப்பெற்றிருந்தார்.

இவரது தந்தையார் தமிழர்தம் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்காக வாதத்திறமையை மட்டுமே ஆயுதமாகக் கொண்டு அதனை மட்டுமே கையாண்டு அரசியல் நடத்தி தென்னிலங்கைப் பேரின அரசியல் வாதிகளால் தமிழ் இனவாதி என அடிவருடித் தமிழரசியல் வாதிகளையும் தம்முடன் இணைத்துக் கொண்டு பட்டஞ் சூட்டப்பட்டவர். இவரது தந்தையாரின் பின் தமிழ் அரசியலுக்குத் தலைமைத்துவம் வழங்கிய இவர் தம் தந்தையாரின பாசறையில் வளர்ந்த திரு. சா.ஜே.வே.செல்வநாயக மவர்கள் காந்தியின் இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றினால் உந்துதல் பெற்று வெகுஜன சாத்வீகப் போராட்டங்களில் நம்பிக்கை வைத்து அவ்வகைப் போராட்டங்களைத் தமிழர் தம் உரிமைகளைப் பெறுவதற்காக நடாத்தியவர். இப்போராட்டங்களைத் தென்னிலங்கைப் பேரின அரசியல் வாதிகள் காடையரது வன்முறை, இன வன்முறை, இராணுவ வன்முறை போன்ற பயங்கரங்களைப் பாவித்தே அடக்கியொடுக்கினர். எனவே அமைதிவழிப் போராட்டங்களிலேயே இக்காலவரை கவனஞ் செலுத்திவந்த தமிழர் சமூகத்தில் தொடர்ச்சியான பேரினவாத வன்முறைகளினால் தமது நியாயமான கோரிக்கைகள் எதிர் கொள்ளப்படுவது கண்டு விரக்தியுற்ற வாழத்துடித்த இளைஞர் சமுதாயம் பதில் வன்முறைப் போராட்டத்தை நாடியது. இந்நிலைமை ஹிட்லரின் சிந்தனைகள் காந்திய சிந்தனைகளைத் தோற்கடிக்குமென்ற உண்மையினையே வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே வெள்ளையர் ஆட்சியிலிருந்து இந்நாடு விடுபடும்போது கண்டிராத இரத்தக் களறியினை இந்நாடு பொதுவாகக் கண்டுகொண்டிருப்பதனை நாம் காண்கிறோம். இந்நாடு வெள்ளையராட்சியிலிருந்து விடுபட்ட நாள் தொட்டு 1983ஜூலை வரை தமிழரது இரத்தம் மட்டுமே சிந்த வைக்கப்பட்டதனை மட்டுமே கண்டு வந்தது. அது காந்திய சிந்தனைகள் தோற்கடிக்கப்பட்ட வரலாறு. தென்னிலங்கைப் பேரின அரசியற் சிந்தனைகள், நடைமுறைகள் ஆகியவற்றின் வரலாற்று ரீதியான விளைவுகளே இந்நாட்டின் இன்றைய நிலைமை என்பது மறுக்கப்படமுடியாத ஒரு மாபெரும் உண்மை.

தமிழ் மிதவாதத் தலைவர்களான சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாசலம், திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம், திரு. சா.ஜே.வே. செல்வநாயகம் போன்றோர் அவர்கள் காலத்தில் அவர்களது குரலை அமுக்குவதற்காக தமிழ் இனவாதிகள் அல்லது இனவெறியர்கள் என்றே வருணிக்கப்பட்ட உண்மை இந்நாட்டின் வரலாறு எளிதில் மறக்கக் கூடியதல்ல. இவ்வரிசையில் ஆயுதமின்றிச் சொந்தப் பாதுகாப்புகளின்றி தனது மனச்சாட்சியின் குரலொன்றையே ஆயுதமாகக் கொண்டு ஜனநாயகக் குரலை ஒங்கி ஒலித்த திரு. குமார் பொன்னம்பலமவர்கள் பேடித்தனமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் அநீதிகள், அக்கிரமங்களைத் தட்டிக் கேட்கும் எந்தவொரு தமிழனும் பேரின அரசியல் வாதிகளின் வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாவதும், பேரின அரசியல்வாதிகளை அடிவருடி அவர்தம் ஏவல்நாய்களாகச் செயல்படும் தமிழடிவருடிகள் இப்பேரின அரசியல் வாதிகளின் போற்றுதலுக்கு உள்ளாவதும் இந்நாட்டு அரசியலில் புதினமான விடயங்களல்ல. இதனைத் திரு. குமார் பொன்னம்பலமவர்கள் புரிந்து கொள்ளாதவருமல்ல. இருப்பினும் தனது உயிருக்கு இருக்கும் ஆபத்தையும் பொருட்படுத்தாது அநீதி, அக்கிரமம் கண்டு அவரது கரிய உடலில் பொதிந்து கிடந்த வெள்ளையுள்ளம் கொதித்தெழுந்தது. விளைவு, பேடிகளின் எத்தர்களின் ஆயுதத்தை வஞ்சகம் கண்டு கொதித்தெழும் நெஞ்சுரமிக்க ஆண்மையாளனாக எதிர்கொண்டார். மரணத்தை ஆண்மையுடன் எதிர்கொண்ட இத்தலை மகனது மரணம் உறங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களை விழித்தெழ வைக்கும் ஆற்றலை வெளிப்படுத்துமென்பது திண்ணம். பேடித்தனமும் எத்துவாளித்தனமும் கோழைத்தனமும் உச்சக் கட்டமடைந்துள்ள ஒரு அரசியல் சூழலில் ஆண்மையுடன் தனது குரலை நீதிக்காக ஒலித்த தலைமகனொருவனைத் தனது மைந்தருள் ஒருவனாகப் பெற்றுக்கொண்ட பெருமையினை தமிழன்னைக்குத் தனது மரணத்திலும் கூடத் தேடித்தந்த இப்பெருமகன் அநாதைகளாய் நிற்கும் தமிழர்தம் இதயங்களில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டுவிட்டார். இத்தருணத்தில் இப்பெருமகன் அன்னாரை அல்லலுறும் தமிழினத்துக்காகப் பெற்றுத்தந்த அவர்தம் தந்தையார் திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களையும் இக்காரணம் பற்றியே தமிழ் மக்கள் மனதில் நன்றியுடன் நினைவுகூர வைத்து தந்தைக்கான கடமையையும் இம்மகன் நிறைவேற்றியுள்ளார். எனவே இவர் ஆண்மையுடன் எதிர்கொண்ட மரணம் சாதாரணமானதல்ல.

தமிழ்மக்கள் தம் கௌரவத்திற்காகவும், கண்ணியத்திற்காகவும், உரிமைக்காகவும் மரணத்தை ஆண்மையுடன் எதிர்கொண்ட மாமனிதனே, நீ எங்களுக்கு எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினை ஊட்டி மறைந்து விட்டாயெனினும், நிச்சயம் உனது வீரியமிக்க மரணம் அதன் இலட்சியத்தினை அடையும் படிக்கல்லைத் தந்துள்ளதென்பதில் சற்தேகத்திற்கு இடமில்லை.

த.ச.கதிர்காமநாதன்.
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரின் பிரிவால் தாங்கொணாத் துயரம் அடைகின்றோம்

ஈழத்தமிழரின் இருள் அகற்ற வந்த கார்மேகவண்ணக் காவலனே! ஜீ.ஜீ. குமாரனே! நீதியின் அணையா விளக்கே! சுதேசியத் தமிழரின் மறைத் தலைவனே! அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவனே!

உனக்காக எது வேண்டுமானாலும் இழக்க நாம் தயாராக இருக்கும்போது எம்மைக்கதிகலங்க விட்டு எங்கு சென்றாய்? தன்மானத் தலைவா! நீதியின் முடிசூடா மன்னா! அகில உலகத் தமிழரின் தலைவனே! உன்னால்தானே எம் கதி உலகுக்குப் புரிகிறது. பறந்து திரியும் பயம் அறியா சமாதானப் புறாவே உனக்கும் இவ் உலகில் கொடியவன் உளனோ! என்னேஉலகம்! நீதியின் நிலையான சிகரமே, உன் சேவையை ஏற்கனவே எண்சாண் உடம்பில் ஒருசாண் வயிற்றை நினைப்பவர்கள் நீக்காத் திரைபோட்டு விட்டனர். இதையும் தமிழரின்சாபக்கேடு என்றுதாம் பொறுத்தோம்.

50:50 கேட்டவன் மைந்தா, உன்புகழ் உடம்பை அழிக்க எவராலும் முடியாது. உலகில் உள்ள தமிழரின் குமுறல்களைப் பார்த்தால் புரியும். இலங்கை அரசியலில் ஆர்வம் உள்ள அரசியல் அவதானிகளே அதிர்ந்து போயினர். தாங்கள் செயற்கரிய செய்தாலும் அதைப் பெரிதாகப் பிரசித்தப்படுத்தாது மேலோனின் மேலாய் இருந்துவிட்டாய்.

தமிழனுக்கு ஏன் நீதிக்கு கேடு விளையும் போது எங்கெங்கு நின்று குரல் கொடுக்க வேண்டுமோ அங்கங்கு நின்று ஆவன செய்தாய். உன் ஆற்றலை U.N.O.மற்றும் உலகில் உயர் சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் மன்றங்கள், அரங்குகளில் அழியாப் பதிவேடுகள் ஆகி விட்டன. இவை ஈழத் தமிழ் தேசிய இனத்திற்கு காலத்தால் அழியாத சரித்திரச் சான்றுகள் ஆகி விட்டன. தலைவிதியை நிர்ணயிக்கும் தலைமைச் சான்றுகள் ஆகிவிட்டன.

அன்பின் அதி உன்னத அமரனே! உன் பொய் உடலை இவ்வளவு கெதியில் முடிவு செய்வார்கள் என்று நாம் கருத்திலும் நினைக்கவில்லை. பொய்யர்கள், மோடர்கள் ஆயுதமே வேண்டாத அன்பின் சொரூபியை அழிக்கத் துணிந்து விட்டனர். மனிதரில் மாணிக்கமே, சனநாயக இதயம் ஈழத்தில் நிலைக்கிறது என்பதற்கு உன் போன்ற புத்திசீவிகளின் அழியாத வாழ்வுதான் இரத்தோட்டமாய் இருந்தது. இதையும் அற்பனின் அற்பன்கள், கண் இல்லாக் குருடர்கள் அழிக்க நினைத்துவிட்டனர். அதர்மம் அதிக காலம் நிலைக்காது. அறக்கடவுள் வெகுவிரைவில் கண்திறப்பர். காலம்தான் பதில்சொல்லும்.

இலட்சியபுருசன் G.G. குமார் பொன்னம்பலத்தின் மறைவால் தாங்கொணாத் துயரம் அடைகின்றோம். எங்கள்பிள்ளைகள் அவரை இனி பார்க்க இயலாதா? பலபல சோகம் நிறைந்த கேள்விகள் அன்னாரின் மானசீக ஆதரவாளர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு தங்கள் கவலைகளையும்.....

நடக்கக் கூடாதது ஒரு கணப்பொழுதில் நடந்து முடிந்து விட்டது. எங்கள் தலைவரின் பிரிவால் தவிக்கும் அன்னாரின் ஆருயிர்த் துணைவியர், சகோதரி, தந்தையை இழந்து தவிக்கும் அன்னாரின் அன்புச் செல்வங்கள், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை பகிர்ந்து கொள்கின்றோம்.

எல்லோர்க்கும் நீக்கம் அற உள்ள கடவுள் தாங்கக் கூடிய சக்தியைக் கொடுப்பார் ஆக! அன்னாரின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொள்ள முடியாதமைக்கு வருந்துகின்றோம் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இப்படிக்கு
த. மி. கா. ஆதரவாளர்,
செ. இராசரத்தினம்.
டென்மார்க்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் உரிமைக் குரல் நெரிக்கப்பட்டு விட்டது!

1983ம் ஆண்டுக் கலவரங்களின் பின்னைய காலம்..... இலங்கை அரசு 6ம் திருத்தச் சட்டத்தினைக் கொண்டுவந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை வேரறுத்த நேரம், பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற அரக்கத்தனமான விதிகளுடன்கூட கொடிய யுத்த மேகங்கள் சூழ்ந்து ஆக்கிரமித்து தமிழ் மக்களை அச்சுறுத்தத் தொடங்கிய நேரம்.....

தமிழ் மக்களின் குரல் மெல்ல மெல்லத் தேய்ந்து ஓய்ந்தது. அச்சம் அவர்களை விழுங்கிக் கொண்டது. இவர்கள் இவ்வாறு செயலிழந்து நின்றதுதான் தாமதம், அதனை உபயோகித்து, இந்த யுத்தம் தமிழ் மக்களை 'விடுவிப்பதற்கு' அவசியமானதும் அவர்களால் வேண்டப்படுவதும் எனப்பறைசாற்ற முயன்றது தென்னிலங்கையில் சிங்கள தலைமைத்துவம். இதன் விளைவாக ஊரும் உலகமும் இலங்கையில் நிகழ்ந்த யுத்தக் கொடுமைகளைக் கண்டும் காணாமல் நின்றபோது, தனியே ஒரு கர்ஜனை தமிழ் மக்கள் மத்தியில் இருந்து எழலாயிற்று. வட–கிழக்குப் பிரதேசமானது தமிழர் தாயகம், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், என அது அவர்கள் சுய நிர்ணய உரிமையினை நாடு பூராவும் கேட்க முழங்கிற்று. நடைபெறுவது வெறும் யுத்தமல்ல, அது தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டமே என ஆர்ப்பரித்தது. 'சிங்கத்தின் குகை' க்குள்ளேயே ஒலிக்கத் தொடங்கிய அக்குரலுக்கு உரியவர்தான் அமரர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள்.

தமிழ் மக்களின்உரிமைப்போராட்ட வரலாற்றில் இக் 'குகை'யில் திரு. குமார் பொன்னம்பலம் வகித்த பாத்திரம் மகத்தானது. இப்போராட்டத்தின்இரட்டைக் கிளைகளான இராணுவம், அரசியல் என்ற இரு போக்குகளில் தென்பகுதியின் அரசியல் தலைமைத்துவம் மத்தியில் அரசியல் கிளையினைத் தாங்கி நின்ற தனியொருவராக இவர் திகழ்ந்தார். தமிழர் பிரச்சினையினைப் பயங்கரவாதத்திற்கு சமானப்படுத்தி அதனை யுத்த களத்துக்குள் மட்டுமே ஒதுக்கி ஒடுக்க நினைத்த தென்பகுதி அரசியல்வாதிகளுக்கும் அறிவுஜீவிகளுக்கும், அவர்கள் மத்தியிலேயே நின்றுகொண்டு, வாக்கு நேர்மையும் அஞ்சா நெஞ்சமும் மட்டுமே ஆயுதங்களாகத் தரித்து, விட்டுக்கொடுக்காது போராடிய போராளியாகிப் பெரும் சவாலாக மிளிர்ந்தார்.

இச்சாதனையை குமார் அநாயாசமாகச் சாதித்தபொழுதும், இதன்விளைவாக அவர் வாழ்க்கையில் சந்தித்த எதிர்ப்புக்களும் அச்சுறுத்தல்களும் எண்ணிலடங்கா. தமிழர்களுக்கோ 'ம்' என்றால் சிறைவாசம் என்னும் நிலை. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் எவ்விதத்திலும் ஆதரவாயுள்ளார்களெனில் அவர்களை அப்புறப்படுத்த ஏதுவான சட்டங்களும், வேண்டுமெனில் இச்சட்டங்களிற்குக்கூட அப்பாற்பட்ட முறையில் செயலாற்றக் கொடிய ஆயுதக் குழுவினரும் வேரூன்றியிருந்த சூழல். இங்கு சிங்கள இராணுவம் மட்டுமல்ல சிங்கள சமூகமுமே தமிழர்களைப் புலிகள் என்று பச்சை குத்தி எங்கே தட்டிவிடலாம் எனத் தேடித்திரிந்த களம். இதற்கு நடுவில் நின்று 'நான் விடுதலைப் புலிகளுடைய அரசியல் சித்தாந்தத்தை ஆதரிக்கிறேன்' என்று கர்ஜித்தல் எங்ஙனம்? ஆனால், 'என்னதான் நடந்தபோதும் நான் எனது மனச்சாட்சிக்கு நேர்மையாகத்தான் உள்ளும்புறமும் நடப்பேன்' என்ற சங்கல்பத்துடன் குமார் இப்படியே இயங்கியபொழுது, அவரை நோக்கி அவதூறு கூறும் தொடர்பூடக விமர்சனங்களும், அச்சுறுத்தல் கடிதங்களும் தொலைபேசி அழைப்புக்களும் வந்து குவிந்தன. இவர் பின்வாங்கினாரில்லை. தமிழ் மக்கள் பகிரங்கமாகக் கூறவும் எழுதவும் பயந்து கிடந்த விடயங்களை அஞ்சாமல் வெளிக்கொணர்ந்தார். சந்திரிகா அரசு விடுதலைப் புலிகள் அமைப்பினைத் தடைசெய்து, இவர்களுக்கு ஆதரவாகப் பேசிசெயல்படுபவர் எவரோ அவருடைய சொத்து பறிமுதல் செய்யப்பட்டு சிறைவாசம் வழங்கப்படும் என்று பிரகடனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தபொழுதும் இவர் பயப்படாமல் தொடர்ந்தார். தன் இறுதி மூச்சுவரை தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தான் ஆற்றக்கூடிய பங்களிப்பு எதுவானாலும் அதனைச் செய்யவேண்டுமென்ற அவர் உறுதி ஒரு கணமும் நெகிழவில்லை.

ஒவ்வொரு தடவையும் அவருடைய கட்டுரைகள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டபோதும், அவர் தொலைக்காட்சியில் செவ்வி காணப்பட்டபோதும் நூற்றுக்கணக்கில் தமிழ் மக்கள் அவருடன் தொடர்பு கொண்டு தாங்கள் சொல்ல நினைத்ததையும் சொல்ல வேண்டியவற்றையும் சொன்னதற்காகப் பாராட்டுத் தெரிவித்தனர். தாங்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்த விரக்தியினைக் குமார் தீர்த்து வைத்தாரெனப் புளகாங்கிதம் கொண்டனர். அவருடைய தைரியமும் துணிவும் ஏனைய தமிழ் மக்களுக்கு உத்வேக சக்தியைக் கொடுக்கலாயிற்று. தமிழ் மக்களின் மீது கட்டவிழ்க்கப்பட்ட பயங்கரவாதம் 1990களில் அதிகரித்துக் கொண்டே வந்தபோதும், தலைநகரில் பல தமிழ் அமைப்புக்களும் அரசியல் கூட்டங்கள் நடத்த ஆரம்பித்தது குமார் தந்த துணிவின்னாலே என்றால் மிகையாகாது. அவர் முன்வரிசையில் எதிர்ப்பு வெடிகளைத் தாங்கிப் பாதுகாப்பாக நிற்கின்றார் என்ற தைரியத்தில் அவர் பின்னே அணிவகுத்தவர் எத்தனையோபேர். குமார் தனியொருவராக தென்னிலங்கைத் தமிழ் மக்களுக்கு அவர்களின் ஒரே கவசகேடயமாக விளங்கினார். இன்றோ தங்களுக்கு ஏவப்படும் கணைகளைத் தாங்க முன்னே குமார் இல்லையென்றவுடன் வியூகம் அமைத்த எதிரியின் நாற்படையின் நடுவே வெற்றுத் தோளுடன் நிற்கும் காலாட்படையெனக்கலங்குகிறது தமிழ் சமூகம்.

பொதுவாகத் தமிழ் சமூகத்துக்கே ஒது தூணாய் இருந்தது மட்டுமல்ல, தனிப்பட்ட ரீதியிலும் தமிழ் மக்களுக்கு குமார் உறுதுணையாக இருந்தார். தலைநகரில் கண்மண் தெரியாது நடைபெறும் கைதுகளில் தமது சுற்றத்தவர்கள் எவரும் கைது செய்யப்பட்டால் குமாரின் நண்பர்களுக்கும் அவருடன் உறவானவர்களுக்கும் அவரை சிறிதளவேனும் தெரிந்தவர்க்கும், 'கூப்பிடு குமாரை' என்பதே தாரக மந்திரமாயிற்று. அப்படியே அழைத்தகுரலுக்கு ஓடி வந்தவர் அவர். பொலிஸ் காவலிலிருந்து விடுவிப்பதெனினும், நீதி மன்றத்தில் வழக்காடி விடுதலை தேடித்தருவதெனினும், பேதம் நோக்காது யாவருக்கும் அவர் முன்னின்று உழைத்தார். இன்று நாம் சுதந்திரமாகத் திரிவது குமார் செய்த உதவியாலே என்ற நன்றிக் கடனில் உருகும் உள்ளங்கள் எத்தனையோ எத்தனையோ. அவை கணக்கிலடங்கா. ஆனால் இவ்வளவு உதவிகளுக்கும் அவர் ஒரு சன்மானமும்பெறவில்லை, ஒரு கைம்மாறும் எதிர்பார்க்கவில்லை. அவரின்இழப்பு, தமிழர் அரசியல் வானில் மட்டுமல்ல ஏராளமான மக்களின் வாழ்விலும் நிரப்ப முடியாததோர் வெறுமையைத் தோற்றுவித்திருக்கிறது.

திரு, குமார் பொன்னம்பலத்தின் மறைவு தமிழர் வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவடைந்துவிட்டதன் அறிகுறி. அவரை மாய்த்து விழுத்துவதன் மூலமாக இனிமேல் ஒரு போதும் ஜனநாயகத் தளத்தில் தமிழர் அரசியல் கையாள அனுமதிக்கப்படமாட்டாது என்ற பெரும் எச்சரிக்கையினைத் தமிழினத்திற்கு அரசு விடுத்திருக்கிறது. அவர்கள் இப்படுகொலை மூலம் எங்களுக்கு நேரடியாக சவால் விட்டிருக்கின்றனர். அதனை எதிர்கொண்டு குமார் சமைத்த வழியில் அவரைப்போல் சாதனை படைக்கப்போகின்றோமா அல்லது அடிமைகளாக ஒடுங்கப் போகின்றோமா என்பதே தமிழ் மக்களாகிய எங்கள் முன் எழுந்துள்ள கேள்வி.

தமிழர் செயற்பாட்டுக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தின் குகையில் அரசோச்சிய புலிக்குரல்

"இரண்டாயிரமாவது ஆண்டு முடியும்வரை என்னை உயிருடன் விட்டுவைப்பார்களோ தெரியவில்லை"

கொல்லப்படச் சில நாட்களுக்கு முன்னர் குமார் பொன்னம்பலம் அவர்கள் மேற்குறித்தவாறு கூறியதாக அவரது மனைவி மரணவிசாரணையின்போது தெரிவித்திருந்தார்.

உள்ளுணர்வின் உந்துதல் காரணமாக அவர் எதிர்வுகூறிய அவரது இறப்பு அவர் எதிர்பார்த்தபடியே நடந்துவிட்டது.

5.1.2000 அன்று கொழும்புநகரில், அவரது மோட்டார் வண்டிக்குள் வைத்து, கயவன் ஒருவன் தன் கைத்துப்பாக்கியை இயக்கி ஐந்துகுண்டுகளை அனுப்பி குமார் பொன்னம்பலத்தின் உயிரைக் குடித்தான்.

சிங்களப் பேரினவாதிகளின் தமிழ் விரோதக் கருத்துக்களுக்கு சுடச்சுட, ஆணித்தரமான பதில்களை வழங்கி – எதிர்வாதம் புரிந்த தமிழீழ தேசப்பற்றாளர் ஒருவரின் குரலை இனிநாம் கேட்க முடியாது.

குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்ட செய்தி ஈழத் தமிழர்கள் அனைவரினதும் குடும்பசோகமாக அமைந்துவிட்டது.

அவரது இழப்பிற்கு இரங்கல் தெரிவித்தும் அவரின் போராட்டப் பங்களிப்பை நினைவு கூர்ந்தும் தமிழர் தொடர்பூடகங்கள் அஞ்சலி செலுத்தி – அவரைக் கௌரவப்படுத்தின. தமிழீழத்திலும் – புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளிலும் அவருக்கு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. படையினரின் தொல்லைகளையும் அசட்டை செய்துவிட்டு ஆயிரக்கணக்கில் கொழும்பு நகரில் திரண்ட தமிழர்கள் அவரது புகழுடலுக்கு இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக குமார் பொன்னம்பலத்தின் துணிச்சலான போராட்டப்பங்களிப்பைப் புகழ்ந்துபேசிய தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ''மாமனிதர்'' என்ற அதிஉயர் விருதை அவருக்கு வழங்கி – அன்னாரின் தேசிய சேவையை கௌரவித்து – அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பேரினவாதத்தின் மையநிலத்தில் வசித்தபடி பேரினவாதிகளுக்கு சிம்மசொப்பனமாகச் செயற்பட்டவர் மாமனிதர் குமார் பொன்மபலம். பேரினவாதிகளைப் பொறுத்தவரையில் கொழும்புவாழ் புலியாகவே அவர் இருந்தார். பிரகடனப்படுத்தப்படாத தமிழீழ அரசின் கொழும்புப் பேச்சாளர் என்றே குமாரை பேரினவாதிகள் அழைத்தனர். அந்தளவுக்கு ஆயுதம் தாங்கிய தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து – கொழும்பிலும், வெளிநாடுகளிலும் தீவிரப்பிரச்சாரம் செய்தவர் அவர்.

தமிழ் மக்களுக்கெதிரான அரசபயங்கரவாதச் செயல்களை அம்பலப்படுத்துவதிலும் – தமிழினத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதிலும் மாமனிதர் குமார் எல்லோரையும் முந்திக்கொள்வார்.

சிங்களத்தின் அரசியல்வாதிகள் மற்றும் தொடர்பூடகவியலாளர்கள் தமிழினத்திற்கு எதிராக இனவாதம் கக்கினால் அவற்றிற்கெதிராக கர்ணகடூர மொழியில் பதிலிறுத்து சிங்களப் பேரினவாதத்தின் சித்தாந்தத்தளத்தைச் சிதைக்கும் வகையில் தனது கருத்துக்குண்டுகளை, குமார் பொன்னம்பலம் வீசி எறிவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன், இனவெளிச்சட்டங்களால் சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ்மக்களை விடுவிப்பதற்காக தனது சட்டத்தொழிலின் பெரும்பகுதி நேரத்தை அர்ப்பணிப்புணர்வுடன், அவர் செலவிட்டார். தமிழ் அரசியல் கைதிகளில் 95% மானோரின் வழக்குகளை குமார்பொன்னம்பலம் கையாண்டார். இதற்காக எதுவித கட்டணங்களையும் அறவிடாது இலவசமாகப் பணிசெய்தார். அதைத் தனது கடமை என்று வர்ணித்தார்.

இத்தகைய தமிழினசேவைக்காக குமார் பொன்னம்பலத்தைத் தண்டிக்க பேரினவாதிகள் பலதடவைகள் முயன்றனர்.

அவரது வீட்டிற்கு கைக்குண்டுவீசி அவரைக் கொல்ல முயன்றனர். தொலைபேசிவாயிலாக சதா கொலைப் பயமுறுத்தல்களை விடுத்தனர். தமது இனவெறிச் சட்டங்களுக்குள் அவரைச் சிக்கவைத்து சிறையில் அடைக்க முயன்றனர். சோதனை என்ற பெயரில் அவரை அவமானப்படுத்தியும்– தொல்லைகள் கொடுத்தும் அவரைப் பழிவாங்க முயன்றனர்.

ஆனால் குமார் பொன்னம்பலம் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. மாறாக, தனது செயற்பாடுகளை அவர் தீவிரப்படுத்தி பதிலடி கொடுத்தார்.

சட்டத்திற்கு புறம்பானவகையில் தமிழர்களைத் தொல்லைப்படுத்தும் 'பாஸ்' நடைமுறை மற்றும் அடையாள அட்டைகளுடன் உலாவவேண்டும் என்ற படையினரின் உத்தரவுகளை தான் நேரடியாகச் சந்திக்கும்போது அவற்றிற்குப்பணிய மறுத்து சம்பந்தப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகச் சவால்கள் விடுத்தார்.

புறச்சூழலின்நெருக்கடிகள்–கொலைப்பயமுறுத்தல்கள்களைப் பற்றிக்கவலைப்படாமல் சொல்ல வேண்டியவற்றை – சொல்லவேண்டிய இடத்தில் – சொல்லவேண்டுமென்ற மனத்துணிவு, இந்த மனத்துணிவை செயலாக மாற்றும் வீரம் குமார் பொன்னம்பலத்திடம் இருந்தது.

தமிழரின்போராட்டத்திற்கு ஆதரவாக வெளிநாடுகளில் பணிசெய்துவிட்டு கொழும்பு திரும்பும்போது விமானநிலையத்தில் வைத்து சோதனை என்ற பெயரில் அவமானப்படுத்தப்படுவதை பொறுமையுடன் அனுமதிப்பார். அதிகாரிகள் தேடும் ஆவணங்களை பயணப்பெட்டிக்குள் வைத்துக்கொண்டுவரும் முட்டாள் நானில்லை என்று கூறி, அந்த ஆவணங்களை சேரவேண்டிய இடத்திற்கு சேரவேண்டிய வழிமுறையில் அனுப்பிவைக்கும் விஞ்ஞானவழி முறைகள் உண்டென்ற சாதாரண அறிவுகூட சோதனை போடுபவர்களுக்கு இல்லை என்று துணிச்சலுடன் கேலிபேசி – அவமதிப்புக்கு பதிலடியாக சொல்லடிகள் கொடுத்து அவற்றை பத்திரிகைகளுக்கு அனுப்பியும் வைப்பார்.

ஆயுதப்போராட்டத்தின் பிறப்புப் பற்றியும் – அதன் தவிர்க்கமுடியாத தேவைபற்றியும் உலகப் பிரமுகர்களுக்கும் விளக்குவார். தமிழ்மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி – அவற்றை சர்வதேச மனிதஉரிமைக் கழகங்களிடம் எடுத்துச் செல்வார். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் போராட்டத்திற்கு ஆற்றவேண்டிய பங்களிப்புகள் பற்றி விளக்குவார். பேரினவாதிகளின் இனவாதக் கருத்துக்களுக்கு பதில் கருத்துக்களை அளிப்பார். அரசபயங்கரவாதத்திற்கு ஆளாகும் தமிழர்களுக்கு சட்டஉதவிகள் வழங்கி – அவர்களின் துயரங்களை பகிரங்கப்படுத்தி சிங்கள அரசை சர்வதேசத்தின்முன் தோலுரித்துக் காட்டுவார். தமிழ்மக்களின் தலைமைச் சக்தி புலிகள் இயக்கம்தான் என்று வாதிடுவார். புலிகளின் போராட்ட அரசியலை முழுமையாகத்தான் ஏற்றுக் கொள்வதாக பிரகடனம் செய்வார்.

இவ்விதம் புலிகள் இயக்கத்திற்கும் – போராட்டத்திற்கும் ஆதரவாக பேசியும் – செயற்பட்டும் – ஜனநாயகரீதியில் – உன்னத போராட்டப் பங்களிப்பை குமார் பொன்னம்பலம் வழங்கியுள்ளார். அதன்மூலம் எமது இனத்தின்அறிவு ஜீவிகளுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்.

சிங்களப் பேரினவாதிகளுடன் மட்டும் அவர் கருத்துப்போர் தொடுக்கவில்லை, பேரினவாதத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவல் செய்யும் தமிழ்க்குழுக்களுக்கு எதிராகவும் அவர் காட்டமானவகையில் தனது எதிர்ப்புணர்வைக் காட்டியுள்ளார். தமிழ்க் குழுக்களைக் கண்டிப்பதற்கு குமார் பொன்னம்பலம் அவர்கள் கடுமையான சொற்களையே தேர்ந்தெடுப்பார்.

நீலன்திருச்செல்வம் கொல்லப்பட்டபோது அவரது இறுதிச்சடங்கை கொழும்புவாழ் தமிழர்கள் பகிஸ்கரித்திருந்தனர். இதற்காக தமிழ் மக்களை குறிப்பாக தமிழ்அறிவு ஜீவிகளை பேரினவாதிகள் கண்டித்தனர். இதற்காக குமார் பொன்னம்பலத்தையும் பேரினவாதிகள் கண்டித்திருந்தனர்.

இறந்தவருக்கு இறுதிமரியாதை செலுத்துவது ஒரு மனிதப் பண்பாடு. பகைவனாய் இருந்தாலும் அந்த நாகரீகத்தைக் கடைப்பிடிப்பது மனித மாண்பு. ஆனால், இறந்தவர் ஒரு இனத்துரோகி என்றால் – அவரது செயற்பாட்டால் ஒரு இனமே அவலத்தை சந்தித்தது என்றால் அத்தகைய கோடாரிக்காம்புகளுக்கும் இறுதிக்கௌரவம் வழங்க வேண்டும் என்ற கருத்தை குமார் பொன்னம்பலம் நிராகரித்தார்.

நீலன் திருச்செல்வத்தின் இறுதிச்சடங்கைப் புறக்கணித்த தமிழர்களின் செயல் நியாயமானது என்று விளக்கங்கள் பல கூறி நியாயப்படுத்தி 'ஐலண்ட்' ஆங்கில நாளிதழுக்கு அனுப்பி வைத்தார்.

சந்திரிகா அம்மையார் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி இரண்டாம் நாள் சிங்கள மக்களுக்கு தொலைக்காட்சிவாயிலாக அம்மையார் உரையாற்றினார். கொழும்புவாழ் தமிழர்கள் மத்தியில் பதட்டமான சூழல் தோன்றிய நேரம் அது. அம்மையார் தனது உரையில் தமிழர்களை குறிப்பாக போராட்டத்தை ஆதரிக்கும் கொழும்புவாழ் தமிழர்களை கடுமையாக எச்சரித்தார். அந்த எச்சரிக்கை உரைக்கு குமார் பொன்னம்பலம் துணிச்சலுடன் பதிலெழுதினார். "உம்முடைய உரையில் நீர்யாரை எச்சரித்தீரோ அவர்களின் நானும் ஒருவன்" என்று எழுதினார். அதேவேளை "உம்முடைய எச்சரிக்கைகளுக்கு அடிபணிய மறுப்பவர்களில் நானும் ஒருவன்" என்றார். உம்மீது நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதலைக் குறிப்பிட்டு அது ஒரு 'இருண்ட இரவு' என வர்ணித்திருந்தீர்கள். ஆனால் உங்களுக்கு முன்னரே – உங்களது தலைமையிலான படையினரின் வெறிச் செயல்களால் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் அந்த இருண்டஇரவுகளைச் சந்தித்துள்ளனர்" என்று சுட்டிக்காட்டினார். இவ்வளவையும் துணிச்சலுடன் எழுதிய குமார் பொன்னம்பலம் அவர்கள் தனது பதில்மடலை எழுதுவதற்குப் பயன்படுத்திய ஆரம்பவாக்கியம் அவரது அஞ்சாமையின் உச்சக்கட்டத்தையும் – தமிழீழத்தேசப் பற்றையும் வெளிப்படுத்துகின்றது. *"நான் ஒரு தமிழீழத்தவன் என்ற வகையில் இதை எழுதுகின்றேன். புலிகள் இயக்கத்தினது அரசியல் சித்தாந்தத்தின் தீவிர ஆதரவளான் என்றவகையில் இதை எழுதுகின்றேன்"* என்று கடிதத்தை தொடக்கியிருந்தார்.

சாவரக்கன் தன்னை நெருங்கிவிட்டான் என்பது குமார் பொன்மபலத்திற்கு நன்றாகத் தெரிந்திருந்தது. தனது சாவை எதிர்வுகூறும் அளவுக்கு அது அவருக்குத் துல்லியமாகத் தெரிந்தது. எனினும், உயிருக்கு அஞ்சி கொள்கையில் பின்வாங்கி அடிபணிய அவர் விரும்பவில்லை.

சாவுவரும் என உறுதியாகத் தெரிந்திருந்தும் போராடுவது போராளிக்குணம். அந்த வகையில், குமார் பொன்னம்பலம் ஒரு போராளிதான்.

எல்லாளன்
வன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள தலைநகரில் அடக்கப்பட்ட ஒரு தமிழ்க் குரல்

நீ உனது வாழ்க்கையை எண்ணி பயந்தாயானால் வாயை மூடிக்கொண்டிரு. நீ உனது வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்று எண்ணினாயானால் அந்த வாழ்க்கையில் தான் அர்த்தம் என்ன?

நான் தன்மானத்துடன் உண்மையான தமிழனாக வாழ விரும்புகின்றேன். நான் ஒரு அடிமையைப்போல் வாழ விரும்பவில்லை. இந்த ஆட்சியாளர்களும் இனவாதிகளும் சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டிக்கொண்டு வாழ என்னால் முடியாது. எனது விருப்பங்களுக்கு எதிரான இவர்களது பேச்சுக்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனும்போது, நான் ஏன் வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டும்?

– குமார் பொன்னம்பலம் –

சிங்கள தலைநகரில் தமிழர்களுக்காக குரல் எழுப்பிக் கொண்டிருந்த ஒரு தன்மானத் தமிழனின் உயிர் சிங்கள கோழைகளால் பறிக்கப்பட்டு விட்டது. சர்வதேசம் எங்கும் அடிக்கடி பறந்து சிங்கள அரசின் தமிழர் படுகொலைகளையும் இனப் படுகொலையையும் ஆக்கிரமிப்புக்களையும் அம்பலப்படுத்தி வந்த ஒரு தேசப் பற்றாளன் சிங்கள பேரினவாதத்தின் கொடும் கரங்களால் அழிக்கப்பட்டுவிட்டான். இந்த படுகொலையை சிங்களம் செய்ததன் மூலம், தனது தலை நகரில் தமிழர்களுக்கான ஆதரவுக்குரல் எழுப்பப்படக் கூடாது என்பதனை மறைமுகமாக கூறியுள்ளது. ஆனால், கொழும்பில் தமிழ்க் குரல் அடக்கப்பட்டதால் சர்வதேசத்தில் தனது அநியாயங்களும், மனித உரிமை மீறல்களும் அமுங்கிப் போய்விடும் என சிங்களம் எண்ணினால் அது நிச்சயமாக இல்லை. கொழும்பில் இருந்து எழுந்த குமார் பொன்னம்பலம் எனும் ஆத்மா அடக்கப்பட்டு விட்டதானாலும், அவரது மறைவின் மூலம் எழுந்துள்ள எழுச்சியானது சர்வதேச ரீதியில் சிங்களத்தை இனங்காட்டும் என்பது நிச்சயம்.

குமார் பொன்னம்பலம், இவரை ஓர் தேர்ந்த குற்றவியல் வழக்கறிஞர் என்றும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்றுமே பத்து வருடங்களுக்கு முன் மக்கள் அறிந்திருந்தனர். தமிழீழப் போராட்டம் கூர்மையடைந்து வளர்ச்சி பெற்ற நிலையில் குமார் பொன்னம்பலத்தின் நிலைப்பாட்டிலும் மாற்றம் ஏற்பட்டன. ஆரம்பத்தில் தமிழீழப் போராட்டத்தில் விருப்புக் குன்றியவராக இவர் இருந்தபோதிலும் பின்னர் சிறீலங்கா ஆட்சியாளர்களின் துரோகத் தனங்களாலும் இன விரோதப் போக்குகளாலும் இவர் தமிழீழப் போராட்டத்தின்பால் ஆதரவு கொளளத் தொடங்கினார். பின்னர் இவர், அதாவது 90களின் நடுப்பகுதியில் சிங்களத் தலைநகரில் இருந்துகொண்டு தமிழீழ போராட்டத்திற்கான தனது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கக் தொடங்கியதுடன் புதிய சிறீலங்கா அரசின், தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டிக்கும் ஓர் துணிவான மனிதராக மாற்றமடைந்தார்.

இவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள் இவரை சிங்கத்தின் குகைக்குள் வாழும் ஒரு புலி என்றே அழைப்பதுண்டு. இவர் எதற்கு ம் தயங்குபவர் அல்ல. ஓர் செய்தியாளரிடம் தனது தந்தையாரின் கடந்த கால அரசியலையே விமர்சித்தவர். அதே வேளை, கொழும்புத் தமிழ் குழுக்களும் இவரிடம் இருந்து தப்பவில்லை. மிகக்கடுமையான விமர்சனங்களை இக் குழுக்களின் மீது வைத்தார். விடுதலைப் புலிகளால்தான் தமிழ் மக்கள் காப்பாற்றப் படுவார்கள் என்றும் சிங்கள, மக்களுடன்இணைந்து தமிழ் மக்களாலும் சுதந்திரமாக வாழ்வது இனியும் இயலாத காரியம். தமிழர்களுடைய சுதந்திரம் ஆயுதப் போராட்டம் ஒன்றின் மூலம்தான் வென்றெடுக்கப்பட வேண்டும். அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழர்களது சுதந்திர தேசம் வென்றெடுக்கப்படும் என்பதில் ஆழமான நம்பிக்கை வைத்திருந்தார்.

வடக்கு–கிழக்கில் அரச பயங்கர வாதிகளால் கைது செய்யப்பட்டு தமிழர்கள் சித்திரவதைகளை அனுபவித்தபோதும், கொழும்பில் காரணம் இன்றி தமிழர்கள் கைது செய்யப்பட்டபோதும், சிறைக் கூடங்களில் தமிழ் கைதிகள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டபோதும் துணிந்து சென்றுவாதாடி அவர்களை மீட்டவர் குமார் பொன்னம்பலம் அவர்கள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை சிங்கள தொலைக்காட்சி ஒன்றிற்குப் பேட்டி அளித்தபோது, அரசின் தமிழர் விரோதப் போக்குகளை வெளிக்கொணர்ந்ததாலும் சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களை அம்பலப் படுத்தியதாலும் பேட்டியின்பின் உளவுத் துறையினரால் கடுமையான விசாரணைக்கு குமார் பொன்னம்பலம் உட்படுத்தப்பட்டார். இவ் விசாரணை நடவடிக்கைகள் சில வேளைகளில் குமார் பொன்னம்பலத்தின் எதிர்பாலத்திற்கே கேள்விக் குறியாக அமையுமோ என நண்பர்கள் எதிர்பார்த்தவேளை, அரசின் சவாலை உறுதியாக எதிர் கொண்டார். தன் மீதான விசாரணையின்போது ஒரு கட்டத்தில் அவர், நான் சிறீலங்காவில் நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்கு எதிராக நடந்துகொள்ளவில்லை. சட்டம் தடைசெய்த எதனையும் நான் புரியவில்லை. நீதித்துறையிடம் எனது பிரச்சினையை விட்டுவிடுங்கள். அவர்கள் விசாரித்து தண்டனை வழங்கட்டும் என்றார். அதேவேளை, சிறீலங்கா அரசு தமிழர்கள் மீது பாரபட்சம் காட்டுகிறது. மற்ற சமூகத்தினரை விட தமிழ்ச் சமூகம் வேறுபடுத்தி பார்க்கப்படுகிறது என அதே நீதித்துறையின் மீது அடிப்படை மனித உரிமைமீறல் வழக்கொன்றையும் தாக்கல் செய்தார்.

செம்மணி வழக்கு விசாரணைகளில் பங்குபற்ற யாழ் குடாவிற்குச் செல்ல முயன்ற அவர், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இல்லை என்ற காரணத்தால் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இதனை எதிர்த்து குமார் பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்நிலையில் யாழ் குடாவிற்குச் செல்ல அனுமதி தேவையில்லை என உயர் நீதிமன்றம் கூறி விசாரணைகளைத் தள்ளி வைத்தது. இப்படி ஏராளமான சம்பவங்களை கூறிக்கொண்டே போகலாம்.

குமார் பொன்னம்பலத்தை மிகச் சாதாரண மனிதர் என்றே கூறலாம். பல தடவைகள் அவரது நண்பர்கள் அவரது பாதுகாப்பில் அக்கறை செலுத்தவேண்டும் எனக் கூறியபோதிலும் அவர், சாதாரணமாகவே கொழும்பு வீதிகளில் நடமாடினார். அவர், தான் சந்திக்கக்கூடிய இன்னல்களையும் சிக்கல்களையும் என்றுமே எண்ணிப் பார்க்கவில்லை. எல்லோரையும் நம்பினார். அவருக்கு ஏராளமான சிங்கள நண்பர்கள். வயது வித்தியாசம் இன்றி எல்லோருடனும் பழகக்கூடியவர். அவரது தமிழ் வார்த்தைப் பிரயோகம் மிக அழகானது. பேசும்போதுகூட மிகச் சாதாரண சொற்றொடர்களையே பாவிப்பார். ஆனால், வானொலி, தொலைக்காட்சி பேட்டிகளில் மிக ஆழமான வசனங்களை அவர் கையாள்வது வழக்கம்.

அவரது இழப்பை அறிந்த சாதாரண தமிழனின் மனம், "இவரேன் தனியாக வெளிக்கிட்டு போனவர்" உயிருக்கு ஆபத்து என்றால் பாதுகாப்புடன் செல்வதுதானே என எண்ணலாம். ஆனால், அவர் தனது பாதுகாப்பிற்காக எப்பொழுதுமே பாதுகாவலர்களை வைத்துக்கொண்டதில்லை. ஒருமுறை ஓர் பத்திரிகையாளர் அவரை சந்தித்தபொழுது அவரது பாதுகாப்புப் பற்றி கவலைப்பட்டார். சிங்களவர்களை மிகக்கடுமையான விமர்சனங்களை முன் வைக்கின்றீர்களே? நீங்கள் கொஞ்சம் பாதுகாப்பாக இருப்பது நல்லதுதானே? என கூறினார். அதற்கு குமார், எனது உயிருக்கு எப்போதோ குறிவைக்கப்பட்டு விட்டது. ஆனால் அதற்கெல்லாம் பயந்து உயிர்வாழ வேண்டிய அவசியம் இல்லை. அல்லது உயிருக்கு பயந்து வெளிநாடு சென்று வாழவேண்டிய நிலையிலும் நான் இல்லை என துணிவுடன் பதிலளித்தார்.

ஆனால் இன்றுநாம் அவரை இழந்து விட்டோம். தமிழீழ விடுதலைப் போர் மற்றுமோர் தியாகத்தை தன்னகத்தே ஏற்றுக் கொண்டது. குமார் பொன்னம்பலம் அவர்கள் எம்மைவிட்டுச் சென்றிருக்கலாம். ஆனால் அவரது துணிவு, அவரது செயற்பாடு, அவரது இலக்கு, அவரால் ஏற்பட்ட எழுச்சி இன்று தமிழ் மக்களை மிகுந்த நெகிழ்விற்கும், ஓர் ஆவேசத்திற்கும் இட்டுச் கென்றுள்ளது. இதையே உலகளாவிய ரீதியில் அவருக்காக எழுப்பப்படும் அனுதாபச் செய்திகளும் கருத்துக்களும் கூறி நிற்கின்றன. தேசியத் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களது தமிழ்தேச விடிவிற்கான செயற்பாடுகளுக்காக அவருக்கு தமிழீழத்தின் மிக உயரிய 'மாமனிதர்' விருதையும் வழங்கி கௌரவித்துள்ளனர்.

இன்று நாம் அவரை இழந்திருக்கலாம். இந்த இழப்பை ஈடுசெய்ய எமக்கு வழிகள் இல்லாது இருக்கலாம். ஆனால் தமிழீழ தேசம் என்றுமே குமார் பொன்னம்பலத்தை மறக்காது. தேசத்தின் விடிவில் அவரது பங்களிப்பு என்றுமே நிலைத்திருக்கும்.

– உதயன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் வாரமஞ்சரி

09.01.2000

கருத்துக்களை அஞ்சாது தெரிவிக்கும் தமிழ்த் தலைவர் குமார் பொன்னம்பலம்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி தமிழினத்தைப் பொறுத்தவரையில் அதிர்ச்சியாகவே இருக்கிறது. தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுத்த ஒருவர் என்ற ரீதியில் அவரது மறைவு தமிழர்களுக்கு அதிர்ச்சியை தருவதில் வியப்பில்லை.

குமார் பொன்னம்பலம் தமிழ் அரசியல் கட்சியொன்றின் பிரமுகர். மனிதாபிமானம் மிக்க பண்பாளர். மனித உரிமைகள் இயக்க நடவடிக்கையாளர். இவையனைத்திற்கும் மேலாக ஒரு வழக்கறிஞர்.

இந்நாட்டின் அரசியல், சட்டத்துறையில் குறிப்பிடத்தக்க ஒருவரான அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் புதல்வர் என்ற பெருமையையும் அவர் பெறுகிறார். ஒருவர் பிறந்து எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது கேள்விக்குரியதல்ல, அவர் வாழ்ந்த காலத்தில் சாதித்தவைகள் என்ன என்பது ஆய்வுக்குரியது. அந்த வகையில் குமார் பொன்னம்பலம் தமிழ் இனத்துக்காக செய்த பல காரியங்கள் உண்டு. அ தை புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் இங்கு வாழ்வோரும் மறக்க மாட்டார்கள்.

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா மறைந்தபோது கலைஞர் மு.கருணாநிதி "சாவே உனக்கு சாவு" வந்து சேராதோ என்று கூறியது ஞாபகத்துக்கு வருகிறது. அந்த ரீதியிலேயே குமாரின் மறைவு தமிழினத்தின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அரசியலில் தலைவர்கள் பலவிதம். தங்கள் பதவிகளைத் தக்க வைப்பதற்காக அமைதி பேணும் தலைவர்கள் உண்டு. தங்களது சலுகைகளை பாதுகாக்க வாய்மூடி மௌனியாக இருக்கும் தலைவர்களும் உண்டு. கருத்துக்களை அச்சமின்றித் துணிந்து எடுத்துச் சொல்லக்வடியவர்களும் உண்டு. அந்த வரிசையில் எதற்கும் அஞ்சாது துணிவுடன் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய ஒரு அரசியல் வாதியாக, தமிழராக குமார் பொன்னம்பலம் விளங்கியிருக்கிறார்.


கருத்துக்களை அஞ்சாது தெரிவிக்கும்
தமிழ்த் தலைவர் குமார் பொன்னம்பலம்

தனி மனித விருப்பு, வெறுப்புகளின் விளைவே' குமார் பொன்னம்பலத்தின் மரணம் என்பது தெட்டத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர் எப்போதும் தான் சார்ந்துள்ள தமிழினத்தின் நலன் கருதியே கருத்துக்கூறி வந்திருக்கிறார். தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் மாயவலைகள் எங்கு பின்னப்படுகிறதோ அப்போது அதை அறுத்தெறியும் துணிவைப் பெற்று அவற்றை அம்பலப்படுத்திய நிகழ்வுகள் ஏராளம்.

தமிழினத்தின் மீது அடக்குமுறை நடவடிக்கைகள் எங்கெல்லாம் இடம்பெறுகிறதோ அப்போது அவற்றை எதிர்க்கும் முதல்வராக குமார் பொன்னமபலம் செயற்பட்டிருக்கிறார். இதன் விளைவாக அவர் அச்சுறுத்தலுக்கும் ஆளாகியிருக்கிறார். பயமுறுத்தப்பட்டிருக்கிறார்.

ஜனநாயகக் குரல் ஒய்ந்தது

இலங்கைத் தமிழர்களது பாரம்பரிய ஜனநாயகக்கட்சிகளின் வரிசையில் இடையறாது ஒலித்துவந்த ஒரு ஜனநாயகக் குரல் ஒய்ந்துவிட்டதாக தமிழர்கள் கருதுகிறார்கள்.

பேரினவாதப் போக்குடையவர்களால் தமிழ் மக்களுக்கு எதிராக கருத்துக்கள் தெரிவிக்கப்படும்போது அதற்கு எதிராக துணிவுடன் கருத்து தெரிவிக்கும் ஆளுமையை குமார் பொன்னம்பலம் பெற்றிருந்தார். வெறும் பத்திரிகைகளுக்கு விடுக்கும் அறிக்கைகளுடன் மாத்திரம் அவர் பணி நின்றுவிடவில்லை. நேரடி விவாதங்களின்போதும் அவர் துணிவுடன் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977ஆம் ஆண்டு முதலாவது தடவையாக பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்ட குமார் பொன்னம்பலம் அதன் பின்னர் 1982ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டார். எனினும் இரண்டிலுமே அவர் வெற்றிபெறவில்லை.

அரசியல் அபிலாஷைகளுக்காக வாய்மூடி மௌனிகளாக இருப்பதை விட தனது சமூகம் தன்மானத்துடன் வாழ குரல் கொடுப்பதே மேலானது என்ற நவீன சிந்தாந்தத்தை அவர் கடைப்பிடித்திருக்கிறார். இதன்விளைவாக இவர் எதிர் விமரிசனங்களுக்கும்,, கண்டனத்துக்கும் ஆளாகிய சம்பவங்களும் உண்டு.

1938ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் திகதி பிறந்த குமார் பொன்னம்பலம் இயற்கை விஞ்ஞானத்திலும் பட்டம் பெற்று 1974ம் ஆண்டு பரிஷ்டராப் பட்டம் பெற்றிருக்கிறார். அவர் தனது அறுபதாவது சஷ்டியப்த பூர்த்தியை தமிழ் நாடு திருக்கடையூரில் நடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1944ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. 1966ம் ஆண்டில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வாலிபர் முன்னணியின் செயலாளராக அரசியலில் பிரவேசித்த குமார் பொன்னம்பலம் இறுதியில் அதன் தலைவராகவும் பரிணமித்ததார்.

வட–கிழக்கு தமிழர்களுக்கும், மலையக இந்திய வம்சாவளி, தென்னிலங்கை தமிழர்களுக்கும் இடையே பாரிய இடைவெளியை நீக்கியதில் குமார் பொன்னம்பலத்துக்கு பங்குண்டு. மலையக மக்கள் மீதும் அவர் பற்றுக் கொண்டிருந்த பல சம்பவங்கள் உண்டு. மலையக வாலிபர்களுக்கு எதிரான பல வழக்குகளில் அவர் ஆஜராகி வாதிட்டிருக்கிறார்

களுத்துறைச் சிசறயில் தடுத்து வைக்கப்பட்ட பல இளைஞர்களது நலனில் அக்கறைகொண்டு அவர்களுக்காக வாதிட்டும் இருக்கிறார். குமார் பொன்னம்பலம் சட்டத்தரணிகளை மிகவும் மதித்து பண்புடன் பழகும் இனிய சுபாவம் உடையவர். அவர் மமதையுடன் செயல்பட்டதில்லை. எல்லோருடனும் அன்புடன் பழகும் பண்புடையவர். நீதிமன்றத்தைத் தவறாக வழிநத்திட யதில்லை. நீதிபதிகளும் அவருடன் சிநேகபூர்வமாகவே இருந்திருக்கிறார்கள். அவர் சாதிக்க வேண்டியவை ஏராளம் இருந்தது. சந்தர்ப்பமும் இருந்தது. ஆனாலும் அவை கைகூடி வரமுடியாது போனமை துரதிர்ஷ்டவசமானது.

வழக்காளிகள் விடயத்தில் தனக்கென்று சில உதாரண கொள்கைகளை அவர் கடைப்பிடித்திருந்தார். எந்தவொரு வழக்காக இருந்தாலும் அதை ஆரம்பத்திலிருந்தே தானே நடத்த வேண்டும் என்ற விருப்புடையவர். இடைநடுவில் இன்றொரு சட்டத்தரணியிடமிருந்து அந்த வழக்கைப் பெற்று தொடர்ந்து நடத்துவதை அவர் விரும்பியதில்லை. தனது தந்தையார் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் இதை தனக்கு கற்றுக்கொடுத்தாக குமார் அநேக சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார்.

அவர் நீதிமன்றத்தில் தனது கட்சிக்காரருக்காக ஆஜராகி வாதாடும்போது அதைப் பார்ப்பதற்கென்றே பலரும் குழுமியிருப்பதை அவதானிக்க முடியும். அவரது குறுக்கு விசாரணைகள் சுவாரஸ்யம் மிக்கதாகவும் இருக்கும். இங்கு சிங்கள மொழியிலும் சரளமாக வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெறுவதை அவதானிக்கலாம். நெற்றியில் விபூதி பெரிய சந்தனத் திலகத்துடன் கொழும்பு மேல் நீதிமன்றங்களில் அவர் தனது கனிஷ்ட சட்டத்தரணிகளுடன் ஆஜராகி பல வழக்குகளில் வெற்றியீட்டியுள்ளார். அநேக இளைஞர்களின் விடுதலைக்குக் காரணமானவர்.

கொக்கட்டிச் சோலை சம்பவம்

பிற அரசியல் கட்சித் தலைவர்களைப் போன்று வார்த்தை ஜாலங்களால் அரசியல் நடத்தவில்லை. துணிவுடன் காரியங்களைச் சாதித்தவர் இவர். அம்பாறை மாவட்டத்தில் கொக்கட்டிச் சோலையில் 67 பொது மக்கள் பலியான சம்பவத்தின்போது அதை விமர்சித்ததுடன் அந்த விசாரணைக்கு துணிவுடன் ஆஜராகியிருந்தவர் பிற சட்டத்தரணிகள் தயக்கம் காட்டியிருந்தபோது குமார் பொன்னம்பலம் துணிவுடன் ஆஜராகியிருந்தார். கிருஷாந்தி குமாரசவாமி கொலை வழக்கிலும், யாழ்.பெண்கள் மனித உரிமைகள் சங்கத்தின் சார்பில் ஆஜராகியிருந்தார். இன்னும் இது போன்ற மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் குமார் பொன்னம்பலம் ஆஜராகியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் தன்மானம் காத்து வாழ வேண்டும் என்ற சிந்தனையை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஆழமாக வலியுறுத்தி வந்தவர் குமார் பொன்னம்பலமேயாவார். இதன் காரணமாக தமிழர்கள் மத்தியில் மிக நம்பிக்கையும், செல்வாக்கும் பெற்றவராக இவர் காணப்பட்டார். இதன் காரணமாக பேரினவாதிகளின் விமரிசனங்களுக்கு ஆளாகினார்.

அவரது விவேகமும், அறிவாற்றலும் இக்கட்டான இச்சூழ்நிலையில் தமிழினத்துக்கு கிடைக்காமல் போனது துரதிர்ஷ்டமானது. குமார் பொன்னம்பலம் என்ற தனி மனிதன் மறைந்தாலும் தமிழினத்தின் மத்தியில் அந்த நாமம் என்றும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும்.

சட்டத்தரணி கே. கபாஸ் சந்திரபோஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.01.2000

அற்புதராசாவை அடுத்து குமார் பொன்னம்பலம்

மிதவாத தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவருமான குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டது இன விடுதலைக்காக ஜனநாயக ரீதியில் போராடும் சக்திகளுக்கு மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்துள்ளது.

மிகவும் புகழ்பெற்ற அரசியல் தலைவரும் சட்ட மேதையுமான அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் புதல்வரான அமரர் குமார் பொன்னம்பலம் தனிப்பட்ட ரீதியில் எத்தனையோ பரம்பரைக்கு போஷிக்கக்கூடிய செல்வச் செழிப்புள்ள குடும்பத்தை சேர்ந்தவரும்கூட. தனது சுய இலாபத்திற்கு மிகமிக அப்பால் தனது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய நெருப்பு பயணத்தையே அரசியலில் மேற்கொண்டார்.

எத்தனையோ அரசியல் தலைவர்கள் தான் உண்டு தன் வேலையுண்டு என்று ஒதுங்கி வாழ்கிறார்கள். இன்னொரு வகையினர் இனத்தை விற்று சரணாகதி வயிற்றுப் பிழைப்பு அரசியல் நடத்துகின்றனர். மற்றொரு வகையினரோ நமக்கேன் வம்பென்று மதில் மேல்பூனை அரசியலை நடத்தி ஓடுமீன் ஓடி உறுமீன்வரும் வரைக்கும் காத்திருக்கிறார்கள்.

இதனால் விடுதலை வேட்கையுடன் பரிதவிக்கும் மக்களுக்கு ஜனநாயக ரீதியில் குரல்கொடுக்கும் சக்திகளின் வெற்றிடம் தவிர்க்கமுடியாதபடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினராகவோ வேறு அரசியல் பதவிகளோ இல்லாது தமிழ்க் காங்கிரஸ் கட்சி தலைவர் என்ற லேபிளை மட்டும் வைத்துக்கொண்டு துணிகரமாக தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துப் போராடியவர்.

ஜனாதிபதிக்கு தொலைமடல் மகஜரை அனுப்பி தொடர்பூடகங்களுக்கும் பிரதிகளைக் கொடுத்து மலினமான பிரசார அரசியலை நடத்தும் உளுத்துப்போன அரசியல்வாதிகள் மத்தியில் குமார் பொன்னம்பலம் ஒரு கலங்கரை விளக்கமாகவே தமிழ் மக்களுக்கு அண்மைக்காலமாகத் தென்பட்டார்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ்மக்கள் மத்தியில் அங்கீகாரம் பெற்ற ஒரு தலைவராக துளிர்விட்டுவரும் வேளையில் அதனைச் சகிக்க முடியாத சக்திகளே அவரின் உயிருக்கு உலைவைத்திருப்பதாக நோக்கர்கள் கருதுகிறார்கள்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு விடுதலைப்புலிகளுடன் பேசியே ஆகவேண்டுமென்று எல்லோருமே சொல்கிறார்களென்றால் அதற்கு காரணம் அவர்களின் ஆயுதரீதியிலான பலமா? அல்லது வரித்துக்கொண்ட கொள்கையில் தளராத உறுதியா? இரண்டுமேதான் காரணம்.

இந்த நிலையில் விடுதலைக்காக வீரியத்துடன் குரல் கொடுக்கும் ஜனநாயக சக்திகள் இல்லாதது பேச்சுவார்த்தைக்கான அழுத்தத்தை தேசிய சர்வதேசிய மட்டத்தில் கொடுப்பதற்கு தடையாக உள்ள தென்ற ஆதங்கம் அநேக தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

அமரர் குமார் பொன்னம்பலம் இந்த வெற்றிடத்தை நிரப்புபவராக வளர்ந்துவந்த நிலையிலேயே கொல்லப்பட்டிருக்கிறார்.

பாராளுமன்ற தேர்தல் ஒன்று நடந்தால் குமார் பொன்னம்பலமும் அவரின் கட்சியும் வடக்கு கிழக்கு தேர்தல் களத்தில் முக்கிய சக்தியாக மாறக்கூடிய சூழல் உள்ளதென்று அரசியல் அவதானிகள் கருதிவந்த வேளையிலேயே குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

அமரர் குமார் பொன்னம்பலம் வெறும் பத்திரிகை அரசியலை நடத்தவில்லை. சொல்லவேண்டிய கருத்துகளை சொல்லவேண்டிய முறையில் உறைப்பாகவே சொல்லி வந்தவர். சந்தர்ப்பவாத அறிக்கைகளுக்காக வார்த்தைகளையோ கருத்துக்களையோ அடக்கி வாசிக்காது ஆரோக்கியமாகவும் அதே வேளை ஆக்ரோஷமாகவும் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் குரல் கொடுத்தவர்.

அவர் இறுதியாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்களுக்கு எழுதிய பகிரங்க மடலில் ஒரு ஈழவன் என்ற வகையில் உங்களுக்கு எழுதுகிறேன்.

ஆனால் அதைவிட முக்கியமாக விடுதலைப் புலிகளின் அரசியல் தத்துவத்தின் சஞ்சலமேதுமில்லாத உறுதியான ஒரு ஆதரவாளன் என்ற வகையிலும் அந்த நம்பிக்கையுடன் தெற்கில் வாழும் ஒருவன் என்ற வகையிலும் இதை எழுதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலைப்பாட்டை இலங்கை தீவுக்குள் மாத்திரமல்ல வெளியிலும் பேச்சிலும் எழுத்திலும் பகிரங்கமாக வெளிப்படுத்தியவன் என்ற வகையிலும் எழுதுகிறேன்.

உங்களது பேச்சில் நீங்கள் அடையாளம் கண்டு கொண்ட ஒருவன் என்ற வகையிலும் உங்களது பேச்சில் பரவலாக காணப்படும் அப்பட்டமான அச்சுறுத்தல்களால் கிலேசமடைய மறுக்கும் ஒருவன் என்ற வகையிலும் இதை எழுதுகிறேன் என்று தனது மரணசாசனமெனத் தெரிந்தோ தெரியாமலோ எழுதியுள்ளார்.

கடைசியாக அவர் எழுதிய பகிரங்கமடலில் தன்னையும், தனது நிலைப்பாட்டையும் தெளிவாக அப்பட்டமாக பச்சையாக வெளிப்படுத்தினார்.

தனது கருத்தில் செயற்பாட்டில் தனக்கு வரக்கூடிய அரசியல் ரீதியான சட்டரீதியான நெருக்குவாரங்களை ஜனநாயக ரீதியில் எதிர்கொள்ளும் துணிச்சலிலேயே செயற்பட்டார். இயங்கினார்.

ஆனால் அவரை அவர் எண்ணியவாறு எதிர்கொள்ள முடியாத சக்திகள் அவரை கொலை செய்ததன்மூலம் தமது குறிக்கோளை நிலைநாட்டலாமென்று நம்பி செயற்பட்டுள்ளது.

இனவிடுதலைக்கான ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் காலத்தின் தேவை காரணமாகவும், தவிர்க்க முடியாமலும் அண்மைக்காலமாக வீரியம் பெற்று வந்தன.

இதற்கு பத்திரிகையாளன் என்ற வகையில் பேனாவின் பலத்தில் மட்டும் நம்பிக்கை வைத்து செயற்பட்ட தினமுரசு வாரமலர் ஆசிரியரும் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினருமான ரமேஷ் அற்புதராசா நடராசா ஒங்கி குரல் கொடுத்தார்.

அரசியல்வாதி என்ற வகையில் குமார் பொன்னம்பலம் அவர்களும், சமூகசேவையாளர்கள் இணைந்துள்ள கொழும்பு பணிக்குழுவும் இனவிடுதலைக்கான ஜனநாயக ரீதியான செயற்பாடுகளில் தங்களை வரித்து செயற்பட்டனர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்கி ஒடுக்க முனையும் சக்திகளும் அவர்களுக்கு துதிபாடும் கோடரிக்காம்புகளும் இத்தகைய ஆரோக்கியமான செயற்பாடுகளை முளையில் கிள்ளியெறிய முனைந்துள்ளதன் வெளிப்பாடாகவே தினமுரசு ஆசிரியரின் கொலை அமைந்தது.

இந்த கொலையை அடுத்து இப்போது குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்டுள்ளார். அற்புதனில் தொடங்கியது குமாரில் முடிவடைந்துவிடுமா அல்லது தொடருமா? என்பதற்கு எதிர்காலமே கட்டியம் கூறும்.

தினமுரசு ஆசிரியர் கொல்லப்பட்டபோது சூத்திரதாரிகள் யாரென்பதில் எழுந்த சந்தேகமே குமார் பொன்னம்பலம் சுடப்பட்டபோதும் தவிர்க்கமுடியாதபடி எழுந்தன.

தமிழ் மிதவாத தலைவர்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை தீவிரம்பெற்ற பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட தேசியக் கட்சியில் அங்கம் வகித்த பலர் கொல்லப்பட்டார்கள்.

அல்பிரட் துரையப்பா முதல் நீலன்திருச்செல்வம் வரையான தமிழ் அரசியல்வாதிகளின் கொலைகள் தமிழ் தீவிரவாதத்தின் பேரால் மேற்கொளளப்பட்டன. நிராயுதபாணிகளான அரசியல் தலைவர்கள் கொல்லப்படுவது ஜனநாயக விரோத நடவடிக்கையேயாகும்.

ஆனால் முன்னைய கொல்லப்பட்டவர்களை விட வேறுபட்ட நிலைப்பாட்டை கொண்டிருந்த குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பது நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும், துணிச்சலுடனும் தான் சார்ந்த இனத்தின் நலனுக்காக செயற்படத்துணியும் அருமையான அரசியற் தலைமைத்துவ சிந்தனைக்கு குந்தகம் விளைவிக்கும்.

சில அரசியல் தலைவர்களது மரணம் சிறகுபோலவும், விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரது மரணம் மலைபோல கனக்கும். குமார் பொன்னம்பலம் அவர்களின் மரணம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை மலைபோன்ற கனதியான சோக சுமையை ஏற்படுத்தியுள்ளது.

சோரம்போன அரசியல் தலைமைத்துவத்தின் மத்தியில் அவர் தன்மானத்தின் சின்னமாக ஜனநாயக நடைமுறைகளைப் பின்பற்றும் தீவிரவாதியாகவும் இயங்கினார். தமிழ் அரசியல் வரலாற்றில் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாது சாதித்தவை நிறைய எனலாம்.

ஜி. நடேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்திரன் வாரமலர்

16.01.2000

உண்மையின் குரல் ஓய்ந்தது!

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். அவரது வீட்டிற்கு சம்பவ தினம் காலை வந்த சாந்த என்ற இளைஞருடன் தனியே காலை 10.30 மணியளவில் தனது கறுப்பு நிற பென்ஸ் காரில் சென்ற குமார் பின்னர் பிணமாகவே மீட்கப்பட்டார்.

இவருடன் காரில் சென்ற சாந்த என்ற வாலிபரை பொலிஸார் தேடி வருகின்றபோதும் அவர் குறித்தான துப்பெதுவும் இதுவரை கிடைக்கவில்லை. குமாரை இவர்தான் கொலை செய்திருக்க வேண்டும் அல்லது கொலைக்கான பொறிக்குள் விழுத்தியிருக்கவேண்டும.

ஆனால் இன்னமும் அந்த வாலிபர் கைது செய்யப்படவில்லை. மர்மம் நீடித்தே வருகின்றது. கொழும்பில் இருந்து கொண்டே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்து வந்த குமாரின் கொலை உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் தமிழ் மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

குமார் உயிருடன் இருக்கும்போது பேரினவாதிகள் அவரை புலிகள் இயக்க பிரதிநிதியாகவே நோக்கினர். அதுவே அவருக்கு எமனாக வந்திருக்கலாம் என்றே சந்தேகிக்கப்படுகிறது.

குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க உட்பட எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரும் மற்றும் பலரும் அனுதாபம் தெரிவித்திருந்தனர். இவற்றை எல்லாம்விட தமிழ் கட்சிகளைப்போல் அறிக்கை விடுவதில் அக்கறை காட்டாத விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் குமாரது மறைவையடுத்து அனுதாபச் செய்தி வெளியிட்டிருந்தார்.



பிரபாகரனின் கையொப்பம் இட்டு விடுக்கப்பட்ட அறிக்கையில் குமார் பொன்னம் பலத்துக்கு "மாமனிதர்" என்ற பட்டத்தை வழங்குவதில் பெருமை அடைகின்றேன் எனவும் தெரிவித்திருந்தார்.

பிரபாகரனின் அனுதாப அறிக்கை சர்வ தேசத்தின் கவனத்தையே ஈர்த்துள்ளது. புலிகளின் லண்டன் தலைமையகம் முன்னரே குமாரின் கொலையைக் கண்டித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

உண்மையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவரும் தமிழர் உரிமைக்காக இறுதிவரை குரல் கொடுத்து வந்தவருமான தமிழ் பெருமகன்குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப் பட்டமையானது. துன்பத்திலும் துயரத்திலும் துவண்டு கொண்டிருக்கும் தமிழ் இனத்துக்கு பேரிழப்பாகிவிட்டது.

அரசியலிலும் சரி, சட்டத்துறையிலும் சரி, வல்லவரான குமார் பொன்னம்பலம் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதைக் கண்டு அதனை பொறுக்க முடியாது நாள்தோறும் குரல் கொடுத்தே வந்தார். தன்னந்தனியாக இருந்துகொண்டு அவர் மேற்கொண்ட சேவை அளப்பரியது.

1944ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் வாலிபர் முன்னணியின் செயலாளராக தெரிவாகி அதன் மூலம் அரசியலுக்கு வந்தார் குமார் பொன்னம்பலம்.

1977ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட குமார் பொனனம்பலம் 1982ஆம் ஆண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் போட்யிட்டிருந்தார். அதனைவிட தற்போது நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் சார்பில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு ஆதரவு தெரிவித்த குமார் பொன்னம்பலம் பின்னர் தமது முடிவினை மாற்றிக்கொண்டு தேர்தலில் பங்குபற்றப் போவதுமில்லை, அக்கறை காட்டப் பாவதுமில்லை என அறவித்திருந்தார்.

குமார் பொன்னம்பலம் என்றால் சிங்களத் தலைவர்களுக்கு சிம்ம சொப்பனமாகவே இருந்தது. எதையும் நேரடியாக கூறிவிடும் குமார் பல தடவை வீதிச் சோதனைகளின்போது இராணுவத்தினருடனும், பொலிசாருடனும் தர்க்கம் புரிந்ததும் உண்டு.

தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்க முனைந்த பேரினவாத அரசுகளுக்கெதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வந்த குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு பிடிக்காத ஒருவராகவே மாறியிருந்தார். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்த அவர் புலிகளை அரசாங்கம் தடைசெய்யப்பட்ட அமைப்பாக அறிவித்தபோதிலும் தனது வழமையான பாணியில் ஆதரித்தே கருத்து தெரிவித்து வந்தார். ரி.என்.எல், தொலைக்காட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் "நான் புலிகளின் ஆதரவாளன்தான், உங்களால் என்ன செய்ய முடியும்?" என்று பகிரங்கமாக தெரிவித்தவர் குமார். இதற்கு பின்னர் சி.ஐ.டி.யினரின் விசாரணைக்கும் உள்ளாகியிருந்தவர் அவர்.

இந்த அரசாங்கங்கள் ஒரு போதும் தமிழர்களுக்கு நன்மை செய்யப்போவதில்லை என்றும் உரிமைகளை வழங்கப்போவதில்லை எனவும் குமார் அடிக்கடி கூறி வந்தார். "என்னோடு இவர்கள் சேட்டை விடமாட்டினம்" என அவர் கூறுவதுண்டு. அப்படி வந்தால் நான் நல்லாக் குடுப்பன் பாருங்கோ" என்று அவர் கூறுவதுண்டு. ஆனால் இன்று அவர் எம்முடன் இல்லை.

இதனைவிட தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளுக்கு ஒரு சதம் பணமும் வாங்காமல் அவர் வாதாடி வந்தார். இப்படி வாதாடி எத்தனையோ கைதிகளை விடுதலை செய்துமுள்ளார்.

"விடுதலை செய் அல்லது விசாரணை செய்" என்ற கோரிக்கையினை முன்வைத்து களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டதையடுத்து சிறைச்சாலைக்குச் சென்ற குமார் கைதிகளின் உண்ணா விரதத்தை கைவிடச் செய்ததுடன், கைதிகளுக்காக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளுடன் பேச்சு நடாத்தி கைதிகளின் வழக்கு விசாரணையை துரிதமாக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதன்மூலம் தமிழ் அரசியல் கைதிகளின் மனங்களில் இடம்பிடித்திருந்த குமார் பல முக்கிய வழக்குகளில் ஆஜராகி தமிழர் பக்கம் நியாயம் பெற்றுக் கொடுத்துள்ளார். யாழ்ப்பாணம் கண்டுக்குளி மகளிர் மாணவி கிருஷாந்தி குமாரசாமி வழக்கில் ஆஜரான இவர் கைதிகளுக்கு மரண தண்டனை வாங்கிக் கொடுத்தார். இதனைவிட 1991ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் 67 பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷனுக்கு தமிழ் சட்டத்தரணிகள் பலரும் ஆஜராக மறுத்தபோது குமார் பொன்னம்பலம் துணிவோடு ஆஜராகியிருந்தார்.

உண்மையிலேயே தமிழர் பிரச்சினைகளை அக்குவேறு ஆணிவேறாக எடுத்து விளக்கி வந்த தமிழ் பெருமகன் குமார் புலிகளின் அரசியல் கோட்பாடுகளுக்கு ஒப்ப தனது அரசியல் சிந்தனைகளை வெளியிட்டமையினால் சிங்கள பேரினவாதிகள் மத்தியில் சர்ச்சைக்குரியவரானார்.

குமார் பொன்னம்பலம் கொழும்பு நகரில் வசித்து வந்தாலும் மற்ற எந்த தமிழ் தலைவர்களுக்கும் இல்லாத துணிச்சலுடன் இந்த நாட்டில் வாழும் தமிழ்ச் சமுதாயம் இனப்பிரச்சினையின் பெயரால் எதிர்நோக்கும் அவலங்களையும், கொடூரங்களையும் நாட்டு மக்களுக்கும், சர்வதேச உலகத்துக்கும் எடுத்துக்கூறி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தனக்கொரு இடத்தைப் பிடித்துக்கொண்டவர் இவராவார்.

குமாரினை கோழைத்தனமாக கொலை செய்தவர்களை வரலாறு ஒரு போதும் மன்னிக்காது. ஆனால் எமது நாட்டில் தொடரும் அரசியல் கலாசாரம் நாட்டை அழிவுக்கு கொண்டு செல்லும் என்பது மட்டும் உண்மை.

S. ஸ்ரீகஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி
ஆசிரியர் தலையங்கம்

06.01.2000

கண்டனத்துக்குரிய படுகொலைகள்

புத்தாயிரமாம் ஆண்டுப் பிறப்போடு நாட்டில் அமைதியும் சமாதானமும் மலரும் என்று பலரும் எதிர்பார்த்திருந்த வேளை நேற்று கொழும்பில் நெஞ்சை அதிரவைக்கும் இரு ஈனச் சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு மணி இடைவெளியில் நடந்தேறியுள்ளன.

ஒரு சம்பவத்தில் ஆண், பெண் பொலிஸ்காரர் உட்பட 13 அப்பாவி உயிர்கள். பெண் தற்கொலைப் போராளி ஒருவரின் குண்டுக்கு இலக்காகி காவுகொடுக்கப்பட்டுள்ளன. மற்ற சம்பவத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவரும், புகழ் பூத்த சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம், இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

முன்னைய குண்டுத்தாக்குதல் பயங்கரம் கொள்ளுப்பிட்டி பிளவர் வீதியிலுள்ள பிரதமரின் உத்தியோக அலுவலகத்துக்கு முன்னால் வீதியில் அரங்கேற்றப்பட்டுள்ளது. தன் இன் உயிரை தியாகம் செய்து இந்த தற்கொலை போராளி நடத்திய குண்டுத்தாக்குதலில் 20க்கு மேற்பட்ட அப்பாவிகளும் படுகாயமமடைந்த இந்தச் சம்பவம் காலை 9 மணிக்கு நடந்திருக்கிறது. இந்த குண்டுத்தாக்குதலால் கொழும்பு நகரமே அதிர்ச்சியடைந்திருந்த அதேவேளை சுமார் இரண்டு மணி நேரம் கழித்து தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வெள்ளவத்தையில் வைத்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உயிரை துச்சமென மதித்து துணிந்து குரல் கொடுத்து வந்த தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் மர்மத்துக்கு இடமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். சுட்டவர் யார்?

எதற்காக அவரைச் சுட்டார் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.

குமார் பொன்னம்பலம், கொழும்பு நகரில் வாழ்ந்து வந்தாலும் மற்ற எந்த தமிழ்த் தலைவர்களுக்கும் இல்லாத துணிச்சலோடு இந்த நாட்டில் வாழும் தமிழ் சமுதாயம் இனப்பிரச்சினையின் பெயரால் எதிர்நோக்கும் அவலங்களையும் கொடூரங்களையும் நாட்டு மக்களுக்கும் சர்வதேச உலகத்துக்கும் எடுத்துக் கூறி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் தனக்கொரு தனி இடத்தை பிடித்துக் கொண்டவர். தமிழர்களின் இன்றைய தானைத் தளபதி என்றுகூட தமிழர்கள் பலராலும் வர்ணிக்கப்பட்டவர்.

தமிழர் பிரச்சினையை சர்வதேச அரங்குக்கு எடுத்துச் சென்று பரப்புரை செய்ய, தமிழ் அரசியல்வாதிகள் தயக்கம் காட்டிய போதிலும். தனது சொந்த நலன்களைத் துறந்து துணிந்து அங்கு சென்று இந்தநாட்டின் இனப்பிரச்சினையின் தோற்றுவாயையும் அதனால் தமிழர்கள் அனுபவித்துவரும் இன்னல்களையும் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்களையும் நன்கு எடுத்துக்கூறி, தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவு தேடித் தந்தவர். இதனால் இவர் ஆட்சியாளர்களினதும் சிங்கள பேரினவாதிகளினதும் வெறுப்புக்கும் கசப்புக்கும் ஆளாகியிருந்தார். இவரது வெளிப்படையான பேச்சை ஜீரணிக்கமுடியாத சில சக்திகள், தொலைபேசி மூலமும், வாசஸ்தலத்துக்கு முன்னால் கைக்குண்டு வீசியும் இவரை அச்சுறுத்தியது உண்டு. ஆனாலும் தமிழன் தன் மானத்துடன் வாழவேண்டுமானால் அரசுக்கு ஆலவட்டம் பிடிக்காமல் சுயாட்சிக்காக போராடியே ஆகவேண்டும் என்ற கொள்கையை கடைப்பிடித்து வந்த கடும் போக்காளர். இதனால் இவரை தென்னிலங்கை அரசியல் வாதிகள் பலரும் தனி நாட்டுக்கோரிக்கைக்காக ஆயுதப் போராட்டம் நடத்திவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாசர் இவர் என்று கூட நாமம் சூட்டத் தவறியதில்லை.

"என்னைத் தூற்றுவோர் தூற்றட்டும், போற்றுவோர் போற்றட்டும். ஆனால் தமிழன் தலைநிமிர்ந்து இந்த நாட்டில் வாழ வேண்டும் என்பதே எனது கொள்கை. அதற்காக உரிமைப் போராட்டம் எந்த ரூபத்தில் நடந்தாலும் அங்கே நான் இருப்பேன் என்று கூறி இனவாதி என்று தன்னை இகழ்ந்தோருக்கெல்லாம் சாட்டையடி கொடுத்து தனது கொள்கை உறுதிப்பாட்டை வெளிக்காட்டியவர்.

அரசியலில் மட்டுமல்ல சட்டத்துறையிலும் இவர் பிரகாசித்தார். எத்தனையோ அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி விசாரணைகள் எதுவும் இன்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவர்களுக்காக நீதிமன்றம் சென்று இலவசமாகவே வாதாடி அவர்களில் பலருக்கு இவர் விடுதலையும் பெற்றுக் கொடுத்த சம்பவங்கள் பல. மனித அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் பலவற்றிலும் தோன்றி இவர் தமிழர் பலருக்கு நீதி கிடைக்கவும் செய்திருக்கிறார். இப்படியாக இவர் தமிழ் இனத்தின் பேரால் செய்த பணிகள் ஏராளம்.

இவரது இந்த அகால மறைவு தமிழர்களுக்கு மட்டுமல்ல சட்டத்துறைக்கும் பேரிழப்பாகும்.

கோழைத்தனமான முறையில் இவரைகொன்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மிகவிரைவாக நீதிதேவன் முன் நிறுத்துவது அரசினதும் சட்டக் காவலரினதும் பொறுப்பாகும், தவறின் இவரை இப்படி கொன்றவர்களை தமிழ் மக்கள் எளிதில் இனம்கண்டு விடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தமிழர் – ஜனவரி 07.13.2000)
(சர்வதேச தமிழர் பத்திரிகை)

தமிழ் தேசத்தின் உரிமைக்காக துணிவுடன் குரல் கொடுத்த குமார் பொன்னம்பலம் படுகொலை

சந்திரிகா அரசு எனது இரத்திற்காக காத்திருக்கிறது – குமார் பொன்னம்பலம்.

தமிழ் தேசத்தின் உரிமைக்காக, தமிழரின் உரிமைக்காக சிங்களத்தின் கோட்டையில் இருந்தவாறு துணிவுடன், அதேவேளை காலத்தின் தேவையை நன்குணர்ந்து, தனக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கூட கருத்தில் கொள்ளாது, சந்திரிகா அரசின் முகமூடியை தொடர்ந்தும் கிழித்து வந்த திரு. குமார் பொன்னம்பலம் சந்திரிகா அரசினதும், அதனுடன் இணைந்து இயங்கும் தமிழ் கூலிக்குழுக்களின் இணைந்த செயற்பாட்டில் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ள துன்பகர நிகழ்வு கடந்த ஜனவரி 5ம் நாள் புதன்கிழமை முற்பகம் 11.15 மணியளவில் நடந்துள்ளது.

தனது பதவியேற்பு வைபவத்தின்போது வெளிப்படையாகவே, சிறீலங்காவில் உள்ள தமிழ் தேசத்தின், தமிழரின் உரிமைக்காக குரல் கொடுபபவர்களுக்கு, பகிரங்க எச்சரிக்கையை சந்திரிகா அம்மையார் விடுத்த போது அவ் அச்சுறுத்தலைக்கூட சற்றும் பொருட்படுத்தாது உண்மைக்கு போராடும் போது அச்சம் ஏது எனத் தொடர்ந்தும் மோதிய உண்மைவாதி குமார் பொன்னம்பலம் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஸ்ண வீதியில் பெற்றோல் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

உண்மை, நீதி, மனித உரிமை என்பவற்றை தனது ஆயுதமாகக் கொண்டு, தமிழீழ விடுதலையே தமிழரின் உரிமையுடன் கூடிய இறுதித்தீர்வு என வலியுறுத்தி, அப் போராட்டத்தின் தலைமை சக்தியான விடுதலைப்புலிகளின் அரசியல் திட்டத்தை முழுமையாக ஏற்று சர்வதேசமெங்கும் சென்று, சந்திரிகா அரசின் தமிழின விரோத செயல்களையும், தமிழின படுகொலைகளையும், அரசியல் கபடத்தனங்களையும் பகிரங்கமாக வெளிக்கொணர்ந்து தமிழர் தன் நிலையை எடுத்துரைத்த ஒரே காரணத்திற்காக இன்று தமிழர் தன்உரிமையை மறுதலித்து தமிழினம் மீது ஒரு இனப்படுகொலையை கட்டவிழ்த்து விட்டுள்ள சந்திரிகா அரசினால் குமார் பொன்னம்பலம் என்ற சத்தியவாதியின் குரல் அநியாயமாக ஒழிக்கப்பட்டுள்ளமை உலகம் பரந்து வாழும் தமிழர் மனங்களில் பாரிய சோகத்துடன் கூடிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக பல நாட்டு செய்திகள் தெரிவி க்கின்றன.

தமிழீழ மக்களின் தலைமை சக்தியான விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள விசேட செய்தியில் திரு. குமார் பொன்னம்பலம் கொடூரமாகக் கொல்லப்பட்டமை குறித்து, தமது அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் வெளிப்படுத்தியுள்ளனர். குமார் பொன்னம்பலம் தமிழ் தேசத்தின் உரிமைக்காக, துணிவுடன் குரல் கொடுத்து போராடிவந்தவர் எனவும், சிங்கள அரசின் கபடத் தனத்தை, பயமின்றி துணிந்து வெளிப்படுத்தி வந்தவர் என விடுதலைப்புலிகள் அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர். தமிழீழ விடுதலைக்கான விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை, பயமின்றி, பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் ஆதரித்து வந்தவர் எனவும், சிங்கள அரசின் பிடியில் சிக்கிய ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களின் விடுதலைக்காவும், உரிமைக்காகவும் வாதாடி வந்துள்ளவர் என விடுதலைப்புலிகளின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. குமார் பொன்னம்பலத்தின் இழப்பு தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என குறிப்பிட்ட விடுதலைப்புலிகளின் தலைமைப்பீட அறிக்கை ஆபத்துகளுக்கு மத்தியிலும், தமிழ் மக்களின் உரிமைக்காக அவர் புரிந்த செயற்பாடுகள், உண்மையான தமிழ் தேசாபிமானி என்ற மதிப்பையும், புகழையும் தமிழ் மக்கள் மத்தயில் அவருக்க பெற்றுக் கொடுத்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறீலங்கா அரசும், அதன் கைக்கூலித் தமிழ் குழுக்களுமே இந்த மோசமான படுகொலையைத் திட்டமிட்டு நடத்தியிருப்பதாக விடுதலைப்புலிகள் தமது அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

திரு. பொன்னம்பலம் அவர்களின் படுகொலை குறித்து, கண்டன அறிக்கை வெளியிட்டுள்ள தமிழர் மனித உரிமை மையம், சிறீலங்காவில் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசும், அதன் பாதுகாப்பு படையினரும், புரிந்துவரும், மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தி, சர்வதேச அரங்கில் அவர் ஆற்றிய சேவையை பட்டியலிட்டுள்ளது. சந்திரிகா அரசின் அச்சுறுத்தலுக்கு அவர் ஆளாகியிருந்ததை சுட்டிக்காட்டிய மனித உரிமை மையம், சந்திரிகா அரசு தனது இரத்திற்காக காத்திருப்பதாக அண்மையில் திரு. பொனனம்பலம் தெரிவித்திருந்ததையும், அது சுட்டிக்காட்டியுள்ளது. பொன்னம்பலம் அன்று தெரிவித்திருந்தது, இன்று வருந்தத்தக்க துக்கமான உண்மையாகிவிட்டது எனவும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை உலகமெங்கும் பரந்து வாழும் தமிழர் அமைப்புகள் இப் படுகொலை குறித்த கண்ட அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

கனடாவில் தமிழர் அமைப்புகளின் சம்மேளனமான கனடிய தமிழர் சங்கங்களின் சம்மேளனம் அமரர் குமார் பொன்னம்பலம் மாபெரும் அஞ்சலிப் பொதுக்கூட்டத்திற்கான ஒழுங்குகளை செய்துளளது. அது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பை இங்கு தருகின்றோம்.

தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வந்தவரும், தமிழீழ விடுதலையை ஆதரித்து, பேசியும், எழுதியும் வந்தவரும், சந்திரிகா அரசின் தமிழின விரோத செயல்களையும், தமிழின படுகொலைகளையும், அரசியல் கபடத்தனங்களையும் பகிரங்கமாக சிறீலங்காவிலும், வெளிநாடுகளிலும், குறிப்பாக கனடாவிலும் சாடி வந்தவருமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் சந்திரிகா அரசின் ஏவல் நாய்களால் படுகொலை செய்யப்பட்ட கொடூரச் செயலை வன்மையாகக் கண்டித்தும், இப் படுகொலையின் சூத்திரதாரியான சந்திரிகா இனவாத அரசை வெளியுலகத்திற்கு இனம் காட்டவும், தமிழர்களுக்காக குரல் கொடுத்த ஒரே காரணத்திற்காக படுகொலை செய்யப்பட்டுவிட்ட அமரர் குமார் பொனனம்பலத்திற்கு அஞ்சலி செலுத்தவும் என கனடிய தமிழ் மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடாக மாபெரும் அஞ்சலிப் பொதுக்கூட்டத்திற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இடம்: ஒன்ராரியோ பாராளுமன்ற முன்றல் (Queen's Park)

காலம்: ஜனவரி 10, திங்கட்கிழமை, மாலை 6.30 மணி.

Queen's Park Subwayக்கு அருகில் இன ஒடுக்கல் முறைகளுக்கு முடிவு கட்டும் இப்புதிய நூற்றாண்டில் எமது உணர்வுகளை அணிதிரண்டு வெளிப்டுத்துவோம்.

குறிப்பு: அஞ்சலிப் பொதுக்கூட்ட நிகழ்வுகள் குறிப்பிட்ட நேரத்தில் முடிவு பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கருத்து : தமிழர்களும் குமார் பொன்னம்பலமும்!

இலங்கைத் தமிழர்களின் முதுபெரும் கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் முக்கிய தலைவராகவும், பெரும்பாலான தமிழர்களின் மனஉணர்வுகளை, தனது தந்தையாரான, பிரபல வழக்கறிஞர், ஜீ.ஜீ.பொன்னம்பலம் பாணியில் துணிவாக, அச்சமின்றி சிங்கத்தின் குகையினுள் முழக்கிய மாமனிதர் : குமார் பொன்னம்பலம், பாசிச வெறிபிடித்த, தூரநோக்கற்ற, மூடத்தனமான, பிற்போக்குச்சக்திகளால் பட்டப்பகலில், படுபாதகமாக, கொல்லப்பட்டமை, கவலைக்குரியது, கண்டனத்துக்குரியது, மன்னிக்க முடியாதது!

1802ல் பிரிட்டனின் முடிக்குரிய காலனியாகிய இலங்கையில் கோல்புறூக்கமிசன் ஆலோசனைப்படி 1833ல், 16பேர் கொண்ட சட்டசபை நிறுவப்பட்டது. 1912ல் தெரிவுமுறையும், அறிமுகமாகி,21 பேர்(11 அதிகாரிகள், 1 நகர ஐரோப்பியர், 1 கிராம ஐரோப்பியர், 1 பறங்கியர், 1 படித்த இலங்கையர் (சேர் பொன். இராமநாதன்), மீதி அதிகாரியல்லாதோர்)தெரிவானார்கள். 1924ல், 2 இந்திய தமிழர் 3 முஸ்லிம்கள், 1 மேல்மாகாண – இலங்கைத் தமிழர், 2 பறங்கியர், 3 ஐரோப்பியர் என 11பேர் – இனரீதியாயும், 23 பேர் – பிரதேசரீதியாயும், 12 – பேர் அதிகாரிகளாயும், என மொத்தம் 49 பேர் நியமனமானார்.

இலங்கை தேசியகாங்கிரசின் முக்கிய நிர்வாகிகளாக சேர்.பொன் அருணாசலம் போன்றோர் இலாங்கைச் சுதந்திரத்துக்கு பாடுபட்டாலும், காலப்போக்கில் 1931ல் சகலர்க்கும் வாக்குரிமை சட்டம் வந்ததும் பாராளுமன்ற பெரும்பான்மையால் படிப்படியாக அதிகாரம் கூடிய சிங்களத் தலைமைகள் தமிழரை ஒதுக்கியபோது, தான் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிறந்தது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஸ் ஆட்சியின் முன்பு தமிழர் அரசுகள் வட–கிழக்கில்,(ஏன் கண்டியிலும், கண்ணுச்சாமி, எனும் விக்கிரம இராசசிங்கள் அரசு)இருந்ததால் தமிழர்க்கு தனித்து வாழ உரிமை இருந்தது. எனினும் 50:50 பிரதிநிதித்துவம் சிறுபான்மையருக்கு தந்தால் சிங்களவருடன், சேர்ந்து வாழ முடியும்! எனும் தூரநோக்குள்ள, ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் வாதம், 1944ல் பிரிட்டனிலிருந்து வந்த சோல்பரி பிரவுவின் காதில், செவிடன்காதில் ஊதிய சங்கொலியாய் மாறியது. 1948ல் தந்தை செல்வா அ.இ.த.காங்கிரசிலிருந்து பிரிந்து, தமிழரசுக்கட்சியை தொடங்கியதும், பின்பு 1976ல் வட்டுக் கோட்டை மாநாட்டில் செல்வா – ஜீ.ஜீ. – தொண்டா இணைந்து குரல் கொடுத்தாலும், மூவரதும் அரசியல் பாதை நடைமுறையில் இணையாதமை, தமிழர் செய்த துரதிர்ஸ்டமே ஆகும். தந்தைக்குப் பின், தமிழர் மனங்களை வென்ற தனயன் குமார் பொன்னம்பலம், கட்சியை வழி நடத்தினார்.

12.8.1938ல் யாழ்ப்பாணத்தின் மூளை எனக்கருதப்படும் வடமராட்சியில் காங்கேசு கணபதி பொன்னம்பலம்(ஜீ.ஜீ.) அவர்கட்கும், அழகுமணிக்கும் பிறந்த இவர், யாழ் அரச அதிபராகவிருந்த பிரபல தமிழர் முருகேசபிள்ளையின் மகளான யோகலட்சுமியை மணந்தார். உயர்கல்விகள் பயின்று பாரிஸ்ரராகி தந்தையாரைப் போல் புகழ்பெற்ற, அதிதிறமையான வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். தமிழ்நாட்டில் சர்க்காரியா கமிசன் வழக்கிலும், கலைஞருக்கு ஆதரவாக தந்தையாருடன் தோன்றினார். தமிழ், ஆங்கிலத்தில் மட்டுமன்றி சிங்களத்திலும், ஏழை எளியமக்களுக்காகவும் நீதிமன்றுகளில் தூள் கிளப்பினார். எந்த மொழியும் தமிழனுக்கு சொந்தமொழியே! எனத் திறமையாகப் பேசிவாதிட்டு வென்றார். 1966ல் அ.இ.தமிழ் காங்கிரஸ் இளைஞர் பிரிவு செயலாளரான இவர், தந்தையின் மறைவின்பின் கட்சியை வழிநடத்தினார். 1977இல் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இவர் 1982ல் இலங்கை சனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டு தமிழர் தனிக்குரலை உலகுக்கு வெளிக்காட்டினார். கொழும்பில் இருந்துகொண்டே துணிவாக அரசின்போக்கைக் கண்டித்த இவர் , த.வி.புலிகளின் போக்கை ஏற்பதையே பிரிட்டிஸ்காலத்துக்குப் பின்வந்த சிங்கள அரசுகள் தமிழர்க்கு மாற்றுவழியாகத் தந்தன! என்பதை ஆணித்தரமாக சுட்டிக்காட்டினார். கொழும்பில் கைதான எண்ணுக்கணக்கற்ற தமிழர்கட்கு காசு பெறாமலே வாதாடினார். வெளிக்கொணர்ந்தார். கொக்கட்டிச்சோலையில் பல தமிழர்கள், இராணுவத்தால் கொல்லப்பட்ட வழக்கில், மட்டக்களப்பு செல்ல பல வழக்கறிஞர்கள் மறுத்தநிலையில் இவர், யோசப். பரராசசிங்கம், பா.உ.வின் வேண்டுதலை ஏற்று உடன் சென்று, சிங்கமென கர்ச்சித்தார்.

அண்மையில், ஐரோப்பா வந்து தமிழீழ மாநாட்டில், லண்டன், டென்மார்க், பிரான்ஸ் என பலநாடுகளில் கலந்துகொண்ட இவர், புலம் பெயர் தமிழரின் அன்பைத் தனது, அழகு தமிழாலும், அறிவாலும் கவர்ந்து கொண்டார். ஐரோப்பாவின் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் கேள்வி நேரத்தில், முதலாவது கேள்வியாக தமிழீழ–நிழல் அரசு பற்றிய சர்வதேச தமிழர்–ஆசிரியரின்கேள்விக்கு மிக அருமையாகப் பதிலளித்தார். 1994இலிருந்தே இவர்மீதும் இவரது கொள்கைகள் மீதும் அன்பும் மதிப்பும் கொண்டிருந்த காரணத்தால், சர்வதேச தமிழர் இதழ், இவருக்கு தவறாது அனுப்பப்பட்டு வந்ததுடன், இவரை த.வி.புலிகள், ஒரு சனநாயக அரசியல் பேச்சாளராக நியமிக்கவேண்டும்! என தமிழீழத் தேசிய தலைவரிடம் வேண்டுகோளும் விடுவிக்கப்பட்டது. மாமனிதர், எனும் உயர்விருது வழங்கி அவரை கௌரவித்தமைக்காக புலம் பெயர் ஈழத்தமிழர் மட்டுமன்றி, உலகத் தமிழர்கள் சகலருமே புளகாங்கிதம் அடைவார்கள்! நன்றி! அ.இ.த.காங்கிரஸ் கட்சி தமிழர்களின் உண்மைக் குரலாக சனநாயக குரலாக வளர்ச்சிபெற, ஈழத் தமிழருடன், புலம்பெயர் தமிழரும் தயாராகவுளர்!

தமிழர்கள் முன்னேற்றம், ஐக்கியம், சமாதானம் கருதி, ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச் சஞ்சிகை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தின் குகையில் சிங்கங்களை எதிர்கொண்ட தமிழ்ப்புலி

புத்தாயிரமாம் ஆண்டின் ஐந்தாம் நாளன்று தமிழீழம் உட்பட அகிலமெங்கும் பரந்து வாழ்கின்ற அனைத்து தமிழ் மக்களினதும் நெஞ்சங்களிலும் பேரிடி ஒன்று வீழ்ந்தது.

அன்றுதான் (05.01.2000 புதன்கிழமை)அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் "ஜூனியர் பொன்னம்பலம்" என அழைக்கப் பெற்றவருமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் ஸ்ரீலங்காவின் தலைநகர் கொழும்பில் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் இன வெறியாட்டத்திற்குப் பலியானார்.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்ததும் தமிழ் இதயங்கள் மாத்திரமன்றி மனிதநேயம் மிக்க அனைவருமே அதிர்ச்சி அடைந்து தமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்ட அதேவேளை, அவரது மறைவுக்காக சந்தோசப்பட்ட ஈனப்பிறவிகளும் நாட்டில் இல்லாமல் இல்லை.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்துவந்த அவர், தமிழீழ தாயகத்தில் ஆழமான விருப்பு கொண்டவராகவும் "சுதந்திர தமிழீழம்" உருவாக வேண்டும் என்பதில் பெரும் ஆவல் கொண்டவராகவும் விளங்கினார். எமது இயக்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் சிங்கத்தின் குகையில் இருந்து கொண்டு பகிரங்கமாகவே ஆதரித்து வந்தார்.

எங்கெல்லாம் மனித உரிமைகள் மீறப்பட்டனவோ – எங்கெல்லாம் தமிழ் மக்களுக்கு இன்னல்கள் இழைக்கப்பட்டனவோ அங்கெல்லாம் அவர் ஒங்கிக் குரல் கொடுத்தார்.

அவரிடம் கடுமையான இனப்பற்றும் எதற்குமே கலங்காத அச்சமற்ற தன்மையும் நிறைந்து காணப்பட்டது. கொழும்பில் எங்கு சென்றாலும் தன்னந்தனியனாகவே செல்லும் நெஞ்சத் துணிச்சல் மிக்கவர் அவர்.

நீதியின் பால் பல சந்தர்ப்பங்களில் ஆபத்துக்கள் பலவற்றை எதிர்கொண்டவர் அவர்.

ஒரு தடவை இராணுவத்தினர் கொழும்பில் அவரது வாகனத்தை நிறுத்தி, அவரது அறிமுக அட்டையை காட்டுமாறு கேட்டுள்ளார்கள். அவர் "அப்படி ஒரு சட்டம் நாட்டில் இல்லை"என்று கூறியுள்ளார். அந்த இடத்தில் அவருக்கும் இராணுவத்தினர்க்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இருபகுதியினருமே தோல்வியை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை.

இறுதியில் குமார் அவர்கள் தனது மனைவியுடன் நடமாடும்தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரை இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொள்ளவைத்து இராணுவத் தளபதியை சம்பந்தப்பட்ட இராணுவத்தினரோடு கதைக்க வைத்து அறிமுக அட்டையைக் காண்பிக்காமலேயே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்களின் பொருட்டு நீதிமன்றில் தோன்றுவதற்காக யாழ்ப்பாணம் செல்வதற்குப் புறப்பட்டார். ஆயினும் அவர் அது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சில் அனுமதி பெற்றிருக்கவில்லை. அவருக்கு விமானத்தில் ஏறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. பாதுகாப்பு அதிகாரிக்கு எதிராகவும், விமான நிறுவனத்தினர்க்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்தார் அவர்.

அவருடைய வாதம் "இந்த நாடு ஒன்று என அரசு ஏற்றுக்கொள்ளுமானால், இங்கு ஒரு இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்குப் போவதற்கு இந்த நாட்டில் பிரசை ஒருவர் அரசிடமிருந்து அனுமதி பெற்றக்கொள்வதற்கு அவசியம் இல்லை" என்பதாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இறுதியில் அவர் சந்திரிகாவுக்கு எழுதிய பகிரங்க மடலில் தனது நிலைப்பாட்டை தெளிவாக பட்டவர்த்தமாக விளக்கியிருந்தார்.

இவரது துணிச்சல்மிக்க நடவடிக்கைகள் தான் இந்த படுகொலைக்கு வித்திட்டிருக்கின்றது.

சிங்களத்தின் தலைநகரில் நின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால் விடுத்து தன்னந் தனியனாக ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும், அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடிய அவரை, அவரது விடுதலைப்பற்றுக்கு மதிப்பளித்து எமது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழ தேசத்தின் அதி உயர் விருதான "மாமனிதர்" விருதினை வழங்கி கௌரவித்துள்ளார்.

வல்வையூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமனிதர்" குமார் பொன்னம்பலம்

குமார் பொன்னம்பலம் அவர்களின் ஆரம்பகால அரசியல், தமிழீழ நிலைப்பாட்டினை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை.

தமிழீழக் கொள்கையை மக்கள் முன் வைத்தால் அதனை அடைவதற்கு வழிகாட்ட வேண்டும். இல்லாவிட்டால் அதனை முன்வைத்துத் தேர்தலில் நிற்கக்கூடாது என்பதே 1977ல் அவர் சொன்ன கருத்து.

ஆனால் பின்னால் தமிழீழம் என்ற நிலைப்பாட்டினை அவர் ஏற்றுக்கொண்டபோது, அதனை முழுமையாகவும், திறந்த தன்மையுடனும், திடமாகவும் ஆதரித்து, இறுதியில் அதற்காகவே தன்னுயிரையும் அர்ப்பணித்துள்ளார்.

அவர் நினைத்து இருந்தால் உலகின் எப்பகுதியிலும் சென்று வசதியுடன் வாழ்ந்து இருக்கலாம்.

தன் மக்களை, தன் கொள்கைகளை கைவிட்டிருந்தால், ஸ்ரீலங்காவின் அமைச்சர் பதவிகள் அவரைத் தேடி வந்திருக்கும். அவர் அதையெல்லாம் துச்சமென உதறிவிட்டு, தன் மனதில் உள்ளதை வெளிப்படையாகப்பேசி, எழுதி, நியாயத்துக்காக நேரடியாகப் போராடுவதில் பெரும் திருப்தி அடைந்தார்.

எவ்வித விசாரணைகளும் இல்லாது சிறையில் வாடிய தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக அயராது போராடினார். அவரைப்போன்ற உயர் தகைமையும், பெயரும் பெற்ற ஓர் சட்டவாதியிடம் அரைமணிநேரம் ஆலோசனைபெற பல ஆயிரங்கள் கட்டணம் செலுத்தவேண்டும். ஆனல் இவரோ தாமே சென்று பலமணி நேரங்களை இலவச சேவையாக வழங்கினார்.

குமார் பொன்னம்பலம் அவர்களின் தந்தையாரின் திடீர் மறைவு தமிழ் உலகை பெரும் சோகத்தில் ஆழ்த்திய வேளையில் ஓர் அரசியல் நோக்கர் இவ்வாறு சொன்னார். "ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒரு சிறந்த அரசியல் தலைவர். ஏமாற்று அரசியல் நடத்தியவர் அல்ல. இதனை அவர் வழியில் செல்லும் மகன் குமாரின் அரசியல் நிரூபிக்கும்."

அதுபோல அவர்மீது பொய்யான பல அவதூறுகள் கூறிய, பொய்வேடதாரிகளின் வாரிசுகளின் நடத்தை அவர்களைக் காட்டிக் கொடுக்கும்.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும்"

இன்று இருபது ஆண்டுகளின் பின், குமார் பொன்னம்பலம் எம்மை விட்டுப் பிரிந்துள்ள வேளையில், இக்கூற்று அப்படியே உண்மையாகியுள்ளதைக் கண்டு வியக்கின்றேன்.

அவ்வகையில் 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியையும்' செவ்வனே ஆற்றி, மண்ணின் மகத்தான மைந்தர் தம் வாயால் 'மா மனிதா" என்று போற்ற அவர் தம் வாழ்வை நிறைவு செய்துள்ளார்.

சதானந்தன்
மனோராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உலகத் தமிழர் ஜனவரி 14, – 20, 2000.)

கடும் குளிரிலும் மாமனிதருக்கு கனடாவில் அஞ்சலி

தமிழீழ தேசியத் தலைவரால் தமிழீழத்தின் அதியுயர் விருதான மாமனிதர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட, சந்திரிகா அரசின் கூலிகளால் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு சனவரி 10ம் நாள் திங்கட்கிழமை, ரொரன்ரோ கனடாவில் கனடிய தமிழர் சங்கங்களின் சம்மேளனம் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட மாபெரும் அஞ்சலிப் பொதுக்கூட்டத்தில் முவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

கடும் குளிரிலும் ஒன்ராரியோ பாராளுமன்ற முன்றலில் திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற இவ் அஞ்சலிப்பொதுக் கூட்டத்தில் ஸ்காபுரோ – ஏஜின் கோட் கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரிஜியானிஸ், ஸ்காபுரே – ரூச்றிவர் ஒன்ராரியோ பாராளுமன்ற உறுப்பினர் அல்வின் கேளிங், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இந்நாள் ரோரன்ரோ மாநகரசபை உறுப்பினரான நோம்கெலி, மற்றும் ரொரன்ரோ மாநகரசபை உறுப்பினர்கள் ஜக் லேயிட்டன், பாம் மக்னோனல் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இவர்களுடன் மனித உரிமை அமைப்புகள், ஏனைய இன அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து உரையாற்றினர். மாமனிதர் குமாரின் படுகொலையை வன்மையாகக் கண்டித்த அவர்கள் தமிழ் மக்களின் உரிமை வேண்டிய போராட்டத்திற்கு தமது ஆதரவையும் வெளிப்படுத்தினர். குறுகிய கால அவகாசத்தில் கடும் குளிர் காலத்தில் திறந்த வெளியில் நடாத்தப்பட்ட இவ் நிகழ்வில் பெரும் அளவில் மக்கள்கலந்து கொண்டமை கனடிய முக்கிய மக்கள் தொடர்பு சாதனங்களையும் தம்பால் பெரிதும் கவர்ந்திழுத்திருந்ததையும் பெரிதும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் பணி தொடர உறுதியெடுத்துக் கொண்ட மக்கள் மாலை 6.30 மணி முதல் மாலை 8 மணிவரை ஒண்டரை மணித்தியாலம் நடைபெற்ற நிகழ்வுகளில் முழுமையாக கலந்து சிறப்பித்துச் சென்றனர்.

இதேவேளை மாமனிதர் குமாரின் துணைவியார் தனது கணவரின் மறைவிற்கு சந்திரிகா தலைமையிலான அரசே பொறுப்பு என வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் கொழும்பில் நடைபெற்ற மாமனிதர் குமார் அவர்களின் ஈமைக் கிரிகைகளிலும் பெரும் அளவில் மக்கள் கலந்து கொண்டுள்ளனர். சந்திரிகா அரசின் வெளிப்படையான மிரட்டல்களுக்கு மத்தியிலும் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டமை பலருக்கு வியப்பை அளித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி


அமரர் திரு. குமார் பொன்னம்பலம்

கறைபடிந்த இனவாதம்
கூலிகளைக் கரம்பிடித்து
குண்டுகளால் உயிர்துளைத்து – உன்
குருதிதனில் குளித்ததுவோ

பூமித்தாய் – கரங்களிலே
ஈழத்தாய் புதல்வன் உன்னை
போதிமரப் புத்தர்கள் உயிர்
குடித்த விதம் தான் என்ன

இனவாத சிங்களரும்
இனமறியா கோடாரிக் காம்புகளும்
நிறைந்துவிட்ட தலைநகரில்
தனித்து நின்று குரல் கொடுத்தாய் தமிழனுக்காய்
உன் வீரம் தான் என்ன

உனக்கென்றோர் அமைப்பிருந்தும்
உன்னலம் பாராது பதவி ஆசை தேடாது
விடுதலைப் புலிகள் தான் தமிழினத்தின்
ஏக பிரதிநிதிகள் என்று உரைத்தாயே
நீயல்லவா மானமுள்ள தமிழன்
தமிழீழம் என்றும் உன்னைப் போற்றும்.


கண்ணீர் அஞ்சலி

அமரர்

திரு. குமார் பொன்னம்பலம்

கறைபடிந்த இனவாதம்
கூலிகளைக் கரம்பிடித்து
குண்டுகளால் உயிர்துளைத்து - உன்
குருதிதனில் குளித்ததுவோ

பூமித்தாய் கரங்களிலே
ஈழத்தாய் புதல்வன் உன்னை
போதிமரப் புத்தர்கள் உயிர்
குடித்த விதம்தான் என்ன

இனவாத சிங்களரும்
இனமறியா கோடாரிக்காம்புகளும்
நிறைந்துவிட்ட தலைநகரில்
தனித்து நின்று குரல்கொடுத்தாய் தமிழனுக்காய்
உன் வீரம்தான் என்ன

உனக்கென்றோர் அமைப்பிருந்தும்
உன்னலம் பாராது பதவி ஆசை தேடாது
விடுதலைப் புலிகள் தான் தமிழினத்தின்
ஏக பிரதிநிதிகள் என்று உரைத்தாயே
நீயல்லவா மானமுள்ள தமிழன்
தமிழீழம் என்றும் உன்னைப் போற்றும்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்கள்.

வீரகேசரி **09.01.2000**

அடங்காத் தமிழன் நீ!
தமிழன் தன் தன்மானச் சின்னம்
மரணத்திலும் மாமனிதன் நீ.

அகவை அறுபது கண்டாய் உனை
"அடங்காத்தமிழன்"என்றேன் அண்ணா
இப்பால் ஓராண்டு நீளவில்லை
மரணத்திலும் மாமனிதனானாய்
அகிலமெல்லாம் உன் பிரிவின் நிசப்தம்!!!
அஞ்சா நெஞ்சத்தாடவன் ஆதலின் – அடங்காத்
தமிழன் உனக்கு ஒன்றே மரணமென்றால்
கானகத்துக் கவிமான்கள் கண்டால் நானும்!
மரணத்திற்காய் மானத்தை விற்காத

மறத்தமிழன் நீ என்று கண்டு கொண்டேன்
வரலாற்றில் நீ ஒரு வண் தமிழன்
பொங்குதமிழுக்கு இன்னல் நேர்ந்தால்
சம் காரம் நிதம் என்று கேட்டிருக்கிறேன்
நிஜமாய் சம்காரம் புரிந்தவன் நீ
அகிலமெலாம் சென்றாய் வென்றாய்
வல்லவனுக்கு வல்லவன் நீ
பாராளுமன்றே காணாமலே உன்பணி
உலகே கண்ட தமிழன் ஆனாய்
ஐ.நா மன்று முதல் வல்லரசுகளீறாய்
முழங்கியவன்.

தமிழன் தன்மானத்தின் சின்னமென
இருபது ஆண்டுகள் இரும்பொறையாய்
தமிழினத்தின் தன்மானக் குரலாய்

தமிழினம் ஓர் அடங்காத் தமிழனை இழந்து நிற்கின்றது.

கைதையூரான்.
ந.குமரகுருபரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 ஜனவரி 2000.

மாமனிதனாய் மலர்ந்திட்ட குமாருக்கு வீர வணக்கம்

மலர்ந்து கொண்டிருக்கும்
தமிழீழத்தின்
மலர்வுக்காய்
தன்னுயிரீய்ந்த
எம் மண்ணின் மாமனிதா
பொன்னனின் குமாரா
நின்தியாகச் சுடர்
வீர வேங்கைகளின்
தமிழீழ மீட்பு வரையும்
அதற்கப்பாலும்
கலங்கரை விளக்காய்
காலங்காலமாய் பிரகாசிக்கும்

தமிழீழ வரலாற்றில்
சிகரமாய் அமைந்திட்டாய்
தமிழீழ மீட்பர்களுடன்
தோழமை பூண்டிட்டாய்
மறத் தமிழன்
நீ யென
உலகிற்கு உணர்த்திட்டாய்
மனைவி, மக்கள்
உள்ளத்தில் மட்டுமின்றி
எட்டுக்கோடி தமிழரின்
மனதினில்
மாமனிதனாய் மலர்ந்திட்டாய்

கொன்றுவிட்டான் உனையென
கோழையவன் ஏமாந்தான்
படைத்திட்டான் உனை
இம்முறை
மாமனிதனாய்
உனைத் துளைத்த
வேட்டுக்களின் சத்தம்
உற்ங்கிக் கிடக்கும்
சாமார்னியர்களின் காதுகளில்
சங்காய் முழங்கி
அவர்களை
விரைவில்
குமார்களாய்ப் படைத்திடும்

தமிழீழத் தேசியத் தலைவனாய்
தம்பியை ஏற்றிட்டாய்
ஒருவனே தலைவனென்ற
உண்மையை உரைத்திட்டாய்
ஒன்றுபடாது தமிழினம்
ஆயினும்
தலைவனின் பாதையில்
தமிழீழம் நிட்சயமென்ற
நம்பிக்கையை
நமக்களித்து
தாயகம் மலருமுன்
தியாகியாய் மறைந்திட்டாய்

வணங்குகிறோம் உனை
வாழ்த்துகிறோம் உனை
வானளாவி நின்புகழ்
பார்முழுதும் பரவும்
மாமனிதன் குமார்
மலர்ந்த நாள்
தமிழீழ நாட்டின்
விடுதலை நாளாக
நாம் மட்டுமன்றி
நம் மக்களும்
மக்களின் மக்களும்
மகிழ்வுறும் நாளாய்த் திகழும்

சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன்

17 ஜனவரி 2000.

சிங்கத் தமிழன்

கருமை கொண்ட நிறத்தினன்
பெருமையுடைய மார்பினன்
சிறுமை கொண்ட அரசின் – கயவர்
கொடுமையறுத்த பேச்சாளன்!

புலத்தில் தமிழன் வேதனையை
கலத்தில் போட்ட அன்னமாய்
உலகிற்கு எடுத்துக் காட்டியே – தமிழர்
குலத்தைக் காத்த குமாரனவன்!

சமாதானமே போராட்டமென்ற
ஏமாற்று வேண்டாமினியுமெம்மை
கண்கெட்ட சந்திரிகாவே – தமிழர்
மண் கொடுப்பாய் என்றானே!

சட்டம் போட்டு தடுத்தாலும்
கட்டம் போட்டு தமிழன் உரிமைதனை
பட்டம் விட்டு காட்டியவனை – கயவர்
சுட்டுப்போட்டனர் றோட்டிலே!

சதையும நகமுமாய் வாழ்ந்திட்ட
இதயசிகிச்சை வல்லாளின்
இதயம் நின்று போனதுவே – வாழ்வில்
உதயம் தந்தவன் இறந்த சேதி கேட்டே!

சிங்கத்தின் கூட்டிலிருந்தே
சங்கத்தமிழ் வளர்த்தவனே
பொங்கும் கடலாயின்று– நீயின்றி
ஏங்குதே தமிழன் உள்ளங்கள்!

குமுறி வெடித்தே நெஞ்சுமூச்சு
திணறியடைக்க உனையிழந்து
பதறியழுகின்றோம் – உலகில்
சிதறிக்கிடக்கும் தமிழரெல்லாம்!

புலிக்கெதிராக புறப்பட்ட குழுவே
பலிக்காதுன் புதிய திட்டம்
கிலிகொண்டோடவுனை – அடித்தே
பலி கொள்வார் புலிகளே!

சக்தி சாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதனாய்..... மாவீரனாய்..... மாமலையாய்..... நீ.

- கனக அரசரட்ணம் -

சூழ அடிக்கும் அலையைப் போல் – எதிரி
சுற்றி இருக்கையில்
துணிவு என்னும் துடுப்பெடுத்து அந்த
கடலில் நனைந்தாயே
போர் முகத்தில் புகுந்த வேங்கை
அன்று அதிசயம்
புனித போர் நினைத்து நிமிர்ந்து நடந்தாய்
இதுவும் அவசியம்!...

'தலை நிமிர்ந்த தமிழன்' என்று
தந்தை உரைத்ததை
கடைசிவரை கொண்டிருந்த உண்மைத்
தனயன் நீயன்றோ
தரணியெல்லாம் உந்தன் குரல் தனியாய்
ஒலித்தாலும்
மரத்தமிழின் புகழ் உரைத்த மாமனிதன்
நீயன்றோ!...

கூடி நின்று ஈழம் கேட்டோர் – ஓடி
ஒளிந்தனர்
பேடிகளாய் பெண்ணின்பின்னே தேடி
கார்முகில்கள் விண்ணில் வந்தால்
மண்ணும் சிரிக்குது
விண்ணைத்தேடி நீ விரைந்தாய்
தமிழ் மண்ணும் கரையுது
எண்ணம் எல்லாம் புலியாக எழுந்து
நடந்தாயே – இனி
உன்னைப்போல தலைவனும் நாம் --
என்றும் காண்போமா?....

செத்தும் கொடுத்த 'சீதாக்காதி' நாம்
கேட்டு அறிந்தது
சிறையில் புகுந்த உனக்குப் பின்னால்
உலகம் உண்மைபுரிந்தது
இறந்த பின்னால் மறைந்து விடும்
மனிதக் கூட்டத்தில்
மறைந்த பின்னும் மாமலையாய்
உயர்ந்து விட்டாயே!....

13.07.2000

தமிழ்க் குரல்.....!
தமிழின் குரல் .....!!

எம் இனத்தின் விடிவிற்காக
தனியொருவனாக நின்று
குரலெழுப்பிய தமிழ்பெருந்தகையே!
அகதிகளாக இதுவரை வாழ்ந்த எமை
அநாதைகளாகவும் தவிக்கவிட்டு சென்றதேனோ!

எம்மினத்திற்கு விமோசனமே இல்லையென
இறைவன் முடிவெடுத்து விட்டதனால் தான்
உங்களைத் தன்னுடன் அழைத்துவிட்டான் போலும்!
குறுகிய காலத்தில் பழகிய என்போன்றவர்களே
ஆறுதலடைய முடியாது உள்ளபோது
குடும்பத்தவர்களின் நிலையை நினைத்துப்
பார்க்கவே கஷ்டமாக விருக்கிறது.

உங்களின் ஆத்ம சாந்திக்காகவும், குடும்பத்தவர்களின் ஆறுதலுக்கும் வேண்டி நிற்கும் தீவக மக்களுடன் –

அன்பான சகோதரி
ஜமுனா,
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மானமுள்ள தமிழனின் நினைவாக...


நண்பனே!
சேதி கேட்டு அதிர்ந்து போனோம்.

பனைமரங்கள் அங்கு வளர்வதில்லை.
ஆனாலும், அதிசயமாய் நீயங்கு
ஒற்றைப் பனைமரமாய்
ஒங்கி வளர்ந்து நின்றாய்.

பற்றைக்குகந்த மண்ணில்
பனை மரங்கள் எத்தனை நாள்
உயிர் வாழுமென்று
எப்போதும் பயந்திருந்தோம்.
ஈற்றில் நிகழ்ந்தது அது.

கொக்கட்டிச்சோலையிலே
கொலையுண்டு போனவர்கள்,
கொழும்பிலே ஆயிரமாய்
கூண்டுகளில் அழுதவர்கள்,
வெறிநாய்கள் தாக்கியதால்
கிருசாந்தி ஆனவர்கள்





என்று எத்தனையோ ஈழவர்கள்
இன்னல்களில் கைகொடுத்தாய்!
நீசர்களின் பொய் மதுவில்
நீதி மயங்கி நின்ற
உலகெங்கும் நீ சென்று
உள்ளதை எடுத்துச் சொன்னாய்!
உண்மையை அடித்துச் சொன்னாய்!
இனத்தின் விடுதலைக்காய்
புலிப்போரின் முரசடித்தாய்!

நண்பா!
தன்மானமுள்ள தமிழனாய்
நீ வாழ்ந்ததுக்கும்
எவருக்கும் அஞ்சாத
ஈழவனாய் நீ வாழ்ந்ததுக்கும்
உனக்கு நன்றி சொல்ல
நாங்கள் கூடுகிறோம்.
மறைந்தாலும் வாழ்பவனே!
நீயும் வா!

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவாக அஞ்சலிக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இடம் Veitvetskole, Veitvetveien - 17 (அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்) காலம் : 09.01.2000 ஞாயிறு மாலை 5.00 மணி

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - நோர்வே

13.1.2000

நான் நானாகவே இருக்கவிரும்புபவன் நான்..
புனித மாமனிதர் புகழ் வாழ்க!

பொன்னம் பெருஞ் சட்ட வாதி கருக்கூட்டி
கன்னங் கருங்காலித் தேகம் வெளிக்காட்டி
பொன்னம் பலத் திருக் கூத்தன் வழியொட்டி
உன்னும் பகை எதிர்த்து நின்றான் வாதாடி!

எங்கள் தமிழரெல்லாம் அல்லற்படும் போது
தங்கள் சுயநலத்திற்கொள்கை மறந்தவரை
கண்கள் நெருப்பாகி காறி உமிழ்ந்து நின்ற
பண்பாள் குமார் மறவர் பணியை மறவோமே!

கொடுமை இனவெறியின்கோரம் மரணவெறி
உடமை தமிழரது உயிரும் அழியப்பறி
எனுமோர் அரசவெறி ஆடும் கொழும்புநகர்
அமர்ந்து தமிழ் உரிமை பேசித் திளைத்தமகன்!

புலிகள் எனும் மனிதம் காக்கும் புனிதர்களை
துணிவே துணையென்று திடமாய் ஆதரித்து
பணியாய் தமிழ்காத்த பண்பால் தலைவரிடம்
புனித மாமனிதர் புகழேற்றார் அஞ்சலித்தோம்!



அமுதநதி சுதர்சன்
(காசி ஆனந்தனின் தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் விழிநீர் அஞ்சலி!

அமரர் திரு. குமார் பொன்னம்பலம்

வெம்போரில் சிக்கி வேதனையில் நிதம் வாடும்!
எம் மக்கள் துயர் களைய வந்த தலைவோனே!
செங்குருதி ஆற்றினிலே துடிக்கின்ற மீன்கள்!
வெந்துயரில் வெதும்பி அகதிகளாய் நிற்கும்!
வேதனையைக் கண்டு சிங்கமென எழுந்தாய்!
சீற்றமுடன் கர்ச்சித்தாய் எம் விடுதலைக்கு நீ!
தனியொரு தமிழ்த் தலைவனாக நின்றே நீ!
அஞ்சா நெஞ்சத்துடன் அறிக்கைகள் விட்டாய்!
அவல மரணத்தை அன்பாகத் தழுவிய ஐயா நீ!
அன்னை தந்த எம் பொன்னே மணியே ஐயா!
அன்னை தமிழுக்கு உன்னை நீ ஈய்ந்தாயோ!
நின் ஆத்ம சாந்திக்கு வேண்டுகிறோம் இறையோனை!



கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதி வர்த்தகர்கள் சங்கம்

தனிப் பெருந்தலைவனுக்கு எமது கண்ணீர் அஞ்சலி
அமரர் திரு. குமார் பொன்னம்பலம்

எம் பெரும் தமிழ் அன்னை தந்த பொன்னே!
தம் பெரும் பிரிவினை எண்ணி வாடியே நாம்!
நம் தமிழ்த் தலைவா நிகரில்லாத் தலைவா நாமே!
வெம்பியே நின்பிரிவால் துயரினில் ஆழ்ந்தோமே!
தலைநிமிர்ந்து வாழ தலைவனாய் நீ மிளிர்ந்தாய்!
அலைகடல் கடந்தும் நீயே நம் நிலை கூறியுமே!
அகதிவாழ் தமிழர்க்கெல்லாம் அரணதாய் விளங்கினாயே!
பகர்வதற்கு மொழியே இல்லை நின் பிரிவதை எண்ணித் தானே!
உன்னையே எண்ணி எண்ணி உகுத்திடும் கண்ணீர்!
அன்னையாம் தமிழே அறிவாள் ஐயநின் பிரிவின் துயரே!
சோகத்தால் அவளுமே வெந்துயரில் ஆழ்ந்தாள்!
ஏகனாம் இறையடியில் சாந்தியே பெறுவாய் நீயே!



கொழும்பு வாழ் புங்குடுதீவு மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலமே! நீ!! போயினையோ!! போயினையோ!!

அண்ணன் இளைஞர்க்கெலாம்
அனைத்துத் தமிழர்களும்
உன்னைத் தலைவனென
ஒம்பத் தமிழினத்தின்
தன்னம்பிக் கையாகித்
தலைநிமிர்ந்து நின்றகுமார்
பொன்னம் பலமே! நீ!!
போயினையோ! போயினையோ!!

வீணைக் கொடியோனாம்
வீரன் இராவணன்போல்
தூணை நிகர்த்தோய்!
துணிந்து நின்று குரல் கொடுத்தாய்!
மானத் தமிழா!
மறத் தமிழர் தாயகத்தைக்
காணக் கனவு கண்ட
காவலனே! போயினையோ!!



கொலை வெறியர் கூட்டமொன்று
கூற்றுவாய் உன்னுயிர்க்கு
உலைவைத்தார் இது செய்த
உன்மத்தர் அழியட்டும்!
தலைநகரில் தமிழ் வளர்க்கும்
தமிழ்ச் சங்கத் துணைத் தலைவா!
விலைபோகாத் தமிழன் நீ!
விண்ணுலகம் போயினையோ!!

இன்னல்கள் தமிழர்க்கு
எங்கெங்கு விளைந்தாலும்
சன்னதம் கொண்டெழுந்து
சமர்செய்த உன்னுடலைச்
சன்னங்கள் துளைத்திடவே
சதிசெய்தார் உன்நாமம்
மண்ணிலே நிலைத்திருக்கும்!
மாமனிதா! போயினையோ!!

கவிபாக்கம்
"செங்கதிரோன்"

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
8.1.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்காத் தமிழனுக்கு எங்கள் அஞ்சலிகள்

சென்று வா ஐயா....
சென்று வா...
உன்
சவக் கிரியைக்குக் கூடவரச்
சக்தியற்றுக் கிடக்கும்
தமிழினத்தின் சார்பில்
நெஞ்சம் விம்ம
விடை தருகின்றோம்

சிங்கத்தின் குகைக்குள் இருந்து
சீறிய சிறுத்தையே... உன்
சிரத்தில் கரம் வைத்த
சிறு நரிகள் யாரையா?

குருட்டுப் பிறவிகள் நடத்தும்
திருட்டு நாடகத்தின்
வெருட்டல்களுக்கு அஞ்சாது
வெஞ்சினத்தோடெழுந்து நின்ற
வேங்கையே...

கள்ளங் கபடமில்லா உன்
வெள்ளை உள்ளத்தின் முன் நின்று
வேட்டுத் தீர்க்க வெட்கப்பட்டோ இந்த
..... மக்கள்
நம்ப வைத்துத் தங்கள்
நரிக் குணத்தைக் காட்டினார்கள்?

எட்டப்பர் கூட்டங்களால் எங்களினம்
வெட்டிப் புதைக்கப்படுகையில்
தட்டிக் கேட்ட தமிழ் மகனே
ஈழமணித் திருநாட்டின் தவப் புதல்வா!

கற்றறிந்தோரெல்லாம்
கால்பிடித்துத் திரிகையிலே
பட்டங்கள் பெற்றவர்கள்
பதவிக்காய் அலைகையிலே – உன்
சட்டத் திறமையைத் தமிழ்ச்
சந்ததிக்காய் உவந்தளித்தாய்!

பூமிக்கு அடியில் புதைந்த உண்மைகளைப்
புட்டுப் புட்டு வைத்து நீ
ஆமிக்கும் அதிர்ச்சி தந்தாய்!

உள்ளத்தில் பட்டத்தை
உலகுக்கு உரத்துச் சொன்னாய்...
பள்ளத்தில் கிடந்த நாம்
பட்ட துன்பமெல்லாம்
பட்டியலிட்டு நீ
பாரெங்கும் எடுத்துச் சென்றாய்

பாவிகள் நமக்காயினிப்
பரிந்து பேச யாருள்ளார்?

புண்ணியவாளனே...
குமுறும் உள்ளங்கள்
திரண்டெழுந்து வந்துன்னைக்
கண்ணீரால் குளிப்பாட்ட – இக்
காடைத் தேசத்தில் எமக்குக்
கட்டுக்கள் போடப்பட்டாலும்....

உரிய இடத்திலிருந்து
உனக்கு கிடைத்துள்ள
அந்தப் பெரிய கௌரவம்
உலகம் உள்ளளவும்
உன் பெயரை
உரைத்துக் கொண்டிருக்கட்டும்!

உன் முடிவு
வெறும் முடிவல்ல...
அது
விடிவுக்கான ஒரு
விதை ஐயா.....!

சென்று வா
அடங்காத் தமிழனே
உன்
கனவுகள் நனவாகும்
காலம் வெகு தூரமில்லை
சென்று வா.....

கண்ணீருடன் கதி கலங்கி விடை தரும்
தமிழ் மானவர்கள்
கொழும்பு பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய அஞ்சலி

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும், பிரபல சட்டத்தரணியும்,
தன்மானமுள்ள தமிழனுமாகிய அமரர் உயர்திரு பொன். குமார் பொன்னம்பலம்
அவர்களின் பிரிவுத்துயர் பகிர்வு

நீதிக்கும் ஜனநாயகத்திற்கும் சாவுமணி!

தமிழருக்குத் தலைவிதியோ? தாய்மொழியின் நிலை குலைவோ?
விடுதலைக்கு நீதி சொன்ன சட்டத்திற்கிது விலங்கோ?
சுயமனிதச் சுதந்திரமாம் ஜனநாயக ஆட்சியிலே?
மா மனிதன் கொலை முறையோ இது தகுமோ?



கற்றறிந்த வல்லுனர்கள் மாநகரில் பலரிருந்தும்
உண்மைக்கும் நீதிக்கும் உத்தமனாய் குரல் கொடுத்தாய்!
செம்மணிப் பக்கங்களை மீளப் புரட்டுவித்தாய்
தமிழினத்தை தவிக்கவிட்டு சத்தியமே ஏன் செய்தாய்?

கிருஷாந்திக் கொலை வழக்கில் அநீதிக்கு அடி கொடுத்தாய்
வல்லுறவுக் கெதிராக சட்டத்தால் வாசல் கதவடைத்தாய்
கற்புக்கு காவல் இல்லாத் தேசமதில் நீ இன்றேல்
நித்தம் ஒரு கொலையோ தமிழினத்திற்கிது நிலையோ?

ஆழக்குரல் கொடுத்த நீதிக்கு இது நிலையோ?
ஆதவனின் அஸ்தமனம் தமிழினத்திற்கினி இருளோ?
வேதனைத் தீ ஆறாமல் எம் இனமே வெந்து அழ
தமிழினத்தின் குரலே ஒரு நொடியில் அடங்கியதன் மர்மமென்ன?

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.
யாழ்ப்பாணம்.
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழக்குமரனே மாமனிதர் குமாரரே!

பண்டிருந்த நம் அரசை மதிகேட்டால் இழந்து நின்றோம்
இன்று இருக்கும் இழிநிலையை மாற்றிடவே முன்வந்தாய்

புழுதிவாரித்தூற்றினாலும் இழி சொல்லால் வருத்தினாலும்
நாடாளுமன்றம் செல்ல வாக்குதனை அளிக்காது விட்டாலும்
அழுது துயரடையாது நெஞ்சம்தனை நிமிர்த்தி
தமிழர் நலன்பேணி அகிலமெலாம் சுற்றி
தமிழ் ஈழப்பிரகடனத்தை பறை சாற்றி நின்றாயே

இமயம்தனை அசைத்த வீரனது மெய்யை
எள்ளிருக்க இடமின்றி துளைத்த பாணம் போல்
திம்புக்கோட்பாட்டை எள்ளிநகையாடி
எதிர்த்தவரை வன்சொல்லால் துடிதுடிக்கச் செய்தவனே

மரணம் கோழைக்கு பலமுறை உண்டு
வீரனுக்கோ ஒரு முறை உண்டு
இருப்பதுவும் ஓர் உயிர் இழப்பதுவும் ஒரு நாள்
என்ற சித்தத்தில் திழைத்தவனே சீரிய கொள்கையனே

வெளிநாடு சென்று மனித உரிமைக்குழுக்களிலும்
பல பெருங்கூட்டங்களிலும்
வெளிநாட்டுப் பிரமுகர்க்கும் நம்மவர்தம் இன்னலை
பலமாக எடுத்துரைத்து எம் துயரை எங்கெங்கும்
வெளிக்கொணர்ந்த மாமனிதா!

இந்திரப் பழங்குடை நிழலில் உலாவி
வரும் அரசியற்குசேலர்கள் – கைவிட்டாலும்
சுந்தர ஈழத்தை எஞ்ஞான்றும் முழங்கிநின்று
பலநாடு சென்று ஈழத்தின் அவசியத்தை
பாங்கான முறையில் விதந்துரைத்த மாமனிதா!

வீடு இன்றி படுக்கப்பாய் இன்றி நாதியற்றவராய்
நடுவீதி வந்தவரை உன் சொற்சிலம்பால் அரவணைத்து
பாதுகாப்பாய் இருப்பதற்கும் அமைதியாய் வாழ்வதற்கும்
நாடு ஒன்று வேண்டுமென்று நாவசைத்த மாமனிதா!

தலைநகரில் தனித்து நின்று தனிநாட்டுக்
கொள்கைதனை தயங்காது எடுத்தியம்பி
அணிதிரளும் தமிழர் கூட்டம் தரணியிலே
தலைநிமிரச் செய்த மாமனிதா!

இன்றில்லை எம்மிடையே – என்றாலும்
உன்தன் மெய்தான் அழிந்தாலும் ஆவிதான் பிரிந்தாலும்
உன்னதக் கொள்கைதனை மண்ணில் விதைத்துவிட்டாய்
உன்தன் உடலால் வழிந்த உதிரமே உரமாகும்
நம்மூச்சே உன் கொள்கைதனை வளர்த்துவிடும்.

உன்தன் புகழ்பூத்த கொள்கை அழியாது
என்றென்றும் வளர்ந்திடவே அயராது உழைத்திடுவோம்

வாழ்க உன் நாமம்
வளர்க உன் சீரிய கொள்கை.

சி.வி. விவேகானந்தன்
சட்டத்தரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்வோம்:

சட்டமாமேதை மகன் தமிழீழ மா மனிதன்
தணியாத் தாகன்!
பட்டங்கள் நிறைவெனினும் பதவிபெறாவிட்டாலும்
பணியாவீரன்!
நட்டங்கள் உண்டெனினும் நம்மினத்தை நேசித்த
நல் உளத்தான்!
திட்டத்திற்கேற்றபடி சிந்தித்து வந்தகுமார்
சிதைந்தேன் போனான்?

2. நல்லுள்ளங்கொண்டதனால் நற்பேச்சே பேசியவன்!
நாவல்லோனாய்ச்
செல்லுமிடம் எல்லாமே திறமான கருத்தெல்லாம்
தெரிந்து சொன்னோன்!
கொல்லுவகம் தனிலிங்கே குடியிருந்தபடியாலே
கூற்றும் கூட
வெல்லுவதை விரும்பாமல் வீரனுயிர் கொண்டதுவோ?
வெதும்புகின்றோம்!

3. செய்தபணி அத்தனையும் சீரான நற்பணியே
தீய தில்லை!
பொய்யாளர் மத்தியிலே போலிகளின் மத்தியிலே
புரிந்ததெல்லாம்
மெய்யான சேவைகளே, மேலான நற்செயலே.
மேலும் மேலும்
கையாண்டு வருகையிலே காலனுமே கைவரிசை
காட்டினானோ?

4." என் நலமே எம் நலமே" என்போர்கள் மத்தியிலே
இக் குமாரன்
தன் நலமே பாராமல் – தமர் நலமே பாராமல்
தாயகத்தின்
பொன் நலமே பெரிதாகப் புகழார்ந்த தமிழினத்தின்
புனித வாழ்வே
பன்னாளும் மனதினிலே பதிவாக்கிப் புரிந்தபணி
பாழாய்ப் போச்சோ?

5. அஞ்சி அஞ்சிப் பதுங்குபவர் மத்தியிலே அஞ்சாத
ஆண்மையோடும்
கெஞ்சாமல் பிச்சைகளைக் கேளாமல் துணிவோடும்
கேலி கிண்டல்
பஞ்சு பஞ்சாய்ப் போகப் பலருக்கும் முன்னாலே
பறையறைந்ததோன்
துஞ்சினானோ? மேலும் தொடராமல் போனானோ?
தோல்வியாமோ


6.மாரி போல் கடனாற்றி மறு பயனைப் பாராமல்
மகிழ்ச்சியோடும்
காரியங்கள் செய்தானே கண்ணாலும் காதாலும்
கண்டும் கேட்டும்
வாரியெதும் ஈய்ந்தோமா? வாழ்த்துக்கள் சொன்னோமா?
வரண்டு போனோம்!
பாரிலினி அழுதென்ன பாழ்நெஞ்சு நொந்தென்ன?
பாவியானோம்!

7. நீதிக்குப் போரிட்டான்! நேர்மைக்குப் போரிட்டான்!
நீதிமன்றில்
வாதிட்டான் சட்டத்தால்! வழக்கெல்லாம் வென்றிட்டான்!
வம்பை மீறிச்
சாதித்தான் பலவற்றைத் தனி மனிதனாய்நின்றே
சரித்திரங்கள்
போதித்தான், உண்மைகளைப் போகா இடம் எல்லாமே –
போயே விட்டான்!

8. " என் செய்யும் இனவாதம்" என்பதையும் அறிந்தேதான்
இயங்கி வந்தான்!
வன்செயல் ஆர் செய்கின்றார்? வாழ்வுக்குப் போராடி
வருவோர் யார் யார்?
முன் செயலே இத்தனையும் – முடிவு தமிழ் ஈழம் தான்
முயற்சி போர் தான்!
நன் செயலே உரிமைப்போர் நடக்கட்டும், என்றவனை
நாம் தொடர்வோம்

திருகோணமலைத் தமிழ் மக்கள் சார்பாக

வ. இராசக்கோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க குமார் ஐயன் நாமம்! வாழ்க! வாழ்கவே!

தூசி படிந்து கிடக்கும் என் மேசையைத் துடைத்து
ஒரு கடதாசியையும் பேனாவையும் எடுக்கிறேன்....
கண்கள் கலங்குகின்றன... குரல்கள் நடுங்குகின்றன....
உள்ளும் புறமும் இருள் மண்டிக் கிடப்பது போன்ற
ஓர் இனம் புரியாத வெறுமை உணர்வு!
என் குடும்பத்தில் ஒருவரை, நெருங்கிய மித்திர பத்துக்களில் ஒருவரை,
என் ஆசான்களுள் ஒருவரை, பல்லாண்டு காலம் பழகிய நண்பர்களுள் ஒருவரை
இழக்கும் போது ஏற்பட்டிருக்கக் கூடிய கவலையுணர்வின்
பன் மடங்குத் தொகையான துயரம் என் நெஞ்சுள்!
ஏன் இவ்வளவு தூரம் நான் கலங்குகின்றேன் என்று
எனக்கே புரியாத ஒரு கலக்கம்...
பலநூறு கரங்கள் சேர்ந்து என் இதயத்தைக்
கசக்கிப் பிழிவது போன்ற ஓர் குமுறல்!
அழுவதா, ஆத்திரப்படுவதா, மௌனிப்பதா,
எம்மை நாமே நோவதா என்று
செய்வதறியாது தமிழினத்தைத் தவிக்க விட்டு
'தன்மானத் தமிழனாய்' நீ மட்டும் சென்றனையே ஐயா!
"சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் – இனி அஞ்சிடோம்
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்குமோ தெய்வம் பார்க்குமோ" என்று
பேசாப் பொருளைப் பேசத் துணிந்த
பெருந்தகையாளனே! பேசாயோ இனி நீ!
"கோழைப்பட்ட ஜனங்களுக்குண்மைகள் கூறி
ஏழைபட்டிங்கு இரத்தல் இழிவென்றே ஏசி
அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினையே" ஐயா! அடங்காத் தமிழா!
"கொடியவர் இழைக்கும் தீங்கினும் கொடியது
அறிவுடையாளரின் மௌனமே" என்ற
மார்ட்டின் லூதர் கிங்கின் மகத்தான வாக்கியத்தை
மனதார உணர்ந்து மௌனங் கலைத்தாய்!
ஈற்றில் இப் பாழ்பட்ட உலகம் 'கிங்' குக்கு வழங்கிய பரிசைத்தான்
உள்ளதை உரைத்ததால் உனக்கும் வழங்கியதோ?
மரணத்திலும் மகோன்னதம் பெற்று
மகாத்மாவாய் மறைந்த மாமனிதா!
சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டு
சிந்தையிரங்கிச் சிலிர்த்தெழுந்த சீராளா!
உடலளவில் நீ எம் மத்தியில் இல்லாதிருப்பினும்
உணர்வளவில் என்றும் எம்முள் கலந்திருப்பாய்!
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்பட்ட" வள்ளலே!
வாழ்க நின் நாமம் வளர்புகழோடு!

"தம்பீ...." என்று அழைக்கும் உங்கள்
கணீரென்ற குரலை இனிக் கேட்க முடியாதே...
அஞ்சாது நெஞ்சுரத்தோடு நிமிர்ந்த உங்கள்
தோற்றத்தையினிக் காணமுடியாதே என்பதை
ஜீரணிக்கத் திராணியற்று,
சிந்தும் கண்ணீர் விழிவழி பெருக;
நீங்காத நினைவுகளுடன்,

-நிலக்ஷன்-

6.1.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனியாய அழிவுதனில் அகால மரணத்தை தழுவிய ஐயா அவர்களின் பிரிவுத் துயரால் வாடி நிற்கும் அண்ணாரின் குடும்பத்தாராகிய உங்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை இதயமதில் துயரமுடன் தெரிவித்து கொள்கின்றேன்.

மறைந்த தமிழ் மகாத்மாவுக்காக

1. செங்கதிர் போல் ஒளி வீசிய செந்தமிழ் செல்வரே
தங்கத் தமிழ் மணியே தரணியில் உதித்த வெண் – நிலவே
தாய்க்கு நீங்கள் இன்றும் குமார் பொன்னம்பலம்
தமிழுக்கு என்றும் எங்கள் தமிழ் ஞானப் பலமும்

2. அடிமை விலங்கை உடைத்தெறிந்து என்றென்றும்
அகிலம் போற்றும் சட்ட தரணியாக நின்ற யெங்கள்
அன்பே உருவான இன்பத் தமிழ் தியாகியே நீங்கள்
ஆயுதம் ஏந்தாமல் படையின்றி தனியொரு மரமாய்
அநீதிக் கெதிராக அசைந்தாடும் நாவால் சொல் அம்புகளால்
அகிம்சா வழியில் போர் தொடுத்த அற்புத தீரரே.

3. நாட்டையே வார்த்தைகளால் வாரி யெடுத்த உங்களை
கோட்டைக்குள் ஒழிந்திருக்கும் குள்ள நரி கூட்ட மொன்று
வேட்டையாடி விட்டனரே கொலை வெறி பிடித்ததினால்.

4. தமிழ் மக்களின் வாழ்வு ஒங்கவே என்றும் ஈடில்லா
உங்கள் உடல், ஆவி, பொருள், எந்தனை உயர்வாக
உன்னத தமிழுக்கு கொடுத்து உரிமைக்கு குரல் விடுத்த
உத்தம சீலரே தமிழர்களின் தன்மானம் காத்த தகயே!

5. நீண்டதொரு தசாப்தமாக தமிழ் மக்களுக் கெல்லாம்
நிழல்கொடுத்து நிமிர்ந்து நின்ற எங்கள் ஆலமரத்தை
நிர்மூல படுத்தி விட்டனரே இனவாத நீசர்கள்.

6. பாடு பட்டு உழுதாலும் பார்தனில் இனி எங்களால்
ஈடு செய்ய முடியாது உங்கள் புனித இடத்தை
இடுக்கண் வந்த போதும் இடராமல் தரணியெங்கும்
மிடுக்கோடு நடைபோட்ட அஞ்சனா மைந்தரே.
நாடு கேட்டீர்கள் தமிழ் மக்களுக்கு சரி சமத்துவமாக
கோடு போட்டு வந்தீர்கள் பைந்தமிழ் உரிமைக்காக

7. கஷ்டங்கள் வந்த போதெல்லாம் காற்றாய் வந்த அன்னமே
இஷ்ட தந்தையாகி இறுதிவரை அறுதியாய் நின்ற நின்னையே
துஷ்டர்கள் வார்த்தெடுத்த தனி துப்பாக்கி சன்னத்தால்
துளைத்து விட்டனரே யெங்கள் மணி தமிழ் சின்னத்தை.

8. தடைகள் பல அகற்றி தமிழ் மக்களுக்கெல்லாம்
குடையாக நிழல் கொடுத்த தமிழ் ஞான மரமே
கொடையாக உயிரையும் கொடுத்து சென்றீர்களே – இப்போது
முடையாகி விட்டது எங்கள் முழு மனதும் ஐயா.

9. புரையோடிப் போன இனவாத அரசியல் வர்க்கத்தால்
சிறையிலே வாடி தவிக்கும் எங்களுக் கெல்லாம் உடன்
விரைந்தோடி வந்து உதவிக் கரம் நீட்டி துணிவுடன்
கரை காண விளைந்திடுவீர்களே "ஐயா" இனி உங்கள்
துறையிலே யார் வருவார்கள்? எங்கள் பிணி தீர்க்க?
இறையிடம் இறஞ்சி நிற்கின்றோம் இதயம் உடைந்து.

10. யுத்தங்களால் நசிந்து போன இத் தரணியில் மலர்ந்த
புத்தாயிரம் ஆண்டென்ன இம் மண்ணிலே இனி மேல்
பத்தாயிரம் ஆண்டுகள் மலர்ந்தாலும், மறைந்த குமாரர்தான்
வித்திட மலர்ந்திடுவாரோ? விடை யறியோம் பரா பரமே!

11. கதையிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டாலும் இன்று
சிதையிலே உங்கள் புகழ் உடல் மறைந்து விட்டது
பதை பதைக்கும் நெஞ்சோடு பதறி நிற்கின்றோம் ஐயா,
எதை கொண்டு ஈடு செய்யப் போகிறோம் எங்கள்
கீதையான இதய தந்தையே உங்கள் புனித பணிக்கு.

12. பொன்னாடை விரும்பாத கண்ணான எம் தமிழ் மன்னா
கண்ணோரம் நீர் திரள நெஞ்சு கனம் தாங்காது
விண்ணுலகம் மேவிய உங்கள் முன் விம்மலுடன் விதைப்பது.

அச்சமில்லை அச்சமில்லை ஐயா ஆயிரமாயிரம் அடி விழுந்தாலும்
அண்ணலே தங்கள் பாத சுவடுகளில் பயணித் திடுவோமென
அணையா எங்கள் கண்ணீர் அஞ்சலியை கவியில் வடித்து
அரைக் காலம் கடந்து காணிக்கை யாக்கு கின்றோம் இன்று.

கந்தப்பளை வி. பரணி,
அரசியல் கைதி,
களுத்துறை சிறைச்சாலை,
களுத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியின் உறைவிடமே குமார்...!!

புதிய முன்னணியின்
புதிய தொடக்கம்
புதுமையான ஆரம்பம்
புதிய நூற்றாண்டில்
புதிய சவால்
தன்மானத் தனிக்குரலை
தலநகரில் இழந்தோம்!

தணல் போன்ற வார்த்தைகளை
தமிழுக்காய் கொட்டியவன்
உரிமைக் குரலாக
உலகத்தின் செவிகளுக்கு
உறுதிபட உரைத்தவன்
உரிமை மீறல்களை
உரித்துக் காட்டியவன்!

தப்புத் தாளங்களைத்
தட்டிக் கேட்டவன்
தடம்மாறிய பயணத்தை
தமிழ்துரோகம் என்றவன்
தன்னின மானத்தை
தன்னுயிர் போலாய் கொண்டவன்!

முகத்துக்குப் பல்லிளித்து
முந்தானைக்குள் முகம்பதித்து
முகவரிக்காய் அலையாது
முத்தான வார்த்தைகளால்
முரசாக ஒலித்தவன்!

முதிர்ந்த சட்ட அறிவாலே
முயற்சிகள் பல செய்தவன்
சிங்களத்தின் சிரசிருந்தே
சிறும்புலி என்றவன்
காட்டிக் கொடுப்பையும்
கயமைத் தனத்தையும்
காறி உமிழ்ந்தவன்!

கெட்டிக்காரர் என்று தமிழ்
கெட்டழிந்த போதும்
எட்டியே பாராது
ஒய்யார வாழ்வுக்காய்
ஒட்டியே நின்றவரை
ஒதுக்கியே வையுங்கள் என்றவன்!

சிங்களத்தின் சிறையறையில் – எங்களின்
சிதைவு கண்டு
சீரான பணிசெய்ய
சிரமேற் கொண்டவன்!

குன்றாத கொள்கையினால்
குண்டேந்தி விட்டாலும்
குலமகன் குமார் ஓர்
காலத்தால் அழியாத காவியம்!
உறுதியின் உறைவிடம்
தனிமனித சரித்திரம்
உழைப்புக்கும் – தமிழ்
உணர்வுக்கும்
உறுதிக்கும்
உதாரணன்!

உதயத்துக்காய்
உரத்துக் குரல் கொடுத்த
உதய காலப் பறவை!
உண்மை ஜனநாயகன்
மனிதத்தை நேசித்த
மாமனிதன்!

உள்ளுக்குள் உழுத்து
உதிர்ந்து உருக்குலைபவர்க்கும்
ஊரை உறுத்தி
உயிர் வாழப் பறிப்போர்க்கும்
உறவை அழிக்க
உருமாற்றம் பெற்றுநிற்கும்
கோடரிக் காம்புகளிற்கும்
மேதையென்றால் மேன்மையென்று
மேனி மினுக்கி
மேல்தட்டு வாழ்க்கையிலே
மெத்தனமாய் வாழ்வோர்க்கும்
மனிதத்தை நேசித்த
மாமனிதன் ஓர்
மகத்தான பாடம்!

அற்ப சுகத்துக்காய்
அடிமை வாழ்வா? ..... அதனிலும்
அரை நொடி வாழ்வது மேல்
அந்த மாமனிதன்
அறிவித்த பாடமிது!

அணி அணியாய் – இனி
அச்சுவட்டினில் தொடர்வோம்
புதியதோர் எழுச்சி கொள்வோம்!
புதிய முன்னணி.

புறங்கண்டோட
சாவேவரினும்
சாவால் எதிர்கொள்வோம்
சாதனை செய்தொரு
சரித்திரம் படைப்போம்!

உரையொடு உணர்வூட்டி
செயலோடு செந்தமிழ் பற்றூட்டி
உறக்கம் விழிக்கவைத்த
உறுதியின் உறைவிடமே
உத்தம குமாரனே
உறுதியோடு உறங்கு
உள்ளத்தில் சாந்திகொள்!
உள்ளத்தில் சாந்திகொள்!!
சாவே வரினும்
சாவால் எதிர்கொள்வோம்
சாதனை செய்தொரு
சரித்திரம் படைப்போம்!!

தமிழ் அரசியல் கைதிகள்
களுத்துறைச் சிறைச்சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றிடுவாய் நெஞ்சில் நிலைத்து

ஒரு தன்மானத் தமிழ்ப்புறா,
அட்டூழியமாய்,
சுட்டு வீழ்த்தப்பட்டது.

இன அடக்கு முறைக்கான,
ஆதாரம் தேடி அகிலத்துக்கறிவித்தவன்,
தன் மரணத்தையே ஆதாரமாக்கி,
மரணித்துப் போனான்.

தமிழினத்தின் துயரத்தை,
அவன் பேசியதைவிட,
அவன் மரணம்,
அதிகம் பேசிற்று.

தமிழரின்,
ஓலக்குரற்கெல்லாம் ஓடிவந்தவன்,
ஓலமிடவும் நேரமின்றி,
ஓய்ந்து போனான்.

பார்ப்பார் இல்லாத பாதையிலே,
அவன் தன்னை,
கேட்பார் இன்றிக் கிடத்தினார்.
அப்பாதகரை,
பார் கேட்கும்.
பதில் பிறக்கும்
பாவம் தோற்கும்.

நித்தியத்தில் அநித்தியம்,
உலகியற்கை,
அநித்தியத்தில் நித்தியம்,
உனதியற்கை,
இயற்கையை வென்றதால்,
மரணமிலா வாழ்வுற்று,
மாமனிதனானாய்!

பாவத் தமிழினம்,
பட்டுழலும் துன்பமதை,
பூவுலகுக்குரைத்து புண்பட்ட நெஞ்சோடு,
வானுலகுக்குரைத்து வாதாடச் சென்றாயோ?

விண்சேர்ந்த வள்ளலே!
அங்கே,
தங்கை கிருசாந்தி தன்னிரண்டு கைகளினால்
உன் கைபற்றி ஓங்கி அழுதிருப்பாள்,
அன்பால் அவள் துயரம்,
அவனிக்குரைத்தவனே!
உன்னால் உறும் துயரம் ஓங்கியுரைப்பார் யார்?

பேச்சடக்க முடியாத பேதையர்கள்,
உந்தன்,
மூச்சடக்கிவிட்டு முடிந்ததென நினைத்திருப்பார்,
பாவம் அவர்களுக்கு,
பார் இயற்கை தெரியாது.
உன்னை அழித்திடலாம்.
உண்மை அழிந்திடுமா?
நீ இறந்து போயிடலாம்.
நீதி இறந்திடுமா?
உண்மை உணரும் வரை,
உலுத்தர் மனம் மகிழட்டும்.

என்றோ ஒரு நாள்,
எங்களின் மண் மலரும்.
புதைத்தாற்றான்,
விதையெல்லாம் பொங்கியெழும் விருட்சமென,
எங்கள் மண்ணுக்காய் எருவானாய்.
நீ தந்த உரத்தால் நிஜம் மலரும்.
உன்னைப்போல்,
ஆயிரமாய்க் குமரர் அவனியிலே தோன்றிடுவர்.
அவரையெலாம்,
சுட்டுப்பொசுக்க வேண்டுமெனின் எதிரிக்கு,
பட்டாளம் ஏதிருந்தும் பத்தாது.
உண்மையொளிரும்,
ஓர் உதயம் தான் நிகழும்,
அன்றெங்கள் நெஞ்சம் போல்,
அருந்தமிழர் மண்மலரும்,
அன்று வருவாய்.
அப்போது வரவேற்போம்.
இன்றெங்கள் நெஞ்சமெலாம்
இருந்தூக்கம் தந்திடுக,
சென்றுவரத்தான் சேர்ந்தே விடை தந்தோம்.
வரும் வரைக்கும்,
நின்றிடுவாய் நெஞ்சில் நிலைத்து.

இ. ஜெயராஜ்
கம்பன்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள மகளே கஜேந்திரா

செய்தி கேட்டதிலிருந்து, நான் இன்னும் மீளவில்லை. ஐயா, "I meet the lion in its Den" என்ற மாமனிதனை – மாபெரும் வீரனைக் குள்ளநரி கொன்றுவிட்டது. ஆற்ற முடியாத துயரை நான் எப்படி ஆற்றுவேன்! ஆள் ஆற்றாக் கவலையை, நாள் ஆற்றும், ஆறுங்கள். வீட்டு வாசல் பிள்ளையார் துணை.

குமார் ஒரு தனிமரம், ஆனாலும் ஆலமரம். அதை வெட்டி வீழ்த்தி விட்டார்கள் வீணர்கள். செய்தி கேட்டவுடன் வந்த கவிதை இது – தம்பி கஜேந்திர குமார்,

எனது இதய அஞ்சலியை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தக் கவிதாஞ்சலியை நினைவாஞ்சலி மலரில் இணைத்துக் கொள்ளுங்கள்.

தீரத்தைத் துணிவைக் கொண்டு
தீமையை அடித்து வீழ்த்தியெம்
பாரத்தைச் சுமந்த தோளைப்
பாடையிற் சுமந்தோம் நாங்கள்
வீரத்தால் வீழ்ந்து விட்டாய் வீரனே
விதிக்கொரு விதியாய் நெஞ்சின்
ஈரத்தால் இனத்தைக் காத்து
இறுதியில் உயிரும் ஈந்தாய்

புத்தனும் செத்துப் போனான்
போதிமா நிழலிற் பூத்த
தத்துவம் சமாதி யாச்சு
சான்றோரும் கண்ணை மூடி
நித்திரை கொள்ள லானார்
நீதிதே வதையும் கண்ணைப்
பொத்தியே கதறுகின்றாள்
காலனும் கலங்கிப் போனான்.

சிங்கத்தை அதன் குகையிற் சந்தித்த வேங்கை
சிறுநரியின் குள்ளத்தால் சிந்திவிட்ட இரத்தம்
வங்கத்தின் கடலலையாய் ஆர்ப்பரித்து நாளை
வரலாறு படைக்குமிதை வருங்காலமுணர்த்தும்
தங்கத்தை உருக்கித்தான் தரமுயர்த்த வேண்டும்
தமிழனையும் உதைத்துத்தான் தலைநிமிர்த்த வேண்டும்
சங்கத்தை வைத்தாண்ட தமிழ்ச்சாதி தன்னைத்
தரமுயர்த்தத் தன்னுயிரை அர்ப்பணித்தான் மேதை.

தமிழினத்தை உயர்த்தவென வந்த வந்த தலைவர்
தமிழினத்தின் பேர் சொல்லித் தம் வயிற்றை வளர்த்தார்
தமிழினத்தை ஏமாற்றித் தம் புகழை வளர்த்தார்
தமிழினத்தின் தாழ்வினிலே தமைவளர்த்துக் கொண்டாரே.

அன்பாகக் கேட்டார்கள் உரிமை தன்னை
அறவழியிற் போராட்டம் நடத்திக் கேட்டார்
தென்பாலில் வாழுகின்ற சோதரர்க்குச்
செய்தியிது புரியவில்லை, செருவே என்றார்

முன்பாலில் செய்தவினை மூண்டதுவோ என்ன
மூவினமும் போர்த்தீயில் வேகக் கண்டீர்
நன்பாலில் விஷம் கலந்தீர், நாசம் செய்தீர்,
நாடெல்லாம் சுடுகாடாய் எரியச் செய்தீர்.

வந்தேறு குடியென்றீர் வரலாறு தெரியாமல்
வாய்காவா உரையாலே வருந்தச் செய்தீர்
சந்தேகம் கொண்டோரைச் சிறையி லிட்டீர்,
சதி செய்து கொலையும் செய்தீர், சத்தியத்தை
நிந்தித்தீர், நீதிக்குக் குரல் கொடுத்த நெடுமரத்தை
நிமிர்ந்து நின்ற தனி மரத்தை நிலத்திற் சாய்த்தீர்
அந்தோ அந்தோவென்று அல்லற்பட்டாற்றாது
அழுத கண்ணீர் அம்மாநின் ஆட்சியினை ஆடச் செய்யும்.

கற்புள்ள மகளிர் சொரி கண்ணீர் வெள்ளம்
கருணையுள்ள இளைஞர் சொரி செந்நீர் வெள்ளம்
நற்றவத்துச் சான்றோர்கள் நெஞ்சம் வெந்து
நெட்டுயிர்க்கும் அனலான மூச்சின் வெள்ளம்
அற்ப மல்ல அம்மா நின் ஆட்சி தன்னில்
அறியார்கள் சொகுசாக வாழ்வோர் துன்பம்
அற்புதங்கள் நிகழுதற்குக் காலம் வந்தால்
அநீதியே நீதியா ஆட்சி செய்யும், ஆட்சி வீழும்.

போதி தருமத்தைப் போதிக்கும் திருக் கூட்டம், புத்தி
பேதலித்துப் போர்க்களத்தில் நிற்கக் கண்டோம்
நீதியை நிலைநாட்டு மெனநினைத்த கற்றோர் கூட்டம்
சாதியைப் பேசிச் சரித்திரம் மாற்றக் கண்டோம்

நீதியை எடுத்துச் சொல்லி நியாயத்தைக் கேட்டதன்றிச்
சாதியை எடுத்துச் சொல்லித் தர்மத்தைக் கொஞ்சமேனும்
பாதிக்கப் பார்த்ததுண்டோ பணத்தினைப் பதவிதனைச்
சேர்த்திட எண்ணினாரோ செய்பிழை என்ன கண்டீர்.

ஆரென்ன சொன்னாலும் சொல்லட்டும் தமிழீழப்
போர் ஏனென்று எதற்கென்று பொழுதெல்லாம் நினைவாக
ஊரறிய உலகறிய ஒலித்த குரல் ஓயாது
குமார் இறக்கவில்லை குரைகடல் ஓய்வதில்லை.

தத்துவம் உணர்ந்த தாலே
சாவினை உணர்ந்து கொண்டோம்
நித்திரை கொள்ளுகின்றான்
நீண்ட நாள் உழைப்பின் பின்னர்
கத்தியேன் குழப்புகின்றீர்
காலத்தை வெல்ல மாட்டோம்
சத்தியமே வேலனிது சொல்லுகின்றேன்
சாகவில்லை, குமாருக்குச் சாவேயில்லை.

வித்துவான் வேலன்
ILFORD
ESSEX 1Q1 2 LN
U.K.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

மறவன் குமார் பொன்னம்பலத்தை மாய்த்தான் மகாபாவி



குமுறிக் குரல் கொடுத்து குலக்கொடி காத்த
குமரன் குமார் பொன்னம்பலம்
அஞ்சா நெஞ்சமது அவன் கருங்கல் சிற்பம்
அதர்மத்தை அறுத்திடும் திண்மையது
அவன் திரண்ட மார்பு
எதிரியை எட்டி சாடுவதில் வீரனவன்
எத்திக்கிலும் தீந்தமிழர் தூயர்
துடைப்பதில் தங்கத்தமிழனவன்
மாற்றானிடம் மண்டியிடுவதென்பது
அந்த மானம் காத்திடும் தமிழன் – மரபில் இல்லை
தன் இனம் காத்திட தன்னை மாய்த்திட்டான்
தன் மண்ணை மீட்டிட தன்
உடலை மண்ணிடம் கொடுத்திட்டான்
நீதி கேட்டு வீறு கொண்டு வீரமுழக்கமிட்டான்
காசு கேட்டு நீதி கேட்கவில்லை
வறியவனிடம் பரிவு காட்டினான்
சொல்லிலும் செயலிலும் பேச்சிலும்
மூச்சிலும் தமிழீழம் மலர்வதைக் கண்டிட்டான்
முன் வைத்த காலைப் பின் எடுத்தறியாதான்
புறமுதுகு காட்டிடாது வைரமார்பில்
சூடு வாங்கி மடிந்திட்டான்
கனடா வந்திருந்தான் கன்னித்தமிழ்
"தரணியெங்கும் தமிழ் வளர்ப்போம்"
நூலை வெளியிட்டான்
தரணியாண்ட தமிழன்
தரணியாள்வான் என்றான்
தரணிக்கு நூலை வெளியிட்டு வைத்தான்
தரணி உன்னைத் தேடியெங்கும்
காணாது தவிக்கிறது
உனக்கு பூமாலை சூட்டினோம்
பொட்டுப் போட்டோம்
பொன்னாடை போர்த்தினோம்
சிங்கத்தின் குகையில் இருந்து வந்திட்ட
வீரவேங்கையென பெருமைப்பட்டோம்
பசுமையான நினைவுகளைப்
பக்குவமாய் பூட்டி வைத்திடவா?
எங்கள் காளையை எங்கே காண்போம்
அந்த அரக்கர் ஆட்சியில் பேய்கள்
தின்கின்றன சாத்திரங்களை
பிசாசுகள் சட்டத்தை கையில் எடுத்தன
நாய்கள் எலும்புக்கு மோப்பம் இடுகின்றன
புட்டுக்கு மண் சுமந்த சிவனுக்கு
விழுந்த அடி அனைவருக்கும் விழுந்ததாம்
உனக்கு விழுந்த சூடு அனைத்து
தமிழர் முதுகிலும் விழுந்து விட்டதே
நீ ஓர் உண்மைத் தமிழன்!
உழைக்கும் தமிழன்
உயர்வு காண விழைந்திடும் தமிழன்
உன்னை அழித்தோர் உன் இனத்தை அழிக்கவே
வன்முறையில் விட்ட
சட்டமாய் கைவரிசை காட்டினர்
நீ அழியவில்லை உன் ஆத்மா
அனைத்துத் தமிழருடன் சங்கமித்து விட்டது
நீ கனவில் கண்ட தமிழீழம்
நினைவில் காணக்காத்திருப்பாய்
நீ அழிந்தும் அழியாத சிரஞ்சீவி
மறைந்தும் மறையாத மனித குலமாணிக்கம்
எம்மோடு இரண்டறக் கலந்த குமரனே
நீ குன்றில் உறையும் தெய்வமானாய்.

உன் பிரிவால் தவிக்கும் "தரணியெங்கும் தமிழ் வளர்ப்போம்" நூலாசிரியரும் ரெமி இசைத்தட்டு நிறுவனமும்

மாபெரும் அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 6.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை ஒன்ராறியோ பாராளுமன்றத் திடலில் (Queen's Park) நடைபெறும்.

விபரங்களுக்கு : கனடிய தமிழர் சங்கங்களின் சம்மேளனம்

(416) 498-3228 / (416) 461-5991 / (416) 285-1947 / (416) 463- 7647

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகம் வீண்போகாது...

அமரர் குமார் பொன்னம்பலம்

12.08.1938 – 05.01.2000

நேற்றுப் போல் தான் இன்றும்,
இன்றுபோல் த ான்
நாளையும் என்றில்லை
ஈழத்தமிழர் வாழ்வில்
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு செய்தி.

இன்றைய செய்தி கேட்டு
அதிர்ந்தது ஈழத் தமிழர் நெஞ்சம்
ஈழத் தமிழர்க்கு மூத்த தலைவர்கள் இல்லையே
என்ற குறையை
நிரப்புவது போல்...
நிமிர்ந்த நடையுடன்
உறுதியான நெஞ்சுடன்
அஞ்சா மனதுடன்
அகிலமெல்லாம் தமிழர்க்காய்
குரல் எழுப்பிய
அண்ணன் குமார் பொன்னம்பலமே!
தங்கள் செய்தி கேட்டு
ஆறாத் துயரில் ஆழ்கிறது தமிழர் நெஞ்சம்
தங்கள் இறுதிக் காலங்களில்...
ஈழத் தமிழர்க்காய்
அளப்பரிய பணிகள் செய்தீர்கள்.
ஐ.நா. முன்றலில் முழங்கினீர்கள்...
ஐ.நா. உள்ளரங்கில் சத்தியம் செய்தீர்கள்...
லண்டன் மாநகரில் குரலெழுப்பினீர்கள்...
கடுங் குளிரிலும் டென்மார்க் கொப்பன்கேகன் தெருக்களில்
வெறுங்காலுடனும் வேட்டியுடனும்
ஊர்வலமாய் நடந்தீர்கள்.
இலங்கைப் பாராளுமன்றத்தில் பேசாவிட்டாலும்
உலக நாடுகளின் பல பாராளுமன்றங்களில்
எமது சுய நிர்ணய உரிமைக்காய்
உரத்துக் குரல் தந்தீர்கள்.
சிறையில் வாடிய எமது இளைஞர் பலரை மீட்டீர்கள்...
அடக்கப்படும் எமது இனத்தின் விடிவுக்காய்
தோள் கொடுத்தீர்கள்.
கண்ணீரால் அஞ்சலி செலுத்துகிறோம் ஐயா!
தங்கள் தியாகம் வீண் போகாது.
எங்கள் விடிவு வெகு தூரத்தில் இல்லை.



பிறிபேர்க் தமிழ் மன்றம் - சுவிற்சர்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தை மன்னியோம்

5.6.2000

மரணத்தை நாம் இனி
மன்னியோம்.... மன்னியோம்....

மனிதத்தின் உறைவிடமாய்
மானுடத்தின் ஓர் குரலாய்
மண்ணில் வாழ்ந்த உன்னை
மனச்சாட்சி இல்லாமல்
அழைத்துச் சென்றதே
அந்தமரணம்
அதற்காக
மரணத்தை நாம் இனி
மன்னியோம்.... மன்னியோம்....

ஆனாலும் அந்த மரணத்திற்கு
நாம் நன்றி சொல்லவும்
நினைக்கின்றோம் – ஏனென்றால்
மரணத்திற்கு பின்னர் தானே
உன்னை மாமனிதன் பட்டம்
தேடிவந்தது.

மகத்தான பலத்தோடு
தலைநகரில் – நீ
துணிவைக் காட்டி நின்றாய்
பரிசாக பாதகர்கள்
அனுப்பி வைத்த
மரணத்தை ஏற்றுக் கொண்டாய்

உன் மக்கள்
கண் முன்னால்
கண்ணீர் விடுவதை
துடைத்து விட முனைந்தாய்
துணிவோடு
நீதிகேட்டு நிமிர்ந்தாய்
நிமிர்ந்த உன்னை
இல்லாதாக்கினர் இயமதூதர்.

உன் கண்கள்
எப்போதும் விழித்திருந்தன....
காதுகளும் எந்நேரமும்
ஒலிகளை உள்வாங்கியபடி
இருந்தன.....
உன் வாய் கூட
உண்மைகள் வெளிவர
உரத்துப் பேசியது.....

கொடுமைகளைக் கண்டு
உள்ளம் கொதிக்க
நீராவியின் வெப்பம்
எழுவதுபோல
மேடைகளில் ஏறி நின்று
முழக்கம் செய்தாய்
முடிவில்.....
வாழ்வின் முடிவு
தேடி வந்தது உன்னை.

மற்றவரைப்போல – நீ
கண்களை மூடியும்.....
வாயைப் பொத்தியும்....
காதுகளை விரல்களால்
அடைத்தும்.....
வாழ்ந்திருந்தால்
இன்றும்
எம்மோடு வாழ்ந்திருப்பாய்.

ஆகையினால்
மனிதத்தை எம்மிடமிருந்து
பறித்துச் சென்ற
மரணத்தை
நாம் இனிமேல்
மன்னியோம்..... மன்னியோம்.....

ஆர் என் லோகேந்திரலிங்கம்
பிரதம ஆசிரியர் "உதயன்" கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அறிந்திலர்

கடைசியில்
அது நடந்தே விட்டது....
"பதவியேற்புரையில்"
சிங்களச் சீமாட்டி கர்ச்சித்தபடியே,
உன்னுடைய குரலை
காற்றிலிருந்து பிரித்தழித்தனர்.

அதிர்ச்சி, ஆத்திரம், ஆணவம்
மூன்றுமே அவள் "கண்ணை"
முழுதாய் மறைத்துவிட்டன. பாவம்,
சிந்திக்கவேயில்லை...
ஈழப்போரின் உச்சக் கட்டத்தில்
தன் இருப்பிற்கான இரஞ்சலுக்காய்
உன்னைத்தானும்
தூதாய் அனுப்பியிருக்கலாம்.

புத்தரின் பல்லைப் பேணியே
கும்பிடும் யுத்தரின் பூமியில்
அமைதி பேசிய அஞ்சா நெஞ்சனே!
உனக்காய்... ஜனநாயகம்
இன்னும் ஒரு தடவை
தலை குனிந்தது.

சிங்கத்தின் குகைக்குள்
கொல்லாமை பேசிய அன்பனே!
துப்பாக்கி முதுகுறுத்தும் போதும்
அஞ்சாமல், தமிழருக்காய்
உரத்து முழங்கிய
மறத்தமிழன் நீ!

எங்கள் நெஞ்சுக்குள்
கணன்றிருந்த
கேள்விகளையெல்லாம்
கடிதமாய் வடித்தாய் நீ!
துப்பாக்கி ரவைகளை
பதிலாயனுப்பினர் கோழைகள்
உண்மையை ஒங்கியொலித்த
உன் மூச்சையே பிடுங்கினர்.

பேய்களிடம் சத்தியத்தை,
நரிகளிடம் நாணயத்தை,
அற்பர்களிடம் அன்பை,
எதிர்பார்த்து நீ எழுதவில்லை
பொய்மையை எச்சரித்தாய்....
மெய்மையை உணர்த்தினாய்.....

அவர்களும் அறிவர்.....
உனது குரல்
உலகின் முகட்டினை உரசும்;
உறங்கும் மனச்சாட்சியை
உலுப்பும்;
என்பதை அவர்களும் அறிவர்.

எனினும், ஒன்றினை மட்டும்
உணர்ந்திலர்....
"உன் இருப்பின்போது கூட
இல்லாத நெருப்பு
உன் இறப்பிலே எழுந்ததை"
அவர்கள் அறிந்திலர்....
ஆம்... மீண்டும் பலபேர்
உன்போல் எழுவர்!

உன் உருவை ளமறைத்தனர்
உன் வார்த்தைகள்
நிஜமாய் வாழ்வதை
எப்படி மறைப்பர்?

கறுப்புத் தங்கமே!
உன்னைச் சிதையில்
இட்டெரிப்பினும் ஒளிர்வாய்
எங்கள் மனதுக்குள்
உறவாய் உறைவாய்.

- சுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதன் எங்கள் குலவிளக்கு

ஈழத்து நினைவில் வாழும்

குமார் பொன்னம்பலம்

எங்கள் புதல்வன் ஓர் முதல்வன்

உண்மை வார்த்தைகளில் முதல்வன், தமிழ் மனங்களில் ஓர் புதல்வன்

எங்கள் புதல்வன் ஓர் முதல்வன்

தமிழ் இனத்தின் நீண்ட தூரப் பயணத்தில் ஓர் முதல்வன், தளராத தமிழ் மனங்களில் ஓர் மாவீரன்

எங்கள் புதல்வன் ஓர் முதல்வன்

தமிழ் இனத்தின் தணியாத சுதந்திர தாகத்தை தயங்கிடாது

தயவுடன் இத் தரணியில் தளைக்கவிட்ட எங்கள் புதல்வன் ஓர் முதல்வன்

தந்தையின் புதல்வன் இவனா? இல்லை புதல்வனின் தந்தை அவரா?

என்றுஎழுப்பிய வினா விடையாக மாற்றிய எங்கள் புதல்வன் ஓர் முதல்வன்

தமிழ் இனத்தின் தாயகச் சின்னம் – சிங்கக்கூட்டில் இருந்து சீறியபோது

தனிநபர் பயங்கரவாதம் பாலமானது,


எங்கள் பலம் பொன்னம்பலம்

எங்கள் தளம் பொன்னம்பலம்

எங்கள் களம் பொன்னம்பலம்

எங்கள் வளம் பொன்னம்பலம்

புரட்சிப் புயல் மண்ணின் மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


5.1.2000 புதன்கிழமை திரு. குமார் பொன்னம்பலத்தின் அகால மறைவுகேட்டு

கனடிய தனித்தமிழ் 24 மணி நேர வானொலியில் இராமநாதன் கல்லூரிக் கனடாக் கிளை அன்பர்கள் ஒலிபரப்பிய அஞ்சலி

வணக்கம்

"50ற்கு 50" என்று, அன்றே தமிழனுக்குச் சம உரிமை கேட்ட பெருந்தலைவன்,ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் திருக்குமார!
திரு. குமார் பொன்னம்பலவ!
மா பெரும் மக்கள் தலைவ! நீ மறைந்தனையோ?
அஞ்சா நெஞ்ச – இமயம் எனும் மாமலை சரிந்ததோ?
தமிழரின் ஒளி தரும் மணிக் கண்மணி தொலைந்ததோ?
தமிழ் மக்களின் தனிக்குரல்வளை தான் நெரிந்ததோ?
உன் பேரிழப்பைத் தமிழினம் தாங்குமோ?
உன் மனையாளுக்கும் மக்களுக்கும் உலகு என்ன ஆறுதல் கூறுமோ?
சான்றோரும் உண்டு கொல்? தெய்வமும் உண்டு கொல்?
இவற்றிற்கு அறம் தரும் பதில் தான் எதுவோ?

குமாரின் இல்லத்தரசியே!
தான் கற்ற கல்லூரியாம் இராமநாதன் கல்லூரிப் பண்பாட்டில், தன் பிள்ளைகளும் திகழவேண்டும் எனும்பெரு நோக்கில், உமது அன்னை அரியமலரும் தந்தை முருகேசம்பிள்ளையரும், மூத்த மகள் யோகலக்ஷ்மியாம் நீர் முதலாய் அட்டலக்ஷ்மிகளான உங்கள் எண்மரையும் ஒன்றாய் இக் கல்லூரிக்கு அனுப்பி வைக்க, நீவிர் வந்து கல்வி பயின்ற பெருமையை நினைக்கின்றோம்.
திரு. குமார் பொன்னம்பலம் என்ற தமிழ் மானம் மிக்க தனித் தலைவனை நீர் அடைந்த திரு மணநாளில் பெற்ற பெருமை கண்டு உள்ளம் பூரித்தோம்.
இன்று –தமிழுக்காய் – தமிழர்க்காய், ஈழத்தமிழ் நாட்டுக்காய்த் தன் உயிரைத் துச்சமென விட்டெறிந்து இறவாப்புகழ் கொண்ட உமது வீரத் தலைவனுக்கு வீரக்கல் நாட்டும் வீரத் தலைமகள் நீர்! வீர லக்ஷ்மியாம் தமிழ் மகள் நீர்! அஞ்சற்க, உம்முடன் நாம் நிற்கிறோம்! அன்று, இன்று, என்றும்!



உமது கணவர் குமார் –
மற்போர் புரியும் மான மறவரில் வேறாகி
சொற்போர் புரிந்தார்! வீர சொர்க்கம் புகுந்தார்!
தமிழர் திறனைத் தரணிக்கே எடுத்துரைத்து, ஒளிரவைத்த
அவரை ஒழித்துத் தம்மை மிளிர வைக்க எண்ணினரோ!
குமரன் கூர் வேல் பட்டு அன்று அழிந்தனர் அசுரர்
குமாரின் சொல் வேல் பாய்ந்ததே, இனிப் பிழைப்பரோ கயவர்?

தங்களுடன் தலை வணங்கி, மனம் உருகிக், கண்ணீர் பெருக அஞ்சலி, செலுத்தும் –

இராமநாதன் கல்லூரிக் கனடாக் கிளை அன்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளிக்குரல்!
அகில உலக ரேடியோ!!
அமரர் ஜீ.ஜீ.

அஞ்சாத நெஞ்சம் கொண்ட மாவீரன்
ஆட்சியில் கண்ட அநீதியைச் சாடிய தீரன்
இனிய தமிழ் மக்களின் காவலன்
"ஈழம்" கேட்ட எங்கள் பெரும் தலைவன்
உண்மையான போர் வீரன்
ஊக்கமுடன் தன் கருத்தை வெளியிட்ட தன்மானத் தமிழ் தலைவன்
எங்கள் இதயத்தில் குடிகொண்ட மறத்தமிழன்
ஏமாற்றி எமை ஆண்ட ஆட்சியை எதிர்த்துச் சாடிய தீரன்
ஐம்பது ஆண்டுகள் போர் புரிந்த பரம்பரையின் செயல் வீரன்
ஒரு கொலைகாரனால் சுடப்பட்ட ஏறு
ஓர் உயிரல்ல, பல லட்சம் படை வீரர் கொல்லப்பட்டனர் ஒரு கயவன் கைதுப்பாக்கியால்!
ஔவியம் கொண்ட சிங்கள இனம் அகில உலகப் புகழ் பெற்றது.
அஃது கொலைகார சிங்கள அரசு என்ற பெரும் புகழ்.
கண்ணனின் சேவகன் காண்டீபனாய் கிட்ணனின் மாணவனாய்
கீதையை கற்றவனாய் குந்தியின் செல்வனாய்
கூடாத ஆட்சியை எதிர்த்த மறத்தமிழன்
கெஞ்சிக் கேட்காத வீரத்தமிழன்
கேடு கண்டு அஞ்சாத தமிழ் சட்டத்தரணி
கொலைகார கொடும்பாவியால் சுடப்பட்டார்.
கோன் முறை நாட்டில் தவறி விட்டது.
கௌதமரின் ஆட்கள் கொலைகாரர்கள் என்று அகில உலக ரேடியோ அலறுகின்றது!
இக் கொலையால் தமிழனுக்கு புது இரத்தம் பாய்ச்சப்பட்டுள்ளது.
"தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா"
எல்லார்க்கும் மரணம் வரும்
வல்லார்க்கும் கரணம் தவறும். அமரர் ஜீ.ஜீ. பொ. கு.பொ. அழியாது நாமம்.

தமிழர்களே! தலைவர்களே!!
விழித்தெழுங்கள்!!!
தாழ்த்தப்பட்டோம்! வீழ்த்தப்பட்டோம்!!
திறமான நம் தலைவர் திரு குமார்!
தீரமுடன் போரிட்ட மா வீரர்!
துயர் துடைத்த சட்டத் தரணியார்!
தூண்டா மணிவிளக்கு அணைக்கப்பட்டது!
தென் ஈழ மா மணி ஒலி அடங்கியது!
தேன் தமிழின் ஓசை ஒடுக்கப்பட்டது!
தைரியம் கொள்வோம்! தன்மானம் கொள்வோம்!
தொல்லை தவிர்ந்த மாவீரர் மரணத்தால்,
தோல்வி இல்லை தமிழ் மொழிக்கு!

எத்தனையோ தலைவர்களை இழந்தோம் என்றாலும் எம் தமிழ் இன இலட்சியப் பாதை தொடரும், தடைபடாது.
"திரு ஜீ.ஜீ. என்ற அமரர் மாபெரும் தலைவரின் ஏகப்புதல்வன்திரு. குமார் பொன்னம்பலம்" என்ற நாமம் என்றும் அழியாப் புகழுடன் ஒலித்துக் கொண்டே இருக்கும்.
"தோன்றினார் புகழுடன்"
"மறைந்தார்; மாமனிதன்" என்ற மா புகழுடன்.


எழுதியது - கல்லா தொழிலாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.01.2000

மாமலை சாய்ந்தது





எழுத் தமிழரின் இதயம்!
சரு இனையற்ற தலைவன்!
இளைய தலைமுறையின் தளபதி!
எதற்கும் அஞ்சா மறத்தமிழன்! – நாம் தான்
இவர்கள் என்று, உலகிற்கு எடுத்தியம்பிய
இனையற்ற மாமனிதன்
மனித மிருகங்களினால் வேட்டையாடப்பட்டு விட்டான்

பட்டத்தைக் கொடுத்தோமா?
பதவியைக கொடுத்தோமா?
பணத்தைக் கொடுத்தோமா?
எதைக் கொடுத்தோம்? அவனுக்கு, ஆனால்
தனிமனிதனாக தமிழ்த் தேசிய இனத்திற்கு
செய்த தியாகத்திற்கு - எம் இதய
சோகத்தை வெளிக்காட்ட - உங்கள்
இல்லங்களிலும் வர்த்தக நிலையங்களிலும்
கறுப்புக் கொடியை ஏற்றி, களியாட்டங்களை தவிர்த்து
அந்த மாமனிதனுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

திருமலை வாழ் தமிழ் பேசும்
மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

பிரபல சட்டமேதை திரு. குமார் பொன்னம்பலம்

அவர்கள்

சீர்மலிந்த அல்வைதனிற் பிறந்த சீமான்
திருமலிந்த ஜீ.ஜீ.யின் செல்வ மைந்தன்
பார்மலிந்த பைந்தமிழர் காங்கிரஸின்
பாடறிந்த தலைவரெனப் பணிகிடந்து
ஏர்மலிந்த குடைநிழற் கீழ் ஏற்றந் தந்தோன்
இருள் மலிந்த அகாலத்தில் இறந்தான் அந்தோ
நீர்மலிந்த கண்ணருவி பாய நின்று
நினைவுமலர் சூட்டுகின்றோம் சாந்தி தீட

அல்வையம்பதி மக்கள்
(பாரதிதாசன் நூலகம் அல்வாய்)
9.01.2000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்புரி

அகிலமெங்கும் தமிழனென்றே
அகத்தினில் புனித குணமேவி
ஜெகத்தினில் மகுடமிட்டவனே
தவத்தினால் வந்த தலைமகனோ – குமாரே



பயத்தினில் நீயோ பதுங்கவில்லை
பணத்தினில் என்றும் மயங்கவில்லை
பதவிகள் உன் குணம் மாற்றவில்லை
பட்டமும் உன் வழி கெடுக்கவில்லை

துட்டர் செயல் கண்டு துடித்து நின்றாய்
தூய தமிழர் நெஞ்சும் நிறைந்திருந்தாய்
துன்பம் கண்டு நாம் துவண்ட போதும்
துணிவுடன் அவற்றையே சரித்து விட்டாய்

தந்தையுனக்கு தந்த கொடை
சங்கத் தமிழன்னென்ற நிலை
சிங்கக் குகையில் படுத்துறங்கி
சிந்தை துணிந்து செயல்பட்டாய்

புதைகுழி தோண்டி புரியவைத்தாய்
பூட்டுக்குள் சிறைகளை அறுத்தெறிந்தாய்
கோட்டுடன் உலாவ வழியிருந்தும்
கொள்கையில் நிமிர்ந்து நின்றாய்

விதைபட்டுப் போன புனிதர்களும்
வீணர்கள் அழித்துவரும் புகழும் புனைகதையென்றே
இருந்தோரை முனையது தட்டி நீ
முழுவுலகறிய வழி சமைத்தாய்

தலைநகர் கொழும்பில் சட்டமேதை எம்
தலைவனின் வழியில் பக்கத்துணை
தமிழர்க்கு விடிவு தம்பியென்று
தரணியெங்கும் நீ கொடி பிடித்தாய்

ஐக்கிய நாட்டு அமர்வுகளில்
ஆண்ட தமிழினம் பட்ட வதை
தெட்டதெளிவாய் விளக்கம் தந்து
தெருவுக்கிழுத்தாய் சண்டாளரை

ஒருமை என்றே உரக்கக் கூவி
ஓயாமல் கடும் பணி பலவும் செய்தாய்
தமிழன் என்றொரு அடையாளம்
தந்த பின்னே நீ நடந்தாய்

விழுமா தமிழ் மண் வீணர்கையில் இனி
தொழுமா வுண்கதி யறிந்தபின்பும்
அழுதா இப்புவி நீ வாழ்ந்தாய்
அகழ் விளக்கென நீ யொளிர்வாய்

மாளும் பின் கொடியோர் வதை செயல்கள்
நாளும் முன் நினைவு வந்து வந்து
மோதும் அலைகளாய் முட்டிச் செல்லும்
பாழுமினவெறி பார்த்துப் போட பாதை வெல்லும்
பொன்னன் பெற்ற குமாரையா
மன்னன் நீயும் தமிழர் நெஞ்சில்
விண்ணில் விருந்து விடுதலையை
விரைவாய் நகர்த்த அருள் புரிவாய்!

கியூபெக் ஈழத்தமிழர் ஒன்றியம்.
மொன்றியல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் பொன்னம்பலத்தின் அகால முடிவு
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், வவுனியா கிளை
05.01.2000

இரண்டாயிரத்தில் முதல் வேட்டு, குமார் கேட்டது வோட்டு, என்ன ஆச்சு!

அப்பா பொன்னனுடன் தமிழ் உரிமை போச்சு
இப்போ குமாருடன் தமிழ் குரல் போச்சு! போச்சு!

குமார் சுடப்பட்டார் இன்று 05.01.2000
காந்தி சுடப்பட்டார் அன்று 30.01.1948

குமார் சுடப்பட்ட செய்தி
குவலயம் இருண்ட செய்தி
அன்று காந்தி சுடப்பட்டார்
அகில உலகமும் இருண்டது
நேரு அலறினார் "ஒளி மறைந்தது"
"உலகம் இருண்டது" என்று அரற்றினார்
அமெரிக்கா என்று அயர்லாந்து என்று
உலக நாடு எல்லாம் சோகம் கவிந்தது
இன்று உலகம் பரவ வாழும் தமிழன்
ஒளி இழந்து கதி கலங்கி நிற்கின்றான்

"பொன்னன் கள்ளன்" இசை பாடிய தமிழ் கு(ண)லம்
போற்றிக் காக்க தந்தார் ஒரு மகன்
தந்தையைப் போல் ஓர் தனயன்
வந்துதித்தான் தமிழ் மானம் காக்க.

ஜனாதிபதி வேட்பாளர் ஒரே ஒருவன்
வேறு யாரடா சொல்லு! மெல்லாதே!
தோல்வி நிட்சயம் என்றாலும் டிப்பொசிற்
சுளை சுளையாய் எழுபத்தையாயிரம்
தமிழன் அரசியல் உரிமைக்கு இதுவல்ல விலை
தமிழ் வாக்காளன் மனமாய் வாக்களிக்க ஒரு தலை
சதிவலை பின்னப்பட்டது விழுந்தது தலை.

சூரன் வீழ்ந்தான் இராவணன் வீழ்ந்தான்
முசோலினி வீழ்ந்தான் கிற்லர் வீழ்ந்தார்
காந்தி வீழ்ந்தார் – வாழ்கின்றார்!
தமிழர் தலைவன் வீழ்வானா – வாழ்வான்!

சோல்பரி கொமிசன் வந்தது
ஸ்ரீ லங்கா சுதந்திரம் பெற்றது
ஒற்றை ஆட்சி பெரும் பான்மை ஆட்சி
உணர்ந்த தலைவன் பொன்னன் ஒருவன்
ஐம்பதுக்கு ஐம்பது இல்லாமல் இலங்கையில்
நில்லாது ஜனநாயகம் – வெல்லாது
உணர்ந்த தலைவன் அமைத்தான் கொங்கிரஸ்
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அமைத்தான்
பதினொரு மணிநேரம் அரசாங்க சபையில்
ஆங்கில பாராளுமன்றத்தில் – இங்கிலாந்தில்
இலங்கைத் தமிழன் உரிமை நிலைநாட்டத் துடித்தான்
பிரிந்தாளும் பிருத்தானிய அரசு பிழைவிடுமா?
ஒற்றை ஆட்சி – சோல்பரி தலைமையில்
எட்டப்பர் பரம்பரை "சுந்தரலிங்கம், சிற்றம்பலம்" சி.சி.எஸ்
கொட்டி முழக்கினார்கள் எட்டித் தொங்கினார்கள்
முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா அவர்கள்
தமிழ் உரிமை மறுத்தார் – தந்தார் வடக்கு – கிழக்கு
காங்கேசன் சீமெந்து பரந்தன் ரசாயனம்
வாழைச்சேனைக் கடதாசி கடல் வளம் பொன்னன் சாதனை.

செல்வாவை தந்த வள்ளல் பொன்னன்
முதல் வகுப்பு றயில் வண்டி – நடு நிசியில்
ராஜரட்டை விட்டு விரைகின்றது கடுகதியில்
அறிமுகம் நடக்கின்றது. அப்பீல் கோட் சட்டத்தரணி
ஒப்பினியன் கொடுத்தால் தப்பாது – கோட்டுக்குப் போகார்.
செல்வா அரசியலுக்கு வந்தார், கே.கே.எஸ். வென்றார்.

பொன்னன் தந்த செல்வன் குமார்
சின்னவன் அல்ல அப்பாவின் ஜூனியர்
அரசியலில் தமிழர் துயர் துடைப்பதில் ஜூனியர் இல்லை
வெலிக்கடை, பூசா, களுத்துறை சிறைச்சாலைகள்
ஞாயிறு தோறும் தவறாது பார்வை ஒழுங்கு
எந்தத் தமிழன், எந்த இயக்கம் என்ற வேறுபாடில்லை
சொந்தம் கொண்டாட ஒரு சட்டத்தரணி குமார்.

வவுனியாவில் ஒரு அன்புத் தாய் – தமிழ்த்தாய்
பெற்றது நாலு சிங்கக் குட்டிகள் – பெருமை
நாலும் நாலு இயக்கம் – ஒருவன் மிச்சம் தாய்க்கு!
பூசாவில் ஒருவன் – பறந்தது கடிதம் குமாருக்கு
பூசாக் கதவு திறந்தது – தாய்க்கு மகன் தந்த தலைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியாவில் நகரசபை மைதானத்தில் கூட்டம்
தோற்ற கட்சி, வேடிக்கை பார்க்க வந்த ஒரு கூட்டம்
எடுத்துரைத்தோம் இலங்கைத் தமிழன் வரும் காலம்
கார்கள் பறந்தது சிலகாலம் – எல்லாம் கபட நாடகம்

ஒற்றை ஆட்சியில் தமிழனுக்கு இடமில்லை
வடக்குக் கிழக்கை தரப்போவதும் இல்லை
அம்பாறை ஆருக்கு? அரசியல் ஆருக்கு?
ஜனநாயகம் துவக்கு முனையிலா – மனித உரிமை
கடையில் விற்குதா – நடமாடப் பாஸ் வேணும்
எடுத்துச் சொல்ல வாய்ப்பூட்டு – மூச்!
மீறினால் இருக்கவே இருக்கு – மேல் உலகம்

இராவணன் ஆண்ட கதை இன்றும்
இரணியன் வீழ்ந்த கதை மாண்டதில்லை
அரிச்சந்திரன் நாடகம் ஆக்கியது மகாத்மாவை
கட்டப் பொம்மன், பண்டார வன்னியன் தமிழர்கள்
பல்லவக் கொடியை இறக்க 600 வருடமாச்சு
நெல்சன் மண்டேலா கல்லுடைத்தார் 27 வருடம்

தமிழன் பாஸ் செய்வது எக்காலம்
பாஸ் இல்லாமல் போவது எக்காலம்
ற்றாவல் பாஸ், வவுனியா ஒன்லி வெட்டுவது
பதின்னாலு நலன்புரி நிலையங்களில் சாப்பாடு
ரி.வி., கொத்துரொட்டி கிடையாமல் போவது
எக்காலம்? எக்காலம்! முக்காலம்
மூழ்கிக் குளித்தாலும் கறுப்பு வெள்ளையாகாது

அக்காலம் வரவேண்டி முக்காலும்
தொழுமின்கள் முக்கண்ணன் திருப்பாதம்
திருமுறை தரும் சென்றடையாத செல்வம்
கவசங்கள் வெறும் உருக்கு ஜாக்கெற்
காலத்தை வீணாக்காமல் பிரார்த்தியுங்கள்
காலம் விடியும் – ஆலம் விலகும்
அமாவாசை நிற்பதில்லை அநியாயம் வென்றதில்லை
காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஒதுவார்த்தமை நன்னெறிக்கு உய்க்கும்
நாதன் நாமம் நமச்சிவாயவே!

ஒதுங்கள், உணருங்கள், உருகுங்கள்
தேரும் திருவிழாவும் என்று தேடி அலையாமல்
பாவத்தைப் போக்க பரிகாரம் தேடுங்கள்
மன்னிப்புக் கேளுங்கள், மண்டியிட்டு நில்லுங்கள்


நாங்கள் தலைநிமிர்ந்து வாழும் வரை
திருமணம், திருவிழா, அர்ச்சனை, ஆலாத்தி
எல்லாம் நிறுத்த விரதம் பூணுங்கள்

ஏழை எளியவர்களுக்கு உதவுங்கள்
தர்மம் தலைகாக்கும் – கவசம் காக்காது

கோவிலுக்கு காலையும் மாலையும் போங்கள்
கும்பிடுவதற்கு – ஜலம் பூவோடு தூபம்
தமிழோடு இசை போதும்! போதும்!
மங்கள வாத்தியம் வேண்டாம்
அமங்கல நாளில் – மரண ஓலம் கேட்கவில்லையா!
தமிழோடு இசை – தேவார திருவாசகம்
மனமுருகிப் பாடுங்கள் – விரதங்கள் விழாக்கள் வேண்டாம்.

வாழ வேண்டும் வளமுடன் மானத்துடன்
புத்தாயிரமாண்டில் புது வளம் காண்போம்
திருவருள் கூட்ட திரு வினை மலரும்
வாழ்த்தி, வணங்கி மகிழ்ந்து வாழ்வோம்.

அன்புடன்
ந. செல்லையா
தலைவர்
மக்கள் சமாதான
சபை, வவுனியா


குமார் பொன்னம்பலத்தின்
அகால முடிவு
05 - 01 - 2000
2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.01.2000



உன்னத மனிதனின் குரல் ஓய்ந்தது

இந்நாட்டு இந்து மக்களுக்காகவும், ஏனைய தமிழ் மக்களுக்காகவும் என்றும் தயங்காது குரல் கொடுத்துப் போராடிவந்த உன்னத மனிதன், தன் மனச்சாட்சிப்படி இயங்கிவந்த தலைவன் குமார் பொன்னம்பலத்தின் கொலையை வன்மையாகக் கண்டிக்கிறோம். சில ஆண்டுகள் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முகாமைப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றிய செம்மல் அமரர் குமார் பொன்னம்பலம். அவரின் இழப்பு எவ்வகையிலும் ஈடு செய்ய முடியாதது.

வைரஸ் கிருமியால் என் இருதயம் கடுமையாகத் தாக்கப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் கடந்த ஐந்து நாட்களாக சிகிச்சை பெற்றுவரும் அடியேன், அருமை நண்பன் குமாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியாத நிலையில் தாங்கொணா வேதனையிலிருக்கிறேன்.

அவரின் பிரிவுத் துயரால் வாடும் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும், அவரின் இழப்பு எங்கள் இழப்பு என்பதனை மறவாது, அவர்களது துயரத்தில் நாங்களும் பங்குகொண்டு எங்கள் அனுதாபங்களை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் குமாரின் ஆத்மா சாந்தியடைய, ஸ்ரீ சிவகாமி அம்பாள்சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

கந்தையா நீலகண்டன்,
பொதுச் செயலாளர்.
அகில இலங்கை இந்து மாமன்றம்

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம்

தலைமைச் செயலகம்
342, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

Head Office,
342, Stanley Road,
Jaffna.
06.01.2000



துயர் பகிர்வோம்

திரு. குமார் பொன்னம்பலம் ஐயா அவர்களின் படுகொலை செய்தியை கேட்டு பெரும் அதிர்ச்சி அடைகின்றோம்.

எமது தமிழ் மக்களுக்காக மனித நேய அடிப்படையில் குரல் கொடுத்த ஒரு தலைவரை இழந்து விட்டோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உறுப்பினர்கள் சார்பாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி குமார் பொன்னம்பலம் குடும்பத்தினருக்கு,

அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்களது திடீர் இழப்பை கேள்வியுற்ற நாம் சொல்லொணா வேதனையை அடைகின்றோம். அவரது இழப்பானது தமிழ் மக்களுக்கு இந் நெருக்கடியான கால கட்டத்தில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் தோற்றுவித்துள்ளது. சிறீலங்காவின் தலைநகரில் இருந்துகொண்டு தமிழ் மக்களுக்காக, அவர்களது உரிமைக்காக துணிந்துகுரல்கொடுத்த ஒருவரை நாம் இழந்துவிட்டோம்.

சிறீலங்கா அரச தமிழ் மக்கள் மீது நடாத்திவரும் மனித உரிமை மீறல்களையும், அடக்கு முறைகளையும் ஜெனிவாவில் ஐ.நா. மன்றில் உரத்துக்கூறிய துணிவு மிக்க தமிழின உணர்வாளரை நாம் இழந்து நிற்கின்றோம். எத்தனையோ பெறுமதிமிக்க ஈடுசெய்ய முடியாத தமிழ் உயிர்களை பரித்தெடுத்துவிட்ட சிறீலங்கா அரசின் நாசக்கரங்கள், இன்று மனித உரிமைக்காக குரல் கொடுத்த அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்களை பறித்தெடுத்து தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் இழப்பை ஏற்படுத்திவிட்டது.

அண்ணரது இழப்பு உங்கள் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல தமிழ் இனத்திற்கே ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும். இந்த இழப்பை நாம் என்றுமே ஈடுசெய்ய முடியாது. உங்கள் குடும்பத்தின் சோகங்களுடன், தமிழ் மக்களின் சோகங்களுடன் ஈழமுரசும் இணைந்து கொள்கிறது.

இங்ஙனம்,
ஈழமுரசு குடும்பத்தினர்.

அஞ்சா நெஞ்சன் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு அஞ்சலி!



தமிழீழவிடுதலைப் போராட்டத்தினை சர்வதேச சமுகத்திற்கு எடுத்தியம்பி வந்தவரும், எதிரியின்வாசலில் இருந்து கொண்டே தமிழீழ விடுதலையையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆதரித்துக் குரலெழுப்பி வந்த அஞ்சா நெஞ்சன் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களது படுகொலைச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறோம்.

தமிழ் தேசிய இனத்தின் மீது கொண்ட அளவற்ற நேயம் காரணமாக சட்டத்துறையால் பெற்ற அறிவையும், ஆற்றலையும் தமிழினத்தின் விடுதலைக்காய் அர்ப்பணித்த மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் அகாலமரணம் தமிழ் தேசிய இனத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

அடங்கிவாழும் இனமல்ல தமிழினம் என்பதை சிறீலங்காப் பேரினவாத அரசிற்கு எடுத்தியம்பிவந்த சுதந்திர புருஷன் குமார் பொன்னம்பலம் அவர்களுடனான நினைவை ஐ.பி.சீ. தமிழ் குடும்பமும் பகிர்ந்து கொள்கிறது.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களே, ஈழத்தமிழர்க்காய் பாரெங்கும் நீவிர் எழுப்பிய குரல் இன்று நீதிமன்றங்கள், மனிதவுரிமை நிலையங்கள், தொடர்பு சாதனங்கள் என உலகமெல்லாம் ஒலிக்கிறது ஐயா!

புத்தாயிரத்தில் தோன்றும் புதிய தாயகத்தில் உம்புகழ் மறையாது பொறிக்கப்படும். மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருடன் ஐ.பி.சி. தமிழும் தன்னை இணைத்துக் கொள்கிறது.

அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிராத்திக்கும்,

ஐ.பி.சீ. தமிழ் குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமனிதருக்கு வீர அஞ்சலி



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் சித்தாந்தத்தையும், தமிழீழ மக்களின் விடுதலைக்கான அதன் போராட்டத்தையும் ஏற்றுக் கொண்டு, அதற்காகச் செயற்பட்ட திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது.

சிங்கள தேசத்தில் இருந்து, தமிழீழ தேசத்திற்காகக் குரல் கொடுத்த அஞ்சா நெஞ்சன், மாமனிதன், தமிழீழ தேசபக்தன் குமார் அவர்களின் மறைவு குறித்து உலகத் தமிழர் இயக்கம், கனடா வாழ் தமிழீழ மக்களின் சார்பில் தனது வீர அஞ்சலியைச் செலுத்துகிறது.

இக் கொலையின் பின்னணியில் சூத்திரதாரியாக செயற்பட்ட சந்திரிகா தலைமையிலான ஸ்ரீலங்கா அரசை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஸ்ரீலங்கா அரசின் சனநாயக விரோத செயற்பாடுகளை வெளி உலகிற்கு கொண்டு வந்த ஒரு சனநாயகவாதி படுகொலை செய்யப்பட்டதை நாம் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்த வேண்டும்.

கொடூரம் புரியும் ஸ்ரீலங்கா அரசின் தலைநகரில் இருந்து கொண்டு, எம்மினத்திற்காகக் குரல் கொடுத்த அமரர் குமார் பொன்னம்பலத்தை இழந்து தவிக்கும் அவரது துணைவியார், பிள்ளைகளின் ஆறாத்துயரில் உலகத் தமிழர் இயக்கமும் பங்கெடுத்துக் கொள்கிறது.

கொடூரம் புரியும் ஸ்ரீலங்கா நாட்டின் தலைநகரில் குரல் கொடுக்க முடியுமாக இருந்தால் வெளிநாடுகளில் ஏன் எம்மால்.....? அவரின் செயற்பாடு வெளிநாடு வாழ் தமிழ் மக்களுக்கு ஓர் உதாரணமாக அமையட்டும்.

உலகத் தமிழர் இயக்கம் (Toronto, Montreal, Vancouver)
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (Ottawa)

08.01.2000

COMITE DES FEMMES TAMOULES - France
தமிழ் பெண்கள் அமைப்பு - பிரான்ஸ்

அன்பிற்குரிய திருமதி குமார் பொன்னம்பலம்,
மற்றும் குடும்பத்தினர்க்கு,

கடந்த புதன்கிழமை அதிகாலை தங்கள் கணவர், சிங்கள ஆதிக்க வெறியர்களால் கூட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கேள்வியுற்று நாம் ஆழ்ந்த வேதனையும் அதிர்ச்சியுமடைந்தோம்.

அமரர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் எம் தமிழ் மக்களுக்கும், எம் விடுதலைப் போராட்டத்திற்கும் ஆதரவாக மிகத் துணிவாக இன்னல்கள் நிறைந்த கொழும்புச் சூழ்நிலையிலும் குரல்கொடுத்து வந்தவர் என்பது தமிழ் மக்கள் எல்லோருக்குமே தெரியும். இவர் கொழும்பில் மட்டுமல்லாது சர்வதேச அளவில், தான் பங்குகொள்ளும் அனைத்து நிகழ்வுகளிலும் எம் தமிழ் மக்களின்பிரச்சினைகளையும், அவர்களின் தேவைகளையும், அவர்களுக்குச் சிங்கள அரசு கொடுக்கும் இன்னல்களைப் பற்றியும் முற்றுமுழுதான உண்மைகளை எடுத்துக்கூறி வந்தவர்.

இவ்வாறாக தமிழர்களின் விடுதலைக்காகக் குரல்கொடுத்துவந்த உறுதியும் துணிவும் மிக்க ஒரு நல்ல மனிதனின் இழப்பு என்பது தங்களுக்கு மட்டுமல்லாது தமிழ் இனத்திற்கே பெரும் இழப்பாகும். எனவே அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் இழப்பின் துக்கத்தில் உரிமையுடன் நாங்களும் உங்களுடன் பங்குகெடுத்துக் கொள்கிறோம்.

தமிழ்ப் பெண்கள் அமைப்பு
பிரான்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நொய்ஸ் தமிழர் ஒன்றியம்
NEUSSER TAMILEN-VEREIN
NEUSS TAMILS ASSOCIATION

09.01.2000

மதிப்புக்குரிய திருமதி குமார் பொன்னம்பலம் அவர்கட்கு,


எமது நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய மாபெருந்தலைவர், மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களது மறைவு கேட்டு கலங்கி நிற்கின்றோம்.

நல்லதொரு குடும்பத்தலைவனை இழந்து தவித்துநிற்கும் தங்களுக்கும், பாசமிகு தந்தையை பிரிந்து கலங்கி நிற்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் மற்றும் உறவினர்கட்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்

ஜேர்மன்-நொய்ஸ்வாழ் தமிழ் மக்கள்,
சி.மு.நில்லைநாதன்.

தொடர்பாளர் :
Mrs. I.C.Ulagaratnam,
Germany.



மனதலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
[illegible]ல்லாப் புகழும் தரும் - (குறள் 547)
மார்கழித் திங்கள் 28, 2000

குற்றமிலாது குடிப்பெருமை காத்து வாழ்ந்த தமிழர்
திரு. குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு இரங்கல் அஞ்சலி

ஈழத்தமிழர் தலை நிமிர்ந்து நிற்க செயல்பட்ட தமிழரே! உம் இழப்பு ஈடு செய்ய இயலாதது! உம்மை அழித்தவர்கள் உம் உடலை மட்டுமே அழித்துள்ளனர். நீங்கள் தமிழ் இனத்திற்கு, சிறப்பாக ஈழத்தமிழர்க்கு செய்த சிறந்த பணியால் பெற்ற புகழை, அல்லது ஈழத்தமிழரிடையே நீங்கள் ஏற்படுத்திய தன்மான உணர்வை, சுதந்திர உணர்வை அவர்களால் எக்காலத்தும் அழிக்க முடியாது! உங்கள் பெருமையும் புகழும் தமிழீழத்து தமிழர் என்பவரோடு மட்டுமில்லாது உலக வாழ் தமிழர் மனமெல்லாம் என்றென்றும் எக்காலத்தும் நிலைத்து நின்று வாழும் என்பதில் எந்த விதமான அய்யப்பாடும் இல்லை.

அன்னார் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களது இழப்பு உலகத்தமிழர் இழப்பு! இந்த துயர் சூழ்ந்த நாட்களில் அவர் உற்றமும், சுற்றமும் கொண்டுள்ள துயர் தன்னில் அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை பங்கு கொண்டு அன்னார் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றது.

வ.ச.பாபு
ஒருங்கிணைப்பாளர், அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத
தமிழென்று சங்கே முழங்கு (புரட்சிக் கவிஞர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்(குறள் 457)

மார்கழித் திங்கள் 28,2000

"குற்றமிலாது குடிசெய்து வாழ்ந்த தமிழனே!
உம்மீர் மறைவால் வாடியுள்ளோம்"

தன் இனம் வாழ, தலை நிமிர்ந்து செயல்பட்ட தமிழரே! நீவிரும் ஈழமண்ணிற்கு ஒரு வித்தென ஆகிவிட்டீரோ! உம்மை அழிக்க முயன்றோர் அகாலத்தை எண்ணியவர்கள், ஆனால் உம்மீர் உள்ளத்து உணர்வுகளோ தமிழீழத்து தமிழர் என்பவரோடு மட்டுமில்லாது உலக வாழ் தமிழர் மனமெல்லாம் என்றென்றும் எக்காலத்தும் பெரும் உறவாக நிலைத்து நின்று வாழும்! நம்மினத்து உறவு இன்னும் நெருங்கி சேர, உம்போன்றோர் இன்னுயிர் தரல் வேண்டியுள்ளது என்பது இனத்திற்கே துயரமானதுதான்!

இனத்திற்கு ஒளி சேர்க்க தன்னுயிரையே தந்திட்ட வள்ளலே! நீவீர் விட்டு சென்ற பணி தொடர உலகத்தமிழரெல்லாம் கூடிவிட்டனர் இன்று! நீவீர் மேற்கொண்டிருந்த முயற்சி இனி வீண்போகாது!

அன்னார் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களது இழப்பு நம் இழப்பு! இந்நாட்களில் அவர் உற்றமும், சுற்றமும் கொண்டுள்ள துயர் தன்னில் எங்கள் இடைமேற்கு மாநிலத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்கள் யாவரும் பங்கு கொள்கிறோம்.

வ.ச.பாபு
தலைவர் இடைமேற்கு மாநிலத் தமிழ்ச் சங்கம்

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத
தமிழென்று சங்கே முழங்கு" – (புரட்சிக் கவிஞர்)

மாமனிதர் குமாருக்கு எமது அஞ்சலி

குமார் பொன்னம்பலம்
என்கிற தமிழீழப்
பற்றாளர்
அன்மையில்
சிறீலங்காவின் அரச
பயங்கரவாதத்திற்குப்
பலியாகிவிட்டார்.
இச்செய்தி உலகெங்கும்
வாழும் தமிழர்
நெஞ்சங்களில்
இடியாகி வீழ்ந்து
நெருப்பாகி எரிகின்றது.
கொழும்பில் இருந்துகொண்டே தமிழர்களின் உரிமைக்காகவும்,
தமிழீழ விடுதலைக்காகவும் துணிவோடும் உறுதியோடும் குரல்
கொடுத்துத் தமிழர் நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தார்
குமார் பொன்னம்பலம். இவரின் அளப்பரிய பங்களிப்புக்காக
இவருக்கு "மாமனிதர்" என்னும் தமிழீழத்தின்
உயரிய விருது வழங்கப்பட்டிருக்கிறது.
அன்னாரைப்பிரிந்து துயருறும்
அவர் நம் குடும்பத்தினருக்கும், தோழர்களுக்கும்
எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலேசிய இந்து சங்கம்
(மஞ்சோங் பேரவை)

மலேசிய இந்து சங்கம்
(மஞ்சோங் பேரவை)
MALAYSIA HINDU SANGAM
MANJUNG COUNCIL
SANATHANA DHARMA ASHRAM
(FOSTER HOME FOR UNDERPRIVILAGE CHILDREN)
No. 101, Jalan Apeke, Kampung Seriang,
32000 Sitiawan, Perak.
"தொண்டு - Service" Tel: 05-6912437 / 05-6926797

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலி



அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கட்கு ஜேர்மனி கிரிபில்ட் நகர மக்கள் சார்பில் அமரர் மாமனிதர் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள். மேலும் 1997ம் ஆண்டு அவர் ஜேர்மனி வந்திருந்தபோது நான் எமதுநகரத்தின் சார்பில் ஓர் கூட்டத்தில் கலந்து கொண்டு அவருடனும் அவரின் பாரியாருடனும் உரையாடி, அதன் பின்னர் மதிய உணவும் அருந்தினோம். அந்த நேரத்தில் எனக்கு அவருடன் சிறு வார்த்தைகள் பேச சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமையடைவதுடன் இன்று அவரின் இறப்பைக் கேட்டு என்மனம் மிகவும் வேதனையடைந்துள்ளது. அதாவது நான் மட்டுமல்ல எம் ஈழத்தமிழர் அனைவருமே ஆழ்ந்த கவலையுடன் இருப்பதையும் நான் காணக்கூடியதாக உள்ளது. எம் இனத்துக்காக சந்திரிகாவின் சிங்கள மண்ணின் மேல் இருந்து வெளிப்படையாக குரல் கொடுத்தும் தமிழ் மக்களின் வழக்குகளிலும் வாதாடிய எம் அடங்காத் தமிழரை இன்று நாம் இழந்து விட்டோம். சந்திரிகா அரசு செய்யும் அரக்கத்தனமான செயலை நாம் மிகவும் கண்டிக்கின்றோம். அத்துடன் சந்திரிகா அரசு தமது மிருகத்தனத்தைக் காட்டிவிட்டார்கள். என்றோ ஒரு நாள் எம்மினத்திற்கு பதில் கூறியே தீரவேண்டும். அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் குடும்பத்தினருக்கு மீண்டும் மீண்டும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை ஜேர்மனி கிரிபில்ட் நகர ஈழத்தமிழ் மக்கள் சார்பில் நாம் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்..... (ஒன்றியப் பொறுப்பாளர்)

கிரிபில்ட் தமிழர் ஒன்றியம்(ஜேர்மனி)
அ.குலேந்திரன்
அருந்தவராஜா

06.01.200



திருமதி குமார் பொன்னம்பலம் அவர்கட்கு,

தங்களது துன்பத்தில் நாங்கள் பங்கேற்றுக் கொள்கின்றோம்.

மதிப்பிற்குரிய குமார் பொன்னம்பலம் அவர்களது இழப்புக் கேட்டு நாங்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம். துணிச்சலாக செயற்பட்டு நசுக்கப்படும் தமிழ் மக்களின் அரசியல் குரலை ஓங்கி ஒலித்த அவரை உலக தமிழ் மக்கள் என்றும் நினைவில் வைத்திருப்பர்.

தங்களது பிள்ளைகளுக்கும் உறவினர்களுக்கும் எமது கரிசனையைத் தெரிவிக்கவும்.

குமார் அண்ணா அவர்களின் தூய்மையான விருப்பம் அடையப்பெறும் காலம் வெகுதொலைவில் இல்லை.

நன்றி.

பாலகுந்தரம்
(பிரான்சில் செயற்படும் 30 தமிழ் அமைப்புக்களின் இணைப்பாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Human Rights & Refugee International

U.K.
January 9th. 2000

அன்பு நிறை தங்கச்சி, பிள்ளைகளுக்கும்,
எம் வணக்கம்,

எம் ஈழ தேசத்தின் வீரமறவன் தம்பி குமார் அவர்கள் ஏமாற்றப்பட்டு கொலை செய்யப்பட்ட, தை ஐந்தாம் திகதி முதல் என் மனைவி, பிள்ளைகள் எல்லாரும் வருத்தம் தாங்கமுடியாது இருக்கின்றோம்.

நாங்கள் உங்கள் துயரில் நேரில் பங்கு பற்ற முடியவில்லை. எனினும் உங்கள் துயரில் இங்கு இருந்து பங்குபற்றுகின்றோம். தம்பியையும் உங்களையும் என்றும் மறக்க மாட்டோம். உங்கள் துன்பத்தில் பங்கு பற்ற உங்களுக்கு மனஉறுதி தர இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்கே I.B.C. தங்கள் Channel லை திறந்து விட்டபோது ஒருவர் இருவர் அல்ல Hundreds of men and women started crying that we have lost a great Fighter and Patriot - and we will not see a man like him again. Mr. Joseph Pararajasingam also conveyed the same sentiments. எம் மக்களுக்கும் திரு. பராஜசிங்கம் அவர்களுக்கும் எம் நன்றி.

தம்பி General Pirabhakaran தம்பி குமார் அவர்களுக்கு "மாமனிதன்" என்ற விருது சூட்டியுள்ளார். பிரபாவுக்கு எம் நன்றி.

அமரர் குமார் மகாத்மா காந்தியைப் போல் தன்(ஈழ) நாட்டின் விடுதலைக்குக் கத்தியின்றி, துவக்கும் இன்றி திமாகம் பல செய்து கடைசியில் காந்தியைப் போல் கொலை செய்யப்பட்டுள்ளார். அதனால் அமரர் குமார் அவர்களை நாம் "மகாத்ம குமார்" என்று அழைக்க விரும்புகிறேன். தமிழ் மக்களின் ஆசி இதற்குக்கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

உங்கள் பெரும் துயரில் நாம் என் செய்ய முடியும். எல்லாம் விதி என்று கூறி விடை பெறுகிறேன்.

தங்கள் பணிவு,
அன்புள்ள
விக்கி அண்ணா குடும்பம்.

திருமதி குமார் (பொன்னம்பலம் பிள்ளைகள், உற்றார் உறவினர்
அனைவருக்கும் களுவாஞ்சிகுடி சைவமகாசபையினர் தரும்
ஆற்றொணாத் துயரச் செய்தி

எங்கள் மறத்தமிழன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர், தமிழினத்தின் துயர் கிளைய சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருந்த வீரத் தமிழர் பரம்பரையில் அவதரித்த திரு. குமார் - பொன்னம்பலம் அவர்கள் கொலையுண்ட செய்தி கேட்டு அதிர்ச்சியுற்று மனதை சாந்தப்படுத்திக் கொள்ள முடியாமற் தவிக்கின்றோம். 1992ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின்போது எங்கள் கிராமமாகிய களுவாஞ்சிகுடி மண்ணுக்கு அன்னார் வருகைதந்து தமிழர் தலைநிமிர்ந்து நிற்க எங்கள் உணர்வினை தூண்டிவிட்டதை நாங்கள் என்வகையிலும் மறத்தற்கிலோம். கண்மூடித்தனமான அரசியல் அபிலாசைகளை முளைக்கவிடாது, மனத்துணிவுடன் தடுத்து நிறுத்திய தலைவர் இன்று எம்மை விட்டு பிரிந்து விட்டார் என்பதை நினைக்கும்போது துயரம் தாங்கமுடியவில்லை. இன்று இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இப்பாரிய இடைவெளியை நிரப்ப யார் முன்வருவார் என்பது ஐயப்பாடுதான். தங்கள் குடும்பத்துடன் ஆறாத்துயரில் பங்கு கொள்வதன்மூலம் எங்கள் வேதனையை பகிர்ந்து கொள்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

சைவ மகாசபை
களுவாஞ்சிகுடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'தமிழர்கள் ஒன்றிணைந்து குமாருக்கு இறுதி மரியாதை செலுத்த வேண்டும்'

''மறைந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலத்திற்குத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இறுதி மரியாதை செலுத்துவதே அவரின் வாழ்க்கைக்கு நாம் கொடுக்கும் கௌரவமாக அமையும்' என்று மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

அவர் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்களின் எதிர்காலத்திற்காக இறுதிவரை குரல் கொடுத்து வந்தவர் அமரர் குமார் பொன்னம்பலம். வடகிழக்குத் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் மலையக மக்களின் மனதிலும் அவருக்கென்று ஒரு தனியிடம் உண்டு. அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்த மலையகத்தில் இருந்தும் வருவதற்குப் பலர் தயாராவது இதனைக் காட்டுகின்றது.

தமிழர்கள் அனைவருமே ஒன்றிணைந்து அன்னாருக்கு இறுதி மரியாதை செலுத்துவதுதான் அவரின் வாழ்க்கையை நாம் கௌரவித்ததாக அமையும். நாம் இவரின் இறுதிக்கிரியையில் பெருமளவில் கலந்து கொள்வது எதிர்காலத்தில் நமக்கிருக்கும் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவதாகவும், பயங்கரவாத நடவடிக்கைகளை நிராகரிப்பதாகவும் அமையும்.

- வீரகேசரி 8.1.2000 -

29.01.2000

இலங்கையின் இனப் போராட்ட வரலாற்றிலே தனது பெயரை அழிக்க முடியாதபடி பதித்துவிட்டு போனவர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.



அரசியல் பலம், பொருளாதார பின்னணி, குடும்ப பாரம்பரியம் - அனைத்துக்கும் அப்பால் சொந்த கொள்கை பிடிப்பால், அச்சமற்ற உறுதியால் மாமனிதரானவர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

வாய் திறக்க வழுவில்லாமல், அரசின் காலடியில் அபயம் தேடிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் மத்தியில் அனைத்து மக்களின் கவனத்தையும் தன்பால் ஈர்த்து விழி உயர்த்தி வியக்க வைத்தவர் இவர்.

ஈழத் தமிழரின் இதய துடிப்பை அகிலமெல்லாம் எதிரொலிக்க, விண்ணதிர குரல் எழுப்பியவர்.

எது சரியோ, எது சாத்தியமோ, எது நீதியோ, எது தர்மமோ - அதைச் சொல்வதற்கு ஒருவர் இல்லாத இடைவெளியை குறுகிய காலத்தில் இல்லாமல் ஆக்கியவர். அவர் உடலை கயவர்கள் அழித்து விடலாம். ஆனால் அவரின் கொள்கைகள் ஒவ்வொரு தமிழனின் இரத்தத்திலும் விதையாய் துளிர்க்கும்.

கோழைகள் வாழும் உலகில் புதுப்புது அக்கினி குஞ்சுகள் உதிக்கும்.

தர்மம் ஜெயித்து விமோசனம் வரும் காலத்தில் குமார் பொன்னம்பலம் ஆதர்ஷ மனிதனாக, அவதார புருஷனாக, மா மனிதனாக நினைவு கொள்ளப் படுவார்.

பெ.சந்திரசேகரன்
நுவரெலியா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்,
தலைவர் - மலையக மக்கள் முன்னணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக நலன்புரி மன்றம் அனுதாபம்

அமரர் குமார்பொன்னம்பலம் அவர்களது மறைவு குறித்து மலையக நலன்புரி மன்றத்தின் பொதுச் செயலாளர் அ.லெட்சுமணன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தமிழ் இனத்தின் துணிச்சல் மிகு தலைவனும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளருமாகிய குமார் அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தாருக்கும் தமிழ் மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் இனத்தின் புத்தி ஜீவியான குமார் பொன்னம்பலம் அவர்களைக் கொலை செய்தது கண்டிப்பிற்குரியதே.

தமிழ் இனத்தின் உணர்வுகளுடன் எப்பொழுதும் காணப்படும்இவர், இலங்கையில் பல்வேறு பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது இவரது இழப்பு வேதனைக்குரியதாகவுள்ளது.

தமிழ் இனத்தின் புறக்கணிப்பிற்கு எதிராக எப்பொழுதும் துணிவுடன் குரல் கொடுக்கும் குரல் இன்று ஓய்ந்து விட்ட நிலையில் தமிழ் மக்கள் பெரிதும் துக்கத்துடன் காணப்படுகின்றனர். அந்தத் துக்கத்தில் நாமும் பங்கேற்றுக் கொள்கின்றோம் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்

- வீரகேசரி 8.1.2000 -

மனத்தைரியமும் செயல் திறனும் கொண்ட தலைவர் குமாருக்கு அமைச்சர் ஆறுமுகம் அஞ்சலி

அரசியல்வாதி, சட்டவல்லுநராகவும், செயற்பட்டு வந்த அமரர் குமார் பொன்னம்பலம், மனதைரியமும், செயலாற்றும் திறனும் கொண்ட தமிழ் சமூகத்தின் திறமைமிக்கத் தலைவராக மிளிர்ந்தார்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், கால்நடை அபிவிருத்தி, தோட்டக் கட்டமைப்பு அமைச்சருமான, ஆறுமுகம் தொண்டமான் தமது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் தனது திறமை யை அறிமுக ப்படுத்தி, புகழ்படைத்து, வாழ்ந்தவராவார். தனக்கு சரியெனப்பட்டதை துணிவோடு சொல்லும் மனஉறுதி படைத்தவர்.

தமிழ் சமூகத்தின் விடிவிற்கு தன்னாலான பங்களிப்பை மனசுத்தியோடு வழங்கிவந்ததோடு, வடகிழக்கு மக்களின் மீட்சிக்கு குரல் கொடுத்து வந்த இவர், பல்வேறு மட்டத்திலும் தமிழ் மக்களுக்கு இன்னல்கள் நிறைந்த காலகட்டங்களில், ஜனநாயக முறையில் தனது எதிர்ப்பைத் தெரிவித்து, வன்முறைகளைக் கண்டித்துள்ளார். இவரது இழப் பு தமிழ் சமுதாயத்துக்கு மட்டும் இழப்பாக மாட்டாது.

திறமைமிக்க சட்டவல்லுநரை நாடு இழந்துள்ளது. ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்த ஒரு தலைவனை தமிழ் சமூகம் இழந்துள்ளது. பல ஆண்டு காலம் தொடர்ந்தாலும்கூட அவரது இழப்பை ஈடுசெய்வது கடினமாகும். அன்னாரைப் பிரிந்து துயருறும் அவரது குடும்பத்தினருக்கு, இந்திய வம்சாவளி மக்களினதும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரலினதும் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தமது செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

- வீரகேசரி 8.1.2000 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமக்கு ஏற்பட்ட இன்னல்களுக்காக துணிவுடன் இன்றைய காலகட்டத்திலும் சரி, இதற்கு முன்பும் "செடிகொடிகள்" என்று எம் இனத்தைப் பற்றி கருத்துக் கூறியபோதும், நமது நாட்டில் நமக்குள்ள பூர்விக உரிமையைக் கேட்டுப் போராடும் நம்மை "இந்த நாட்டின் பூர்விக குடிமக்கள் அல்ல" என்று கூறியவர்களுக்கு, உடனடியான எதிர்ப்புகளைக் காட்டி அறிவுறுத்திய நமது சாத்விக தலைவர்களில் ஒருவரான, அமரராகிவிட்ட நம் அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்களின் மறைவும் நமக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.


"சிந்தனைச் சுதந்திரம்", "பேச்சுச்சுதந்திரம்" ,மக்களின் அடிப்படை உரிமை, அறவழியில் ஆயுதம் ஏந்தாது சிந்தனைத் திறமிக்க நாவன்மையினால் மக்களுக்கு விளக்கம் கொடுப்போர், பேனாமுனையால் கருத்துத் தெரிவிப்பவர்கள், இப்படியாக தொடர்ந்தும் கொலை செய்யப்படுவார்களே யானால், மனித அடிப்படை உரிமைகள் இல்லாத நடைபிணமாக வாய் திறக்காமல் அடக்கப்பட்டு நசுக்கப்படுகின்றார்கள் என்பதுதான் அதன் பொருளாகும். இந்நிலை நீடிக்குமானால் இலங்கையை ஜனநாயக நாடு என்று சொல்ல முடியாமல் போகும்.

இந்த நிலையினைத் தீர்க்கதரிசனமாக முன் கூட்டியே அன்று மறைந்த தந்தை செல்வநாயகம் அவர்கள் "தமிழினத்தை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்" என்றார் போலும்.....

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் பிரிவால் வாடும் அவரது அன்பு மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்களின் உணர்வுகளுடன், திருகோணமலை தமிழ் மக்களின் சார்பில் நாமும் கலந்து கொள்கின்றோம்.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின்
ஆத்ம சாந்திக்காக நாம் பிரார்த்திக்கும் அதே நேரம், நம் இனத்தின்
விரைவான விடுதலைக்காகவும், சமாதானத்திற்காகவும்
இறைவனைப்பிரார்த்திப்போமாக.

முன்னாள் நகராட்சிமன்ற உறுப்பினர்கள்.



அஞ்சா நெஞ்சன், தமிழ்த் தலைவன் குமார் பொன்னம்பலத்திற்கு எங்கள் ஆழ்ந்த அஞ்சலி

6.1.2000

அன்பு நெஞ்சங்களே,
நினைக்க, நினைக்க நெஞ்சமெல்லாம்
வேதனையால் துடிக்கின்றது.

காலம் கனிந்துவிட்டது எமது உரிமைகளைப் பெற என்று முன்னோக்கிய பாதையில் செயல் படுவோம் என முழங்கியதற்காக அன்னார் பெற்ற பரிசு பேரினவாதிகளின் படு கொலைக்குப் பலியானது.

சிறு பான்மையினம் சிதறிய நிலையில் உரிமைக்கான போராட்டங்களில் வெற்றி பெறுவது என்பது பூச்சியமே.

அதற்காக அன்னார் சிறுபான்மைத் தமிழரை இலங்கையில் எங்கு வாழ்ந்தாலும் ஓர் அணியின் கீழ் செயல்பட வித்திட்ட வேளையில் விழ்த்தப்பட்டுள்ளார்.

அவரின் படு கொலை உணர்த்துவது என்ன? எவரும் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டால், உயிர்மேல் ஆசையின்றியே இறங்குங்கள் என்பதாகும்.

அவர்களுக்கு நாம் சொல்லுகிறோம் ஜனநாயக வழியில் செயல்பட ஒவ்வொரு தமிழ் நெஞ்சங்களிலும் குமார் பொன்னம்பலம் வாழுகின்றார் என்பதை.

தமிழ் இனத்தின் பிரச்சினை ஒன்றுதான்.
அதைப்பெற நாம் ஒன்று படுவோம்.
இதுவே அன்னார்க்கு நாம் செலுத்தும் அஞ்சலி.

ஆழ்ந்த துயருடன்,
எம்.கமலக்கிருஷ்ணா.
பொதுச் செயலாளர்,
தேசிய சேவையாளர் முன்னணி, 22/1 சொய்சாகலை வீதி,
நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வள்ளி அன்னதான மடம்

ஓம் சரவணபவ.



அன்புக்கும் மரியாதைக்கும் உரிய எங்கள் தலைப்பேரும் தலைவர் குமார் ஐயாவின் குடும்பத்தாருடன் சேர்ந்து துக்கம் அனுட்டிக்கின்றோம்.

கல்வி, செல்வம், புகழ் - எல்லாம் இருந்தும் தனக்கு என வாழாது தமிழ் இனத்துக்கு தம் உயிரையும் தியாகம்செய்த தர்மசீலர் - அஞ்சா நெஞ்சர்.

தமிழ் மக்கள் எல்லோர் இதயத்திலும் இராசகுமாரனாகிவிட்டார்.
அவர் ஆத்மா சாந்திவேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அவர் இறுதிக் கிரியையில் பங்கு எடுத்து, எல்லா உதவிகளையும் செய்து திருவாசகமும் பாடும்படி நமது பிரதிநிதியை அனுப்பினோம்.(5 மணிக்கு)

ஓம் நமசிவாய.
சாந்தி, சாந்தி, சாந்தி.
முருகன் அடிமை.

குமார் ஐயாவின் ஆத்மா சாந்தி பெற வேண்டும் என வேண்டுதல் செய்து, கந்தப்பெருமான் கருணை செய்தருள வேண்டும் என சனி, ஞாயிறு பெரிய அளவில் அன்னதானம் மடத்தில் செய்கின்றோம்.

- சுசி -

பேப்பரில் வந்த அவர் படத்தின் முன்தான் உளவைப் படைக்கின்றோம். அவருடைய படம் தந்து உதவுமாறு வேண்டுதல்.

கண்ணீர் அஞ்சலி



அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர், தமிழ் இனத்தின் தன்மானத் தமிழன், அஞ்சாநெஞ்சம்படைத்த விரப்புதல்வன், அபூர்வ மனிதர், உயரிய தேசப்பற்றாளர், மாமனிதர், சட்ட வல்லுனர், சைவப்பற்றாளன், மனிதநேயர், பணஆசையற்ற, பணத்திமிரற்ற பண்பாளர், கைதிகளின் காப்பாளன், தமிழ் இனத்திற்காய் தன்னுயிர் ஈத்த

அமரர் திரு. குமார் பொன்னம்பலம்

அவர்களுக்கான கண்ணீர் அஞ்சலியும், இரங்கல் மடலும், ஈழத்தமிழர் சார்பாகவும், குறிப்பாக மட்டுநகர் வாழ் தமிழ்பேசும் இனம் சார்பாகவும், இலவச சட்டவாதத்தால் விலங்கொடிபட்டு விடுதலையான தமிழ் இளைஞர்கள் சார்பாகவும், படுகொலையை கண்டித்து அறிக்கைவிட்ட தமிழர்கள் சார்பாகவும், பாசெல் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம் சார்பாகவும், எனது குடும்பத்தார் சார்பாகவும் எமது சிரம் தாழ்த்தி அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் மறைவால் அல்லலுறும் அவர் மனைவி டாக்டர் யோகலக்சுமி, மகன் கஜேந்திரகுமார், மகள்,சகோதரி மற்றும் உற்றார் உறவினர்களோடு துயரத்தை பகிர்ந்துகொள்வதோடு அன்னாரின் ஆத்ம மோட்சத்திற்காக பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
அமரர் திரு. ஜீ.குமார் பொன்னம்பலம் அவர்களின் சட்ட
நுட்ப வாதிடலின் மூலம் விலங்கு உடைக்கப்பட்டு சுவிஸ் நாட்டில் அகதியாக வாழும்
நாகமணி கந்தரலிங்கம்(பாசெல் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்)
குடும்பத்தினர் சுவிற்சர்லாந்து

நாகமணி கந்தரலிங்கம்,
அரசடித்தீவு, கொக்கட்டி சோலை,
மட்டுநகர். வெளியீடு 07.01.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8.1.2000

குடும்பத் தலைவன் திரு குமார் பொன்னம்பலம் அவர்களை இழந்து துயரக் கடலில் ஆழ்ந்திருக்கும் அவர் தம் குடும்பத்தார் மனைவி ,மகன், மகள், உறவினர்கள் யாவருக்கும் குருக்கள் பிரம்மஸ்ரீ சண்முகரட்ன சர்மா ஜே.பி. அவர்கள் தன் இரங்கற் செய்தியையும் தன் அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்னாரது திடீர் மறைவு கேட்டு பேரதிர்ச்சியடைந்தேன். அவர் பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தாரை எப்படித் தேற்றுவது? தேற்ற வார்த்தையே இல்லை. அவர் தம் குடும்பத்தாருடன் என் துயரத்தை நானும் சேர்ந்து பகிர்ந்து கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விதாயகப் பெருமானைத் துதிக்கின்றேன்.

சாந்தி. சாந்தி. சாந்தி.

இப்படிக்கு
பா.சண்முகஇரத்தின சர்மா
குருக்கள் ஐயா.

குமார் ஆவேசமாக கிளர்ந்தவர்

தமிழ் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக நவசமசமாஜ கட்சி சுயநிர்ணய உரிமை அடங்கலான நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதால், அமரர் குமார் பொன்னம்பலம் எம்முடன் அந்நியோன்யமான உறவு கொண்டிருந்தார். கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பணிக்குழுவில் சேர்ந்து உழைக்குமாறு அவர்தான் எனக்கு முதலில் அழைப்பாணை விடுத்திருந்தார்.

குமார் தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னலமின்றி மிகுந்த துணிச்சலுடன் குரல் கொடுத்தவர். அதனால் தனது இன்னுயிரையே தியாகம் செய்தவர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளராக பலகாலம் செயலாற்றிய அவர் தமிழ் மக்கள் விடுதலைக்காக அயராது ஈடுபட்டார். தமிழ் மக்களை சிங்கள இனவாத ஆட்சியாளர்கள் அடக்கி ஒடுக்கி அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்பதை நன்கு உணர்ந்த அவர் சர்வதேசரீதியாகவும் இறுதிவரை பல பிரசார மற்றும் போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

அவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத போதிலும் தமிழ் மக்கள் சார்பில் உரத்து, அதிகளவு குரல் கொடுத்து வந்தார். திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென குரல் எழுப்பிவந்தார்.

1980 களின் பிற்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடனேயே ஒத்துழைத்து, ஜனநாயக மக்கள் முன்னணியினை(D.P.A)அமைப்பதற்கு உதவிய குமார் பொன்னம்பலம், பின்பு அந்த முன்னணி ஒரு தலைப்பட்சமாக குலைக்கப்பட்டபின் மிகுந்த விரத்தியும் வெறுப்பும் அடைந்திருந்தார். பிந்திய காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் சிந்தாந்தத்தை ஆதரிப்பதாக முன்வந்து அதனடைப்படையில் வெளிப்படையாகச் செயற்பட்டார். தமிழ் மக்களின் நீண்டகால அகிம்சை வழிப் போராட்டமானது ஆயுதப் போராட்டமாக பரிணமிப்பதற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் பெரும் சக்தியாக வளர்ச்சி பெற்றமைக்கும் சிங்கள மேலாதிக்க அரசாங்கங்கள்தான் காரணமாகும். இவற்றையெல்லாம் உணரத்தவறிவிட்ட ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து யுத்தத்தையும் வரலாறு காணாத அழிவுகளையே வழங்கினர்.

இவற்றையெல்லாம் எதிர்த்தே குமார் ஆவேசமாக கிளர்ந்தார். அவரின் அகால மறைவு ஒரு பேரிழப்பாகும். துணிச்சலுடன் செயற்பட பலர் முன்வரவேண்டியதுதான் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும்.

வ.திருநாவுக்கரசு,
ந.ச.ச.க. அரசியற் குழு உறுப்பினர்,
கொழும்பு மாநகர சபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணி,
37, ஒளவையார் வீதி,
திருகோணமலை.
2000.01.16.

மக்கள் மனதில் என்றும் வாழ்வார் 'மாமனிதர்'

"நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்ற மரபில் வந்தவன் குமார் ஜீ.ஜீ. பொன்னம்பலம். மனித குலத்தைச் சார்ந்த ஒரு இனம் பலவகையிலும் பல வருடங்களாக நசுக்கப்படும்பொழுது, அந்த இனத்தின் நீதி, நியாயத்திற்காக அதன் குறைகளை தர்க்கரீதியில் சட்டத்தின்பால் வாதம், விவாதம் செய்து துணிவுடன் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் எடுத்துக்கூறி வந்தவனுக்குக் கிடைத்த பரிசு மரணம். இது சாதாரண மரணமல்ல "வீரமரணம்".

குமார் பொன்னம்பலம் என்ற உடலைத்தான் இந்த அழியும் கயவர்களால் அழிக்கமுடியும். உயர் இலட்சியத்திற்காக வாழ்ந்த அவர் அமரராகி, விண்ணுலகிலும், மண்ணுலகிலும் என்றும் வாழ்வார். மக்கள் மனதில் என்றும் வாழ்ந்துகொண்டேயிருப்பார். அவர் வழியைப் பின்பற்றி இன்னும் பல ஆயிரம் குமார் பொன்னம்பலங்கள் தோன்றுவது நிச்சயம். அவர் ஒரு "மாமனிதர்."

இங்ஙனம்,
மகேந்திரன்.என்.ஆர்.
மதிப்பார்ந்த காரியதரிசி.
கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணி.

தமிழ் அரசியல் கைதிகள்,
களுத்துறை சிறைச்சாலை,
களுத்துறை.
06.01.2000

மதிப்பிற்குரிய திரு. குமார் பொன்னம்பலம்
ஐயா குடும்பத்தினர்க்கு,

தமிழர்தம் உரிமைக்காக உண்மையாக, அயராது உத்வேகத்துடன் செயற்பட்ட தமிழ்த் தலைவரான திரு. குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பாக நாம் ஆழ்ந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைத்துள்ளோம்.

தமிழ்த் தாயகத்திற்காகவும், தமிழர் தம்உரிமைக்காகவும் எந்தவித சலுகைகளையும் எதிர்பாராது, நிதர்சனமான இனப்பற்றுடன், போலி வேடங்கள் தரித்து அரசுக்கு ஊழியம் செய்யாமல் தைரியமாக செயற்பட்டு வந்த உன்னதமான தலைவரை அழித்துவிட்டார்கள். இதனை சந்திரிகா அரசும், அதனோடு இணைந்த கூலிக் குழுக்களுமே செய்துள்ளன என்பதை அனைவரும் இலகுவில் தெரிந்து கொள்வார்கள்,

இதற்கான முழுப் பொறுப்பையும் அரசும், தம்மை ஜனநாயக கட்சிகள் என தாமே அழைத்துக் கொள்ளும் தமிழ்க் குழுக்களுமே பொறுப்பேற்க வேண்டும். இதனைத் தமிழினம் என்றும் மன்னிக்க மாட்டாது. இந்தக் குழுக்களும் இதற்கான தண்டனையை அனுபவித்தேயாக வேண்டும் என்பதில் ஐயமில்லை. இவை வரலாற்றினூடாக நாம் அறிந்து கொண்ட பாடங்களாகும். இக்கொலைக்கு முக்கியமான காரணங்கள் தாம் அரசின் அவசரகால சட்டத்திற்குக் கையுயர்த்தி தமிழர்களை அழித்துக் கொண்டிருக்கும் வேளையில் குமார் பொன்னம்பலம் அவர்கள் அதை தடுக்க குரல் எழுப்பியது, தமிழருக்கு விடிவு கிடைத்துவிட்டால் தமது இருப்பு கேள்விக்குரியாகிவிடும், எதிர்வரும் பொதுத்தேர்தலில் குமார் பொன்னம்பலம் அவர்களோ அன்றேல் கட்சியோ போட்டியிட்டால் அமோக வெற்றி கிடைத்துவிடும் எனவே, இதற்கொரு எச்சரிக்கை விடவேண்டும் என்ற பல்வேறு காரணங்களுக்காகவே அவரை அழித்துவிட்டனர். இச்செயலை தமிழ் அரசியல் கைதிகளான நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்துயர சம்பவத்தால் மிகுந்த வேதனையுற்றிருக்கும் ஐயாவின் குடும்பத்தினரோடு நாமும் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

நன்றி.

இவ்வண்ணம்,
தமிழ் அரசியல் கைதிகள்,
களுத்துறைசிறைச்சாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அரசியற் கைதிகள்,
களுத்துறை சிறைச்சாலை,
களுத்துறை வடக்கு,
களுத்துறை.
10.01.2000

அமரத்துவமான மாமனிதர்,
திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின்
குடும்பத்தினர்க்கு,

உங்கள் உத்தமமான குடும்பத்தலைவனாகவும் ஆதரவற்று நின்ற தமிழ் அரசியல் கைதிகளான எங்களுக்கு தனது சட்ட அறிவைக் கொண்டு சிறந்த மீட்பராகவும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளராகவும் இருந்துகொண்டு தாயக விடுதலையில் தணியாத தாகத்துடனும், தளராத உறுதியுடனும் தனக்கெனத் தனித்துவமான பண்பையும், இலட்சியத்தையும் வரித்துக்கொண்டு ஈழத்தமிழ் தேசிய இனத்தின் குரலாக தமிழ் அரசியல் வானில் தன்நிகரில்லாத் துண்மதியாக சிங்கள இனத்தின் சிரசில் இருந்து கொண்டே சிம்ம சொப்பனமாகவும் விளங்கிய மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் கோரத்தனமானதும், கோழைத்தனமானதுமான படுகொலை எமக்கு அதிர்ச்சியையும் ஆறாத்துயரையும் ஏற்படுத்தியுள்ளது.

அம்மாமனிதரின் இழப்பு தமிழ் தேசிய இனத்தால் என்றுமே ஈடுசெய்யமுடியாதது. அவரது இழப்பால் துயருறும் உங்களுடனும், இலட்சோப இலட்ச தமிழ் நெஞ்சங்களுடனும் நாமும் இணைந்து கொள்கின்றோம். அவர்தம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அதேவேளை அன்னாரின் வாழ்நாளில் வரித்துக் கொண்ட இலட்சியங்களால் கவரப்பட்டவர்கள் என்ற வகையிலும், எமது வளமான வாழ்வுக்காக வாதாடியவர் என்ற வகையிலும், துரோகக் கொலைசெய்த கோழைகளின் நோக்கம் நிறைவேறாத வகையிலும் அவரது இலட்சியங்களை ஈடேற்ற திடசங்கற்பம் கொள்கின்றோம்.

"மரணம் மாமனிதரது பேச்சையும் மூச்சையும் நிறுத்தியதே அன்றி இலட்சியத்தை இன்னும் இன்னும் வீச்சாக்கும்" என்பதை அவர் எதிரிகள் புரிந்து கொள்ளும் நாள் வெகுதொலைவில் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதயத்தை நெருடும் சோகச் சுமையோடு,
தமிழ் அரசியல் கைதிகள்,
களுத்துறை சிறைச்சாலை.

கண்ணீர் அஞ்சலி

எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய
திரு குமார் அண்ணா அவர்களை
இழந்து துடிக்கும் அண்ணாரின்
அவரை எண்ணிக் கனடாவில் மிகவும்
துக்கத்துடனும் துயரத்துடனும் இருக்கின்ற
எனது குடும்பத்தாரின் சார்பில் மிகவும் ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மாண்பினிலே வாழ்ந்த
மாமனிதன் நீர்
நம்மினத்தின் துயர் தெரிந்த
தூயவன்நீர்


துயரத்தில் வாழும் நம்மினத்திற்காய்
தூக்கியெறிந்தாய் இன்னுயிரை இன்று
தரணியில் மீண்டும் வந்துபிறவாயோ அண்ணா
நம்மினத்தின் துயரத்தை பாராயோ ஓர் கணம்
துடிதுடித்துக் கதிகலங்கி நிற்கின்றோம் இன்று
நம் துயர்துடைக்க யாருமில்லை அண்ணா இன்று.
நீர் மறைந்தாலும் உன் மகத்தான சேவை
என்றும் மறையாது

உன் பிரிவால் துடிக்கும்

ஆரோகணம் அன்ரன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000.02.01



அம்மணி!

அனுதாபச் செய்தி

தந்தையின் வழியில் தமிழ்பேசும் மக்களின் விடிவுக்காகப் போராடி வந்தவர் தங்களின் கணவர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள். அன்னாரின் அகாலமரணம் எம்மையெல்லாம் பேரதிர்ச்சிக்கும், ஆழ்ந்த கவலைக்கும் உட்படுத்திவிட்டது. தமிழ்பேசும் மக்களின் இன்றைய இக்கட்டான நிலையில் அவரின் மறைவு பேரிழப்பாகும்.

அன்னாரின் பேரிழப்பினால் துயருற்று இருக்கும் தங்களுக்கும், தங்கள் மழலைச் செல்வங்களுக்கும், அவர் நேசித்த மக்களுக்கும் எல்லாம் வல்ல இறைவன் அமைதியைக் கொடுக்கவேண்டு மெனப்பிரார்த்திப்பதுடன், அமரரின் ஆன்மா பேரின்பத்தையடைந்து அன்னார் நேசித்த மக்களுக்கு ஒரு விடிவுப் பாதையைக் காட்டவேண்டுமென்று கூறி அமைகின்றோம்.

எமது சபையின் 31.01.2000ம் திகதிய மாதாந்தக் கூட்டத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுட்டிக்கப்பட்டு, பின்னர் நிறைவேற்றப்பட்ட அனுதாபப் பிரரேணை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது.

என்றும் தங்கள் சேவைக்குரிய,
(வி,சண்முகநாதன். ஜே.பி.)
உப தலைவர்,
வலி. வடக்கு பிரதேச சபை.

2000.02.01.

தீர்மானம்

"இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உலகளாவிய ரீதியில் குரல்கொடுத்து வந்தவர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள். அன்னாரின் அகாலமரணம் தமிழ்பேசும் மக்களுக்கு இன்றைய காலகட்டத்தில் ஒரு பேரிழப்பாகும். அன்னாரை இழந்து தவிக்கும் அருமைத் துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும் இச்சபை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, இந்த அனுதாபத் தீர்மானத்தை அவர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென திரு. சு.பத்மநாதன் முன்மொழிய, திரு.த.ச.அப்புத்துரை வழிமொழிய சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது."

உண்மைப் பிரதியென உறுதி செய்யப்பட்டது.
உப தலைவர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (U.S.A)
மாமனிதன் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கட்கு
உ.த.ஒ.குழுவின் அஞ்சலி

அமரர் குமார் பொன்னம்பலத்தின் அகால மறைவு உலகம் வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழீழ தேசத்தின் விடுதலைக்குச் சிங்கள-பௌத்த இனவாத ஆட்சியாளர்களது மிரட்டல்களுக்கும் பயமுறுத்தல்களுக்கும் பணிந்து போகாது சிங்கத்தின் குகையில் இருந்து கொண்டே அவர் ஓங்கிக் குரல் கொடுத்தார்.

இலங்கை ஒரு தீவு. அதில் இரண்டு தேசிய மக்கள் வாழ்கிறார்கள் என்றும், இந்த இரண்டு தேசிய இனங்களும், தேசிய மக்களும் இரண்டு சுதந்திர தனிநாடுகளில் தனித்தனி வாழவேண்டும். அதுவே நிரந்தர அமைதிக்கு ஒரே வழியாகும் என்ற விடுதலைப்புலிகளின் அரசியற் கோட்பாட்டைப் பகிரங்கமாக ஆதரித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குமார் பரப்புரை செய்து வந்தார்.

ஸ்ரீ லங்காவில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற மனிதவுரிமை மீறல்கள், படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் இவற்றிற்கு எதிராக நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி நீதி கோரி வாதாடினார். பள்ளி மாணவி கிருசாந்தி குமாரசாமி பாலியல் வன்முறைக்குப் பலியாகிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நீதிமன்றம், உலக மனிதவுரிமை அமைப்புக்கள் இவற்றின் கவனத்திற்குக் கொண்டு வந்து அந்தக் கொடூரத்தை அம்பலப்படுத்தியவர் குமார் பொன்னம்பலம் அவர்களே.

கொழும்புத் தமிழ்க் கட்சிகளும் தமிழ்க் குழுக்களும் சனாதிபதி சந்திரிக்காவிற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் செயல்பட்டபோது, நாடாளுமன்றத்தில் மாதா மாதம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகளுக்கும், தமிழினத்துக்கு எதிரான இனப்படுகொலை யுத்தத்திற்கு வேண்டிய நிதி ஒதுக்கீட்டுக்கும் கை உயர்த்தி ஆதரவு தெரிவித்தபோது அவற்றிற்கு எதிராகப் பேசியும், எழுதியும் வந்தவர் குமார் பொன்னம்பலம். இந்தக் கட்சிகளின்,குழுக்களின் முகங்களைக் காட்டி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இவர்கள்தான், இவர்கள் எங்கள் பக்கம் நிற்கிறார்கள் என்று சனாதிபதி சந்திரிகாவும், வெளியுறவு அமைச்சர் லட்சுமன் கதிர்காமரும் உலகத்தை ஏமாற்றியபோது, அவர்களின் சுயரூபத்தையும், விடுதலைப்புலிகளின் அரசியல் நிலைப்பாட்டையும், தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் நீதி நியாயத்தையும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள், கொழும்புக்கு வருகை தருகிற அரசியல்வாதிகள் போன்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களது தார்மீக ஆதரவைத் திரட்ட முயற்சி செய்தவர் குமார் பொன்னம்பலம். அவர் கொழும்பில் இருந்திராவிட்டால் வெளிநாட்டவர்கள் அரசாங்கத்துக் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு இருந்திருப்பார்கள்.

இவை காரணமாகவே குமார் பொன்னம்பலம் போன்ற தேசாபிமானமுள்ள ஒரு தேசாபிமானியை ஒழித்துக்கட்ட சனாதிபதி சந்திரிகா முடிவு செய்து அதனை நிறைவேற்றியும் வைத்திருக்கிறார் எனக் குற்றம் சாட்டுகிறோம். குமார் பொன்னம்பலம் சந்திரிகா அரசின் பயங்கரவாதத்துக்குப் பலியாகி விட்டார் என்பதில் யாருக்கும் இரண்டுவித கருத்து இருக்க முடியாது.

இத்தச் சந்தர்ப்பத்தில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தை இழந்து தவிக்கும் அவரது துணைவியார், பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

TAMILS HAVE THE RIGHT TO SELF-DETERMINATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இன தேச அபிமானியும் மனித உரிமை ஆர்வலரும் ஆன குமார் பொன்னம்பலத்திற்கு எமது அஞ்சலி!

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் புதன்கிழமை (05.01.2000)அன்று கொல்லப்பட்டமையை இட்டு அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ் அமைப்புகள் தமது ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றன.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் ஈழத்தமிழர்கள் மீது அரசபடைகளாலும், அரச ஆதரவாளர்களாலும் இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை வெளிப்படையாகக் கண்டித்து வந்ததுடன் அவற்றை உலகின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும், சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் முன்னின்று செயற்பட்டு வந்திருந்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினர் புரிந்த மனிதக் கொலைகள் பற்றி விசாரணை நடாத்தப்பட்ட போது ஏனைய தமிழ் சட்டத்தரணிகள் அஞ்சி ஒதுங்கிய வேளையில் அமரர் குமார் பொன்னம்பலம் துணிவுடன் முன்வந்து இராணுவத்திற்கு எதிரான விசாரணைகளில் தமிழ் பொதுமக்கள் சார்பாக பங்கேற்றார். வெலிக்கடை, பூசா முகாம்களில் சட்டநடவடிக்கைகள் இன்றி சிறையிடப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சார்பாக செயற்பட்டு அவர்களின் விடுதலைக்கு உதவியிருந்தார்.

அண்மைக்காலங்களில் புதுக்குடியிருப்பில் அரச விமானப்படை பொதுமக்கள் மீது நடாத்திய விமானத் தாக்குதல்கள், மடுமாதா கோயில் சம்பவம் என்பவற்றை அவர் வெளிப்படையாகக் கண்டித்து அறிக்கை விட்டிருந்தார். கொழும்பில் இருந்து கொண்டு துணிவுடன் செயற்பட்ட ஒரு மனித உரிமை ஆர்வலரை இன்று ஈழத்தமிழர்கள் இழந்திருப்பது ஒரு ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.

ஈழத்தமிழர்கள் தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள் என்பதையும், தமிழ் தேசம், சிங்கள தேசம் என்ற இரண்டு தேசங்கள் இணைந்ததுதான் இலங்கை என்பதையும் ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தவர் அமரர் குமார் பொன்னம்பலம்.

இலங்கையில் தனித்து ஒலித்துவந்த இந்த ஜனநாயக மரபுவந்த தமிழ் அரசியல்வாதியின் குரல் இன்று ஒடுக்கப்பட்டமை மிதவாத அரசியலில் நேர்மையான ஈழத்தமிழருக்கு இடம் இல்லை என்பதைக் காட்டுகிறது. வன்முறை அரசியலாக மாறிவிட்ட இலங்கை அரசியலில் மற்றொரு துரதிருஷ்ட நிகழ்வே குமாரின் கொலை எனக் கூறவேண்டும்.

அவுஸ்திரேலிய தமிழ் அமைப்புக்கள் குமார் பொன்னம்பலத்தின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரிலும், இலங்கையிலும், உலகின்பலபாகங்களிலும் வாழும் ஈழத் தமிழரின் துயரிலும் பங்கு கொள்கின்றன. புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் அமரர் குமார் பொன்னம்பலம் என்ன இலட்சியத்துக்காக போராடி மரணித்தாரோ அதை நிறைவேற்றுவதுதான் தமிழ் மக்களாகிய நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

அவுஸ்திரேலிய தமிழ் அமைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை ஆர்வலரின் படுகொலையைக் கண்டிப்போம்



9.1.2000

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் புதன்கிழமை (05.01.2000) அன்று கொல்லப்பட்டமையை இட்டு சிட்னியில் உள்ள தமிழ் அமைப்புகள் தமது ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றன.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் ஈழத்தமிழர்கள் மீது அரச படைகளாலும், அரச ஆதரவாளர்களாலும் இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை வெளிப்படையாகக் கண்டித்து வந்ததுடன், அவற்றை உலகின் கவனத்திற்குக் கொண்டு வருவதிலும், சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் முன்னின்று செயற்பட்டு வந்திருந்தார். மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினர் புரிந்த மனிதக் கொலைகள் பற்றி விசாரணை நடாத்தப்பட்டபோது,ஏனைய தமிழ் சட்டத்தரணிகள் அஞ்சி ஒதுங்கிய வேளையில் அமரர் குமார் பொன்னம்பலம் துணிவுடன் முன்வந்து இராணுவத்திற்கு எதிரான விசாரணைகளில் தமிழ் பொதுமக்கள் சார்பாக பங்கேற்றார். வெலிக்கடை, பூசா முகாம்களில் சட்டநடவடிக்கைகள் இன்றி சிறையிடப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சார்பாக அவர் செயற்பட்டு, அவர்களின் விடுதலைக்கு உதவியிருந்தார். அண்மைக் காலங்களில் புதுக்குடியிருப்பில் அரச விமானப்படை பொதுமக்கள் மீது நடாத்திய விமானத் தாக்குதல்கள், மடுமாதா கோயில் சம்பவம் என்பவற்றை அவர் வெளிப்படையாகக் கண்டித்து அறிக்கை விட்டிருந்தார். கொழும்பில் இருந்து கொண்டு துணிவுடன் செயற்பட்ட ஒரு மனித உரிமை ஆர்வலரை இன்று ஈழத்தமிழர்கள் இழந்திருப்பது ஒரு ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.

ஈழத்தமிழர்கள் தமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள் என்பதையும், தமிழ் தேசம், சிங்கள தேசம் என்ற இரண்டு தேசங்கள் இணைந்ததுதான் இலங்கை என்பதையும் ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தவர் அமரர் குமார் பொன்னம்பலம். இந்தக் கருத்தை சில தினங்களுக்கு முன்னர்தான் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவுக்கு எழுதியிருந்த பகிரங்கக் கடிதத்தில் அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். தான் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்பதையும் குமார் பொன்னம்பலம் அந்தக் கடிதத்தில் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு திணிக்கப்படமுடியாதது மாறாக ஈழத் தமிழரின் கைகளில்தான் தற்போதைய இனப்பிரச்சினைக்கான தீர்வு இருக்கிறது என்பதையும் மிக ஆணித்தரமாக அவர் குறிப்பிட்டு இருந்தார், இலங்கையில் தனித்து ஒலித்துவந்த இந்த ஜனநாயக மரபுவந்த தமிழ் அரசியல்வாதியின் குரல் இன்று ஒடுக்கப்பட்டமை மிதவாத அரசியலில் நேர்மையான ஈழத்தமிழருக்கு இடம் இல்லை என்பதைக் காட்டுகிறது. வன்முறை அரசியலாக மாறிவிட்ட இலங்கை அரசியலில் ஜனநாயக கோட்பாடுகள் அடக்கப்படும் மற்றொரு துரதிருஷ்ட நிகழ்வே குமார் பொன்னம்பலத்தின் கொலை எனக் கூறவேண்டும்.

சிட்னி தமிழ் அமைப்புக்கள் குமார் பொன்னம்பலத்தின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரிலும், இலங்கையிலும், உலகின் பலபாகங்களிலும் வாழும் ஈழத்தமிழரின் துயரிலும் பங்கு கொள்கின்றன. புலம் பெயர்ந்து வாழும் தமிழிர மக்கள் அமரர் குமார் பொன்னம்பலம் என்ன இலட்சியத்துக்காக போராடி மரணித்தாரோ அதை நிறைவேற்றுவதுதான் தமிழ் மக்களாகிய நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும். நேர்மையான பேச்சு வார்த்தைகளின் மின் ஏற்படக்கூடிய ஒரு நிரந்தர சமாதானத் தீர்வே குமார் பொன்னம்பலத்தின் கொலை போன்ற வன்முறைச் செயல்களுக்கு முடிவை கொண்டுவரும் என சிட்னி தமிழ் அமைப்புக்கள் திடமாக நம்புகின்றன.

சிட்னி தமிழ் அமைப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்த சபை,
இல. 34, விவேகானந்த மேடு,
கொழும்பு – 13.

Vivekananda Society,
No. 34/ Vivekananda Hill,
Colombo - 13.
17.1.2000



16.01.2000 ஞாயிறு அன்று பி.ப. 5.30 மணிக்கு நடைபெற்ற தமிழர் முன்னேற்ற கழக செயற்குழு கூட்டத்தில் மறைந்த தலைவர் திரு. குமார் பொன்னம்பலத்துக்கு இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் கீழ்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"அமரர் திரு. குமார் பொன்னம்பலம் மனித நேயம் படைத்த மனிதருள் மாணிக்கமாக திகழ்ந்தார். கடந்த பல ஆண்டுகளாக தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை புள்ளிவிபரங்களுடன் இலங்கையிலும், சர்வதேச அரங்கிலும், ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடரிலும் குரல் கொடுத்தவர். தமிழரின் உணர்வுகளையும் அவர்களின் அபிலாஷைகளையும் துணிச்சலுடன் சர்வதேச சமுதாயத்துக்கும் இலங்கையிலும் வெளிப்படுத்தியவர்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உயர்ந்த கோட்பாடுகளுக்கு அமைய தனதுஅரசியல் சமூக வாழ்க்கையை அமைத்து ஓர் உத்தம புருஷராக வாழ்ந்தார். இந்த "மாமனிதரின்" மறைவு இக்கால கட்டத்தில் மிகவும் அளப்பரிய பேரிழப்பாகும்.

எஸ். சிவராஜா,
தலைவர்.


09.01.2000

கண்ணீர் அஞ்சலி

மாமனிதர் சட்டவல்லுனர் குமார் பொன்னம்பலம் அவர்கள் மனிதத்தை உலகத்திற் காப்பாற்ற, தனது உழைப்பையும் காலத்தையும் அர்ப்பணித்து நின்ற ஒரு மனிதர். தாயகத்தில் எமது மக்களைக் காப்பாற்ற உயிர்கொடுத்து உழைக்கும் புலிகளை பகிரங்கமாக அங்கீகரித்து சிங்களத்துத் தலைநகரில் துணிவோடு நின்ற ஒரேயொரு தமிழர்.



இவர், கொழும்பு நகரில் கைதுசெய்யப்பட்டு கொடுமைகளை அனுபவித்து வந்த ஆயிரக்கணக்கான தமிழ்மக்களுக்கு நீதியின் துணைகொண்டு விடுதலை பெற்றுக்கொடுத்த பாசம் நிறைந்த சட்ட வல்லுனர். தமிழனின் உரிமைக்காக உலகில் குரல் எழுப்பிய விடுதலை நேசர். சிங்கள அரசுகளின் கொடூரமான இராணுவச் சித்திரவதைகளையும் பாலியற் கொலைகளையும் சட்டமீறல்களையும் உலகநாடுகளின் கண்களுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டிய நீதியாளர்.



இந்தப் பெருமகனார், தமிழின விடிவுக்காக என மேடைகளில் முழங்கிய எத்தனையோ கனவான்கள், கொள்கைகளைக் காற்றிற் பறக்கவிட்டு, கயதலப்போக்குடன் சிங்கள ஏகாதிபத்தியத்தின் காலை வருடி, தங்களை வளப்படுத்தி நீதியைக் குழிதோண்டிப் புதைக்கும் இன்றைய சந்தர்ப்பவாத அரசியலை, ஆணித்தரமாக எதிர்த்து நின்று, துணிவோடு குரல்கொடுத்தவர்.

இந்த வீரர், தனது உயிரைக் குடிக்க, சிங்களவெறி அரசும், இராணுவமும், அதனை அண்டி நிற்கும் கூலித்தமிழ்க் குழுக்களும் சிங்கள இனவாத அமைப்புகளும் மரணவலை பின்னுகின்றன என்பதை அறிந்திருந்தும், அந்த வலையத்துக்கு உள்ளேயே நின்று தமிழர் துயர் துடைத்த அஞ்சா நெஞ்சன்.

இவர், மரணத்தின் வாயிலிலும், மண்ணை நேசித்தவர், மக்களை நேசித்தவர், நீதிக்காகப் போராடியவர், நியாயத்தை உரைத்து நின்றவர் என்பதால், எமது தேசியத் தலைவரின், "மாமனிதர்" என்ற உயரிய கௌரவத்தைப் பெற்று நிலைக்கிறார்.

இவரது இந்தப் பிரிவு எம்மைப் பெருந்துயருக்குள்ளாக்கியுள்ளது. இவரது பிரிவாற் துயருறும் இவரது துணைவியார், பிள்ளைகள், நண்பர்கள் மற்றும் பரந்த தமிழினம் என்ற உறவோடு இணைந்து நாமும் தலைசாய்த்து வணங்கி நிற்கிறோம்.

இ. ஆனந்தராசா,
பொறுப்பாளர்,
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,
ஜெர்மனிக்கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்ட நூலகம்,
பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றம்
வதிரி,
கரவெட்டி.

Law Library,
District Court of Point Pedro,
Vathiry,
Karaveddy.
10.01.2000

சிரேஸ்ட சட்டத்தரணியாக இலங்கையின் பல பாகங்களிலும் சிறப்புறக்கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டதனை பருத்தித்துறைச் சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாக கண்டிப்பதுடன் அவரின் எதிர்பாராத இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்ததவர்களுக்கு சங்கத்தின் அங்கத்தவர்களாகிய நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

09.01.2000



அம்மணி,

ஆழ்ந்த கவலையுடன் ஓர் அனுதாபச் செய்தி

இந்து மக்களுக்காகவும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்காகவும் குரல் கொடுத்து வந்த தலைவரும் தங்கள் கணவருமான திரு. குமார் பொன்னம்பலத்தின் அகால மரணம் ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இப்பேரிழப்பையிட்டு எம்மன்றம் ஆழ்ந்த கவலையை முதலில் தெரிவித்துக் கொள்கிறது.

வாதத்திறனும் சட்ட அறிவும் நெஞ்சத் துணிவும் கொண்ட தலைமகனை இழந்து துயருறும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தார்க்கும் ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

08.01.2000இல் நடைபெற்ற எமது நிருவாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த அனுதாபத் தீர்மானத்தைத் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

இங்ஙனம்,
த.யுவராஜன்,
பொதுச் செயலாளர்,
மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக தமிழினத்தின் ஒளி விளக்கு அணைந்தது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க புகழொடு வாழ்ந்த மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அகால மரணமானார் என்ற செய்திகேட்டு அடியேன் பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். ஏன் அடியேன் மாத்திரமல்ல அகில உலகமே ஆழ்ந்த அதிர்ச்சியில் மூழ்கிவிட்டது. தன் தாய்த்திருநாட்டின் உடன் பிறப்புக்களுக்காக எதையும் துணிந்து சாதிக்கவல்ல கடைசி மைந்தனாக அவர் விளங்கினார்.

அவரின் திடீர் மறைவு உலக தமிழினத்திற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். சிறையில் வாடும் அப்பாவித் தமிழ் கைதிகளுக்காக வேதனம் ஏதுமின்றி ஆஜராகி தனது சக்திக்கப்பாற்பட்ட விதத்தில் வாதாடி அவர்களை விடுவித்தவர்.

எச்சந்தர்ப்பத்திலும் துணிச்சலுடன் அஞ்சாது சொல்லுகின்ற சிங்கம். கோழை ஒருவனின் துப்பாக்கி ரவைகளுக்கு இரையாகிவிட்டாரா? இந்த நூற்றாண்டின் தாங்கொணாத் துயரச் செய்தியாகவும், தமிழ் பேசும் மக்களின் மனதை என்றென்றும் விட்டகலா கறைபடிந்த 21ம் நூற்றாண்டின் சரித்திரமுமாகிவிட்டார். அவர் மறைந்தாலும் அவர் கண்ட கனவுகள் நனவாகும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்பது திண்ணம்.

அவரின் பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எனது சார்பிலும் எமது அகில இலங்கைச் சைவக்குருமார் அர்ச்சகர் சபை சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மனின் பாதார விந்தங்களை பணிகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு"
"பிரத்தீடாலங்கார சித்தாந்த லாகரம்"
"பிரத்தீடா சிரோன்மணி"
சிவஸ்ரீ சோமாஸ்கந்த,
தண்டபாணிதேசிகர்,
சமாதானநீதிவான்,
தலைவர்,
அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபை,
பிரதம குரு,
ஸ்ரீமுத்துமாரி அம்மன்,
தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.
சோ.தண்டபாணி தேசிகர்.

புத்தளம்
8.1.2000

அம்மாவுக்கும் பிள்ளைகளுக்கும்,

அறிவும் ஆற்றலும் மிக்க குடும்பத் தலைவராகிய உத்தமரை இழந்து தவிக்கும் உங்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அதி உத்தமரது ஆத்மா சாந்தியடையவேண்டி ஐயா அவர்கள் தினமும் துதிக்கும் பிள்ளையாரை பிரார்த்திக்கிறேன்.

அவர்பிரிவால் துயருறும்
ஏ.செல்வராசா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஞ்சா நெஞ்சங் கொண்ட எம் இனத் தலைவனுக்கு எம் இதயம் கனத்த அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

"நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறனுமின்றி வஞ்சனை செய்தாரே ஐயா, உன் தமிழ் உயிருக்கு வஞ்சனை செய்தாரே ஐயா"

எம்மினத்தைச் சிறுமைப்படுத்தி மரம், செடி, கொடி என்றும், வந்தேறுகுடிகள் என்றும் கூறியவர்களின் முகத்திரையைக் கிழித்து, உலக அரங்கத்திற்கு தமிழ் மக்களின் உரிமைகளை ஆதாரத்தோடு எடுத்துக் கூரிய பெருந்தகையே, உனது நியாயமான கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல், உன்னையும் சட்டப்படி சந்திக்க முடியாமல் போனவர்கள், அநீதியை எதிர்த்து எவ்வித பயமுமின்றி வாதாடிய எம் இனத்தலைவரான உன் சிம்மக் குரலை அடக்க நினைத்தோர் அது முடியாது என்று நினைத்தோ கோழைகளான ஈனர்கள் சதி செய்து உன் உயிரை எடுத்தனர்.

ஐயா! இன்று நீ உறங்குகின்றாய். எம் இனம் யாருமற்ற அநாதைகளாக தட்டிக்கேட்க ஆளின்றித் தவிக்கின்றது. கொழும்பில் நீ தான் தமிழர்களின் தலைவனாக இருக்கின்றாய் என்று, உலகத்திலுள்ள தமிழர்கள் ஆறுதல் அடைந்திருந்தனர். உன் மண் வாசனை கலந்த தமிழால் தட்டிக் கேட்பாய் என்று அமைதியாக இருந்தனர். உன் சிம்மக் குரலும் பேச்சும் ஒரே நேரத்தில் நின்றதை அறிந்த உலகத் தமிழ் மக்கள் அனைவருமே இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர். எம்மை எல்லாம் விட்டு எங்கு ஐயா நீ சென்றாய்?

உன் இடத்தை நிரப்ப இனி எமக்கு யாருமில்லை. தட்டிக்கேட்க ஆளில்லாத பாவிகளாகி தவிக்கின்றனர், உன் பிரிவால் தமிழர்கள். ஐயா நீதி கேட்ட உனக்கு மரணத்தைப் பரிசாகத் தந்தவர்கள் நாளை தங்கள் உயிர்களுக்காகப் பதுங்கி இருப்பவர்களுக்கும் இதே கதிதான்உருவாகும். இது அவர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும். தமிழன் நீதியாக வாழ நீதி கேட்டாய். உன் கதை முடித்தால் தமிழனின் கதை முடிந்து விடும். சுதந்திர தாகம் தணிந்து விடும் என்று தப்புக்கணக்குப்போட்டு உன்னை அழித்தார்களா? ஆனால் தமிழரின் சுதந்திரம் இன்று விறு நடை போட்டு உன் ஆசையும் கனவும் விரைவில் நிறைவேறும் என்றெண்ணி நீ நிம்மதியாக உறங்கு.

ஐயா நீ சொல்லும் ஒரு வசனம் முடிந்த முடிவு தான் எம் மண்ணுக்கு அதில் மாற்றமில்லை என்று கர்ச்சிப்பாய். நீ அனுபவத்தில் சொன்னவார்த்தைகள் என் நெஞ்சிலே ஓங்காரமிடுகின்றது. ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் இவர்களிடமிருந்து எமக்கு உரிமை கிடைக்காது. தமிழ்மக்களால்தான் பெற முடியுமென்று பல எண்ணக்கருத்தோடு சொன்ன வார்த்தை விரைவில் நிறைவேறும். நீ தந்தையாகச் சொன்ன மந்திரம் விரைவில் நிறைவேறும். உன்ஆத்மாவிற்கு அந்த நல்லசெய்தி விரைவில் வந்து சேரும்.

உன் பிரிவால் துயருறும் உன் குடும்பத்திற்கும், தமிழ் மக்களுக்கும் ஆறுதல் சொல்ல எனக்கு திராணி இல்லை. இலட்சோப இலட்ச மக்களின் இதயங்களோடு எனது இதயமும் உனது ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நல்லதம்பி - செல்லத்துரை
சுவிற்சலாந்து



அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் மறத்தமிழன்

குமார் பொன்னம்பலம்!

தமிழ்மக்களின் விடிவிற்காக போராடி அகிலமே அறிந்த மாமனிதனின் இரப்பு தமிழ் பேசும் அனைத்து மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாதவொன்றாகும். கோழைத்தனமான ஈனச் செயலால் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை நசுக்கிவிட முடியாது. அன்னாரின் மறைவினால் துயரத்தில் துடிக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் அவரின் மறைவால் துன்பத்தில் வாடும் தமிழருக்கும், யாழ் இளைஞர்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ் இளைஞர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.
14.01.2000

அன்புள்ள கஜேந்திரகுமார் அண்ணா அறிவது

தங்களது தந்தையார் பேரினவாத அரசின் கைக்கூலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேட்டு பெரும் அதிர்ச்சி அடைந்தேன். எமது தமிழ் சமூகத்திற்கு சிங்கள அரசினால் நாளாந்தம் இளைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தினமும் எதிர்த்து உரத்த குரல் கொடுத்து வந்த தங்கள் தந்தையாரின் மறைவு எம்மை பெரும் மனவிரக்திக்குள்ளாக்கியுள்ளது. இந்த இழப்பு எம்மைப் பொறுத்தவரையில் ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். அந்த மாமனிதரின் இறுதிச் சடங்கில் எம்மால் கலந்து கொள்ள முடியாது போனது மிக வேதனையாக உள்ளது. எனினும் நாம் எமது பல்கலைக்கழகத்தில் உணர்வு பூர்வமாக துக்கம் அனுஷ்டித்தமை எமக்கு பெரும் மன ஆறுதலைத் தருவதாக உள்ளது. எம்மால் கூட அந்த இழப்பை தாங்க முடியாத போது நீங்களும் உங்கள் தங்கையும் அம்மாவும் எப்படித் தாங்கினீர்களோ தெரியவில்லை. எமது மாணவர்கள் சார்பாக தங்கள் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்
தந்தையின் பிரிவால் துயருறும் மாணவர் சார்பில்
எஸ். கஜேந்திரன்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

யோகி அக்கா
கஜேந்திரா குமார்
மிருனாளினி

எனது உயிருக்குயிரான அன்புக்குரிய குமார் அண்ணரின் அகால மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஏக்கமுமடைந்தேன்.

அன்னாரின் ஈடு செய்ய முடியாத பேரிழப்புக்கு எனது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எஸ். கணேஸபாலன்
கனடா

Accept my Heartfelt condolences.
Surendran, Sellathurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Karaveddi, 7.1.200

என்றும் எங்கள் பாசமுள்ள யோகி அக்கா
பிள்ளைகள், குஞ்சு அக்கா குடும்பத்தினர் அறிவது,

அண்ணரின் பிரிவால் ஏற்பட்ட தாங்க முடியாத கவலையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். என்னால் எள்ளளவும் அண்ணரின் பிரிவைத் தாங்க முடியவில்லை. ஆனால் அது ஏற்றுக் கொள்ள முடியாத ஏற்க வேண்டிய பிரிவாகிவிட்டது. அண்ணனுடன் பழகிய பழைய நாட்களை எண்ணுகையில் மீண்டும் அக்காலம் வருமா என மனம் ஏங்குகிறது. என்னிடம் அண்ணரின் பிரிவைத் தாங்கும் சக்தியில்லை. ஆனால் அப்பிரிவைத் தாங்கும் சக்தியை இறைவன் உங்களுக்கும் எனக்கும் தர இறைவனை வேண்டுகிறேன். நான் உவ்விடம் வர முயற்சியெடுத்தேன். ஆனால் முடியவில்லை. உங்களையும் பிள்ளைகளையும் இறைவன் காப்பாற்ற வேண்டுமென்று எமது அநுதின செபத்தில் வேண்டுகிறோம்.

நன்றி

இங்ஙனம்
உங்களை என்றும் மறவாத பாசமுள்ள தம்பி
இ.எ.ஆனந்தராசா.

7.2.2000

அன்புள்ள அக்கா,

நாங்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாததொன்று அண்ணருக்கு நடந்து விட்டது. எங்களையெல்லாம் மீளாத்துயரத்துக்குள்ளாக்கி விட்டு அண்ணர் மறைந்து விட்டார். ஆனால் நாங்கள் படும் வேதனை நினைக்கும் போது என்ன செய்வதென்றே புரியவில்லை. அவரை நினைக்கும் போது அவருக்கு ஏன் இப்படியான மரணம் ஏற்பட வேண்டும் என வருந்துகின்றோம். விதியா,சதியா எது என நம்பமுடியவில்லை. அவரது உடலுக்கு கூட எங்கள் கண்ணீரை செலுத்த முடியாத பாவிகளாகி விட்டோம். அவர் உலகம் போற்றும் உன்னத நிலை அடைந்து விட்டார். மறைந்த பின் புகழ் வந்து என்ன பிரயோசனம்? அவர் உயிருடன் எங்களோடு இல்லையே என ஏங்குகின்றோம். என்றும் எங்கள் மனதை விட்டகலா அண்ணாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம். "குமார் பொன்னம்பலம்" என இதுவரை எங்களால் அழைக்கப்பட்ட அணையா ஜோதி அணைந்து விட்டது. அண்ணாவின் பிரிவால் வாடும் தங்களுக்கும் பிள்ளைகளுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து கொள்கின்றேன்.

இங்'னம்
என்றும் அன்புள்ள
சோமசுந்தரம் கேதீஸ்வரநாதன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக் கணவரின் பிரிவினால் துயருறும் தங்களுக்கும், தந்தையை பிரிந்து வாழும் பிள்ளைகளுக்கும், அண்ணாவின் இழப்பினால் மனம் கலங்கி நிற்கும் சகோதரிக்கும், தாங்கொணா சோகத்தில் ஆழ்ந்திருக்கும் உறவுகளுக்கும், நண்பர்களுக்கும்,

எங்கள் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது அன்புக்குரிய பெரியார் குமார் அவர்களின் ஆன்ம சாந்திக்காகவும், துயருறும் குடும்பத்தினர் மற்றும் உறவினர் அனைவரும் அமைதி பெறவும் இறைவனிடம் வேண்டுகிறோம்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து அஞ்சலி செலுத்த முடியாமைக்கு வருந்துகிறோம்.
இந்த மடல் மூலம் எமது இதய அஞ்சலியை தெரிவிக்கிறோம்.

அன்புடன்,
அ. யேசுதாசன் குடும்பம்
(யாழ் கொழும்புத்துறை)
எழுத்தூர் - மன்னார்

Vavuniya,
08.01.200

எமது கண்ணீர் அஞ்சலி

எங்களது அருமை அண்ணனும் சிறுபான்மை இன மக்களுக்காகத் தந்தை காட்டிய வழியில் - எங்களுக்காக உலக நாடுகளிலும் இலங்கையிலும் குரல் கொடுத்து - எங்களைக் கொடுமைப்படுத்தும் நேரங்களில் - மற்றவர்கள் தங்கள் சுய நலத்திற்காக வாயே திறக்காமல் மௌனம் சாதித்த வேளையில் தமிழ் மக்கள் (சிறுபான்மை) இந்திய மக்கள், முஸ்லிம் மக்கள் எல்லோருக்காவும் குரல் கொடுத்து தமிழ் மக்கள் மத்தியில் தட்டிக் கேட்க ஆள் இருக்கின்றேன் என்று வாழ்ந்த இரும்பு மலையைக் கணப் பொழுதில் சரித்துவிட்டார்கள், கொடியவர்கள். நல்ல உள்ளங்களை என்றும் ஆண்டவன் வாழவிடுவதில்லை. உ+ம்: மகாத்மா காந்தி, ஜோன் எப். கென்னடி, மார்டின் லூதர் கிங் இப்படிப் பலர். இதே வழியில் அண்ணனையும் அழித்து விட்டார்கள். அவரின் உயிரை அழிக்கலாம். ஆனால் எமது குமார் அண்ணனை எமது உள்ளத்தில் இருந்து எப்போதும் அழிக்க முடியாது. அவர் காட்டிய வழியில் எமது பயணம் தொடரும். அவரின் (குமார் அண்ணன்) பிரிவால் வாடும் உங்களுக்கும், சகோதர, சகோதரி மற்றும் யாவருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

வாழ்ந்தவர் கோடி
மறைந்தவர் கோடி
மக்கள் மனதில் நிற்பவர் யார்?
மாபெரும் வீரன் மானம் காத்த
சரித்திரம் அதிலே நின்கின்றார்
எமது குமார் அண்ணன்.
வாழ்க குமார் அண்ணன் புகழ் உலகெங்கும்!

இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள
எஸ். சச்சிதானந்தன்
முன்னாள் தமிழ் காங்கிரஸ்
(இளைஞர் அணி) இணுவில் தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி

09.01.2000

துருவ நட்சத்திரம் மறைந்து விட்டது

குமார் பொன்னம்பலம் வெள்ளவத்தையில் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தியை தொலைபேசியில் கேட்டதும் எனது உடம்பே ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்துவிட்டது. இது ஒரு வதந்தியாக இருக்க கூடாதா என்ற ஒரு நப்பாசையில் இராமகிருஷ்ண ரெறஸ் சென்றபோது என் குருநாதர் இருந்த நிலையை எண்ணிப் பார்க்க முடியாது கலங்கினேன். அந்நேரம் என் மனதில் தோன்றியது "எங்களிற்கு இனி யார் ஆதரவு? யார் வழிகாட்டி?" என்பதுதான்.

நான் அவருடன் 1985 மாசி 10 இலிருந்து அவரது கனிஷ்ட சட்டத்தரணியாக தொழில் பார்த்து வந்திருக்கிறேன். அவரிடம் நான் கற்றவை, அவரிடம் நான் பெற்ற அனுபவங்கள் எவற்றைத்தான் சொல்வது?

எனக்கு குருவாகவும் எனது குடும்ப அங்கத்தவராகவும் இருந்து எனக்குச் செய்த நற்காரியங்களோ பலப்பல.

எத்தனையோ அப்பாவி இளைஞர்களின் விடுதலைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி சேவை செய்ததும் நீதிபதிகளிடம் நயமாக வழக்கை எடுத்துரைக்கும் அழகை இனி என்றுதான் பார்ப்பேனோ, என்று நான் அந்தக் குரலின் கம்பீரத் தொனியை கேட்பேனோ?

எங்களுக்கு வழிகாட்டிய துருவ நட்சத்திரம் எங்கே என்று தவிக்கிறோம்.

அவரை இழந்து துயருறும் யோகி அக்கா, மிருணாளினி, கஜான் அவர்களுக்கும் அவரது இழப்பால் துயருறும் சகலருக்கும் எங்கள் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜோய் மகாதேவன்,
சட்டத்தரணி

வீரகேசரி

09.01.2000

குமார் அண்ணாவிற்கு கண்ணீர்

அஞ்சலிகள்.

நெஞ்சிலே நீங்கா இடம் கொண்ட

அண்ணாவின் குடும்பத்தின் துயரத்தில்

நானும் பங்கு கொள்கிறேன்

எனது கண்ணீர் அஞ்சலிகள்

ஷாந்தி சிவலோகனாதன்
சுவிற்சலாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்குரல் 13.01.2000

குமாருக்கு அஞ்சலி செலுத்தி துண்டுப்பிரசுரம்

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாகத் தனிப் பெரும் தலைவனை தலைசாய்த்து வணங்குவோம்! என்ற தலைப்பில் பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளது. துயரக் கடலில் தவிக்கும் மட்டக்களப்பு மக்கள் என்ற பெயருடன் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா!" என்று ஈழத் தமிழரைத் தட்டிக்கொடுத்து சரிநிகர் சமானக் குரல் எழுப்பிய தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபகர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கியூ.சி. ஈன்றெடுத்த தவக் குமாரரே! அன்றாடம் வெடிக்கும் வன்செயல் களேபரத்தில் அலைக்கழிந்து அவதியுறும் அப்பாவித் தமிழர்களை அரவணைத்துத் தெம்பூட்டிய திருக்குமாரரே! செவிகள் செவிடுபடும்போர் முழக்கங்களிடையே அப்பாவிகள் நாளுக்குநாள் செத்து மடியும் அகோரங்களை அவனி கண்டு கொள்ளாத நிலையில் அந்த மனித அவலங்களை உடனுக்குடன் அகிலமெங்கும் அறியத்தந்து மனுநீதி கோரிய மக்களின் ஏக குமாரரே! என்ன ஐயா கொடுமை இது? ஏன் ஐயா நினக்கு இந்த முடிவு...?

அஞ்சா நெஞ்சுடன் ஆண்மைத் துணிவுடன் தன்னந்தனி நின்று நீதிக்குரல் கொடுத்த குரல் வளை நெரிந்து ஐயோ இன்று ஒய்ந்து கிடக்கின்றதே.... சிங்கத்தின் குகையில் நின்று அந்தச் சிங்கத்தையே எதிர்த்த ஆஜானுபாகு உடல் இன்று சரிந்துவிட்டதே!

விதியே! விதியே!, தமிழ்ச்சாதியை என்ன செய்யத் துணிந்துவிட்டாய் தமிழ்க்குமாரரே, தமிழ்க் காங்கிரஸ் தலைவரே, தரணி போற்றும் தன்மானப் புருஷரே, சட்டமேதை குமார் பொன்னம்பலம் ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கிறோம் என அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Geneva.
06.01.2000

பறி கொடுத்து விட்டோம்

ஈழத் தமிழர்களின் மிகப் பெரிய சொத்து நீங்கள்!

சமகால அரசியல் நிகழ்வுகளை துணிச்சலுடன் சட்டரீதியாகவும், சத்தியத்தின் நோக்கிலும் நிறுத்தி வைத்து துணிச்சலுடன் செயல்பட்ட மிகப் பெரிய துணிச்சலாளன் நீங்கள்! எங்களுக்காகவும் நாட்டிற்காகவும் இன்னும்!.. இன்னும்! -செய்வீர்கள் என்று எதிர்பார்த்திருந்தோம். நம்பிக்கையுடன் நாட்டையே உங்களிடம் விட்டுவிட்டு, நாம் வெளிநாடு சென்றோம், அடைக்கலம் தேடி. நம் நாட்டை நாம் மறுபடியும் பார்க்க நமக்காக ஓர் பிரதிநிதி நீங்கள் உள்ளீர்கள் அல்லவா? என நாம் கனவு கண்டோம். அந்த நாட்களின் நகர்வுகளை எதிர்பார்த்துக் காத்திருந்தோம். ஆனால், இன்று பறி கொடுத்து விட்டோம்.

எங்களது மிகப் பெரிய சொத்தான உங்களையே பறி கொடுத்து விட்டோம்!...

இனி! ....! .....! ..... இனி!..... இனி!.....

அன்புடன்: திருமதி. குமார் பொன்னம்பலம் அவர்களிற்கு,

அம்மா! உங்கள் இருவரையும் ஜெனிவாவில் இரு தடவை சந்திக்கின்ற வாய்ப்பு எனக்கு கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தேன். நடைபெற்ற இக்கோரச் செய்தி கேட்டு நாம் அனைவரும் அதிர்ந்து போய்விட்டோம்.

எமக்காக செய்யப்பட்ட அந்த மாமனிதனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எஸ். சுபாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம். 08.1.2000

இரங்கலுரை

அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

அன்னார் அரசியலில் மட்டுமல்ல, நல்லதோர் தந்தையாகவும், குடும்பத்தின் தலைவனாகவும் நல்வாழ்க்கை நெறி நின்று வாழ்ந்து காட்டியவர். அமரரை இழந்து தவிக்கும் அரசியல் உறுப்பினர்கட்கும், மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கட்கும், நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக. போக்குவரத்துக் காரணமாக அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

இங்ஙனம்,
அன்புள்ள
இ.தவகோபால்.

இ.தவகோபால்,
உரிமையாளர் : மில்க் வைற் தொழிலகம்,
525/2 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Chundikuli, Jaffna,
10.01.2000

அன்புள்ள அம்மா, பிள்ளைகள் யாவரும் அறிவது,

அண்ணன் இறந்ததை நண்பர்கள் எனக்குக் கூற நம்பவில்லை. பி.பி.சியில் கேட்டபோது தான் நம்பினேன். கேட்டதில் இருந்து என்னால் பொறுக்க முடியாத கவலையும் துன்பமும். என்னால் மறக்க முடியாமல் இருக்கிறது. எந்த நேரமும் அவரின் எண்ணமாகத் தான் இருக்கிறது. இவருக்கு இப்படி நடந்திட்டுதே என்ற கவலை.

இவற்றை அழுது கொண்டுதான் இக் கடிதத்தை எழுதுகின்றேன்.

உங்களையும், பிள்ளைகளையும் நினைக்க கவலையாக இருக்கின்றது. நான் யாருக்குச் சொல்வது. கடவுள் மேல் பழியை சுமத்த வேண்டியதுதான்.

எனது உருக்கமான கவலையைத் தெரிவித்துக் கொண்டு கடிதத்தை முடிக்கின்றேன்.

இப்படிக்கு உண்மையுள்ள
இ. சவுந்தரநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spiritus Murphy Gnanaratnam
Ratmalana.
10.01.2000

அன்புள்ள சட்டத்தரணி கஜேந்திரகுமார், பொன்னம்பலம் குடும்பத்தினர்க்கும் தமிழர் அபிமானிகளின் ஒருவன் எழுதுவதாவது, மறத் தமிழன் குமார் பொன்னம்பலத்தின் அகாலச் செய்தி கேட்டு தங்களின் துக்கத்தில் நானும் ஒருவனாக பங்கு கொள்கிறேன். தற்போதைய சூழ்நிலையில் இளைஞனாகிய நான் பங்குபற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். (ஈமக்கிரியையில்) என்றாலும் இன்று பிற்பகல் நடைபெற்ற திருப்பலிப் பூசையில் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்தித்தேன். குறிப்பாக தங்களின் சகோதரிக்கும், அன்னாரின் மனைவிக்கும் எங்களது ஆழ்ந்த துக்கத்தை தெரிவிக்கிறோம். இன்றைய பத்திரிகையில் பேட்டிகள், கட்டுரைகளை வாசித்தறிந்தேன். இளைஞர்களின் விடுதலைக்கும், இன்னோரன்ன அம்சங்களுக்காகவும் துணிந்து குரல் கொடுத்த..... அவ்வுணர்வை அடுத்த தலைமுறைக்கும் சுடர் ஏற்றியுள்ளார். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல, உலகத் தமிழர்களும் ஏன் தமிழ் தாயும் கலங்கி நிற்கின்றாள். எங்கள் பிரயாசைகள் அர்த்தமற்றதாகி விடாது. இறைவனின் ஆசீர் எங்களுக்கு நிச்சயமானது.

என் தந்தை இளைப்பாறிய அதிபர். சொந்த இடம் யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
அன்புள்ள தமிழ் அபிமானி
ஜி.எஸ். மேவி

Thirunelvely, 11.01.2000

திருமதி யோ. குமார் பொன்னம்பலம் மற்றும் பிள்ளைகள்!

முதலில் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்ந்தால் ஊர் புகழ சிறப்புடன் வாழவேண்டும். வாழ்ந்து முடிந்தபின்னும் நற்பெயர் ஒன்று இருக்க வேண்டும். அந்த வகையில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் சிறந்த மனிதர். அம்மனிதருடன் வாழ்ந்த நீங்களும் கொடுத்து வைத்தவர்கள். உங்களிற்கு ஏற்பட்ட இழப்பு முதலில் கோபத்தையும் எல்லோரிலும் வெறுப்பை ஏற்படுத்தும். ஆழ்ந்து சிந்திக்கும் நிலைமை இழப்பு நேரத்தில் வராது. தற்போது நீங்கள் மனம் தேறி இருப்பீர்கள். தேற வேண்டும் என்பதே என் பிரார்த்தனையும்.

இழப்புகள், சோகங்களைக் காட்டி ஆட்சிக்கு வந்தவர்களும் மக்களிற்கு இழப்பையும் வேதனையும் கொடுத்த வண்ணம் இருக்கிறார்கள். என்னவோ தெரியவில்லை தமிழ் மக்களாகிய நாம் அழிவின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம் என்று தோன்றுகிறது. பதவிக்காக பணத்திற்காக இன்று இறந்த மனிதரையும் தூற்றலாம். அதைக் கண்டு வேதனை கொள்ளாது தங்கள் குடும்பம் இருக்க வேண்டும் என்று வேண்டி இதனுடன் முடிக்கிறேன்.

சிங்கத்தின் கர்ச்சனை கேட்டு
அஞ்சவில்லை குமார்
பதிலுக்கு உறுமி
உலகையே வியக்க வைத்தார்.

வாழ்க்கையே போர்க்களம்
வாழ்ந்து தான் பார்க்கணும்
போர்க்களம் மாறலாம்
போர்கள் தான் மாறுமா?

அன்புடன்
எஸ். பவித்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரணி
09.01.2000

திருமதி டாக்டர் யோகலட்சுமி, பிள்ளைகள், ஏனைய குடும்பத்தினர்
எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

எங்கள் அதிர்ச்சியையும் ஆறாத் துயரையும் என்னென்று சொல்வது. உங்களோடு நேரில் சந்தித்து பங்கெடுக்கும் வரை குறையப்போவதில்லை. எப்படியும் இன்று உங்கே வந்து விடவேண்டும் என்று என்னாலான மட்டும் முயன்றேன். முடியவில்லை. என்ன செய்வது எல்லாம் தமிழனின் விதி.

1980ம் ஆண்டு தொடக்கம் டி.டி.சி. தேர்தலில் அவரோடு சேர்ந்து சாவகச்சேரித் தொகுதிக்காக போட்டிபோட்ட காலம் தொடக்கம் முன்னையை விட நெருக்கமாகப் பழகியதை நீங்கள் அறிவீர்கள். கடைசியாக சென்றாண்டு எனது மகனின் கலியாண வீட்டிற்கு வந்து என்னோடு உரையாடியவிதம் நெஞ்சில் நீங்காது நின்று அவர் உருவத்தையும் பேச்சையும், அன்பையும் படம் பிடித்துக் காட்டிய வண்ணம் இருக்கின்றது. நான் படம் அனுப்பியபோது அதையும் ஒரு பொருளாக மதித்து போன் எடுத்து நன்றி சொன்ன அன்பையும் பண்பையும் என்னென்றுவியப்பது. மறப்பது. எண்ணி எண்ணி உள்ளம் துடிக்கிறது. தமிழ் மக்களின் தலைவராக முடிசூடாத மன்னனாக - உள்ளங்களில் உறைந்த அந்தப் பெரும் ஆத்மாவிற்கு எனது வீட்டிலேயே மக்கள் வந்து ஆறுதல் கூறினர். அஞ்சலி உரை ஆற்றினர். எனது மனைவியே மூன்று நாளாக படுக்கையாக இருந்தார் என்றால் உங்கள் நிலையை எப்படி எண்ணிப் பார்ப்பது, ஆறுதல் கூறுவது. கடவுள் விருப்பங்கள் எங்கட்கு விழங்காது என்று எண்ண வேண்டியுள்ளது.

மாபெரும் மேதையான அன்னாரின், எனது அன்பு நண்பனின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

சி. துரைராசா
குடும்பத்தினர்

மெல்பேர்ண்
09.01.2000

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய குமார் பொன்னம்பலம் அவர்களின் பாரியார் அவர்களே!
அரும் பெரும் புதல்வன், புதல்வியரே!

உங்களுக்கு அனுதாப மடல் எழுதுவதற்கான ஒரு துர்ப்பாக்கிய நிலையில் நான் இருப்பேனென்று நான் ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை.

தம்பி குமார் அவர்களின் அகால மறைவு பற்றிய செய்தி அறிந்து பேரதிர்ச்சியடைந்தோம்; தாங்கொணாத துயரத்தால் வாடுகின்றோம். எங்கள் துயரத்தை நாங்கள் வார்த்தைகளால் சொல்ல முடியாது. கண்ணீர், கண்ணீராகச் சொரிந்து எமது கவலையைத் தெரிவிக்கின்றோம். நீங்கள் படும் ஆற்ற முடியாத துயரத்தை நாம் உணர்கின்றோம். உங்கள் துயரத்தில் தமிழ் மக்கள் அனைவரும் பங்குபற்றி உங்களுக்குத் தேறுதல் சொல்கிறார்களென்பது உங்களுக்கு மன ஆறுதலைத் தரும். இந்தத் துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியடையாத, கவலையடையாத தமிழ் நெஞ்சங்கள் இல்லை. இங்கே மெல்பேர்ண் நகரில் தமிழ் மக்கள் பெருந்திரளாகக் கூடித் தமது துயரத்தைத் தெரிவித்து அமரராகிவிட்ட தலைவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். தமிழ் உள்ளங்களில் கோலோச்சிய எமது அன்புத் தலைவன் இன்று எம்முடன் இல்லை என்பதை நினைக்க மனம் இடம் தரவில்லை.

அஞ்சா நெஞ்சத்துடன் அயராது அருந்தொண்டாற்றிய ஒரு உத்தமரின், மாமனிதன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக நாங்கள் எம் பெருமானிடம் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

நாகராஜா
(சட்டத்தரணி)
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kandy, 2000

பெரு மதிப்பிற்குரிய திருமதி குமார் பொன்னம்பலம் அவர்கட்கு!

புதிய நூற்றாண்டின் (யுகத்தின்) "மாமனிதர்" என்ற பட்டத்தினைத் தேசியத் தலைவர் அவர்களினால் தங்கள் கணவருக்குச் சூட்டப்பட்டதையிட்டு மகிழ்வுறும் அதே வேளை, அவரது பிரிவால் சொல்லொண்ணாத் துன்பத்தையும் அடைகிறேன். தமிழ் இனத்தின் விடுதலைக்காக மும்மொழிகளிலும் திராணியுடன் குரல்கொடுத்து வந்த அமரர் குமார் அண்ணர் அவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமார் அவர்களின் உயிர் இருக்கும்வரை அவர் எதிரிகளுக்குத் தலைவணங்கியவர் அல்லர். அவரது சாவிலும் கூட அவரது நெஞ்சில் சுடும் திராணி எதிரிக்கு இல்லாது போனது துரதிஷ்டமே.

அவரது விரச்சாவினை நினைந்து தமிழர்களாகிய அனைவரும் விழிநீரில் திரிபோட்டு விளக்கேற்றுவோம்.

சுபம்

அ. விஜயகிருஷ்ணன்

Dr. S.A. Gunaratnam,
Australia
10.01.2000

அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய

திருமதி டாக்டர் அம்மா, பிள்ளைகள் எல்லோருக்கும், எனது சார்பிலும், அவுஸ்திரேலிய தமிழ் மக்கள் சார்பிலும் எமது ஆழ்ந்த மனக் கவலையைத் தெரிவித்து கொள்கின்றோம்.

நான் கொழும்பு ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் 1963-1970 ஆண்டு காலப்பகுதியில் கல்வி கற்கும் போது டாக்டர் இந்திரகுமார், மயூரி போன்றோருடன் அன்பர் குமார் வீட்டிற்கு வந்து கூட்டங்களில் கலந்து கொள்வதுடன் அவரின் புன்சிரிப்பில் மயங்கிய காலம். சில வேளைகளில் கூட்டம் முடிய சாப்பிட்டு விட்டு அவரின் யாக்குவார் காரில் நாம் கண் ஆஸ்பத்திரி வரையும் வந்து சேர்வோம். பின்பு அவர் உங்களிடம் வந்து போன காலத்தை எம்மால் மறக்க முடியாது. பின்பு அவுஸ்திரேலியா வந்த போது கண்டு கதைத்தோம். 1997ல் சுவிஸில் கண்டு கதைத்தோம். அவரின் தீர்க்கதரிசனமான சில செயற்பாடுகள் எமது தமிழ் இனத்தின் விடுதலைக்கு உந்து சக்தியாக இருக்கும். நேற்று இங்கு நடந்த அனுதாபக் கூட்டத்துக்கு மக்கள் கூடியதும் அவரின் புன்சிரிப்புடன் கூடிய படத்தை முன்னால் எம்மால் பார்க்க முடிந்தது. எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டு மனமுருக வைத்தது. அவர் இன்று இறைவனிடம் சேர்ந்து எமக்கு மாவீரர் ஆகிவிட்டார். அவரின் சேவையை இனியார் செய்வார்கள். எம்மால் விடை காணமுடியாது. ஆண்டவனிடம் ஒப்படைப்போம். மன உறுதியுடன் நீங்கள் அமைதியுடன் சிந்தித்து செயலாற்றவும், பிள்ளைகளை வழிநடத்தவும், இறைவனை வேண்டி ஆறுதல் கூறுகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்பின்
சீராளன் ஆ. குணரத்னம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர்.

5.2.2000.

திருமதி யோகலட்சுமி குமார் பொன்னம்பலம் அவர்கள்

மகன் கஜேந்திரகுமார் அவர்கள்

மகள் மிருளாயினி அவர்கள்.

ஆழ்ந்த அனுதாபங்கள்

நெய் திரண்டு வரும் நேரத்தில் தாழி சிதைந்தாற் போல எங்களுக்கும் தமிழர் சமூகத்திற்கும் பெரும் பேரிழப்பு நேர்ந்து விட்டது. வாழ்க்கையில் மறக்க முடியாத துயரச் சம்பவம் நிகழ்ந்து விட்டது. தமிழர்களுக்கு ஆபத்துக்கள் வருகின்ற பொழுது உரிமைக்குரல் கொடுத்த எங்கள் அண்ணன் மறைந்த செய்தி கேட்டு பேரதிர்ச்சியடைந்துள்ளோம். தமிழினத்திற்கு கதியார்? என்ன செய்வோம் அண்ணனின் ஆத்மா சாந்திக்காக பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்பாளைப் பிரார்த்தித்து இவர் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ச.ஆ. சோமசுந்தரம்

காரைநகர்

திருமதி குமார் பொன்னம்பலம் அவர்கள்
மற்றும் குடும்பத்தினர்க்கு,

வவுனிக்குளம்.
30.03.2000

அன்புடையீர்,

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் பிரிவினால் இன்றும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் நெஞ்சங்களில் நானும் ஒருவன்.

அமரர் அவர்களோடு நேரில் நான் தொடர்பு கொண்டிராவிடினும் அவர்கள் மீது பற்றும் பாசமும் மதிப்பும் மரியாதையும் நிறைய வைத்திருந்தவன்.

எனக்கு வயது 55. பழைய தமிழரசுக் கட்சிக்காரன். பின்பு கூட்டணியில் இணைந்திருந்தவன். 81ம் ஆண்டுக் கால கட்டத்தில் இருந்து அவர்கள் போக்கு பிடிக்காமையால் அங்கிருந்து வெளியேறியவன். 76ம் ஆண்டுக் கால கட்டத்தில் இருந்து தேசியத் தலைவர் அவர்களோடு இணைந்து கொண்டேன். சொந்த இடம் வல்வெட்டித்துறை.

அமரர் அவர்கள் பிரிவுச் செய்தி கேட்டதும் ஒரு தடவை அவர்கள் உடலையாவது தரிசிக்கவேண்டுமென்று ஆவல் மனதில் எழுந்தாலும், எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளவர்களில் நானும் ஒருவன்.

அமரர் அவர்கள் மீது எமது தேசியத் தலைவர் அவர்களும் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார் என்பதற்கு அவர்களால் வழங்கப்பட்ட கௌரவம் சான்றுபகரும்.

ஒரு பெரிய சோகம் அமரர் அவர்களது படம் இங்கு இல்லாது போனதே. 9.1 தினக்குரலில் வந்த படங்களும் பின்பு பத்திரிகைகளில் வந்த படங்களுமே எமக்குக் கிடைத்த படங்கள். அமரர் அவர்களைப் பற்றி சிங்களப் பத்திரிகைகளிலும் கூட கட்டுரைகள் எழுதி சிறப்புச் செய்திருந்தன.

இத்துடன் இங்கு மல்லாவி பிரதேத்தில் ஊடகவியல் கற்கைநெறி மாணவர்களால் வெளியிடப்படும் "ஒளிர்" சஞ்சிகையிலும் அமரர் அவர்களைப் பற்றி ஒரு சிறு ஆக்கத்தினை வெளியிட்டு அவரைக் கௌரவப்படுத்தியிருந்தோம். அதன் ஒரு பிரதியை இத்துடன் அனுப்புகின்றேன்.

மாமனிதர் அவர்களது ஒரு உருவப்படம் அனுப்பிவைத்தால் நன்றியுடையவனாக இருப்பேன்.

நன்றிகள்

என்றும் உண்மையுடன்

ஆ. தங்கவேலாயுதம்

வல்வையூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா!

இல்லத்தின் தலைவனை, துணிவு மிக கொண்ட தன்மானம் நிறைந்த வீரத் தமிழ் மகனை - தன் மனதில் பட்ட கருத்தை எவ்வித தயக்கமும் இன்றி துணிச்சலுடன் வெளியிட்ட - அநீதிக்கு குரல் கொடுத்த ஒரு பெருமகனை இழந்து விட்ட ஆறாத் துயரிலே முழ்கியுள்ள உங்களுடன், உங்கள் குடும்பத்துடன், உங்கள் துயரிலே நானும் பங்கு கொள்கிறேன்.

இவ்விழப்பை ஈடு செய்ய எந்த விதத்திலும் முடியாது. ஒரு அறிவு நிறைந்த கல்விமானை நாமும், நாடும் இழந்து விட்டோம்.

பெருந்துயர் அடைகிறோம். கடவுள் மனிதன் பிறக்கும் போதே இறப்பையும் நிர்ணயித்தே இவ்வுலகுக்கு அனுப்பி வைக்கிறான் - அது எவ்விதத்தில் அமைய வேண்டும் என அவர் நிர்ணயித்ததை மீற எங்களுக்கு சக்தியேது. எதை சொல்லி ஆறுதல் வார்த்தைகள் சொன்னாலும் மனது வெடிக்கும் நிலையில் அவை ஆறுதல் இருக்காது. "ஜீ.ஜீ. குமார் பொன்னம்பலம் என்ற துணிவு மிகு தன்மானம் நிறைந்த தமிழ் பெருமகனே, நீ - உலகை விட்டு மறைந்தாலும் மக்களின் மனதிலே குடியிருப்பாய் என்றென்றும்"

M. Mohideen,
Mattakuliya,
Colombo 15

மகா கணபதே நமக

முல்லைத்தீவு
23.01.2000

அன்புடையீர் வணக்கம்.
திருமதி குமார் பொன்னம்பலம் குடும்பத்தார் அவர்களுக்கு,

அம்மா, உங்கள் கணவர் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் பெரும் கவலையும் அடைந்தோம். இப்படி ஒரு அநீதி செயல் நடக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அவர் நாட்டு மக்கள் நீதியுடனும், நேர்மையுடனும் வாழ வேண்டும் என்று குரல் கொடுத்து வந்தார்கள். உங்கள் கவலைக்கு இறைவன் வழிகாட்டுவார். தமிழ் மக்களில் யாருக்கும் கிடைக்காத அனுதாபமும் புகழும் அவருக்கு கிடைத்துவிட்டது. தமிழ் மக்களின் நன்மைக்காக உயிர் நீத்தார். புகழோடு இறைவனடி சேர்ந்தார். உங்கள் குடும்ப எதிர்காலத்தையிட்டு எனக்கும் பெரிய வேதனை அடைகின்றேன். நான் நேரில் வந்து காண உள்ளேன். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன். வணக்கம் .

இப்படிக்கு
செ.வே. திருநாவுக்கரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தன்,

09.01.2000

என்றும் தமிழ் மக்களின் மதிப்புக்குரிய

மாமனிதர் குமார் ஐயா குடும்பத்தினர்க்கு!

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உலக அரங்கில் குரல் எழுப்பி அருஞ்செயலாற்றிவந்த மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலம் ஐயாவின் இழப்பானது அனைத்து தமிழ் மக்களுக்கும் தாங்கொணாத்துயரையும், அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது.

அன்னாரின் இழப்பால் துயருறும் தங்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு

இ. ஜெயா

Gnanamuthu Nirmalan Rohan,
No. 212 "E" Cell
New Remand Prison,
Kalutara North, Kalutara. 04th Feb. 2000

மதிப்பிற்குரிய திருமதி குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு,

நானும் எமது நண்பர்களும் திரு. குமார் பொன்னம்பலம் ஐயா,அவர்களுக்கு முதற்கண் எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம். 05.01.2000 அன்று 11.30 மணிக்கு ரேடியோவில் ஐயாவின் மரணச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். எதிர்பாராத வேளையில் வஞ்சகர்களின் பழிவாங்கலுக்கு எமது மாமனிதர் பலியாகிவிட்டதையிட்டு கண்ணீர் வடித்தோம். ஐயா எமக்கு எத்தனையோ பிரச்சனைகளிலும் உறுதுணையாக நின்று எமது பிரச்சினைகளை தீர்த்துத் தந்தார்.

மேலும் என்னுடைய வழக்கை எவருமே எடுத்து நடத்த முன் வராத நிலையில், நான் குற்றமற்றவன் என்பதை (லலிதா குட்டியம்மா, இல. 17 இல்) அவர்களின் மூலம் தெரிந்து கொண்டு உடனடியாக எடுத்து நடத்தி 7 வழக்குகளில் விடுதலையும் வாங்கிக் தந்தார். இன்னும் 2 வழக்குகள் விடுதலையாகாமல் இருந்தாலும், ஐயா இல்லை யென்றால் நிலைமையை நினைத்தால் எனக்கே பயம் ஏற்பட்டிருந்தது. வாழ்க்கையில் நான் மறக்க முடியாத மாமனிதர் அவர்களுக்கு எமது அஞ்சலியையும், தங்களுக்கும் குடும்பத்தாருக்கும், எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
என்றும் உண்மையுள்ள
ஜி. ரோகான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏய்! சிங்கள பௌத்த பேரினவாத பிசாசே!! உன்னால் நசுக்கப்படும் தமிழ்ச் சமூகத்திற்காக அஞ்சாது உரிமைக்குரலை உரக்கக் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு வீரத் தமிழனை கொலை செய்வதன் மூலம் உனது பகற் கனவுகள் ஈடேறாது. மாறாக ஒவ்வொரு மறத் தமிழனும் தமது உரிமைக்காகப் கிளர்ந்தெழுந்து போராட வேண்டிய காலம் அண்மித்துக் கொண்டிருக்கிறது. அண்ணனின் கடும் போக்கு என்றோ ஒரு நாள் தனக்கு எமனாக வரும் என்று நன்றாகத் தெரிந்திருந்தும் தனது தணியாத இலட்சிய வேட்கையுடன் திறமையாகவும் துணிவுடனும் நின்று சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக அவர்களுக்கு நன்றாகப் புரியும்படியான பாஷையில் சாட்டையடி கொடுத்த ஒரே தமிழன் குமார் தான். அவரின் வெற்றிடம் ஒருபோதும் நிரம்பாது. வாழ்க குமார். வெல்க அவர் இலட்சியங்கள்.

எனது ஆழ்ந்த அனுதாபங்களை அவர் மனைவி, பிள்ளைகளுக்கு தெரிவித்துக் கொள்வதோடு மறைந்த வீரத் தமிழ் மகனுக்கு பாசத்தோடும் பக்தியோடும் தலை வணங்குகிறேன்

தமிழ் மகன்.

10.01.2000

அன்புள்ள திருமதி குமார் பொன்னம்பலம் அறிவது,

இக் கடிதத்தை அழுது அழுதே எழுதுகிறேன். மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மறைவு தமிழினத்திற்கு பாரிய இழப்பு. தனித்து நின்று அடிமையாய் வாழும் தமிழினத்தின் சார்பாக மிகவும் திறமையாய் பேசி அவர்களின் விடுதலைக்காக பல வழிகளில் தம்மை அர்ப்பணித்த உத்தமன். ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தது அவரின் குரல். அவர் எமக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரம். நாங்கள் வாய்மூடி அடங்கி ஒடுங்கி நிற்க அவர் உரத்துப் பேசினார். இறுதி அஞ்சலி செலுத்தும் எமது கடமையை செய்யக் கூட பலர் அஞ்சுகிறார்கள். பெருமை வாய்ந்த மாமனிதரின் உயிரை இவ்வளவு சுலபமாக பறிகொடுத்தது மாத்திரமல்ல செய்தவர்கள் சுலபமாக தப்புவதற்கும் இடமளித்து விட்டோம். சந்திக்க வந்தவரின் விபரங்களை உங்களுக்குத் தெரியாமல் வைத்து விட்டார். முன்னாள் சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் பெருந்தன்மையால் கெட்ட பேயர்கள் தமிழ் தலைவர்கள் என்றார். குட்டிமணியும் கஜனும் பிடிபட்டவுடன் அளித்த வாக்குமூலத்தில், தமிழ் ஈழத்திற்காக நாங்கள் எங்கள் கண்களையும் தியாகம் செய்வோம் என்று சொன்னதிற்காக சிறைச்சாலை கலவரத்தில் (1983) அவர்களின் கண்களை பிடுங்கினார்கள். புலிகள் தமிழர்களின் அபிலாஷைகளுக்காகப் போராடுகிறார்கள் என்பதையும், எமது அன்பிற்குரிய தலைவர் குமார் அந்த மக்களின் சார்பாக கருத்துக்களை வெளியிட்டதும், அவரது மறைவால் துயருறும் மக்கள் அஞ்சலி செய்து எடுத்துக் காட்டி விட்டார்கள். உண்மையான தலைவர் அவர். இதை இனங்கண்டு தமிழ் மக்கள் அவரின் மறைவால் சோகம் அடைகிறார்கள்.

வாழ்க.

இங்ஙனம்
தமிழ் மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Canada.
09.01.2000

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அம்மணி, மற்றும் இரு பிள்ளைகளுக்கும்,

தங்களது கணவரின் இழப்பிற்கு எமது குடும்பத்தினர் அனைவரது சார்பாகவும் எமது ஆழ்ந்த துக்கங்கள் உரித்தாகுக. தங்களது கணவர் பெரிய புகழ் பெற்று மாவீரன் ஆகி விட்டார்கள். உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள தமிழ் மக்களின் மனதில் பிரபாரனுக்கு அடுத்த ஸ்தானத்தை உங்களது கணவருக்கே கொடுத்துள்ளனர். இங்கு அனைத்து 24 மணித்தியால வானொலி, பத்திரிகைகளில் காண்பிக்கப்படும் முக்கியத்துவம் இதற்கு ஒரு சான்று ஆகும். வானொலியின் "PHONE IN PROGRAMME" இல் பலர் வானொலியில் கதறி அழுகின்றனர். புலிகளே அவருக்கு அதி உயர்வான பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள்.

இந்தக் கொடிய செயலைச் செய்தவர்கள், செய்வித்தவர்கள் உங்கள் கண்களின் முன்பே தண்டிக்கப்படப் போவதை நீங்கள் பார்க்கப் போகின்றீர்கள்.

உயர் திரு ஐயா அவர்களின் உயிர் பிரிந்தாலும் அவருடைய ஆவி எமது ஈழ நாட்டின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தான் சுற்றி வரும். அவருடைய ஆத்மா இறைவனிடம் சேர்ந்து விட்டது. உங்கள் குடும்பத்தினரின் பாரிய இழப்பை ஒரு பொழுதும் நிரப்ப முடியாது. அவருடைய செல்லத் தமிழ் என்றும் எமது காதில் ஒலிக்கின்றது.

எமது கண்ணீர் அஞ்சலியை ஏற்றுக் கொள்ளும்படி மிகவும் அன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கின்றோம்.

மிகவும் அன்புடன், தாழ்மையுள்ள,
பொ. யோகராசா, யோ. உமாராணி
யோ. தாசன், யோ. சங்கர்
யோ. கிரிசா, யோ. விசிதா
யோ. பிரதாபான், யோ. லோசனா

தலவாக்கலை

கௌரவத்திற்கும் மதிப்பிற்கும் உரிய அம்மா அவர்கட்கு!

05.01.2000, அன்று நன்றாக திட்டமிடப்பட்ட கோழைத்தனமானவர்களால் படுகொலை செய்யப்பட்ட கௌரவ குமார் பொன்னம்பலம் அய்யா அவர்களது இழப்பால் துயருறும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களில் நானும் ஒருவனாக சேர்ந்து கொள்வதில் துன்பத்தின் மத்தியில் பெருமைப்படுகிறோம். அண்ணாரது ஆத்மா சாந்தியடையவும், தங்கள்குடும்பத்தினரின் மன அமைதிக்காகவும் பொன்னம்பலம் அய்யா அவர்கள் கொண்ட இலட்சியத்தை தொடர்ந்து கொண்டு செல்வதற்கு தங்களுக்கு தைரியத்தையும் பாதுகாப்பையும் அளிக்கும்படி பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபாவை கண்ணீர் மல்க பிரார்த்திக்கிறேன். தமிழ் மக்களின் உரிமை போராட்டங்களில் ஜனநாயக வழியில் குரல் கொடுத்தவர்களில் குறிப்பாக தமிழ்த் தலைவர்களில் குமார் பொன்னம்பலம் அய்யா அவர்களின் சேவை காலத்தால் அழியாததும் வரலாற்று ஏடுகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதுமாகும். கொண்ட இலட்சியத்திற்காக தனது சட்ட வாதத்திறமையால் குரல் கொடுத்து வந்த அண்ணாரது கருத்துக்களுக்கு முகம் கொடுக்க முடியாதவர்களே இந்த கோழைத்தனமான செயலை செய்துள்ளனர். அவர்கள் இறைவனால் தண்டிக்கப்படுவார்கள். அண்ணாரது இலட்சிய நோக்கு அவர்பாற் பற்றுதல் கொண்ட அனைத்து உள்ளங்களிலும் ஆழப்பதிந்து விட்டது. அவரது இலட்சிய குறிக்கோள் நிச்சயம் நிறைவேறும். அதற்கு அண்ணாரது ஆத்மா வழிகாட்டும்படி பகவானை பிரார்த்தித்து நம்பிக்கையுடன் விடை பெறுகிறேன்.

நன்றி

தங்கள் சேவையில்
என்றும் விசுவாசமுள்ள
எஸ். சபாபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Toronto Ont M6H4H3
23.01.2000

அன்புள்ள யோகலக்ஷ்மி அவர்களுக்கு,

உங்களுடைய கவலையான பேரிழப்பில் ஆழ்ந்து இருக்கும் போது நான் என்னை அறிமுகம் செய்வதில் அர்த்தமேயில்லை. எனினும் நான் காங்கேசன்துறையைச் சேர்ந்தவள். பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியையாகக் கற்பித்து முதுகல்விமாணி செய்தபின் அழுத்கம, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளில் விரிவுரையாளராகவும் இருந்துள்ளேன்.பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் இருந்த எனது புனைபெயர் குறமகள் என்பது.

பெற்றாரும், ஊரவரும் அரசியல் கட்சி காங்கிரஸ் ஆக இருந்த போது ஜீஜீ அவர்கள் எம்மில்லம் வந்தே தமது பிரசாரங்களை ஆரம்பிப்பார். அப்போது 13,14 வயதாக இருந்தும் கூட்டங்களில் அவருக்கு மாலைபோடும் வாய்ப்பும் எனக்கோ தங்கைமாருக்கோ தான் கிடைக்கும். குமார் பிரபலம் ஆகும் போது எமது பாதை கம்யூனிஸமாக மாறிவிட்டது. (1955 மட்டில்) ஆனால் பழைய விசுவாசம் போகவேயில்லை.

அமரர் குமாருடன் கனடா வந்த போது பேசி இருக்கிறேன். கேள்விகள் கேட்டிருக்கின்றேன். நான் யாரெனப் பெரிதாக ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் நான் கேட்ட கேள்விகள் "சத்தானவை" எனக் கூறி விரிவான விளக்கங்களை மக்களுக்கு அளித்தார். தமிழினத்துக்கு ஜீஜீயின் பாஷையில் சொல்ல வேண்டுமானால் தமிழ்ச்சாதிக்கு நல்ல வாரிசு - ஒரு விடி வெள்ளி தோன்றிவிட்டது என அகமிக மகிழ்ந்தேன். இப்போது எனக்கு 66 வயது. பல இழப்புகளைச் சந்தித்து மரத்துப் போன என்னுள்ளம் விசேட அறிவித்தலில் செய்தி கேட்டதும் உடைந்து கண்ணீர் பெருகியது. அநாதைகள் ஆகிவிட்டோமா எனத் தவித்து அழுதது. கூடவே என்னை வருத்தும் ஆஸ்த்மாவும் சேர்ந்து கொண்டது.

உடனடியாக இரங்கலுரை எழுதி சிரிபிசி எனப்படும் ரேடியோவுக்கு அஞ்சலுரையின்போது முன்றாம் ஆளாக வாசித்தேன். ஒரு சிறு கவிதை எழுதி "நம் நாடு" பத்திரிகைக்கு டெலிபோனில் கொடுத்தோம். கூட்டங்களில் பேசுவதற்கு ஒப்புக் கொடுத்தேன். ஆனால் மூச்சுத் திணறல் காரணமாகப் போக முடியாமல் போய்விட்டது. சரியான பனியும் குளிரும் 40 பாகை. சட்டத்தரணி ஸ்ரீதரன் உடன் பேசினேன். அம்மா இங்கே இருப்பதாக அறிந்தேன். தொடர்பு கொள்ளவில்லை நான் ஆற்றிய உரையை இத்துடன் எழுதி அனுப்புகிறேன்.

கனடா தமிழர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (24 மணிநேரம்)
சிரிபிசி அஞ்சலி உரைகள்

குறமகள் :

அதிர்ச்சியுடன் கூடிய சோகங்கலந்த வணக்கம்!

திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் துர்மரணச் செய்தியை அதிகாலை சிரிபிசி யின் விசேட செய்தியில் கேட்டு அதிர்ச்சியடைந்தேன். தமிழ் மக்களின் உள்ளக் குமுறல்களையும் இழப்புக்களையும் வெளியே கொட்டப் பல பேச்சாளர்கள் அரசியல்வாதிகள் இருக்கலாம்; துன்பங்களையும் துயரங்களையும் உணர்ச்சிபூர்வமாக அணுகித் துடித்தெழவைக்க கவிஞர்களும் எழுத்தாளர்களும் இருக்கலாம்; வாதங்களும் பிரதிவாதங்களும் புரிய அறிஞர் பலர் இருக்கலாம்; ஆனால் அரசியல் ரீதியான பிரச்சினை என்ன என்பதை தர்க்கரீதியாகவும் அறிவுபூர்வமாகவும் அகில உலகத்தின் முன்பும் வைக்க யார் இருக்கிறார்கள் இனி....

ஒரு சட்டத்தரணிக்கேயுரிய தர்க்கரீதியான சிந்தனை, சமூகவியலாளருக்கே உரிய சமூக சிந்தனையுடன் கூடிய இனவுணர்வு; அரசியல்வாதிகளின் குளறுபடிகள் படியாத உன்னதநெஞ்சம்; உண்மை நிலையைத் துருவியறியும் அவதானம்; அதனை லாவகமாக எடுத்துச் சொல்லும் ஆற்றலும் மொழியாட்சியும்; இதற்கு எதிராகச் செயற்படும் மாற்றானின் உத்திகளை உய்த்தறிதலும் வழிவகை காண்பதும்; இவற்றை வெளிக்கொணரும் வாக்கு வல்லமையும் அசாத்தியத் துணிச்சலும் ஒருங்கே வேறு யாரிடமுண்டு? இந்த அளவுக்கு யாரிடமாவது இருந்தாலுங்கூட ஒன்றில் சுதந்திரப் போராட்டத்தில் அக்கறையின்மை, சுயநலம், பயம், அலட்சியம் என்பன அவர்களது துணிச்சலை மட்டுப்படுத்தி விடுகின்றது. இவரிடம் எந்த ரத்தம் ஓடுகிறது அது அவர்களிடம் ஓடவில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பெருந் தலைவனான ஜீஜீ ஐம்பதுக் கைம்பது கேட்ட வீரர். வளைந்து கொடுத்துக் காலம் வரும் போது உரிமை பெறலாம் என நம்பிச் செயற்பட்டார். தூரநோக்குடன் செயற்பட நினைந்து மக்கள் நலனை முன்வைத்து மூன்று தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தார். பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்புத் தந்தார். எத்தனுக்கும் எத்தனான மாற்றானின் செயலால் கூட்டணியிற் சேர்ந்து தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்தார்.

அந்த இரத்தம் ஒடும் மைந்தனோ எதிரிகளுக்குள் வாழ்ந்து கொண்டே தம் மனச்சாட்சி சொன்னபடி நடந்து கொண்டார். பல உயிர்களைக் காப்பாற்றினார். அவரது ஒவ்வொரு வார்த்தையும் தமிழரின் அரசியல் நிலை பற்றியும், தீர்வுத் திட்டத்துள் கூறியிருப்பது பற்றியும், அதன் பாதகங்கள் பற்றியும் பேசப்பட்டவையாகவும் ஆபத்தான அறிக்கைகளை வெளிப்படுத்துவனவாகவும் இருந்தன.

தான் இருக்கும் இடம், எதிரிகளாலும் மறைமுக எதிரிகளாலும் சூழப்பட்டிருப்பதை நன்கு அறிந்திருந்தும் தனி ஒருவனாக எதுவித பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்காது நடமாடி வந்தார். இந்த அசட்டுத் துணிச்சல்தான் இத்தகைய மாமனிதனை இழக்க வைத்து விட்டது.

1997 இல் கனடா வந்த போது நாம் வாழும் லான்ஸ்டவுன் தமிழர் கூட்டுறவு இல்லம் எனும் மாடி மனைக்கு வரவழைக்கப்பட்டார். இல்லத்தவருடன் கலந்துரையாடி, கேட்ட கேள்விகளுக்கு தெளிவான விடைகளும் சொல்லி தம் மழலை மொழியில் ஒரு பேச்சும் நிகழ்த்தி தேநீர் விருந்திலும் கலந்து அன்போடும், பண்போடும் இனிய முகத்தோடும் அளவளாவிச் சென்றார்.

"சாந்த" என்பவன் யாருடைய ஏவுகணையோ? எங்கள் இதயத்தை இழந்துவிட்டோம்! ஒரேயொரு தகுதி வாய்ந்த எதிரொலியை இழந்து விட்டோம்! எங்கள் உள்ளத்தைப் பிரதிபலிக்கக் கூடிய பேச்சாளப் பிரதிநிதியை இழந்துவிட்டோம்!!! எம்மை ஆற்றுவார் யார்? அவரை இழந்து தவிக்கும் யோகலட்சுமி அவர்களுக்கும் இரு செல்வங்களுக்கும் குடும்பத்து உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை லான்ஸ்டவுன் தமிழர் கூடடுறவு இல்ல மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். அவரைப் போன்ற வீரமும் தீரமும் ஓர்மமும் உடைய வாரிசுகள் பலரைப் படைக்கும்படி இறைவனைப் பிரார்த்திப்போம் அப்போது தான் எங்கள் ஜூனியர் குமார் அவர்களின் ஆன்மா சாந்தியடையும்.

வள்ளிநாயகி இராமலிங்கம்

நம்நாடு (கனடா)
6-1-2000

இன உணர்வின் குரல் ஓய்ந்ததோ.....

உலகப் பந்தின் மூலை முடுக்கெல்லாம்
ஒங்கி ஒலித்த நீதியின் குரலொலி!
அநீதி காட்டி நியாயம் பொழிந்து
ஆதுரம் மேவிய அதிகா ரக்குரல்!
ஏதுவரின் என்ன என் மனச்சாட்சி
ஏதும் ஒழிப்பிலை எனவெழும் சத்தம்
இழிவான் தமிழன் தமக்கொரு இறைமை
ஈங்கிலை எனின் வாழ்ந்தென் பயனென
உரத்த குரலில் செவிப்பறை கிழிய
ஊரெலாம் கலக்கிய சிங்கக் கர்ச்சனை!
ஒரு தனிமனிதனாய் எதிரியின் கோட்டையில்
ஓசை எழுப்பிய வீர மறவனின்
ஐயமின்றி மொழிந்த பேருரைகள்
எவரையும் எழுப்பும் பிளிறல் நாதமாம்!
இழிந்த குணத்து கோழைகள் போலிகள்
ஒளவியம் விழைத்த அவ்வீனச் சாதியால்
அமல்குமார் எனும் ஜீ.ஜீ.ஜூனியர்
உச்சக் குரலும் ஒடுங்குமோ ஓய்ந்ததோ!

குறமகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E. Francis,
Downs view,
Jan. 11.2000

ஆறாத் துயரத்துக்குள்ளாக்கப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஐயாவின் துணைவியார் பிள்ளைகளுக்கு!

நாங்கள் தாங்க முடியாத வேதனையடைந்தாலும், இழக்கக் கூடாததை, இளந்து, பிரியக் கூடாததை பிரிந்து, ஈடுசெய்ய முடியாத பேரிழப்புக்குள்ளாக்கப்பட்ட, உங்களை ஒரு கணம் எண்ணிப்பார்க்கும் போது இதயமே வெடித்து விடுவது போன்ற உணர்வுக்குள்ளாக்கப்படுகிறோம். ஒரு சில சந்தர்ப்பங்களில் தொடர்புடைய எம்நிலை இப்படியாயின் அவரோடு கூட இருந்து அனைத்திலும் பங்கு கொண்ட உங்கள் நிலை என்ன என்பதை உணருகிறோம் ஜனவரி 10, 2000 மாலை 6.30 மணிக்கு எங்கள் இதய தெய்வம் மாமனிதர் அவர்களுக்கு அஞ்சலிக் கூட்டம் ஒன்று ONTARIO பாராளுமன்ற முன்றலில் நடைபெற்றது. அங்கே மாமனிதரின் முழு உருவப்படம் ஒன்றில் அவர் கம்பீரமாக நின்ற காட்சியுடன் வைக்கப்பட்டிருந்தது. அங்கு சமுகமளித்த குழந்தைகள், சிறுவர், வாலிபர், வயோதிபர்கள், என பல ஆயிரம் அனுதாபிகள் மழையையும் கடும் குளிரையும் பொருட்படுத்தாது கூடி நின்றோம். அவருடைய திரு உருவப்படத்தை கண்டதும் எல்லோரின் கண்களிலும் நீர் நிறைந்த காட்சி அனைவரையுமே ஆறாத சோகக் கடலில் ஆழ்த்தியது. எம் நிலை இப்படியாயின் உங்கள் நிலை என்னவாயிருக்கும் என்பதை உணர்கிறோம். அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட துயரத்துக்குள்ளான உங்களுக்கு எப்படி நாங்கள் ஆறுதல் சொன்னாலும் ஈடு செய்ய முடியாத ஒன்றே. ஆனாலும் மனிதனுக்கு தவிர்க்க முடியாத ஒன்று மரணம், என்ன செய்வது இறைவனுக்கும் அது சித்தமானால் யாரால் வெல்ல முடியும். தாங்கமுடியாத துயரம் தான். அத் துயரத்தில் நாங்களும் பங்கு கொள்கிறோம். நடக்கக் கூடாத ஒரு சம்பவம் நடந்து விட்டது, கயவர்கள் கொலை செய்தது குமார் பொன்னம்பலத்தை அல்ல, நீதியை, நியாயத்தை, மனிதாபிமானத்தை, உண்மையை, உதவும் கரங்களை, தேச பக்தியை, சமுக நலன்களை, இத்தனையையும் கொலை செய்தவர்கள், உடந்தையானவர்கள், அத்தனை பேரும் தங்களுக்கு தாங்களே தீர்ப்பளித்துக் கொண்டார்கள். .ஆனால், எங்கள் மாமனிதரின் உடலை சாய்க்க முடிந்ததே தவிர அவருடைய தேசப் பற்றை, சமுகப் பற்றை, விடுதலை உணர்வை அழிக்க முடியாது உலகத்திலுள்ள தன்மானமுள்ள அத்தனை தமிழர்களின் இதயத்திலும் அண்ணல் குமாரின் ஆன்ம ஒளி எரிந்து கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல அவரை தெரிந்த அன்னிய மக்கள் வெள்ளை, கறுப்பு இனமக்கள் உட்பட மனித நேயமுள்ள அத்தனை பேரின் உள்ளங்களிலும் அவருடைய ஒளி எரிந்து கொண்டிருக்கிறது என்பதை அனுதாபக் கூட்டத்தில் கலந்து உரைகளாற்றிய ONTARIO பாராளுமன்ற உறுப்பினர்கள், சபைகளின் உறுப்பினர்கள், சமய தலைவர்கள், ஏனையோருடைய பேச்சிலும் அமரரின் வழிகளில் தாங்கள் தங்கள் பதவிகளில் பயன்படுத்துவதாக உறுதிமொழி அழித்ததையும் கண்டோம்; கனடா வந்தபோது கனேடிய மக்களிடம் அமரர் விடுத்த வேண்டுகோளை நாங்களும் எனிமேல் செயல்படுத்துவதாக உறுதி எடுத்து கொள்கிறோம். என்ன நோக்கத்துக்காக அவர் வாழ்ந்தாரோ அதை நிறைவேறும் வரையும் நாம் ஓயப்போவதில்லை. அவர் கண்ட கனவுகள் நிச்சயம் நிறைவேறியே தீரும். எந்த ஒரு சக்தியாலும் அதை தடுக்க முடியாது. எதைத் தடுக்க வேண்டுமென அவரை கொலை செய்த கயவர்கள் நினைத்தனரோ அது பன்மடங்கு பெருகியுள்ளது. எம் அண்ணன் மாமனிதர், அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் கனவு விரைவில் நிறைவேறும். அவருடைய ஆன்மா தேவர்களோடு கூட மகிழ்ச்சியில் நிறைந்திருக்கும். எனவே துயரங்களை மறக்க முயற்சிப்பது பயனுள்ளது. எனவே ஆறுதலடைய இறைவனிடம் இறஞ்சுகிறோம்.

சர்வ வல்லமையுள்ள தேவன் உங்கள் மேல் கிருபை கூர்ந்து உங்கள் துயரங்களுக்கு ஆறுதலளித்து காப்பாற்றுவாராக.

தேவாதிதேவன் தனது ஒளிமயமான முகத்தை உங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணி உங்களுக்கு மன அமைதியையும் மகிழ்ச்சியையும் கட்டளையிடக் கடவாராக.

தொடக்கமும் முடிவும் ஆதியும் அந்தமுமான பரம்பொருள் உங்கள் சகல தடைகளையும் அகற்றி உங்களுக்கு மன நிறைவையும் சமாதானத்தையும் தரக் கடவாராக!

நன்றி
வணக்கம்

ஈ. பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை
16.01.2000

திருமதி. யோ. குமார் ஜீ.ஜீ. பொன்னம்பலம்

அன்புடையீர்,
எது நடக்கக் கூடாது என நினைத்தோமோ
அது நடந்து முடிந்து விட்டது.

கடந்த 05.01.00 அன்று மதியம் 12.25 மணி இருக்கும், எமது சகோதரர் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் சொன்னார் குமார் பொன்னம்பலத்தை சுட்டு விட்டார்களாம் என்று. அச் செய்தியை கேட்டதும் ஒரு கணம் எதுவும் பேசாமல் அதிர்ந்து போனோம்.

மீண்டும் அவரிடம் கேட்டோம் செத்துப் போய்விட்டாரா என்று. ஆம் என்றார். இது பொய்யாக இருகக்கூடாதா என்று தான் நாம் நினைத்தோம். எதற்கும் 12.45 மணி செய்தியைக் கேட்போமே என்று மனதை சற்று தளர்த்திக் கொண்டு இருந்தோம். செய்தியில் கேட்டதும்தான், இறைவா தமிழினத்திற்கு இதே கெதியா என்ற நினைப்பு எம் மத்தியில் எழுந்தது. திருகோணமலையில் இச் செய்தி பகல் 11.30 மணிக்கே தெரிந்து விட்டது.

அண்ணன் குமார் பொன்னம்பலம் அவர்களை கடந்த 33 வருடங்களாக நான் நன்கு அறிவேன். அவரது தந்தையை சிறந்த சட்ட வல்லுனர் என்ற முறையில் 37 வருடங்களாக அறிவேன். ஆனால் நேரடியாக அமரர் ஜீ.ஜீ. அவர்களுடன் பழகியது 1965 காங்கிரஸ் மாநாட்டின் போது தான். குமார் அண்ணனுடன் 1966ஆம் ஆண்டிலிருந்து தான் பழகினோம். இருவரும் எம்மோடும் எமது குடும்ப அங்கத்தவர்களுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகியதை நாம் இப்பொழுதும் நினைத்துப் பார்ப்பதுண்டு.

அண்ணன் குமார் அவர்களின் அகால மறைவு தமிழினத்திற்கு பேரிழப்பு. அவருக்கு நல்ல எதிர்காலம் இருந்தது. ஆனால் இறைவன் இப்படியான ஒரு அனர்த்தத்தைக் கொண்டு வந்து அவரை எம் மத்தியில் இருந்து பறித்துவிட்டான். அவரது மறைவை சக்தியாக மாற்றி மீண்டும் துணிவுடன் செயற்படுவதே நாம் அவருக்கு செய்யும் நன்றிக் கடனாகும். திருக்கோணமலையில் அண்ணன் குமாருக்கு தகுந்த முறையில் மக்கள் கறுப்புக் கொடிகள் கட்டி, பதாகைகள் தொங்கவிட்டு கண்டகள் இல்லங்கள் தோறும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

அவர் எங்களுக்கு மட்டுமல்ல பலருக்கு பலவிதமான உதவிகள் செய்துள்ளதை நாம் என்றும் மறக்க முடியாது. மறக்கவும் மாட்டோம். அவர் ஒரு மாமனிதர்.

அண்ணன் குமார் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களுடைய மனைவி என்ற முறையில் தங்களுக்கும் அவரது பிள்ளைகளான கஜேந்திரகுமார், மிருணாளினி மற்றும் சகோதரி விஜயலெக்ஷ்மி அவர் கணவன் ஆகியோருக்கும் மறறும் உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நாமும் உங்கள் துக்கத்தில் பகிர்ந்து கொண்டு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அண்ணன் குமார் நினைவு மலரில் கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணி என்ற சமூக, வளர்ச்சி ஸ்தாபனத்தின் செய்தியை பிரசுரிக்கும்படி மிகப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

மேலும் குமார் அண்ணனுடைய கலர் படம் கதிரையில் இருந்து கொண்டு புத்தகம் படித்தபடி SUNDAY LEADER பத்திரிகையில் வெளிவந்த படம் ஒன்றும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார். இறைவன் உங்கள் அனைவருக்கும் நல்வழியைக் காட்டுவான்.

நன்றி

இப்படிக்கு
மகேந்திரன் என்.ஆர்
அ.இ.த.கா. நீண்டகால ஆதரவாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
01.02.2000

அன்புள்ள திருமதி குமார் பொன்னம்பலம்,

உங்கள் கணவர் இறந்த நாள் முதல் ஆறாத் துயரத்தில் தான் நாமும் இருக்கின்றோம். எங்கள் துயர உணர்வுகளை வெளியிடக் கூட முடியாத நிலையை எண்ண எண்ண இருதயம் குமுறுகின்றது.

நாங்கள் பத்திரிகைவாயிலாக நடக்கும் சம்பவங்களை வாசித்து துயருறுபவர்கள். இரத்தம் கொதிப்பதேயன்றி எம்மால் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை.

ஏனெனில் நான் 75 வயது உடையவர். எங்கள் பெருமை வாய்ந்த சமுதாயத்திற்குள் வீழ்ச்சியையும் சிறுபான்மையினராகப் பிறந்ததால் மிதிபடும் காட்சியையும் கேட்டும் அறிந்தும் உளம் உருகுகின்றது. உணர்ச்சி கூராகின்றது.

ஜீ.ஜீ. யின் காலத்திலேயே அவரின் அஞ்சாநெஞ்சப் பேச்சைக் கேட்டு மகிழ்ந்தவள் நான். அவரின் ஆருயிர்ப் புதல்வன் அந்தச் சுவட்டைப் பின்பற்றி இந்தப் பயங்கர அடக்கு முறைக் காலத்தில் இப்படித் துணிவாகப் பேசுகிறாரே என்று நாங்கள் பெருமிதம் அடைவதுண்டு. அப்படியான ஒரு துளி அச்சமின்றி ஆர்ப்பரித்த புதல்வனுக்கா இக் கதி? எண்ணி எண்ணி குமுறுகின்றோம்.

